வரு.76 இல. 39 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA


# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

2024 ஒக்டோபர் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
October 06 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-







02
ஜனாதிபதியின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும்


05
வரிக்கொள்கை மறுசீரமைப்பினால் நாடு வளர்ச்சிப் பாதைக்கு செல்லும்


12
பிராந்திய யுத்தமாக மாறும் ஹமாஸ்– இஸ்ரேல் போர்?


24
உலக டெஸ்ட் இறுதிக்கு இலங்கையின் வாய்ப்பு எப்படி?


### சமிக்ஞை கட்டமைப்பு முறையாக சீரமைக்கப்படாமையால்



# வடக்கு ரயில் சேவையை இயக்க முடியாத நிலை

### மணிக்கு 100 Km வேகத்தில் செல்ல வேண்டிய ரயிலை 40 Km வேகத்தில் செல்ல அறிவுறுத்து

வடக்குக்கான ரயில் பாதையில் மஹவ சந்தியிலிருந்து அநுராதபுரம் வரையிலான ரயில் சமிக்ஞை கட்டமைப்புகள் இன்னும் பொருத்தப்படாததால் வடபகுதி ரயில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

வடக்கு ரயில் பாதைக்கான முழுமையான புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கடந்த ஜனவரி மாதம் முதல் 10 மாத காலத்துக்கு ரயில் பாதை மூடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், ரயில்களை இயக்க தேவையான சமிக்ஞை கட்டமைப்பு இல்லாததால் ரயில்கள் இயக்கப்படாமல் உள்ளன.

91.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புனரமைக்கப்பட்ட மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதையின் மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான 66.4 கிலோமீற்றர் பகுதியில் ரயில் பாதை சமிக்ஞை கட்டமைப்பு நிறுவப்படவில்லை.

ஆங்கிலேயர் காலத்தில் ரயில் பாதையில் பயன்படுத்தப்பட்டு வந்த சாம்ஃபோ மற்றும் டேப்லெட் சிக்னல் கட்டமைப்பு, ரயில் பாதை மறுசீரமைப்பு பணியுடன் முற்றிலும் அகற்றப்பட்டுள்ளது. இதனால் டேப்லெட் சமிக்ஞை முறையில் ரயில்களை இயக்க முடியவில்லை.

முதலில், ரயில் பாதைக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமையினால், சமிக்ஞை கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, இந்த நிலை காரணமாக,

06

## மாதிவெலயில் தங்கியிருக்கும் MPக்களை வெளியேற உத்தரவு

### புதிதாக வரவுள்ள MPகளுக்காக புனரமைக்க ஏற்பாடு



பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெல குடியிருப்பில் தங்கியிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டுமென எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகளில் அவசர புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமையினால் பாராளுமன்ற உறுப்பினர்களை குடியிருப்புகளிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக

06

### சுய பாதுகாப்புக்கு வழங்கிய

## சகல துப்பாக்கிகளையும் மீள கையளிக்குமாறு உத்தரவு

### பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள்



**ஸாதிக் ஷிஹான்**

தற்பாதுகாப்புக்காக பொதுமக்களுக்கு (சிவிலியன்களுக்கு) வழங்கப்பட்டுள்ள அனைத்து வித துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை பாதுகாப்பு அமைச்சினால் மீளப்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, அனுமதி பத்திரம் பெறப்பட்டு

06

### சுமந்திரனின் கோரிக்கைக்கமைய

## சார்ள்ஸ் நிர்மலநாதன் மீண்டும் பொதுத் தேர்தலில் போட்டி

### மன்னாரில் மேலும் இரு புதியவர்கள்



**மன்னார் குறூப் நிருபர்**

தேர்தலில் போட்டியிடுவதில்லையென அறிவித்திருந்த சார்ள்ஸ் நிர்மலநாதன், சுமந்திரனின் கோரிக்கைக்கமைய மீண்டும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளதாக

06

### வாழ்நாளில் பார்க்க வேண்டிய

## சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 05ஆவது இடம்



வாழ்நாளில் பார்க்க வேண்டிய சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 5ஆவது இடத்தை பிடித்துள்ளது. CEO WORLD இதழ் இந்த தரவரிசையை தொகுத்துள்ளது.

இத் தரவரிசையில் தாய்லாந்து முதலாவது இடத்தையும் கிரேக்கம் இரண்டாம் இடத்தையும் இந்தோனேஷியா மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளதுடன் நான்காவது இடத்தில்

06

## பிரதமர் மோடி விரைவில் இலங்கை வர வேண்டும்

### ஜெய்சங்கரிடம் ஜனாதிபதி அநுர கோரிக்கை





இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை வெகு விரைவில் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு தெரிவித்ததையடுத்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக விரைவில் இலங்கைக்கு வருகை தர வேண்டுமென

06

### பயணச்சீட்டு வழங்காத

## நடத்துனர் மீது முறைப்பாடு செய்ய அவசர இலக்கம்

**1955**

பஸ்களில் பயணிகளிடம் கட்டணம் அறவிட்ட பின்னர் அதற்கான பயணச்சீட்டையும் மிகுதிப் பணத்தையும் வழங்காத நடத்துனர்கள் தொடர்பாக முறைப்பாடளிக்க முடியுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு, முறைப்பாடுகளை முன்வைக்க முடியுமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

### போதியளவு பயணிகள் இல்லை

## சென்னை–கொழும்புக்கான விமான சேவைகள் இரத்து

### பயணிகள் சிரமம்; மாற்று ஏற்பாடுகள் துரிதம்



போதியளவிலான பயணிகள் இன்மையால் சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கை, பெங்களூர், மும்பை, மதுரை, அந்தமான்

06

### எங்கள் கருத்து...

## மனஉளைச்சல் தரும் போலியான பதிவுகள்!

சமூகவலைத்தளங்களில் சமீப காலமாக வரம்புமீறிய பதிவுகள் இடப்படுகின்றன. இப்பதிவுகளில் அரசியல் சார்ந்த பதிவுகளைத்தான் அதிகம் காண முடிகின்றது. சமூகஊடகங்கள் கடிவாளம் இல்லாத குதிரை போன்று கட்டுமீறிச் சென்று கொண்டிருக்கின்றன.

தமக்குப் பிடித்தமானவர்களை உச்சத்தில் வைத்துப் போற்றுகின்றார்கள். தமக்கு எதிரானவர்களை மிக மோசமாகத் தூற்றுகின்றார்கள். அவர்களது தீர்ப்புகள் மக்களைச் சென்றடைகின்றன. மக்கள் இப்பதிவுகள் மீது நம்பிக்கை வைக்கின்றார்களா என்பது தெரியவில்லை. ஆனால் எந்தவொரு நபரையும் கீழ்த்தரமாக வசைபாடுவதற்கான களத்தை சமூக ஊடகங்கள் வழங்கியிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சமூக ஊடகப் பதிவுகள் தீவிரமடையத் தொடங்கின. தற்போது தேர்தல் முடிந்த பின்னரும் கூட விஷமப் பதிவுகள் நின்றபாடாக இல்லை. அரசியல்வாதிகளின் தனிப்பட்ட அந்தரங்கங்கள் தொடர்பாகவும் பலரும் பதிவிடுகின்றனர். இவ்வாறான தகவல்களில் போலியானவைதான் அதிகம்.

இத்தகைய விஷமிகளால் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிக்கு பாதிப்பும் அவப்பெயரும் ஏற்படுவது ஒருபுறமிருக்க, அதிகமான மனஉளைச்சலும் ஏற்படுகின்றது.

06

### திருகோணமலை, அம்பாறையில்

## வீட்டு சின்னத்தில் போட்டியிட ஏனைய கட்சிகளுடன் பேச்சு

### சிறிதரனும் நானும் யாழில் போட்டியிடுவோம் - எம்.ஏ.சுமந்திரன்



**வவுனியா விசேட நிருபர்**

திருகோணமலை மற்றும் அம்பாறையில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதுடன், சிவஞானம் சிறிதரனும் தானும் யாழில் போட்டியிடுவோமென தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அத்துடன்

06

## சிரேஷ்ட ஊடகவியலாளர் அஸ்ஹர் காலமானார்



எமது தினகரன் / வாரமஞ்சரியின் மாளிகைக்காடு குறூப் நிருபரான சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியருமான

06

## பெய்ரூட் மீது இஸ்ரேல் கண்மூடித்தன தாக்குதல்

### சுமார் 2,000த்துக்கும் அதிகமானோர் பலி



லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் கடுமையான வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த நாட்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 02 ஆயிரத்துக்கும்

06

## அ.இ.ம.காவிலிருந்து வெளியேறிய அப்துல்லாஹ்வுக்கு UNP யில் பதவி

### சிலிண்டர் சின்னத்தில் திருமலையில் போட்டி



ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளராகவும், மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவினால்

06

### 19 வருடங்களின் பின்னர்

## அலரிமாளிகை சுற்றுவட்ட வீதி பொதுமக்கள் பாவனைக்கு திறப்பு



**ஸாதிக் ஷிஹான்**

அலரி மாளிகை வழியாக ரொட்டுண்டா சுற்றுவட்டத்துக்கு செல்லும் பாதை பொது மக்களின் பாவனைக்காக

06

**மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்தும் குரல் எழுப்பும் சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய வெளிநாட்டில் தங்கியிருந்து தற்போது மீண்டும் நாடு திரும்பியுள்ளார். அவர் ஈஸ்டர் ஞாயிறு தின தற்கொலை தாக்குதலுடன் தொடர்பான முக்கிய உண்மைகள் அடங்கிய புத்தகத்தையும் அண்மையில் வெளியிட்டார். தினகரன் வாரமஞ்சரி அவருடன் மேற்கொண்ட நேர்காணலே இது....**

# ஜனாதிபதியின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும்

## பிரபு வர்க்கத்தினரிடமிருந்து அதிகாரம் பறிக்கப்படும்போது ஆபத்துகள் ஏற்படும்



**நீங்கள் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டீர்கள். ஐந்து வருடங்களுக்குப் பிறகு ஈஸ்டர் தாக்குதல் பற்றி ஏன் நினைவுக்கு வந்தது?**

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலை தாக்குதல் நடந்தபோது நான் ஜெனிவாவில் இருந்தேன், ஈஸ்டர் குண்டு தாக்குதலைப் போலவே அரகலய எனும் போராட்டமும் முழு உலகத்தினதும் கவனத்தை ஈர்த்திருந்தது. எனக்குத் தெரிந்த பலர் இதைப் பற்றி என்னிடம் கேட்டதால், அதைப் பற்றி மேலும் ஆராய ஆரம்பித்தேன். நான் செயல்ரீதியில் மனித உரிமைகள் தொடர்பில் தேடிப் பார்த்து நடவடிக்கை மேற்கொள்பவன் என்ற வகையில் இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**ஈஸ்டர் தாக்குதல் பற்றி உங்களால் புதிதாக எதைக் கண்டுபிடிக்க முடிந்தது? தடுத்திருக்கக்கூடிய தாக்குதலை ஏன் தடுக்கவில்லை? என்பதுதான் எஞ்சியிருக்கும் கேள்வி?**

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உளவுத் துறையின் தலைவரிடமிருந்துதான் இது தொடர்பான தகவல் வந்துள்ளது. ஆனால் எமது புலனாய்வுப் பிரிவுகள் இது தொடர்பில் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. முப்பது வருடகால யுத்தத்தை எதிர்கொண்டு பெரும் புலனாய்வுப் பிரிவைக் கொண்டுள்ள எம்மால் ஏன் இந்தத் தாக்குதலைத் தடுக்க முடியாமல் போனது என்பதே என் கேள்வி.

**நாட்டிலேற்பட்ட புதிய மாற்றத்தின் மூலம் ஈஸ்டர் தின தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

ஒரு தரமான விதை வளம் மிக்க மண்ணில் விழுந்திருக்கும் சந்தர்ப்பமாகவே இதை நான் பார்க்கிறேன். நாட்டு மக்கள் ஏற்படுத்தியுள்ள மாற்றம், புதிய அரசியல் புரட்சி இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நினைக்கிறேன். இது ஒருபுறம் பொறுப்பு, மறுபுறம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகும்.

ஈஸ்டர் தாக்குதல், ஊடகவியலாளர்களின் படுகொலைகள், அதேபோன்று தாஜுதீன் கொலை உள்ளிட்ட மூடி மறைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மீள ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி தெளிவாக கூறியது. அந்தப் பொறுப்பும் வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியும் அந்த வாக்குறுதியை வழங்கியிருந்தது. இப்போது இதற்கான ஒத்துழைப்பை ஜனாதிபதிக்கு வழங்குவது அவர்களின் பொறுப்பாகும்.

**நாட்டில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் மற்றும் அரசாங்கங்கள் பல்வேறு அரசியல் வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. ஆனால் அவற்றில் சில வாக்குறுதிகளே நிறைவேற்றப்படுகின்றன. இந்த ஆட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா?**

என்னால் இதனை 100% சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் நான் சொன்னதைப் போல் மக்கள் மாற்றத்தை விரும்பினார்கள். தற்போது அந்த மாற்றம் கிடைத்துள்ளது. அந்த மாற்றத்தின் படியேதான் இனி செயல்பட வேண்டும். எனினும் நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

அதே சமயம் கூற வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. இந்தச் செயற்பாடு அரசாங்கத்தினுடைய அல்லது ஜனாதிபதியின் வேலை மட்டுமல்ல. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரு தரப்பினரும் இணைந்து இந்த பணியை மேற்கொள்ள வேண்டும்.

**எமது நாட்டில் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனால் நடந்தது எதுவுமில்லை. இவ்வாறான சூழ்நிலையில், இதுபோன்ற பணிகளுக்கு புதிய பொறிமுறை அல்லது புதிய செயல்முறை தேவை என்று நீங்கள் நினைக்கவில்லையா?**

அதைத்தான் நான் சொன்னேன், இது அரசாங்கத்தின் வேலை மட்டுமல்ல என்று, தேசிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதேபோன்று ஊடகவியலாளர்களின் கொலைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான விசாரணையை மீண்டும் தொடங்குவோம் என்று பிரசார மேடைகளில் தெளிவாகக் கூறியிருந்ததுதானே. அதேபோன்று தாஜுதீனின் கொலை, திருகோணமலையில் காணாமல் போன இளைஞர்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

**இந்தச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமா? அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாது என நீங்கள் நினைக்கிறீர்களா?**

இவ்விடயங்களை எதிர்ப்பதென்றால் ஒரு சிறு குழுதான் இதனை எதிர்க்கும். உண்மையைக் கண்டறிவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை வழங்குவதும் மேற்கொள்ளப்படவே வேண்டும். இதனை மேற்கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கமும் முயற்சித்தது. ஆனால் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனது.



குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு இருக்கும் பலத்திற்கு அமைய அவற்றிற்கு ஏற்படுத்தப்படும், ஏற்படும் தடைகள் அதிகமாகும். எனினும் இந்தப் பணியை அரசுப் பணியாகச் செய்யாமல் ஒட்டுமொத்த சமூகத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு மேற்கொண்டால் யாரும் காலைப் பிடித்து இழுக்கப் போவதில்லை.

**இந்த விசாரணைகளை எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று நீங்கள் பரிந்துரைக்கிறீர்கள்?**

புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்கத்தில் தற்போது மூன்று அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே உள்ளனர். எனவே, அவர்களால் திடீரென இந்தப் பயணத்தை ஆரம்பிக்க முடியாது. நாடாளுமன்றத் தேர்தல் மூலம் ஆட்சியை அமைத்ததன் பின்னரே இந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் இவ்வாறான வேலைகளை ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கவில்லை.

அடுத்தது ஜனாதிபதியின் அதிகாரத்தின் ஊடாக மாத்திரம் இவ்வாறான வேலைகளை ஆரம்பிப்பது பொருத்தமானது என்றும் நான் நினைக்கவில்லை.

ஒருமித்த கருத்துடன் இணைந்த செயல்முறையைத் தொடங்குவதே சிறந்த விடயம். அவசரமாக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்காமல், தேசிய ரீதியில் இந்நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதி ஒருவரின் ஒத்துழைப்புடன் அல்லது ஆலோசனையுடன் கூடியதாக மேற்கொண்டால் மாத்திரமே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். ஏனெனில் இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் ஆணைக்குழு அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என எமக்கு நன்றாகவே தெரியும். சிலர் நல்ல அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் எந்த பலனும் ஏற்படவில்லை

**ஈஸ்டர் தாக்குதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சுமத்தப்படும் குற்றச் செயல்கள் குறித்து அரச சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?**

அவ்வாறான ஒன்று அவசியம். அதனால்தான் இது ஜனாதிபதியின் அல்லது அரசாங்கத்தின் வேலையாக இருக்கக்கூடாது என நான் கூறுகின்றேன். இதற்கு ஒரு சுயாதீனமான அலுவலகம் தேவை. அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத வழக்குகளை சுதந்திரமாக தாக்கல் செய்யக்கூடிய அலுவலகம் ஒன்று தேவை. இந்த விடயங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைப்பது பொருத்தமானதல்ல. அரசாங்க அதிகாரிகள் அல்லது இராணுவ அதிகாரிகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களம் ஆஜராக வேண்டும். எனவே, முதலில் ஒரு பொறிமுறையினை அமைத்துக் கொண்டால், அது சுதந்திரமாக இயங்கும்.

**புதிய அரசியல் மாற்றத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

ஒரு நல்ல முன்னேற்றம், இந்த நாட்டை ஆட்சி செய்திருப்பது இரண்டு குடும்பங்கள்தானே. ஜனாதிபதி ஆர். பிரேமதாச மட்டும் பிரபு வர்க்கம் என்ற லேபலில் வராதவர். என்றாலும் அவர் வந்ததும் பிரபு வர்க்க பங்காளராகவேயாகும். சமுதாயத்தில் கீழ் மட்டத்திலிருந்து அதிகாரத்தைப் பிடிப்பது இதுவே முதல் தடவையாகும். சமூகத்திற்கும், இலங்கைக்கும், தெற்காசியாவிற்கும் கிடைத்த பாரிய சந்தர்ப்பமாக இதனைச் சுட்டிக் காட்டலாம். பிரபு வர்க்கத்திற்கு வெளியே அரசியல் அதிகாரத்தைப் பெற முடியும் என்பது இப்போது தெளிவாகி இருக்கின்றது. அந்த நிலை சிலியில் காட்டப்பட்டது. இது லத்தீன் அமெரிக்காவில் பல நிகழ்வுகளில் காட்டப்பட்டுள்ளது. எனினும் ஆசியாவில், இதுபோன்ற சூழ்நிலைகள் அரிதானவை. அந்த வகையில் எடுத்துக் கொண்டால் இந்த மாற்றம் வரலாற்றுத் தருணமாகும்.

**எனினும் சலுகைகளும் அதிகாரமும் மக்களை மாற்றிவிடும்தானே?**

ஆம், வர்த்தகம், வெகுஜன ஊடகம் போன்றவை காரணமாக இது ஏற்படக் கூடும். உருகுவேயின் முன்னாள் தலைவர் இன்றும் அரை ஏக்கர் காணியில் பயிர்ச்செய்கை மேற்கொண்டே வாழ்ந்து வருகின்றார். அவர் சலுகைகளுக்குப் பின்னால் செல்லாவிட்டாலும் அவரால் பொறிமுறையினை மாற்ற முடியாது போனது. ஏனென்றால், மக்கள் நல்லவர்கள் என்ற கருத்தொற்றுமையில் இருந்தால், வெற்றியோ மாற்றமோ ஏற்படாது. நாம் செய்ய வேண்டியது பொறிமுறையை மாற்றுவதுதான். எனவே, நல்லவர்களுக்காக காத்திருக்கக் கூடாது. ஒரு நல்ல பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

அதிகாரம் ஊழலை உருவாக்குகிறது என்ற கதை 100 சதவீதம் சரியானதே. ஒரு சிறந்த உதாரணம் கூற வேண்டுமானால், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்ததும், எதுவும் எழுதப்படாத வெள்ளை தாள்களைப் போன்ற சுத்தமான குணாதிசயங்களைக் கொண்ட இரண்டு அல்லது மூன்று இளம் அரசியல்வாதிகளைப் பார்த்தேன். ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் எங்கு விழுந்தார்கள் என்பதை நான் கூறத் தேவையில்லையே. நல்ல மனிதர்கள் என்று கலா சாரத்தை உருவாக்க முடியாது. பொருத்தமான பொறிமுறையை நிறுவுவதே முக்கியமானதாகும்.

**தேசிய மக்கள் சக்தியும் அந்த நிலைக்கு உள்ளாகக் கூடும் என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

மக்கள் விடுதலை முன்னணியின் காலி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் கூட இன்று கட்சியில் இல்லை. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த நந்தன குணதிலக்க தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளராக உள்ளார். அதனால்தான் தனிப்பட்டவர்களின் குணாதிசயங்களுக்கு அமைவாக அல்ல, சரியான பொறிமுறை தேவை என்றே நான் கூறுகின்றேன். இந்த வாய்ப்பை தவறவிட்டால், மீண்டும் ஒரு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று நினைக்க முடியாது.

**அரச ஊடகங்கள் சுதந்திரமாக்கப்படும் என்று என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

ஊடகங்களில் வெளிவரும் விடயங்களில் மக்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும்.

நிச்சயமாக, அரச ஊடகங்கள் என்பது பொதுச் சொத்தாகும், பொதுச் சொத்துக்களை அரசாங்கம் விரும்பியவாறு கையாள முடியாது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்

*நாடு முழுக்க சாராயக்கடைமயமாகி விட்டது. கிளிநொச்சி போன்ற சிறிய – போரினால் உச்சமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கூட 35 க்கு மேற்பட்ட Bar கள் உள்ளன. பல்பொருட்கடைகள், உணவுக் கடைகளைப்போல இந்த மதுக்கடைகள் ஒரே இடத்திலேயே அருகருகாக அல்லது எதிரெதிராக திறக்கப்பட்டுள்ளன. A9 வீதியில் பரந்தனிலிருந்து இரணைமடுச் சந்திக்கிடையிலான எட்டுக் கிலோ மீற்றருக்குள் 10 வரையான மதுநிலையங்கள் இப்போதுண்டு. கரடிப்போக்குச் சந்தியில் மட்டும் 200 மீற்றருக்குள் ஐந்து மதுநிலையங்கள். அருகில் ஒரு பௌத்தவிகாரையும் கந்தசாமி கோயிலும் கிறிஸ்தவ நிலையமும் இருக்கின்றன. சற்றுத் தள்ளி புனித தெரேசா பெண்கள் கல்லூரி உள்ளது.*

*இப்பொழுதுதான் சுமந்திரன் போன்ற ஒரு சிலர் இதைப்பற்றிப் பேச முற்பட்டிருக்கிறார்கள். அதுவும் தங்களுடைய அரசியற் தேவைக்காகவும் போட்டிக்காகவுமே. தமது அரசியற் போட்டியாளர்களை முடக்குவதற்காக, எதிராளிகள் மதுக்கடைகளுக்கான லைசென்ஸைப் பெறும்வரை பொறுத்திருந்து விட்டு, பின்னர் அதை மக்கள் மத்தியில் பகிரங்கப் படுத்தி, அதை வைத்தே அரசியலில் அவர்களை ஓரங்கட்டுவதற்கு இதைப்பற்றிப் பேசுகிறார்கள்.*

# எங்கெங்கு காணினும் Barகளடா அதை தடுத்து நிறுத்துவது யாரடா?

சமகால அரசியற் பரப்பு, சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள், பொதுமக்களின் வாய்களில் என எங்கும் விவகாரமாகப் பேசப்படுவது சாராயக்கடைச் சங்கதியாகும். “சாராயக்கடைச் சங்கதியா?” என்று நீங்கள் ஆச்சரியமாகக் கேட்கலாம். ஆம், சாராயக்கடை விவகாரமேதான். எப்படியென்றால், கடந்த (ரணில்) அரசாங்கம் மூன்று மாதத்திற்குள் 300 க்கு மேற்பட்ட மதுக்கடைகளுக்கான அனுமதியை (Bar Licence/ Bar Permit) அள்ளி வழங்கியிருக்கிறது. இது முன்னெப்போதும் நிகழ்ந்திராத அதிசயச் செயல். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கையில் இது முற்றிலும் விலகிய ஒன்றாகும்.

மதுபானச்சாலைகளுக்கான அனுமதிகளில் பெரும்பாலானவையும் அல்லது முழுமையும் அரசியல்வாதிகளுக்காக வழங்கப்பட்டவை என்று கூறப்படுகிறது. அதை உறுதிப்படுத்துமாறும் அவற்றின் விவரங்களை வெளியிட வேண்டும் – பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேரில் சந்தித்துக் கேட்டுள்ளார். சுமந்திரன் மட்டுமல்ல, பெரும்பாலான மக்களுடைய எதிர்பார்ப்பும் கூட இதுதான்.

இந்த அனுமதியை ரணில் அரசு வழங்கும்போதே சமூக மட்டத்திலும் மக்களிடத்திலும் எதிர்ப்புணர்வு இருந்தது. பல இடங்களில் மக்களால் வெளிப்படையாகவே எதிர்ப்புக் காட்டப்பட்டது. ஆனாலும் அதையெல்லாம் புறந்தள்ளிக் கொண்டே அனுமதிகளை அள்ளி வழங்கியது ரணில் அரசாங்கம். தனது அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க இதைச் செய்கிறார் என அப்போதே குற்றம் சாட்டப்பட்டது. இதைக்குறித்து அப்பொழுதே நீதிமன்ற நடவடிக்கையின் மூலம் தடுப்பதற்கான சிறியதொரு முயற்சியும் நடந்தது. ஆனாலும் அது வெற்றியளிக்கவில்லை.

இதனால் எந்தக் கட்டுப்பாடும் பொறுப்புமின்றி மதுக்கடைகளுக்கான லைசென்ஸைப் பெற்றுக் கொண்டிருந்தனர் பெரும்பாலான அரசியல்வாதிகள். அதன் மூலம் பல கோடிகளை அவர்கள் உழைத்துக் கொண்டனர். அதைத் தமது உறுப்பினர்கள் வாங்குவதற்கு ரகசியமாக ஆதரவளித்துக் கொண்டிருந்தன கட்சிகள். ஆக, பரிசுத்தமானவர்கள் என்று எவரும் இருக்கவில்லை.

இதனால் “எங்கெங்கு காணினும் Bar டா இதைத் தடுத்து நிறுத்துவது யாரடா?” என்று சனங்கள் கொந்தளித்தனர். அவர்களுடைய கொந்தளிப்புக்கும் மதுக்கடைகளைத் திறக்கும் முயற்சிக்கான எதிர்ப்புக்கும் எந்த மதிப்பும் வழங்கப்படவில்லை. எத்தனை எதிர்ப்புகள், தடைகள் வந்தாலும் பரவாயில்லை. மதுக்கடைகள் திறக்கப்படும் என்று அரசாங்கம் பிடிவாதமாக நின்று செயற்பட்டது.

விளைவு, நாடு முழுக்க சாராயக்கடைமயமாகி விட்டது. கிளிநொச்சி போன்ற சிறிய – போரினால் உச்சமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கூட 35 க்கு மேற்பட்ட Bar கள் உள்ளன. பல்பொருட் கடைகள், உணவுக் கடைகளைப்போல இந்த மதுக்கடைகள் ஒரே இடத்திலேயே அருகருகாக அல்லது எதிரெதிராக திறக்கப்பட்டுள்ளன. A9 வீதியில் பரந்தனிலிருந்து இரணைமடுச் சந்திக்கிடையிலான எட்டுக் கிலோ மீற்றருக்குள் 10 வரையான மதுநிலையங்கள் இப்போதுண்டு. கரடிப்போக்குச் சந்தியில் மட்டும் 200 மீற்றருக்குள் ஐந்து மதுநிலையங்கள். அருகில் ஒரு பௌத்தவிகாரையும் கந்தசாமி கோயிலும் கிறிஸ்தவ நிலையமும் இருக்கின்றன. சற்றுத் தள்ளி புனித தெரேசா பெண்கள் கல்லூரி உள்ளது.



முன்னர் இவ்வாறான வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் போன்றவை அண்மையில் இருந்தால் அங்கே மதுக்கடைகளைத் திறக்க முடியாது. இப்போது அதைப்பற்றிய கட்டுப்பாடுகளும் கடப்பாடுகளும் கிடையாது. எதுதான் பக்கத்திலிருந்தாலும் நமக்கு என்ன? என்ற கணக்கில் ஏட்டிக்குப் போட்டியாகத் திறந்து வைத்திருக்கிறார்கள் சாராயக்கடைகளை. வேண்டுமானால் குடித்து விட்டுக் கோயிலைக் கும்பிடுங்கள். அல்லது கும்பிட்டு விட்டுக் குடியுங்கள் என்ற மாதிரி எண்ணுகிறார்கள் போலும்.

“அபிவிருத்தி என்பது மதுக்கடைகளைப் பெருக்குவதா?” “சமூகப் பங்களிப்பென்பது சாராயக்கடைகளைத் திறப்பதா?” என்று மக்கள் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு யார்தான் பொறுப்புடன் பதில் சொல்லப்போகிறார்கள்? பல பொறுப்புடைய கேள்விகள் பதில் சொல்லப்படாமல் விடப்படுவதைப்போல இந்தக் கேள்விகளும் கண்டு கொள்ளப்படாமல் விடப்படலாம்.

வங்குரோத்தான நாட்டில் தொழிற்துறையும் பெருக வேண்டும். ஒழுக்கமும் சீர்மையும் வலுப்பெற வேண்டும். மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இளையோருக்கு நல்வழி காட்டப்பட வேண்டும். நல் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாட்டை விரைவிற் கட்டியெழுப்ப முடியும். இங்கே நடந்திருப்பதோ இதற்கு எதிரானது.

தொழிற்சாலைகளைத் திறப்பதற்குப் பதிலாக மதுச்சாலைகளைத் திறந்து வைத்திருக்கிறது முன்னைய அரசு. அரசு வழங்கிய அனுமதிப்பத்திரங்களை வாங்கிக் கொண்டாடியிருக்கின்றனர் அரசியல்வாதிகள். அதை கள்ள விலைக்கு வாங்கியிருக்கிறார்கள் முதலாளிகள். இதில் தாராளமாக விளையாடியிருக்கிறது ஊழல். இப்படியே சமூகத்தைச் சீரழிக்கும் ஒரு தொடரோட்டம் நடந்திருக்கிறது. இதுதானா சிறந்த பொருளாதாரக் கொள்கை?

அநுர ஆட்சி வரவில்லை என்றால் இது மேலும் நீடித்திருக்கும்.

இந்தத் தீங்கான விடயத்தில், முறைகேட்டில் ஊழலில் அரசு, அரசியல்வாதிகள், முதலாளிகள் அல்லது முதலீட்டாளர்கள் எனப் பல தரப்பும் சம்பந்தப்பட்டுள்ளமை இப்போது பகிரங்கமாகி வருகிறது. வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்கினேஸ்வரன் மதுச்சாலைக்கான உரிமத்தைப் பெறுவதற்குத் தான் கடிதம் கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளார். ஏனையவர்கள் தங்களுடைய பெயர் வெளியில் வந்து விடுமோ என்ற கலக்கத்தில் இருக்கின்றனர். விரைவில் அந்தப் பெயர்ப்பட்டியலை அநுர அரசாங்கம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இதை இவ்வளவு நாட்களும் எந்த அரசியற் கட்சியும் ஏன் தட்டிக் கேட்கவில்லை? ஏன் எந்த அரசியல்வாதியும் மக்களைத் திரட்டி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவில்லை? என்ற கேள்விகள் எழுகின்றன. ஆம், இதைக்குறித்து எதிர்வினையாற்றியிருக்கும் றயாகரனின் கேள்வி இது “

ஆக கூட்டுக் களவு நடந்திருக்கிறது என்றே கருத வேண்டியுள்ளது.

இப்பொழுதுதான் சுமந்திரன் போன்ற ஒரு சிலர் இதைப்பற்றிப் பேச முற்பட்டிருக்கிறார்கள். அதுவும் தங்களுடைய அரசியற் தேவைக்காகவும் போட்டிக்காகவுமே. தமது அரசியற் போட்டியாளர்களை முடக்குவதற்காக, எதிராளிகள் மதுக்கடைகளுக்கான லைசென்ஸைப் பெறும்வரை பொறுத்திருந்து விட்டு, பின்னர் அதை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தி, அதை வைத்தே அரசியலில் அவர்களை ஓரங்கட்டுவதற்கு இதைப்பற்றிப் பேசுகிறார்கள். இல்லையென்றால் மதுக்கடைகள் திறக்கப்படுவதற்கு முன்பே மக்களைத் திரட்டி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருப்பார்கள் அல்லவா. பாராளுமன்றத்திலோ அல்லது அதற்கு வெளியிலோ இதைப் பற்றிப் பேசியிருப்பார்களே!

சரி இப்போதாவது இதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதை வரவேற்போம்.

சாராயக்கடைச் சங்கதிகளைப் பற்றிச் சமூக மட்டத்தில் பரவலாகப் பேச்சு எழுந்திருப்பதால் ஒவ்வொரு அரசியல்வாதியும் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அதுவும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த விவகாரம் பூதம் போலக் கிளம்பியிருப்பது அவர்களைக் கிலிகொள்ள வைத்துள்ளது.

எந்தச் சாராயக்கடையும் தன்னுடைய பெயரில் இல்லை என்று அவசர அவசரமாக மறுக்கிறார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன். நாங்கள் சாராயக் கடைக்கான அனுமதியைப் பெறவில்லை என்று பதற்றப்படுகிறார்கள் பிள்ளையான் என்கிற சந்திரகாந்தனும் வவுனியாவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலீபனும். சாராயக்கடைகளைத் திறப்பதற்கு எதிராகப் பேசியதோடு, வழக்குப் போடுவதற்கும் தீர்மானித்திருக்கிறேன் என்கிறார் சுமந்திரன். இதெல்லாமே அடுத்து வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தம்மைப் பாதித்து விடும் என்பதைக் குறித்த பதறல்களே தவிர, உருப்படியான செயற்பாடுகளல்ல.

மதுக்கடைகளுக்கான லைசென்ஸைப் பெற்றது மட்டும் குற்றமில்லை, அவை, பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகன பேர்மிற்றைப்போல உச்ச விலைக்கு விற்கப்பட்டுள்ளன. அவற்றை வாங்கியிருக்கின்றனர் முதலாளிகள். அல்லது முதலீட்டாளர்கள். இவர்களுடைய சமூக அக்கறையும் பொறுப்புணர்வும் எப்படியானதாக உள்ளது? இதில் புலம்பெயர்ந்த சமூகத்தைச் சேர்ந்த சிலரும் உள்ளடக்கம். ஆக இந்தத் தவறான செயற்பாட்டில் பல தரப்புக் கைகளுக்கும் தொடர்பும் பொறுப்பும் உண்டு.

இதைக்குறித்து ஏன் நமது ஊடகங்கள் கவனம் கொள்ளவில்லை? நமது புத்திஜீவிகள், தமிழ் மக்கள் பொதுச் சபையினர், பொதுக்கட்டமைப்பினர் உள்ளிட்ட சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்களினது அக்கறைகள் என்ன? பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், ஒன்றியங்கள், பல்கலைக்கழக ஆசிரியர் குழாத்தினர் போன்றோரின் மௌனம் ஏன் தொடர்கிறது?

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பல மதுச்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று பேசப்பட்டது. அது பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மற்றும் சமூக, அரசியற் சிந்தனையையும் ஈடுபாட்டையும் சீரழிப்பதற்கான திட்டம். அதனை அன்றைய அரசு பின்னணியில் நின்று இயக்குகிறது எனச் சொல்லப்பட்டது. மட்டுமல்ல, இளைய தலைமுறையின் கல்வி, சமூகச் சிந்தனை, ஆற்றல் போன்றவற்றையெல்லாம் சீரழிப்பதற்காகப் போதைப் பொருள் விநியோகமும் பாவனையும் தூண்டிவிடப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது. அதனுடைய தொடர்ச்சிதானே இது? அப்படியென்றால் இதைச் சீரியஸாக எடுக்காமல் விடுவதேன்?

போதைப் பொருள் பாவனைக்கு இடமளித்துக் கொண்டு, சாராயக் கடைகளை ஊர் ஊராகவும் தெருத் தெருவாகவும் திறந்து கொண்டு “போதைக்கு இளைய சமூகம் அடிமையாகியுள்ளது.

ஆண்டு தோறும் பெரும் எண்ணிக்கையானோர் போதைப் பாவனையினால் உயிரிழக்கின்றனர் – பாதிக்கப்படுகின்றனர்" என்று சொல்வதிலும் கவலைப்படுவதிலும் அறிக்கை விடுவதிலும் பயனில்லை.

கருணாகரன்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கை விஜயம்

# இலங்கையின் பொருளாதார மீட்சியில் இந்திய அர்ப்பணிப்புக்கான சான்று

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்றதைத் தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் செய்த முதல் உயர்மட்ட வெளிநாட்டு அதிகாரி, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்தான். ஜெய்சங்கரின் வருகையானது, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. அண்டை நாடுகளுடனான மூலோபாய மற்றும் இருதரப்பு உறவுகளை பேணுவதற்கும் வலுப்படுத்துவதற்கும் புது டில்லியின் நோக்கத்தையும் இந்த விஜயம் சுட்டிக்காட்டுகிறது.





இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்திருந்த அவர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவையும் சந்தித்ததுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் சந்தித்திருந்தார்.

இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்துடனான கலந்துரையாடல்களின்போது, அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் (SAGAR) கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் முன்னேற்றுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டினை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்திருந்தார். இலங்கையின் முன்னுரிமையின் அடிப்படையிலான பணித்திட்டங்கள் ஊடாக இலங்கைக்கு இந்தியா வழங்கிவருகின்ற அபிவிருத்தி உதவிகள் தொடருமெனவும் அவர் உறுதியளித்திருந்தார். அந்த அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகத்தினை 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை ஊடாக நவீனமயப்படுத்துவதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் கடனுதவித் திட்டங்களின்கீழ் 20 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் நிறைவேற்றப்பட்ட 7 பணித்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை நன்கொடைத்திட்டங்களாக மாற்ற முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், இலங்கை புகையிரத சேவைகளுக்காக டீசலில் இயங்கும் 22 ரயில் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்குவதற்கும் இந்தியா தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பின்போது எரிசக்தி உற்பத்தி மற்றும் பரிமாற்றம், எரிபொருள் மற்றும் LNG விநியோகம், வழிபாட்டுத்தலங்களுக்கான சூரியக்கல மின்மயமாக்கல், இணைப்புகள், டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு, சுகாதாரம், மற்றும் பால்துறை அபிவிருத்தி குறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் உரையாடியிருந்தார். இவ்வாறான துறைகள் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பங்களிப்பு வழங்கும் அதேவேளை வருமானத்துக்கான புதிய மார்க்கங்களையும் உருவாக்குமென அவர் சுட்டிக்காட்டியிருந்தார். செழிப்புமிக்க ஓர் இலங்கைக்கான நோக்கினை நனவாக்குவதிலும் மக்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதிலும் இந்தியாவின் பொருளாதார ஆதரவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்திருந்தார். அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்தியினை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆற்றல்கள் குறித்து தெரிவித்திருந்த அவர், இலங்கையில் உற்பத்திச் செலவினை குறைப்பதற்கும் மேலதிக வளங்களை உருவாக்குவதற்கும் இது ஆதரவாக அமையுமெனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் பங்களிப்பு தொடர்பாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டதுடன் இத்துறையானது மேலும் வளர்வதற்கான சாத்தியங்களை கொண்டிருப்பதனையும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

அதேபோல, இந்திய முதலீடுகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இலங்கையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கல், மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது. இலங்கையின் ஆளுமை விருத்தி தேவைகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றினை நிவர்த்திசெய்வதற்கும் இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரியவுடனான சந்திப்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பின் மூலமான நலன்கள் குறித்தும் அவர்களது சந்திப்பில் கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பில் கூறியிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், ஆரம்பம் முதலே இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சிக்காக இந்தியா ஆதரவளித்துவந்ததாக நினைவூட்டியிருந்தார். இந்தியா முதலாவதாக நிதி உத்தரவாதத்தினை வழங்கியிருந்ததுடன் அதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட நிதி வசதி குறித்த இறுதி தீர்மானத்தை மேற்கொள்ள வழிகோலப்பட்டது. நாட்டிற்கான சர்வதேச முறிகளின் உரித்தாளர்களுடனான உடன்படிக்கைகள் தொடர்பாக உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் சபையில் இந்தியாவின் ஆதரவை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் உறுதிப்படுத்தினார். இலங்கையுடனான தனது இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதனை துரிதப்படுத்துவதற்கும் இந்தியா விரும்புகின்றது. பாதுகாப்பு துறைகளில் இந்தியா மற்றும் இலங்கையின் நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளமையை இச்சந்திப்புகள் வெளிக்காட்டியிருந்தன. இரு நாடுகளினதும் ஒத்துழைப்பு பரஸ்பர நலன்களை அடிப்படையாகக் கொண்டதுடன் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்புக்கும் பங்களிப்பினை வழங்குகின்றது. நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஆகியவற்றினை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியான பேச்சுக்கள் அவசியமானதெனவும் இவ்விஜயத்தின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இலங்கையின் ஆட்புலத்தினை பயன்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதென ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கவலை வெளியிட்டிருந்தார். இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டுமெனவும், அவர்கள் மீதான கடுமையான அபராதம் குறித்தும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியிருந்தார். வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்த மனிதாபிமான அடிப்படையிலான அணுகுமுறையானது, இந்த விவகாரத்தை தீர்த்துவைப்பதற்கான ஒரு நிலையான அடித்தளத்தினை உருவாக்கும். மீன்பிடித்துறை மற்றும் மீனவர் சங்கங்கள் குறித்த கூட்டுப்பணிக் குழு கூட்டம் உரிய காலத்தில் நடத்தப்படும். மேலும், 50 இந்திய மீனவர்கள் இன்றைய தினம் விடுதலை செய்யப்பட்டமையை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பாராட்டியிருந்தார்.

பரஸ்பரம் பொருத்தமான ஒரு திகதியில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடி சார்பாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரால் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு அழைப்பும் விடுக்கப்பட்டிருந்தது.








## தமிழரசுக் கட்சியில் தற்போது

# அதிகாரம் கையோங்கி இருப்பவர்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்

**தமிழரசுக் கட்சியில் தற்போது தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களின் ஆதிக்கமே உள்ளதாகக் கூறும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன், அதன் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால், இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைய வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவரது நேர்காணல் வருமாறு.....**

> பிழையான நபர்களை பாராளுமன்றம் அனுப்பினால் அவர்கள் சுயநல சிந்தனையுடனேயே செயல்படுவார்கள். அது ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுக் கொடுக்காது.

> மதுபான சாலை அனுமதிப்பத்திரம் வழங்குவது பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளில் ஒன்றே. ஆனால் அவ்வாறான சிபார்சினால் நான் தனிப்பட்ட விதத்தில் எந்த நன்மையும் பெறவில்லை

**கேள்வி : பொதுத் தேர்தலில் உங்கள் கட்சி தனித்து போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளதே? அதற்குக் காரணம் என்ன?**

பதில் : நான் ஏற்கனவே ஊடகங்களுக்குக் குறிப்பிட்டபடி, இளையோருக்கு அரசியலில் இடமளிப்பதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் வகையிலும், எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியலை இளைஞர், யுவதிகள் முன்னெடுத்துச் செல்லும் விதத்தில் அவர்களை வழி நடத்தும் வகையிலுமே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய தமிழ் தேசிய கட்சிகள் இளையோருக்கு இடமளிக்கும் வகையில் ஆசன ஒதுக்கீடுகளை செய்திருப்பதாகத் தெரியவில்லை. மீண்டும் அதே பழைய வேட்பாளர்களையே அவர்கள் களம் இறக்குகின்றார்கள். நாம் கூடுமான வரையில் படித்த, பண்புள்ள இளைஞர், யுவதிகளை முன்னிறுத்த விழைந்துள்ளோம். சிலர் வயது முதிர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் புது முகங்களாக முன்னிறுத்தியுள்ளோம். சில கட்சிகளுடன் எம்மால் ஒத்துப் போக முடியாமையும் இன்னொரு காரணம். தமிழரசுக் கட்சியில் தற்போது அதிகாரம் கையோங்கி இருப்பவர்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள். அதன் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைய வாய்ப்புள்ளது.

**கேள்வி : ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதிலும் பொது வேட்பாளரை களமிறக்குவதிலும் ஒற்றுமைப்பட்ட கட்சிகள் பொதுத் தேர்தலில் அவ்வாறானதொரு ஒற்றுமையைக் காண்பிக்க மாட்டா என்பதற்கான சமிக்ஞையாக இதனைக் கொள்ளலாமா?**

பதில் : ஜனாதிபதித் தேர்தல் வேறு பாராளுமன்ற தேர்தல் வேறு! பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக ரீதியாக பல்வேறு சிந்தனைகள், அணுகுமுறைகள், அரசியல் சிந்தாந்தங்களை கொண்ட பல கட்சிகள் போட்டியிடுகின்றன. இதன்போது கட்சிகளுக்குள்ளே வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு.

ஜனாதிபதித் தேர்தலில் ஒற்றைக் குறிக்கோளுக்காக எல்லோரும் இணைந்தோம். பாராளுமன்றத் தேர்தலில் தனிப்பட்ட கட்சிகளின் கொள்கைகளும் செல்வழியும் முக்கியமாகின்றன.

தமிழ்த் தேசியத்துடன் சேர்ந்து பயணிப்பவர்கள் அரிதாகி வருவதால் நாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தோம். தமிழ் மக்களிடையே ஒற்றுமையைப் பேணுவது சிரமமே என்பது புலப்படுகின்றது. ஆனால் ஒரு கட்சி உண்மையாகவும் விசுவாசமாகவும் தமிழ்த் தேசியத்துடன் நின்றால் மக்கள் ஆதரவு அந்தக் கட்சிக்குக் கிடைக்கும் என்பது எமது நம்பிக்கை.

**கேள்வி : 'பொதுத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் உதிரியாகவுள்ள தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கவும் புதிய அரசியல் கட்சியோ அல்லது கூட்டமைப்போ உருவாக்கப்படவுள்ளதாகவும் பல செய்திகள் வெளி வருகின்றனவே?**

பதில் : அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னுடன் இது பற்றி யாருமே பேசவில்லை.

**கேள்வி : இது குறித்து லைக்கா நிறுவனர் சுபாஸ்கரன் உங்களைச் சந்தித்ததாகவும் அறியக் கிடைத்தது? அந்தச் சந்திப்பில் கலந்துரையடப்பட்டதென்ன? அவ்வாறு தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி சாத்தியமாகுமா?**

பதில் : என்னை லைக்கா சுபாஸ்கரன் அழைக்கவும் இல்லை. நான் எவரையும் சந்திக்கவுமில்லை. சுபாஸ்கரன் நிழற்படங்களை ரஜினி படங்களில் பார்த்திருக்கின்றேன். அவரை நிஜத்தில் சந்தித்ததில்லை.

**கேள்வி : உங்கள் கட்சி தெற்கின் ஏதாவது கட்சிக்கு ஆதரவு வழங்குமா? அப்படியானால் என்ன நிபந்தனைகளின் கீழ்?**

பதில் : தெற்கின் எந்தக் கட்சிக்கும் எமது ஆதரவு இல்லை. ஆனால் வட, கிழக்கு தமிழ் மக்களின் தனித்துவத்தையும் “தேசம்” என்ற அவர்களின் அந்தஸ்தையும் சட்டப்படி ஏற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் முன்வந்தால் நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம்.

**கேள்வி : மதுபான சாலை அனுமதிப்பத்திரம் ஒன்று உங்கள் சிபாரிசில் வழங்கப்பட்டது குறித்த சர்ச்சையொன்று தற்போது கிளம்பியுள்ளதே?**

பதில் : இது தொடர்பில் நான் ஊடகங்களுக்கு ஏற்கனவே எனது விளக்கத்தை அளித்துவிட்டேன். சிபார்சு கடிதம் என்னிடம் கேட்கப்பட்டு அதை நான் வழங்கியது உண்மையே.

> வட, கிழக்கு தமிழ் மக்களின் தனித்துவத்தையும் "தேசம்" என்ற அவர்களின் அந்தஸ்தையும் சட்டப்படி ஏற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் முன்வந்தால் நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம்.

> தமிழ்த் தேசியத்துடன் சேர்ந்து பயணிப்பவர்கள் அரிதாகி வருவதால் நாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தோம்.

இது பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளில் ஒன்றே. சர்ச்சை எழுந்ததற்குக் காரணம் அவ்வாறான சிபார்சினால் நான் தனிப்பட்ட விதத்தில் ஏதாவது பணம் உழைத்தேனோ என்ற வினாவே.

அப்படி ஏதும் நான் எந்த விதத்திலும் நன்மை பெறவில்லை. நன்மை பெற வேண்டிய அவசியம் ஏதும் எனக்கில்லை.

**கேள்வி : யாழ். மாவட்டத்துக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 06 ஆகக் குறைந்துள்ளதும் தமிழர் தரப்பில் பிரிந்து நின்று வாக்குக் கேட்பதும் எந்தவகையில் தாக்கத்தைச் செலுத்தும் என்று நினைக்கின்றீர்கள்?**

பதில் : இது தாக்கத்தை ஏற்படுத்தும். சந்தேகமில்லை. ஆனால் எமது மக்கள் தமிழ்த் தேசியத்தை நெஞ்சில் நிறுத்தி புத்திசாதுரியமாக வாக்களிப்பார்களானால் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் தேசிய கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்க முடியும். ஆகவே, சிங்கள கட்சிகளைச் சார்ந்து தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களையும் முன்னைய அரசாங்கங்களுடன் இணைந்து ஒட்டுக் குழுக்களாக செயற்பட்ட கட்சிகளையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். பிழையான நபர்களை பாராளுமன்றம் அனுப்பினால் அவர்கள் சுயநல சிந்தனையுடனேயே செயல்படுவார்கள். அது ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுக் கொடுக்காது. தாக்கத்திற்கான பரிகாரம் மக்கள் கைகளிலேயே இருக்கின்றது. தக்கவர்களுக்கு அவர்கள் வாக்களிக்க வேண்டும். வாக்கிருக்கும் ஒவ்வொரு வாக்காளரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

**கேள்வி : தமிழ் பொது வேட்பாளர் என்பது இனவாதத்தைத் தூண்டுவதாக விமர்சிக்கப்பட்டதே? தெற்கில் தற்போது இனவாதம் குறைவடைய வடக்கில் இனவாதத்துக்கு தீனி போடப்படுகின்றதா?**

பதில் : எமது பொது வேட்பாளர் இனவாதம் எதுவும் பேசவில்லை. தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள் மற்றும் அவர்களின் அபிலாஷைகள் பற்றியே பேசினார். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அவை பற்றியே குறிப்பிடப்பட்டிருந்தன. இவை பற்றியே நாம் மேடைகளிலும் பேசினோம். இனவாதத்தை தூண்ட வேண்டிய அவசியம் எமக்கில்லை.



**வாசுகி சிவகுமார்**

---

## ஆதலினால் காதல் செய்வீர் மழலை பெறுவீர்

# புட்டினின் போர்க்கால வேண்டுதல் !

**ரஷ்ய இராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய இராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார். ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கையை 180,000 ஆல் அதிகரிக்கவும், மொத்தப் படையை 2.38 மில்லியனாக உயர்த்தவும், 1.5 மில்லியன் துணை படையையும் இந்த திட்டம் உருவாக்கிறது. இதன் பிரசார யுக்தியாகவே காதல் செய்வீர், மழலை பெறுவீர், எனும் புட்டினின் போர்க்கால வேண்டுதல் வெளிவந்துள்ளது**

ரஷ்யாவில் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க, காதல் செய்வீர், மழலை பெறுவீர், எனும் புட்டினின் போர்க்கால வேண்டுதல் என்பது வெறுமனே இனத்தொகையை கூட்டுவது மட்டுமன்றி, நீண்ட கால போர்த்திட்டத்திற்கு அமைய ரஷ்ய இராணுவத்தை பலமாக்குவதாகும் என்றே மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நாட்டின் இன வீழ்ச்சியை எதிர்த்துப் போராட, வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்களை வலியுறுத்தும் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளமை சர்வதேச ரீதியில் சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

ரஷ்யாவின் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்கு பதிலளிக்கும் விதமாக, ஒரு அசாதாரண முயற்சியை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடங்கியுள்ளார். ரஷ்யர்கள் தங்கள் வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ள ஊக்குவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதுவே தற்போது பலராலும் விமர்சிக்கப்படும், வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்படுகிறார்கள் எனும் புட்டினின் அறிக்கையை உலகம் பல்வேறு கோணங்களில் பார்க்கிறது.

இந்நடவடிக்கையானது ரஷ்ய நாட்டின் கருவுறுதல் விகிதத்தை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தற்போது ஒரு பெண்ணுக்கு சுமார் 1.5 குழந்தைகளாக உள்ளது. ரஷ்ய மக்கள்தொகை நிலைத்தன்மைக்கு தேவையான 2.1 விகிதத்தை விட குறைவாகவே உள்ளது.

ரஷ்ய மக்களைப் பாதுகாப்பதே எங்கள் மிக உயர்ந்த தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் எதிர்கால தலைவிதி நம்மில் எத்தனை பேர் சுகதேகியாக இருப்போம் என்பதைப் பொறுத்தது. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எனவும் ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதனை நிவர்த்தி செய்யவே, பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்பட்டனர் எனும் அறிக்கையால் பலர் வியப்புக்குள்ளாகினர்.

உக்ரைனில் நடந்து வரும் மோதலால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளைய குடிமக்களின் குடியேற்றத்தால் மோசமாகிவிட்ட ரஷ்யா மக்கள்தொகை, வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த வேண்டுதல் வந்துள்ளது.

ரஷ்ய மக்கள்தொகை சரிவை மாற்றியமைப்பது ஒரு முதன்மையான தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெளிவுபடுத்தியுள்ளார். நாட்டின் எதிர்காலம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது என்று அறிவித்தார்.

இதேவேளை ரஷ்ய சுகாதார அமைச்சர் டாக்டர் யெவ்ஜெனி ஷெஸ்டோபலோவ் புதிய பிறப்பு கொள்கையை ஆதரிக்கிறார். குழந்தைகள் இல்லாததற்கு காரணம் வேலைப்பளு என்பதனை நிராகரித்தார். வேலை இடைவேளையின் போது குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்த புதிய கொள்கையானது பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கான பரந்த கிரெம்ளின் முயற்சியின் ஒரு பிரசார விடயமாகும். மாஸ்கோவில் உள்ள பெண்களுக்கு அவர்களின் இனப்பெருக்க ஆரோக்கியத்தை மதிப்பிடுவதற்கு இலவச கருவுறுதல் சோதனைகள் இப்போது வழங்கப்படுகின்றன.

அத்துடன் ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் (MP Tatyana Butskaya) தட்யானா பூட்ஷ்கயா முதலாளிகள் தங்கள் ஊழியர்களின் பிறப்பு விகிதங்களைக் கண்காணித்து அறிக்கையிட வேண்டும் என்று முன்மொழிந்துள்ளார். இது ஒவ்வொரு ஆண்டும் பிறப்புகளின் எண்ணிக்கையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

செலாயன்பின்ஸ்க் (Chelyabinsk) பகுதியில், இளம் பெண்களுக்கு அவர்களின் முதல் குழந்தை பிறந்ததற்கு 8,500 பவுண்ட்ஸ் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. அதேவேளை கருக்கலைப்புகளை அணுகுவதையும், விவாகரத்து கட்டணத்தை அதிகரிப்பதையும் ரஷ்ய அரசாங்கம் கடினமாக்குகிறது. அத்துடன் அரசியல் பொது




நபர்கள் மற்றும் தேவாலயத் தலைவர்கள் அதிக பிறப்பு விகிதங்களை ஒரு தேசிய கடமையாக்க வாதிடுகின்றனர்.

அன்னா குஸ்னெட்சோவா மற்றும் ஜன்னா ரியாப்ட்சேவா போன்ற ரஷ்ய அரசியல்வாதிகள் பெண்கள் இளம் வயதிலேயே குழந்தைகளைப் பெறத் தொடங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர்.

ரஷ்ய இராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய ராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரஷ்ய ராணுவத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்ய அதிபர் புட்டின் திட்டமிட்டுள்ளார். தற்போது ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கையை 180,000 ஆல் அதிகரிக்கவும், மொத்தப் படையை 2.38 மில்லியனாக உயர்த்தவும், 1.5 மில்லியன் சுறுசுறுப்பான துணைப் படையையும் இந்த திட்டம் உருவாக்கிறது.

இது சீனாவைத் தொடர்ந்து ரஷ்யாவின் இராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய இராணுவமாக மாற்றும். இந்த விரிவாக்கம் 2022இல் உக்ரைன் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து இராணுவ வீரர்களின் முந்தைய அதிகரிப்புகளைப் பின்பற்றுகிறது. நடந்து கொண்டிருக்கும் மோதல்கள் மற்றும் தற்போதைய உலகளாவிய நிலைமைகளுக்கு ஏற்பவும் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும் இந்த விரிவாக்கம் ஒரு மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும் என ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போரில் உயிரிழப்புகள் :

உக்ரைன் போரில் தொடர் உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், ரஷ்ய பெண்களை எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக்கொள்ளுமாறு கடந்த வருடம் புட்டின் வலியுறுத்தியிருந்தார். ரஷ்ய பெண்கள் பெரிய குடும்பங்களைக் கொண்டிருப்பதே வரவிருக்கும் தசாப்தங்களில் தங்கள் இலக்கு என்றும் ரஷ்ய அதிபர் கூறியிருந்தார்.

ரஷ்யப் பெண்கள் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று, பெரிய குடும்பங்களாக மாறுமாறு விளாடிமிர் புடின் வலியுறுத்தினார். சோவியத் உடைவின் பின்னர் 1990 களில் இருந்து ரஷ்யாவின் பிறப்பு விகிதம் சீராக குறைந்து வருகிறது.

ரஷ்ய மக்கள் தொகையை அதிகரிப்பது வரவிருக்கும் தசாப்தங்களுக்கு எங்கள் இலக்கு என்றும் புட்டின் கூறியிருந்தார். ரஷ்ய மக்களில் பலர் குடும்பத்தின் பாரம்பரியத்தை பராமரிக்கிறார்கள். அங்கு நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள் என்றும் புட்டின் கூறினார்.

முன்பு ரஷ்ய குடும்பங்களில் பாட்டி மற்றும் கொள்ளு பாட்டிகளுக்கு 7 மற்றும் 8 குழந்தைகள் இருந்தனர் என்பதை நினைவில் கொள்க. இந்த மரபுகளைப் பாதுகாப்போம், புத்துயிர் பெறுவோம். பல குழந்தைகளைப் பெறுவது, ஒரு பெரிய குடும்பம், ரஷ்யாவின் அனைத்து மக்களுக்கும் ஒரு விதிமுறையாக, வாழ்க்கை முறையாக மாற வேண்டும் எனவும் புட்டின் கோரியிருந்தார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# வரிக்கொள்கை மறுசீரமைப்பினால் நாடு வளர்ச்சிப் பாதைக்கு செல்லும்



## பேராசிரியர் அனில் பெர்னாந்து பேட்டி

**வரிக்கொள்கையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகள் நாட்டை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்லும். இதற்கான வேலைத்திட்டங்கள் படிப்படியாக முன்னெடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான அனில் பெர்னாந்து தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

**கே: நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் எந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது?**

பதில்: நாட்டின் சிற்றினப் பொருளாதாரத்தை (மைக்ரோ எக்கனொமிக்ஸ்) ஸ்திரப்படுத்துவதற்கே நாம் முன்னுரிமையளிக்கின்றோம். அதிக முதலீடுகளை கொண்டு வரவும், சேமிப்பை முதலீடுகளாக மாற்றவும் இது வழிவகுக்கும் என நாம் நம்புகின்றோம். முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை இழக்க நேரிடும் என்ற அச்சமின்றி பல துறைகளில் முதலீடு செய்வதற்கு வசதியாக உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் நாம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளோம். தற்போது முதலீட்டாளர்கள் எதிர்காலம் குறித்து மிகவும் நிச்சயமற்ற நிலையில் இருப்பதால், இலங்கையில் முதலீடு செய்யப் பலர் தயக்கம் காட்டுகின்றனர். வியாபாரத்தில் இலாபம் ஈட்டினாலும், எந்த வகையான வரிவிதிப்பு மேற்கொள்ளப்படும், மாற்று வீதங்கள் ஏற்ற இறக்கமாக இருக்குமா என்பது அவர்களுக்குத் தெரியாது.

நிலையற்ற தன்மை அதிகமாக உள்ளது மற்றும் வணிக இயக்கவியல் மிகவும் நிச்சயமற்றது. எங்களின் முதல் முன்னுரிமை சிற்றினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிதி நிலைப்படுத்தல் ஆகும். அதன் பின்னர் அந்நிய செலாவணி நிலைப்படுத்தலுக்குச் செல்வோம். எதிர்காலத்தில் நாணயமாற்று வீதம் என்னவாக இருக்கும் என்பதை மக்கள் நம்பத்தகுந்த முறையில் கணிக்க வேண்டும். இதனால் அவர்கள் தங்கள் செயற்பாடுகளை எளிதாக திட்டமிட முடியும். இல்லையெனில், விஷயங்கள் வதந்திகளால் இயக்கப்படும் மற்றும் உள்தொடர்புகளால் குழப்பமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.

இதனையடுத்து வெளியகத்துறையை உறுதிப்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்துவோம். வெளிநாட்டுக் கடன்வழங்குனர்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதற்கான இணக்கங்களையும், கலந்துரையாடல்களையும் நடத்துவதற்கு இது உதவும். இது போதுமான இருப்புகளை உருவாக்க எங்களுக்கு உதவும், அதற்கான திட்டம் எங்களிடம் உள்ளது.

தற்போது பெரும்பாலான இலங்கையர்கள் அடிப்படைத் தேவைகளை இழந்துள்ளனர். அதனால்தான் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பணம் தேவைப்படும் மனநிலையில் உள்ளனர். பொருளாதார ஈடுபாட்டிலிருந்து அவர்களை விலக்கி வைப்பதன் மூலம் எங்கள் அரசாங்கம் எல்லா நேரங்களிலும் மானியங்களை வழங்கும் என்று அர்த்தமல்ல. அவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் மிகவும் சுறுசுறுப்பான மற்றும் துடிப்பான பகுதியாக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

**கே: முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும் உருவாக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளீர்கள்? முதலீட்டாளர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?**

பதில்: நாம் செய்யக்கூடிய விடயங்கள் பல உள்ளன. முதலில், எதிர்க்கட்சிகள் நம்மைப் பற்றி சமூகத்தில் உருவாக்கியுள்ள கட்டுக்கதைகளையும், பொய்களையும் களைய வேண்டும். எங்களைப் பற்றி மோசமான பிம்பத்தை உருவாக்கி விட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருட்களை பறிமுதல் செய்வது, மக்களின் சொத்துக்களை ஆக்கிரமிப்பது போன்ற மோசமான செயல்களைச் செய்வோம் என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் விதைத்துள்ளனர். சிலர் தங்கள் வங்கிக் கணக்குகளிலும் பணத்தை வைக்கப் பயப்படுகிறார்கள். அந்தப் பயத்தை நம்மால் போக்க முடிந்தது.

இந்த நம்பிக்கை படிப்படியாக உருவாகி வருகிறது. இந்த நம்பிக்கை கடந்த இரண்டு நாட்களில் பங்குச் சந்தையில் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை நீங்கள் பார்க்கலாம். முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை உற்பத்தி வழிகளில் கொண்டு வருவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவோம். உதாரணமாக, ஒருவரிடம் பணம் இருந்தால் மற்றும் இலங்கையில் முதலீடு செய்ய விரும்பினால், அவர் தனது முதலீட்டில் இலாபத்தை எதிர்பார்க்கிறார்.

ஆபத்துகள் மற்றும் கிடைக்கும் வசதிகளையும் அவர் பார்க்கிறார். எனவே, வசதி மிகவும் முக்கியமானது. ஒரு முதலீட்டாளர் ஒரு புதுமையான தொழிலைத் தொடங்க வந்தாலும், குறுகிய காலத்திற்குள் விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு சூழல் அவருக்கு உதவவில்லை என்றால், அவர் வேறு எங்காவது செல்லலாம். அனுமதிகள், உரிமங்கள் மற்றும் அனுமதிகளைப் பெறுவதற்கும், ஒற்றைச் சாளரத்தின் கீழ் தரையிறங்குவதற்கும், அதிநவீன தொழில்நுட்பத்துடன் ஒரு தனிப்பிரிவை அமைக்க நாங்கள் முன்வந்துள்ளோம். பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளதால், அதற்கு சிறிது காலம் எடுக்கும். ஆனால் சில அறிகுறிகள் தென்படுகின்றன.

சில வரிச் சீர்திருத்தங்களை நாங்கள் முன்மொழிந்துள்ளோம். எங்கள் வரிக் கொள்கையானது பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் அதேவேளையில் நியாயம், எளிமை மற்றும் வசதி என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பிட்ட தொழில்களுக்கு சில மானியங்கள் மற்றும் வரிவிலக்கு அளிக்க தயாராக உள்ளோம். தனிநபர்களுக்கு அல்லாமல் தொழில் துறைகளுக்கு வரிச்சலுகைகளையும் மானியங்களையும் வழங்குவோம்.

> **'எதிர்க்கட்சிகள் எம்மைப் பற்றி சமூகத்தில் உருவாக்கியுள்ள கட்டுக்கதைகளையும், பொய்களையும் களைய வேண்டியுள்ளது. எங்களைப் பற்றி மோசமான பிம்பத்தை உருவாக்கி விட்டார்கள்'**

**கே: வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் இன்னல்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா?**

பதில்: நிச்சயமாக. நாம் அதைச் செய்ய வேண்டும். அதனால்தான் இதை எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துள்ளோம். நாங்கள் பல வகைகளை அடையாளம் கண்டுள்ளோம். தற்போது, பெரும்பாலான மக்கள் வறுமையின் காரணமாக உண்மையில் பின்தங்கியுள்ளனர். அவர்களுக்கு குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபா பணத்திற்கான பலன்கள் மற்றும் அதற்கான வழிமுறையை நாங்கள் உருவாக்குவோம். அத்துடன் ஆதரவற்ற முதியோர், சிறுநீரக நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கும் நிவாரணங்களை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

அவர்கள் உண்மையில் சமூகத்தில் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களை எப்படி மீண்டும் சமுதாயத்திற்குக் கொண்டுவர முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கும் சில திறமைகள் உள்ளன. மாற்றுத்திறனாளிகள் கூட மானியங்களைப் பெறுவதையும், குறைந்தபட்ச வாழ்க்கையைப் பெறுவதையும் விரும்புவதில்லை. அவரவர் திறனுக்கு ஏற்ப பங்களிப்பை வழங்க தயாராக உள்ளனர். வாய்ப்புகளை உருவாக்கினால் அவர்களும் வேலை செய்வார்கள். ஆரம்பத்தில், அவர்கள் உண்மையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய ஒரு திட்டத்தை நாங்கள் அமைக்கும் வரை சில சலுகைகள் அல்லது மானியங்களை வழங்குவோம். இந்த மானியங்கள் தற்போதைய முக்கியமான சிக்கலைத் தீர்ப்பதற்கான தற்காலிக நடவடிக்கைகளாகும். படிப்படியாக, அவர்கள் உண்மையான பொருளாதார ஈடுபாட்டில் இருப்பார்கள்.

**கே: அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வற் வரிவிலக்கு அளிக்க ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?**

பதில்: ஆம், நிச்சயமாக. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள், மருத்துவ சேவைகள், கல்வி உபகரணங்கள், புத்தகங்கள், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் விவசாயம், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு வற் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு நிவாரணம் அளிப்பதுடன், உற்பத்திக்கு ஒருவித தூண்டுதலையும் வழங்குவதே எங்கள் நோக்கம்.

எனவே, அந்த வற் வீதங்கள் பூஜ்ஜியமாகக் குறைக்கப்படும். பிற துறைகளில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி வற் வரியின் வீதத்தைத் தீர்மானிக்க முடியும். எனினும், இதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியம். அடுத்த பாராளுமன்றம் மீண்டும் கூடும்வரை இந்தத் தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது.

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம், விசேட சரக்கு வரியை நாம் கையாள முடியும். அதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என்று பார்ப்போம். சிறப்புப் பண்டக வரிகளை மாற்றினாலும், அது மக்களுக்கு பெரிய நிவாரணமாக இருக்காது, ஆனால் தொழிற்சாலைகளுக்கு வாய்ப்புகள் உள்ளன.

## அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# தி.மு.கவுக்குள் கோலோச்சும் வாரிசு அரசியல்!



தமிழகத்தின் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் சில தினங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ளமை, மாநில அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழகத்தில் குடும்ப அரசியல் கோலோச்சுவதாக எதிரணிகள் கடுமையாக் கண்டனம் தெரிவிக்கின்றன. அதேவேளை முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளும் அதிருப்தி நிலவுகின்றது.

தி.மு.கவுக்குள் சிரேஷ்ட தலைவர்கள் பலர் இருக்கையில் முதல்வர் ஸ்டாலின் தமது புதல்வருக்கு மகுடம் சூட்டி விட்டாரென்று கட்சிக்குள் பலரும் புழுங்குகின்றனர். அதாவது தி.மு.கவுக்குள் நான்காவது தலைமுறை தொடங்கிவிட்டது எனப் பேசி வருகின்றனர். அதாவது அண்ணா, கருணாநிதி, ஸ்டாலினை அடுத்து உதயநிதி நான்காம் தலைமுறை தலைவராகப் பார்க்கப்படுகிறார்.

ஆனால், உண்மையில் என்ன சாதித்தார் என்பதற்காக தி.மு.க தலைமை உதயநிதிக்கு துணைமுதல்வர் பதவியை வழங்க முடிவு செய்தது என்னும் கேள்வி கட்சிக்குள் எழுந்துள்ளது.

தற்போதைய தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான ஸ்டாலின் தனது கட்சி அரசியலை 1983 ஆம் ஆண்டு தி.மு.க இளைஞர் அணி செயலாளராக தொடங்கினார். பின்னர் 1989 ஆம் ஆண்டு எம்.எல்.ஏ, 2006 ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர், 2009 ஆம் ஆண்டு துணை முதல்வர். இறுதியாக 2021 ஆம் ஆண்டு முதல்வராகப் பதவியேற்றார்.

உதயநிதிக்கு 2019 ஆம் ஆண்டு இளைஞர் அணி செயலாளராகப் பொறுப்பு வழங்கப்பட்டது. பின்னர் 2021 ஆம் ஆண்டு எம்.எல்.ஏ பதவி, 2022 ஆம் ஆண்டு அமைச்சர் பதவி, 2024 ஆம் ஆண்டு துணை முதல்வர்.

தன் தீவிர அரசியல் பயணத்தைத் தொடங்கிய 5 ஆம் வருடத்தில் 'துணை முதல்வர்' பதவியைப் பெற்றிருக்கிறார். ஆனால் அவரது தந்தை ஸ்டாலின் துணை முதல்வர் என்னும் பொறுப்பை ஏற்க கட்சியில் 26 ஆண்டு காலம் உழைக்க வேண்டியிருந்தது. இந்த வேறுபாட்டால்தான் உதயநிதியின் அனுபவம், அரசியல் தெளிவு, கொள்கை, புரிதல் போன்றவற்றின் மீது மக்களுக்கு கேள்வி எழுகிறது. உதயநிதி துணை முதல்வராக சாதிப்பாரா என்பது அடுத்த கேள்வி. எதன் அடிப்படையில் உதயநிதிக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டது?

உதயநிதி விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் அத்துறைக்கு சிறப்பு கவனம் கொடுக்கப்பட்டது. தமிழகத்தில் செஸ் ஒலிம்பியாட், கேலோ இந்தியா, பார்முலா கார் ரேஸ் என முக்கியமான போட்டிகளைத் தலைமை ஏற்று நடத்தி கவனத்தைப் பெற்றார். விளையாட்டுத் துறையில் அனைவரின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பினார்.

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பிரசாரம் மேற்கொண்டார் உதயநிதி. அந்தத் தேர்தலில் 38 இடங்களை வென்றது திமுக. இதற்குக் காரணம் உதயநிதியின் தேர்தல் பிரசாரம்தான் என தி.மு.கவினரால் சொல்லப்பட்டது. தி.மு.கவின் முக்கிய வாக்குறுதிக்காகக் கட்சி அளவில் சில முன்னெடுப்புகளைச் செய்தார். 'Ban NEET' என்னும் பெயரில் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கினார். அப்போது நீட் பிஜி தேர்வில் பூஜ்ஜியம் வீதம் எடுத்தாலும் மருத்துவப் படிப்பில் சேரலாம் என்று மத்திய அரசு அறிவித்திருந்த நிலையில், முட்டையைக் காண்பித்து கவனத்தை ஈர்த்தார்.

2024 மக்களவைத் தேர்தலின் போது சனாதனம் குறித்து உதயநிதி பேசியது சர்ச்சையானது. கூட்டணியில் இருந்த காங்கிரஸ் இதனை ரசிக்கவில்லை. இந்தப் பேச்சு இந்தியா கூட்டணிக்குப் பின்னடவை ஏற்படுத்தும் என சொல்லப்பட்டது. இருப்பினும் தன் கருத்தில் இருந்து பின்வாங்காமல் இருந்தார் உதயநிதி. இது திமுகவின் கொள்கைகளை உள்வாங்கியவர்களிடம் கவனம் பெற்றது.

> **கட்சிக்குள் மூத்தவர்கள் இருக்கையில், மகன் உதயநிதிக்கு 'துணை முதல்வர்' மகுடம் சூட்டினார் முதலமைச்சர் ஸ்டாலின்! கட்சிக்குள்ளும், எதிரணியிலிருந்தும் கண்டனங்கள்!**

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இளைஞர் அணி மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. அதற்கு தலைமை ஏற்றிருந்தார் ஸ்டாலின். அதன்பின் இரண்டு ஆண்டுகளில் துணை முதல்வர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், 17 ஆண்டுகள் கடந்து இரண்டாவது இளைஞர் அணி மாநாடு உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சேலத்தில் நடந்தது. இதை வெற்றிகரமாக நடத்தி முடித்த சில மாதங்களில் துணை முதல்வர் அரியணையில் ஏறியுள்ளார் உதயநிதி.

ஆனால் உதயநிதி செய்ததை விட கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்கள் பல வெற்றிகளைக் கட்சிக்குப் பெற்று தந்துள்ளனர். ஆனால், அவர்களுக்கு இந்தப் பொறுப்பு மறுக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட தலைவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது உதயநிதிக்கு எந்த தகுதி அடிப்படையில் துணை முதல்வர் வழங்கப்படுகிறது? என்னும் கேள்வியை எழுப்புகிறார்கள் பலர்.

தற்போது துணை முதல்வராக உதயநிதி அறிவிக்கப்பட்டிருப்பது ஒட்டுமொத்தமாக அதிகாரம் அவருக்குச் செல்லும் நிலையைத்தான் குறிக்கிறது. எனவே, இந்த வருத்தங்களை எல்லாம் உதயநிதி எப்படி அனுசரித்து செல்லப்போகிறார் என்னும் கேள்வி இருக்கிறது.

வாரிசு அரசியல் என்னும் விமர்சனத்தை எதிர்க்கட்சிகள் வைக்கத் தொடங்கிவிட்டன. இது மக்களிடையே என்ன தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது? 2026 ஆம் ஆண்டு நடக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் இது எதிரொலிக்கலாம்.

இதேவேளை தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மூன்று பேர் நீக்கப்பட்டு நான்கு பேர் இணைக்கப்பட்டுள்ளனர். இதுவரை இளைஞர் நலன், விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த உதயநிதி ஸ்டாலினுக்கு, தற்போது கூடுதலாக திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை ஆகியவை அளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கட்சியில் செயல்பட ஆரம்பித்து சில காலத்திலேயே துணை முதல்வர் பதவி உதயநிதிக்கு அளிக்கப்பட்டு உள்ளதாகவும், ஆனால் மிக அனுபவ அரசியல்வாதியான துரைமுருகன் மற்றும் கட்சிக்காக உழைத்த மூத்த அமைச்சர்கள் யாருக்கும் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

அமைச்சரவையில் பத்தாவது இடத்தில் இருந்த உதயநிதி, முதல்வருக்கும் துரைமுருகனுக்கும் அடுத்த இடத்துக்கு முன்னேறியிருக்கிறார்.

"எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. நான் என்பாட்டுக்கு படங்கள் தயாரிப்பு, விநியோகம், நடிப்பு எனப் போய்க்கொண்டிருக்கிறேன். நான் அரசியலுக்கே வரப்போவதில்லை" என முன்னொரு காலத்தில் கூளுரைத்த உதயநிதி, காலம் மாறுவதையும் அதிகாரத்தின் அவசியத்தையும் 'சில சம்பவங்களால்' புரிந்து கொண்டு, சட்டென கரைவேட்டி கட்டி அரசியலுக்குள் நுழைந்துவிட்டார். இதுவரையில் தமிழக அரசியல் வரலாற்றில், இப்படியொரு வளர்ச்சியை இளம்வயதில் யாரும் அடைந்ததில்லை என்பதுதான் உண்மை.

எஸ்.சாரங்கன்...



# 122 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

பாராளுமன்றதேர்தலுக்காக நேற்று முன்தினம் (04) வரை 122 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 36 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும், இதுவரை 22 தொகுதிகளில் 21 தொகுதிகளுக்கு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், நேற்று முன்தினம் தினம் வரை மாத்தளை தேர்தல் தொகுதியில் எந்தவொரு கட்சியும் கட்டுப்பணத்தை வைப்பிலிடவில்லையென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தொகுதிகளுக்கு ஜனசேத பெரமுன கட்சி வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதுடன் மூன்று சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளன.

இம்முறை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முன்முதினம் (04) ஆரம்பமானதுடன், எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

# வாக்காளர் அட்டை விநியோகம் 27 முதல்

## 22 மாவட்டங்களிலும் ஏற்பாடு

பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளுக்கான விசேட தினமாக எதிர்வரும் 27ஆம் திகதியை தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் 27ஆம் திகதி பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகப் பணியை முன்னெடுக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாடெங்குமுள்ள 22 மாவட்டங்களில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் தங்கள் வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் பிரதேச தபால் நிலையங்களுக்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# IMF உடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது

## நிதியமைச்சு அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கையின் உத்தியோகப்பூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டு வந்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. நிதியமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த ஜூன் மாதம் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி (எக்ஸிம்) வங்கியுடனும் இணக்கம் காணப்பட்ட விடயங்களும், உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் அடங்கியுள்ள விடயங்களும், சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அமைவானது என்பதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ள திட்டங்களுடன் தொடர்புடைய கடன் இலக்குகள், இணக்கப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் என்பன ஏற்றுக்கொகொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கமைவாக, சர்வதேச இறையாண்மை முறிகளை மறுசீரமைப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளதாக நிதி அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணம் வரை சளைப்பில்லாமல் ஊடகப் பணி செய்தவர் அஸ்ஹர்

## சிலோன் மீடியா போரம் அனுதாபம்

ஓய்வுபெற்ற ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான அஸ்ஹர் இப்றாஹிம் நேற்று (05) அதிகாலை காலமானார்.

அன்னாரின் திடீர் மரணச் செய்தி கேட்டு பெரும் துயரமடைந்ததாகவும் அவரின் திடீர் மறைவு ஊடகத் துறைக்கு பேரிழப்பாகுமெனவும் சிலோன் மீடியா போரம் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தனது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

ஊடகத்துறையில் எங்கெலுக்கெல்லாம் ஒரு திசைகாட்டியாக செயற்பட்ட ஆசான் ஊடகர் அஸ்ஹர் இப்றாஹிம் என்றால் மிகையாகாது.

தனது எழுத்தின் மூலம் மருதூரினதும் எமது பிராந்தியத்தினதும் மக்கள் குறைகளையும் சமூகத்தின் அடைவுகளையும் ஊடக வாயிலாக வெளிக்கொண்டு வந்த சிரேஷ்ட ஊடகர்.

அவருக்கு நிகர் அவரேதான்.

தனது வயதையும் உடல் ஆரோக்கியத்தையும் பொறுப்படுத்தாது தனது மரணம் வரை அவரின் சளைப்பில்லாத ஊடகப் பணி கண்டு நான் வியந்து போயிருக்கிறேன். அன்னாரின் திடீர் மறைவு ஊடகப் பரம்பலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

அன்னாரின் மறைவினால் துயரிலுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவித்துக் கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

RMV நாரஹேன்பிட்டி அலுவலகத்தில்

# இலஞ்சம் பெற்ற ஊழியர் மூவர் அதிரடியாக கைது

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உட்பட மூன்று பேர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, நாரஹேன்பிட்டி பிரதேசத்திலுள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகத்தில் வைத்து, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் இவர்கள் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகள், மூன்று பஸ்களின் உரிமையை மாற்றுவதற்கு 03 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளரும் திணைக்களத்தில் பணிபுரியும் இரண்டு ஊழியர்களும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேகநபரான மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தன்னிடமிருந்த இலஞ்சம் பெற்ற பணத்தைக் கிழித்தெறிய முயன்றதாகவும் கூறப்படுகின்றது.

## பெய்ரூட் மீது இஸ்ரேல்...

அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதுடன் அவர்களில் 127 சிறுவர்களும் 261 பெண்களும் அடங்குவதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள கோலன் குன்றின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, இரண்டு இஸ்ரேலிய இராணுவத்தினர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த நாடுகளின் பட்டியலில்...

போர்த்துக்கல் காணப்படுகின்றது இதேவேளை, இலங்கை தொடர்பாக CEOWORLD இதழ் குறிப்பிட்டுள்ளதாவது, ஆயுர்வேத சிகிச்சை, மறக்க முடியாத ரயில் பயணங்கள் அல்லது தேயிலைத் தோட்டத்தைப் பார்வையிடுவது என அனைத்து வகையான பயணிகளுக்கும் இலங்கையின் மலைநாடு பரந்த அளவிலான அனுபவங்களை வழங்குகிறது. பௌத்த விகாரைகளில் கொண்டாடப்படும் போயா சம்பிரதாயத்துடன், கலாசாரம் மற்றும் மரபுகள் நிறைந்த நாடு இலங்கையாகும். ஆரோக்கியமான இலங்கை காலை உணவை அனுபவிக்கவும் வாய்ப்புள்ளது. கூடுதலாக, நுகர்வில் அதிக ஆர்வமுள்ளவர்களுக்கு இலங்கை ஒரு சிறந்த இடமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது

## மாதிவெலயில் தங்கியிருக்கும்...

பாராளுமன்ற அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இந்த உத்தரவுக்கமைய, தற்போது ஆறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர் உத்தியோகபூர்வ வீட்டுத்தொகுதியில் சுமார் 120 வீடுகள் உள்ளதுடன், எஞ்சிய வீடுகளில் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல குடியிருப்பு வளாகத்தில் குடியிருப்புகள் வழங்கப்படவுள்ளதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## வடக்கு ரயில் சேவையை...

மஹவ சந்தியிலிருந்து அநுராதபுரம் வரையில் ரயில் கடவைகள் அனைத்தும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளாக உள்ளன.

எந்நேரமும் பயணிகள் பஸ்களின் போக்குவரத்து அதிகமாக காணப்படும் 07 முக்கிய ரயில் கடவைகள் இந்த ரயில் பாதையில் அமைந்துள்ளன. அத்துடன் மேலும் சுமார் 50 ரயில் கடவைகளும் உள்ளன.

இந்நிலைமையால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் அனைத்து ரயில்களும் 10 மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளதால், வடக்கு மக்களுடன் அநுராதபுரம் செல்லும் யாத்திரீகர்கள் உட்பட அனைத்து பயணிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். முற்றாக அழிந்து போன கரையோரப் ரயில் பாதை 02 மாதங்களுக்குள் மறு சீரமைக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொவிட் தொற்று காலப்பகுதியில் கூட இவ்வளவு காலம் ரயில்கள் இயங்காத சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கவில்லையென ரயில்வே தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர், சமிக்ஞைகள் இன்றி பாதுகாப்பற்ற முறையில் ரயில்களை இவ்வீதியில் இயக்குமாறு முன்னாள் போக்குவரத்து அமைச்சரின் பணிப்புரைக்கமைய அதிகாரிகள் ரயிலை இயக்க முற்பட்டபோது, ரயில்வே ஊழியர்கள், தேர்தல் ஆணைக்குழுவிடம் முறையிட்டதையடுத்து அது நிறுத்தப்பட்டது.

தற்போது இந்த வழித்தடத்தில் சமிக்ஞைகள் பொருத்தாமல் மணிக்கு 40 கி.மீ வேகத்தில் ரயிலை இயக்க ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும், அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் கடவைகளுக்கு அருகே சமிக்ஞைக்கு பதிலாக டோக்கன் கார்ட் ஒன்றைகொடுத்து ரயில்களை இயக்குமாறும் ரயில்வே ஊழியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரயில்வே லொகோமோடிவ் இன்ஜினியரிங் சாரதிகள் சங்கத் தலைவர் சந்தன லால் கூறுகையில், பயணிகள் பஸ்கள் செல்லும் பிரதான வழித்தடங்கள் ரயில் கடவைகளூடாக உள்ளதாகவும், டோக்கன் முறையில் ரயில்கள் இயக்கப்பட்டாலும், குறைந்தது பிரதான கடவைகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் வரை ரயில்களை இயக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

அத்துடன் வீதியை மறுசீரமைக்கும்போது டேப்லட் சமிக்ஞை முறையை பயன்படுத்தியிருந்தால். இந்த பிரச்சினை ஏற்பட்டிருக்காதென ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற முறையில் ரயில்களை இயக்குவதில் தமது தொழிற்சங்கமும் உடன்படவில்லையெனவும் இறுதியில் ஊழியர்கள் சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிவரும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து ரயில்வே மேலதிக பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) வி.எஸ். பொல்வத்தவிடம் வினவியபோது, சமிக்ஞைகளில் பிரச்சினை இருப்பதாகவும், திட்டத்தின் ஆரம்பத்தில் சமிக்ஞை பிரிவுக்கும் அமைச்சிலும் ஏற்பட்ட பிரச்சினைகளினால் இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எது எவ்வாறாயினும், பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் யாழ்தேவி ரயிலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பின்னர் படிப்படியாக ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் சமிக்ஞை முறைமையை ஏற்படுத்துவதை துரிதமாக செய்ய முடியாதென அவர் சுட்டிக்காட்டினார்.

## சகல துப்பாக்கிகளையும்...

தன்வசம் வைத்துள்ள அனைத்து உரிமையாளர்களும் துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை கடற்படையின் வெலிசர முகாமிலுள்ள வணிக வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் கொள்முதல் பிரிவில் (CEFAP) ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. அவ்வாறு கையளிக்க தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் ஊடக பணிப்பாளர் கேர்ணல் நளின் ஹேரத்தின் கையொப்பத்துடன் வெளிட்டுள்ள விஷேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 6(1) மற்றும் 6(2) இன் கீழ் பாதுகாப்புச் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி துப்பாக்கிகளை தற்காலிக அடிப்படையில் அரசாங்கம் கையகப்படுத்த தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இவற்றை உரிய முறையில் மீள்பரிசீலனை செய்த பிறகு அவை மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்படி, அனுமதி பத்திரம் பெறப்பட்டு தன்வசம் வைத்துள்ள அனைத்து விதமான துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை அதன் உரிமையாளர்கள் எதிர்வரும் நவம்பர் 07ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்பபடைத்ததன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் பிரதான நுழைவாயிலில் நிறுவப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு அலுவலகத்துக்கு (CEFAP) வணிக வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் கொள்முதல் பிரிவினால் வழங்கிய ஏற்புச் சீட்டின் பிரதி ஒப்படைக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னர், தமது துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை மீள ஒப்படைக்கத் தவறுவோருக்கு எதிராக 1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு சட்ட நடவடிக்கை எடுக்கும். இதேவேளை,சொத்து/பயிர்ச்செய்கை மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளுக்கு இந்த அறிவித்தல் பொருந்தாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை கொழும்புக்கான...

உள்ளிட்ட மொத்தம்10 இடங்களுக்குச் செல்லும் விமானச் சேவைகளே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இது குறித்து பயணிகளுக்கு முன்னதாகவே தகவல் வழங்கப்பட்டதாகவும் பயணிகளின் விமானப் பயணச்சீட்டுகள் வேறு விமானங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவில்லையெனவும் சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னை விமான நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை போதிய பயணிகள் இன்மையாலும் நிர்வாகக் காரணங்களாலும் ஐந்து வருகை விமானங்களும், புறப்படவிருந்த ஐந்து விமானங்களுமாக 10 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கை மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான விமானச் சேவைகள் நேற்று முன்தினம் (04) மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன. ஈரான் இஸ்ரேல் மோதல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த விமானச் சேவைகள் நேற்று முதல் மீண்டும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடி...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில்,

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று முன்தினம் (04) சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பதவிக்காலம் ஆரம்பிக்கும் தருவாயில் இந்நாட்டுக்கு வருகைத்தர கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி அநுரவுக்கு தனது வாழ்த்தையும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய – இலங்கை உறவுகளைப் பல்வேறு துறைகளூடாக பலப்படுத்திக்கொள்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்தார்.

## அலரிமாளிகை சுற்றுவட்ட வீதி...

திறந்து வைக்கப்பட்டது. கொள்ளுப்பிட்டி பொலிஸ் எல்லைக்குட்பட்ட ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, மைக்கல் சுற்றுவட்டத்திலிருந்து பிரதமர் இல்லம் (அலரி மாளிகை) வழியாக ரொட்டுண்டா சுற்றுவட்டம் வரையான பகுதி பாதுகாப்பு காரணங்களுக்காக கடந்த 2005 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இந்நிலையில், சுமார் 19 வருடங்களின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த வீதி நேற்று முன்தினம் (ஒக்டோபர் 04) பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

தற்போது, இந்த வீதி பழுது பார்க்கும் பணிகள் நடைபெறுவதால், ஒரு வழி பாதை மட்டுமே வாகன போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பழுது பார்த்தல் பணிகள் முடிந்தவுடன் இருபுறமும் வாகன போக்குவரத்துக்காக திறக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## அ.இ.ம.காவிலிருந்து வெளியேறிய...

இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்து விட்டு முன்னாள் ஜனாதிபதி ரணிலுடன் கைகோர்த்துள்ள அவர், ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவத்தையும் இதன்போது பெற்றுக்கொண்டார். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகவும் சிலிண்டர் சின்னத்திலும் ரணில் விக்கிரமசிங்க கூட்டணியில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர்...

அஸ்ஹர் இப்பறாஹிம் தனது 62 ஆவது வயதில் நேற்று(05) அதிகாலை காலமானார். அன்னாரது ஜனாஸா நேற்றிரவு மாளிகைக்காடு தக்வா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. கல்முனை மாளிகைகாட்டைச் சேர்ந்த, நான்கு ஆண் பிள்ளைகளின் தந்தையான இவர், மரணிக்கும் வரை ஊடகத் துறைக்கு செய்த சேவை அளப்பரியது. மள்வானை மத்திய கல்லூரி, கல்முனை ஸாஹிரா கல்லூரி, பட்டிருப்பு தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும் அன்னார் பணியாற்றியுள்ளார். விஞ்ஞானத்துறை பட்டதாரியான அஸ்ஹர், பாடசாலைகளில் விளையாட்டு துறையோடு சேர்ந்த நிகழ்வுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். சிரித்த முகம் இவரது அடையாளம். மென்மையாக பழகும் பண்பும் அடக்கமும் இவரோடு கூட பிறந்தவை. ஊடகத்துறையில் இவர் காட்டிய ஆர்வமும் நெறி பிறளாத பண்பும் என்றும் காலத்தால் அழியாதவை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தினகரன் / வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் உட்பட ஆசிரியர் பீடம் பிரார்த்திக்கிறது.

## எங்கள் கருத்து...

# மனஉளைச்சல் தரும் போலியான பதிவுகள்!

வடபகுதி தமிழ் அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக சில தினங்களுக்கு முன்னர் மோசமான விடயங்களை முகநூலில் ஒருவர் பதிவு செய்யப் போய், இறுதியில் அது விபரீதமாகவே முடிந்து விட்டது. அந்த அரசியல்வாதி பொலிஸில் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

கைத்தொலைபேசியை பலர் பக்குவமாக பயன்தரும் விதத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கையில், மற்றொரு தரப்பினரோ குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்ததற்கு ஒப்பாக விஷமத்தனம் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

முகநூல் பதிவுகள் கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டுமென்று பலரும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். முகநூல் கணக்கு வைத்திருப்போரில் பெரும்பாலானவர்கள் தம்மை ஊடகவியலாளர் எனக் கருதியே அபாண்டமான விடயங்களைப் பதிவிட்டு வருகின்றனர்.

எந்தவொரு பிரஜையானாலும், அவருக்கென்று தனித்துவ உரிமைகள் உள்ளன. விஷமத்தனம் புரிவோரின் செயல்களால் எவருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளிக்கலாகாது. இதனைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு உரிய அதிகாரிகளுக்குரியதாகும்.

## வீட்டு சின்னத்தில் போட்டியிட...

எமது கட்சியில் போட்டியிட பெண்களுக்கும் அழைப்பு விடுகின்றோமெனவும் அவர் தெரிவித்தார். இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று (05) நடைபெற்றது. இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில், மத்திய குழுவால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் தெரிவுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. 11 பேர் அதில் கலந்து கொண்டோம். இதன்போது, வேட்பாளர் நியமனம் தொடர்பாக மாவட்ட ரீதியாக கலந்துரையாடினோம். எந்தவொரு மாவட்டத்தினதும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. அதனால் தெரிவிக்குழுக் கூட்டம் தொடர்ந்தும் இன்றும் (06) நடைபெறும். அதன் பின்னரே முடிவு வெளியிடப்படும். விசேடமாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது. இம் மாவட்டங்களில் ஒரு தமிழ் பிரதிநித்துவமே வரக்கூடிய நிலைமை இருக்கிறது. கடந்த முறை அம்பாறை மாவட்டத்தில் நாம் தமிழ் பிரதிநித்துவத்தை இழக்க நேரிட்டது. பல கட்சிகளும் போட்டியிட்டால் திருகோண மலையிலும் இம்முறை அதுவே நிகழும். இதனால் அந்த இரு மாவட்டங்களில் தமிழ் பிரதிநித்துவத்தை தக்க வைப்பதற்காக ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். விசேடமாக திருகோணமலை மாவட்டத்தில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக திருகோணமலை ஆயர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். அவருடன் நேற்று (05) மாலை 4.30 க்கு சந்திப்பு நடைபெற்றது. அவரை சந்தித்து பேச ஒரு குழு திருகோணமலை சென்றது. இவ்விரு மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் வீட்டுச் சின்னத்திலும் ஏனைய கட்சி வேட்பாளர்களையும் இணைத்து போட்டியிடமுடியும். இது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றோம். மேலும், இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். இளையவர்கள், புதியவர்களை விரும்புகிறார்கள். எமக்கு கிடைத்த வேட்பாளர் பட்டியல்களில் பெண்களின் பெயர்கள் குறைவாக உள்ளன. ஆர்வமுள்ள, திறமையான, செயற்பாட்டு திறன் கொண்ட, எம்மோடு இணைந்து பயணிக்கக் கூடிய பெண்கள் எமக்கு தேவைபடுகின்றனர். நாம் அவர்களுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்க தயாரகவுள்ள போதும் பெண்கள் முன்வரவில்லை. பெண்கள் அமைப்புக்கள் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், கடந்த முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில்லையென மத்திய குழு எடுத்த தீர்மானத்தை எமது தெரிவுக் குழுவும் உறுதி செய்துள்ளது. எனவே அவர்களை தவிர்த்து புதிய வேட்பாளர்களையும், இளைஞர்களையும் களமிறக்கவுள்ளோம். ஜனாதிபதி தேர்தல் விடயத்தில், மத்திய குழு எடுத்த தீர்மானத்தை மீறி சிறிதரன் மற்றும் சிறிநேசன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர். அதில் ஏற்கனவே போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லையென தீர்மானம் எடுக்கப்பட்டதனால் சிறிநேசன் போட்டியிட முடியாது. சிறிதரன், மத்திய குழுக் கூட்ட தீர்மானத்தை மீறி செயற்பட்டதால் அவரை போட்டியிட அனுமதிக்கக்கூடாது. அல்லது அவராக விலகியிருக்க வேண்டுமென நான் கோரினேன். இதை மறுத்து தானும் போட்டியிடப் போவதாக சிறிதரன் தெரிவித்தார். இந்நிலையில், தெரிவுக் குழுவும் நாங்கள் இருவரும் போட்டியிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். அதற்கு அமைவாவே நானும், சிறிதரனும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவோம். நிச்சயமாக வெல்வோம். ஏனைய 07 பேரையும் இளைஞர்களாக களமிறக்குவோம் என தெரிவித்தார்.

## சாள்ஸ் நிர்மலநாதன்...

அறிவித்துள்ளார். அவருடன் மன்னார் தொகுதியில் மேலும் புதியவர்கள் இருவரும் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் தொடர்பாக மன்னார் தேர்தல் தொகுதியில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகளுக்குள் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக பிரதான தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் தனித்து களமிறங்க திட்டமிட்டுள்ளன.

அதன்படி இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வன்னி மாவட்டத்தின் வேட்பாளர் தெரிவில் தாமதம் ஏற்பட்டு வந்ததையடுத்து, மன்னார் தேர்தல் தொகுதியை மையமாகக்கொண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வட மாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகியோர் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த தெரிவுகள் யாவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் (04) மன்னாருக்கு சென்று வேட்பாளர்களை இறுதி செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எம்.ஏ.சுமந்திரன், மன்னார் கட்சி அலுவலகத்தில் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் இரண்டு மணி நேரம் கலந்துரையாடிய பின்னர் தேர்தலுக்கான செலவுகள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட சம்மதித்துள்ளார்.

அதன்படி, மன்னார் மாவட்டத்திலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் அந்தோணிப்பிள்ளை பத்திநாதன், மன்னாரின் இளம் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகிய மூவரும் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மன்னார் தொகுதி வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் இளைஞர்கள் மற்றும் புதியவர்களுக்கு வழிவிடும் வகையில் தேர்தலில் இருந்து தான் விலகுவதாக ஏற்கனவே அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மேல்வர்க்கத்திடமிருந்த அரசியல் தற்போது சாதாரண மக்கள் வசம்

## தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அருண் ஹேமச்சந்திரா.

**தேசிய மக்கள் சக்தி கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி.**



**கே: கடந்த காலங்களைவிட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்களுடைய தேசிய மக்கள் சக்திக்குரிய வாக்கு வங்கி அதிகரித்திருக்கிறது. இது தமிழ் தேசிய கட்சிகளை வட, கிழக்கு மக்கள் புறந்தள்ளுகின்றார்கள் அல்லது உங்களுடைய கட்சியின் கொள்கைகளால் மக்கள் ஈர்க்கப்படத் தொடங்கி இருக்கிறார்கள் எனக் கொள்ளலாமா ?**

இதனை நீங்கள் குறிப்பிட்டது போன்று இரண்டு விதமாகவும் பார்க்கலாம் இதுவரை காலமும் வடகிழக்கு மக்கள் சில கட்சிகளின் கொள்கைகளை நிராகரித்திருந்தாலும் எதுவிதமான மாற்றீடுகளும் இருக்கவில்லை. மக்கள் சம்பிரதாய கட்சிகளிலிருந்து விலக வேண்டும். மக்கள் வேறொரு அரசியல் பயணத்திற்குச் செல்ல வேண்டும் என தெரிவித்தபோதும் இதுவரை காலமும் அதற்குரிய மாற்றீடுகள் மக்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் தற்போதைய நிலையில் மக்களுக்கு அந்த மாற்றீடு கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் எமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார். கள் சம்பிரதாய கட்சிகளிலிருந்து மக்கள் வெளியே வந்திருக்கிறார்கள். இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற ரீதியில் தான் இயங்குகின்றோம். இது இனப் பிரச்சினையை வைத்துக்கொண்டு அரசியல் செய்யமுடியாது.

எனது கட்சியின் தலைவர் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளுகின்ற தலைவராக இருக்கிறார். இந்த அடிப்படையில் அவரின் தலைமைத்துவமும், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியும் நாட்டிற்கு முக்கியமாக உள்ளது.

**கே: கிழக்கு மாகாணத்தை கட்டி எடுப்பதற்காக விசேட திட்டங்கள் ஏதும் தங்களிடம் உள்ளதா?**

நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அதிக அளவில் இருக்கின்றன. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அதிகளவு பிரச்சினைகள் இன்னும் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றாக தீர்க்கப்பட வேண்டும் என எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருக்கிறோம். யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகியும் யுத்த வடுக்கள் இன்னும் மக்கள் மத்தியில் இருந்து போகவில்லை. தற்போது அரசியல் என்பது இலகுவான வணிகமாக மாறியுள்ளன.

நாம் மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி என்ற ரீதியில் அதில் ஒட்டுமொத்த மாற்றத்தை கொண்டுவர வேண்டும். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை சரியான முறையில் கையாளுவோம். அதற்காகத்தான் நாங்கள் ஆட்சி பொறுப்பையும் ஏற்று இருக்கிறோம். அது போன்று எதிர்வருகின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் எங்களுக்கு ஒரு சரியான பிரதிநிதித்துவத்தை கொண்டு வரும் பட்சத்தில் வேலைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக அமையும்.

**கே: தற்போது பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருக்கின்றது. இந்த தேர்தல் உங்களுக்கு சவாலாக அமையுமா அதிகளவு ஆசனங்களை பெறுவதற்குரிய ஏதும் வியூகங்களை நீங்கள் வகுத்துள்ளீர்களா?**

எமக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்கள் தேவை. அதனைப் பெறுவதற்காக நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். மூன்று வீதமான வாக்கு வங்கியைக் கொண்டிருந்த எமது கட்சி தற்போதைய நிலையில் பாரிய அளவில் அதாவது மூன்று பிரதான வேட்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் உள்ளிட்ட அனைவரையும் தோற்கடித்துதான் தற்போது நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். அந்த அடிப்படையில் தான் தேர்தல் ரீதியில் மாற்றம் ஒன்று வந்திருக்கிறது.

எனவே அடுத்த கட்ட நகர்வுக்கு செல்வது என்பது பெரிய விடயமாக தெரியவில்லை.

எனினும் சீரழிந்தந்த அரசியல் கலாசாரத்தைக் கொண்ட எந்தப் பிரதிநிதியும் நாம் இணைத்துக்கொள்ளப் போவதில்லை. மக்களோடு நாங்கள் அரசியல் செய்வோம். ஆனால் பதவிகளில் இருந்தவர்கைள வேட்பாளர் பட்டியலில் நாம் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை. பெரும்பான்மையை பெறுவது பெரிய பிரச்சினையாக இருக்கும் என நான் கருதவில்லை. நிச்சயமாக நாம் பெரும்பான்மையை ஏற்படுத்திக்கொள்வோம் எமக்கு வாக்களித்த மக்களை விட வாக்களிக்காத மக்களிடத்திலும் பாரிய துன்பம் நிலவுவதை காணக் கூடியதாக உள்ளது. நாங்களும் வாக்களித்து இருக்கலாம் என அந்த மனங்கள் ஏங்குகின்றன. எனவே நாட்டின் மாற்றத்தின் பங்காளிகளாக மாறுவதற்கு மக்கள் தயாராக உள்ளார்கள். இந்த அடிப்படையில் எமக்கு தேவையான பெரும்பான்மையை நிச்சயமாக நாம் பெற்றுக் கொள்வோம்.

**கே: ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கின்ற இந்த நிலையில் தற்போது பாராளுமன்ற தேர்தலுக்குரிய வேட்பு மக்கள் கோரப்பட்டிருக்கின்றன, பாராளுமன்ற தேர்தலும் நிறைவு பெற்ற பின்னர் இதுவரை நடத்தப்படாமல் இருக்கின்ற மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற, தேர்தல்களையும் நடத்துவதற்கு தங்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?**

நிச்சயமாக நடைபெறும். மாகாண சபையை எடுத்துக் கொண்டால் மாகாண சபை திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அதனை கொண்டுவந்த அமைச்சரே அதற்கு எதிராக வாக்களித்து அதனை தோல்வியடையச் செய்தார். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய தீர்மானத்தை நாங்கள் எடுத்தாலும் எல்லை நிர்ணயம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளன.

**கே: தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியில் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற காணி பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற விடயங்கள் தொடர்பில் எவ்வாறு கரிசனை செலுத்தப்படும் என நினைக்கின்றீர்கள்?**

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, போன்ற விடயங்கள் தொடர்பில் நாம் தீவிரமாக வேலை செய்து வருகின்றோம். அமைச்சரவையில் உள்ளவர்கள் மூன்று பேர் தான். அவர்களுக்கு அதிக வேலைப்பளு உள்ளது. எமதுகுழு இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அது போதுமானதாக தற்போது இல்லை. அவ்வாறு இருந்தும் நாங்கள் எதையும் கைவிட்டதாக இல்லை. நாங்கள் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**கே: ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் இருக்கின்ற இளைஞர்களுக்கு தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய வாய்ப்புகள் உள்ளனவா?**

நாட்டில் ஒட்டுமொத்தமாக ஊழல் மோசடி, வீண்விரயம் என பிழையான அரசியல் கலாசாரம் இருந்ததனால்தான் நாடு சீரழிக்கப்பட்டது. அடுத்ததாக கிழக்கு மாகாணத்தில் இன்னும் இவ்வாறான பிரச்சினைகள் மோசமாக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை காலம் இருந்த இந்த மாகாணத்தின் அரசியல் தலைமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலைகளை சரியாக முன்னெடுக்கவில்லை. அவர்கள் அவர்களுடைய சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலைதான் செய்து கொண்டிருந்தார்கள் எந்த வகையிலும் அவர்கள் மாவட்டத்தையோ, மாகாணத்தையோ, அபிவிருத்தி செய்ய வேண்டும் என சிந்திக்கவில்லை.

வட கிழக்கில் இருந்த நல்ல திட்டங்கள்கூட இல்லாமல் போய் இருக்கின்றன. மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை அவர்கள் ஏற்படுத்தவில்லை. ஏழைகள் இன்னும் ஏழைகளாகவே தான் இருக்கிறார்கள். அனைத்திற்கும் முக்கிய காரணம் எமது அரசியல் தலைமைகள்தான். நல்ல திட்டங்களை அவர்கள் அனுமதிப்பதும் கிடையாது.அனைத்து விதமான செயற்பாடுகளிலும் அரசியல் தலையீடுகள் இருந்திருக்கின்றன. இதனை மாற்ற வேண்டும் இதனை மாற்றியமைக்கும் பட்சத்தில் சிறந்த முதலீடுகள் நிச்சயமாக வரும்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரின் தலையீடுகள் அங்கு முன்னெடுக்கப்பட்ட அனைத்து திட்டங்களிலும் இருந்ததாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அவ்வாறு செய்ய முடியாது. அதனை மாற்ற வேண்டும். அதனை நாங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறோம். இதனை தனியான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் மாத்திரம் முடியாது. அவருக்கு பக்கபலமாக அரசியல் தலைமைகளும் மக்களும் ஒன்றாக ஓரணியில் நிற்க வேண்டும்.

“இலங்கையில் முதலாவதாக அரசியல் அதிகாரம் மேல் தட்டு வர்க்கத்திலிருந்து சாதாரண மக்களின் கைக்கு மாறி உள்ளது” ஆனாலும் செயற்பாடுகள் ஒரே நாளில் மாறாது அதனை மெல்ல மெல்ல மாற்றி கீழ் மட்டத்துக்கு கொண்டுவர வேண்டும் “மக்கள் நலம் சார்ந்த திட்டங்களுக்கு முக்கியத்துவத்தை வழங்கக்கூடிய ஒருமுறைமை நாட்டில் உருவாக்கிக் கொண்டேதான் இருக்கின்றது” அதனை நாங்கள் இன்னும் மேம்படுத்த வேண்டும்

**கே: இறுதியாக தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

கடந்த 76 வருடங்களாக இந்த மக்கள் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இந்த யுத்தம், இனக் கலவரங்கள், பொருளாதார வீழ்ச்சி, இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்களுக்கு நாம் முகம் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

இப்போது புதிய மறுமலர்ச்சிக்கான யுகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களால் பெரும்பான்மையாக விரும்பப்படுகின்ற நபர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கிறார். இந்த அடிப்படையில் பார்த்தால் நிச்சயமாக அவர்களின் கரங்களைப் பலப்படுத்தக் கூடிய பாராளுமன்றம் எமக்கு தேவை. எதிர்பார்க்கின்ற அனைத்து விடயங்களையும் இந்த ஒன்றரை மாதத்திற்குள் செய்து விட முடியாது. ஆனாலும் பெருந்தொகையான பணத்தை நாங்கள் மீதப்படுத்தி உள்ளோம். இந்த அரசியல் கலாசாரம் மேல்மட்டத்தில் மாற்றமடைந்துள்ளது.

ஜனாதிபதி முதற்கொண்டு பிரதமர், அமைச்சரவை செயலாளர், வரைக்கும் மாற்றமடைந்துள்ளனர், இதனை நாம் கீழ் மட்டத்துக்கு கொண்டுவர வேண்டும். அடுத்த பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் அதை செய்ய முடியாது. அந்த பெரும்பான்மையை மக்கள் நிச்சயமாக எமக்கு தரப் போகின்றார்கள். அதனை வைத்துக்கொண்டு நாம் செயற்படுவோம்.

**நேர் கண்டவர் : வ.சக்திவேல்**




**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

**நிதி, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு**

**அலுவலகக் கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோருதல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளை அலுவலகங்களை பராமரிப்பதற்காக பின்வரும் நகரங்களில் நகர மையப் பகுதியிலிருந்து 2 கி.மீ உட்பட்டதாக (இடத்தைப் பொறுத்து கிமீ அளவு பரிசீலிக்கப்படும்) அமைந்துள்ள வசதிகளுடன் கூடிய பொருத்தமான வீடு/கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான திறந்த விலைமனுக் கோரப்படுகிறது.

| கிளை அலுவலகம் | சதுர அடி |
|---|---|
| 01 திருகோணமலை மாவட்ட மத்திய நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 02 மட்டக்களப்பு மாவட்ட மத்திய நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 03 கிழக்கு மாகாண புலம்பெயர் தொழிலாளர் வள நிலையம்- அம்பாறை | 3000 - 3500 இடையில் |
| 04 வட மத்திய மாகாண புலம்பெயர் தொழிலாளர் வள மத்திய நிலையம் - அனுராதபுரம் | 5000 - 5500 |
| 05 சிலாபம் பயிற்சி நிலையம் மற்றும் விடுதி | சுமார் 15000 |

மேற்கூறிய நிலையங்களுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது அந்தந்த கட்டிட தேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதி தொடர்பான தகவல்கள் மற்றும் வழங்க வேண்டிய ஆவணங்கள் பற்றிய மேலதிக தகவல்களை www.slbfe.lk என்ற பணியகத்தின் இணையத்தளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் - திணைக்கள கொள்முதல் குழு,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி/தொலைநகல்: 0112880550/ 0112887585
இணையத்தளம்: www.slbfe.lk

ISO 9001

**நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

**வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்புக் கருத்திட்டம் (TNSWSP)**

**சிரேஷ்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறை விவகார உத்தியோகத்தருக்கான பதவி வெற்றிட அறிவித்தல் (ஒரு வெற்றிடம் மாத்திரம்)**

வர்த்தகர்கள் நாட்டின் எல்லைக்கு குறுக்கான தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றங்கள்) ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவுப் புள்ளியாக வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகையான செயல்முறைகளின் இறுதி விளைவானது தானியங்கி வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதன்படி, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, முன்மொழியப்பட்ட வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பிரத்தியேகத் திட்ட அமுலாக்கப் பிரிவொன்றினை (PIU) நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது. வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட இப்பிரத்தியேக திட்ட அமுலாக்கப் பிரிவின் சிரேஷ்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறை விவகார உத்தியோகத்தருக்கான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விண்ணப்பதாரியிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தகுதிகள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்துறையிலான இளமாணிப் பட்டம் **அல்லது**
- சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு நிகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது;

**மற்றும்**

- தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம்

**மற்றும்**

- இலங்கை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞராகவிருத்தல்.

**பொது நிபந்தனைகள்**

- வயது 2024.10.19 இல் உள்ளபடியாக 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் 36 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படுவார்கள். இது வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உட்பட்டது.
- தேவையான அனைத்து தகுதிகளும் 2024.10.19 அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரையே சாரும்
- இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின் போது இதில் இல்லாத ஏதேனும் ஒரு விடயத்திலோ அல்லது ஏதேனும் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்திலோ நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமானதாக அமையும்.
- சம்பளம் பேசித் தீர்மாணிக்கப்படும் மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி இதர சலுகைகள் வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

தேசிய அடையாள அட்டை, தொழில் அனுபவம், கல்வி தொழில் தகமைகளுக்கான சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளுடன் இரு தொடர்பற்ற சான்றளிப்பவர்களின் தொடர்பு விபரங்கள் இணைக்கப்பட்ட விரிவான சுயவிபரக் கோவையானது பின்வரும் முகவரிக்கு 2024.10.19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் /நேரடியாக கையளிப்பதன் மூலமாக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களினால் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

முகவரி:
**பணிப்பாளர் நாயகம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
செயலகம், கொழும்பு 01.**

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்க்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் பூரணப்படுத்தப்படாத சுயவிபரக்கோவையானது தகுதி நீக்கத்திற்கான ஒரு காரணமாக இருக்கும்.

பதவி விவரங்களின் சுருக்கம் உள்ளிட்ட மேலதிக விவரங்களுக்கு. https://www.treasury.gov.lk

**செயலாளர்
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
செயலகம், கொழும்பு 01.
திகதி : 2024.10.06**

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# தேர்தலில் ஓரணியில் களமிறங்குவது கைகூடாத நிலையில் எதிரணிகள்!

**ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் உடனடியாகவே தேசிய தேர்தலொன்றை நாடு எதிர்கொண்டுள்ளது. ஒருசில மாத இடைவெளியில் நடைபெறவிருக்கும் இரண்டாவது தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படத் தொடங்கியுள்ளன.**



எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பத்தாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடத்தப்படவிருப்பதால் அரசியல் கட்சிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் விறுவிறுப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள வெற்றியின் காரணமாக பொதுத்தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இதுவரையான இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் நடத்தப்பட்ட பொதுத்தேர்தல்களில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவருடைய கட்சிகளே பாராளுமன்றத்திலும் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவானதும் நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் பொதுஜன முன்னணி ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஆட்சியமைத்தது. 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னரான பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களை வென்றதுடன், 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன வென்றதும் நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியும், 2020ஆம் ஆண்டு கோட்டாபய ஜனாதிபதியாக வென்ற பின்னர் நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன பெரும்பான்மையையும் பெற்றிருந்தன.

இந்த வரிசையில் அநுர குமார திசாநாயக்க தேசிய மக்கள் சக்தி சார்பில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பின்னணியில் நடத்தப்படும் பொதுத்தேர்தலில் அந்தக் கட்சி பெரும்பான்மையைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்க்கட்சிகளுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. அது மாத்திரமன்றி, பல தசாப்தங்களாக அரசியலில் இருக்கும் பலருக்கு ஓய்வைக் கொடுக்கும் தேர்தலாகவும் 2024 பொதுத் தேர்தல் அமையப் போகின்றது.





## ஆட்டம் கண்டுள்ள எதிர்க்கட்சிகள்:

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் அநுர குமாரவுக்குப் போட்டியாக விளங்கியிருந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தரப்பினருக்கு ஆதரவாக செயற்படும் நிலைப்பாட்டை பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்திருந்தனர். கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதும் ஒட்டுமொத்த பொதுஜன பெரமுனவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி அவரை ஜனாதிபதியாக்கியது.

அவர் ஜனாதிபதியானதும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலர் ஆரம்பம் தொட்டே ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கினர். மறுபக்கத்தில் அவருடைய செயற்பாடுகளில் முரண்பாட்டைக் கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திற்குள் இருந்தனர். இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன தனக்கு ஒத்துழைப்பு வழங்கும் என ரணில் கருதியபோதும், நாமலைக் களமிறக்க அக்கட்சி தீர்மானித்தது.

இந்தத் தீர்மானத்தினால் ஏற்கனவே பிளவுபட்டிருந்த பொதுஜன பெரமுன கட்சி முழுமையாக சீர்குலைந்தது. 90 இற்கும் அதிகமான பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாகச் சென்றனர். மிகவும் குறைந்தளவு உறுப்பினர்களே நாமலுடன் எஞ்சியிருந்தனர். கடந்த காலங்களில் வாய் திறந்தாலே மஹிந்த ராஜபக்ஷ என்பதை மாத்திரமே உச்சரித்த பலரும் நாமலைக் கைவிட்டு ரணிலுடன் சென்றிருந்தார்கள்.

மறுபக்கத்தில், எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் செயற்பட்டனர். அவர்களுடன் ஜீ.எல்.பீரிஸ், நாளக கொடஹேவா போன்ற பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் சஜித்துக்கு ஆதரவாக இருந்தனர்.

இவ்வாறு ரணிலும், சஜித்தும் பாரிய கூட்டணிகளை அமைத்துக் களமிறங்கிய பின்னணியில், கடுமையான போட்டிக்கு மத்தியில் அநுர குமார திசாநாயக்க வென்றிருந்தார். ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்திருந்த நேரத்தில், சஜித்தும் ரணிலும் இணைந்தாலே அனுரவை வெல்ல முடியும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதும், ஜனாதிபதித் தேர்தலில் அதுபற்றிய இணக்கப்பாடுகள் இரு தலைவர்களுக்கும் இடையில் ஏற்படவில்லை. அது மாத்திரமன்றி, ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினர் முழுமையாக இறங்கிச் செயற்பட்டதாகவும் தெரியவில்லை. பொதுஜன பெரமுனவிலிருந்து சென்றவர்களே பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தனர்.

அது மாத்திரமன்றி, பொதுத்தேர்தலை இலக்கு வைத்து ரணிலுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் புதிய கூட்டணிகளைத் தமக்குள் உருவாக்கியிருந்தனர். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனையவர்கள் இணைந்து 'பொதுஜன ஐக்கிய முன்னணி' என்ற பெயரில் முதலில் கூட்டணியொன்றை உருவாக்கியிருந்தனர். இதன் சின்னமாக கதிரைச் சின்னம் தெரிவு செய்யப்பட்டது.

இதில் நிமல் சிறிபால டி சில்வா, லசந்த அழகியவண்ண, அநுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்சா போன்றவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதன் பின்னர் தினேஷ் குணவர்தன தலைமையில் வெற்றிக்கிண்ணச் சின்னத்தில் 'பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி' என்ற புதிய கூட்டணியொன்று உருவாக்கப்பட்டது.

**வெற்றிக்கான சாத்தியம் தென்படாததால், அரசியலில் இருந்து பிரபலங்கள் பலர் ஓய்வுபெற ஆயத்தம்!**

## தோல்வியில் முடிந்த பேச்சுக்கள்:

இவ்வாறு கூட்டணிகள் ஏற்கனவே அமைக்கப்பட்ட பின்னணியில், ஜனாதிபதித் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுக்கத் தொடங்கின. இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் அரசியலில் இருந்து விலகுவதாகவும், தேசியப் பட்டியலில் கூட பாராளுமன்றத்திற்குச் செல்ல மாட்டார் என்றும் ருவன் விஜயவர்த்தன அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஐ.தே.க ஐ.ம.ச இணைப்புக் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் லக்கி பொன்சேகா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவர்கள் இருவருக்கும் இடையில் சுமார் ஏழு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் இது தோல்வியில் முடிந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியினர் விதித்த நிபந்தனைகளே இந்தத் தோல்விக்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

இருதரப்பும் இணைந்தால் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற நிபந்தனை முதலில் முன்வைக்கப்பட்டது. இந்நிபந்தனைக்கு ஐ.தே.க சரியெனக் கூறியபோதும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே போட்டியிட வேண்டும், ஐ.தே.கவின் தலைமைப் பதவி சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டன.

## ஏழு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் தோல்வி!

அது மாத்திரமன்றி, ரணிலுக்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவில் இருந்து வந்த எவருக்கும் இடமளிக்கப்படக் கூடாது என்ற விடயங்களும் முன்வைக்கப்பட்டமையால், ஐ.தே.க தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்படவில்லையெனக் கூறப்படுகின்றது.

மறுபக்கத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவில் இருந்து வந்தவர்களின் நிலைமை மிகவும் இக்கட்டான நிலைக்குச் சென்றது. ஒருவேளை ஐ.தே.கவும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்துகொண்டால் தமக்கு என்ன நிகழும் என்ற சந்தேகம் அவர்களுக்கு உருவானது. இதனால், ரணிலைத் தலைமையாகக் கொண்ட கூட்டணியொன்றுக்கான முயற்சி பற்றியே அவர்கள் தொடர்ச்சியாகப் பேசி வந்தனர்.

இந்த நிலையில், ஐ.தே.க, ஐ.ம.ச பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களுடன் இருக்கும் முன்னாள் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் இணைந்த கூட்டணியும் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன. இதனால் முதன் முறையாகப் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னம் போட்டியிடாமல் போகப்போகின்றது.

இதற்கு அமைய கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சிலிண்டர் சின்னத்தை புதிய ஜனநாயக முன்னணிக்குப் பெற்றுக்கொள்ளும் முயற்சி எடுக்கப்பட்டது.

**பொதுத்தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை எதிரணி கைப்பற்றுவது சாத்தியமாகுமா!**

சிறிமணி அத்துலத் முதலியால் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணி என்ற கட்சியே 2009 ஆம் ஆண்டு 'புதிய ஜனநாயக முன்னணி' எனப் பெயர் மாற்றப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்காரரிடம் காணப்படும் இந்தக் கட்சி கடந்த பல தேர்தல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவும், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவும், 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவும் அன்னம் சின்னத்தில் புதிய ஜனநாயகக் கட்சியிலேயே போட்டியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், தற்பொழுது மீண்டும் இந்தக் கட்சியைப் பொதுத்தேர்தலில் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவாறு காஸ்சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவது பொருத்தமாக இருக்கும் என முன்வைக்கப்பட்ட கருத்தையடுத்து, இக்கட்சியின் சின்னமான அன்னம் சின்னத்துக்குப் பதிலாக காஸ்சிலிண்டர் சின்னத்தைப் பயன்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவிலிருந்து இதற்கு அனுமதி வழங்கப்பட்டதால் புதிய ஜனநாயக முன்னணி சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கும் எனக் கூறப்படுகிறது. எனவே, ஐக்கிய தேசியக் கட்சியினர், தினேஷ் குணவர்தன தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்டோர் இணைந்து காஸ்சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகியுள்ளன.

## அரசியலுக்கு முடிவுகட்டும் பலர்:

இவ்வாறு பொதுத்தேர்தலுக்குக் கூட்டணிகள் வகுக்கும் முயற்சிகள் ஒருபுறம் இருக்க, நீண்ட காலமாக அரசியலில் இருக்கும் பலர் ஓய்வு பெறுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது ஓய்வை அறிவித்துள்ளார். இது மாத்திரமன்றி, நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பலர் தாம் ஆதரித்தவர்களை வெற்றி பெற வைக்கத் தவறியமையால் அரசியலில் இருந்து ஓய்வுபெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக கடந்த காலங்களில் ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களைக் கொண்டுள்ள அரசியல்வாதிகள் இம்முறை தேர்தலில் வெற்றிபெறுவது சிரமம் என்பதை உணர்ந்து கொண்டிருப்பதால், தாமாகவே அரசியலில் இருந்து விலகியிருப்பதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.

இதற்கும் அப்பால் 'பார் லைசன்ஸ்', எரிபொருள் நிலைய லைசன்ஸ் போன்றவற்றைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளியாகி வருவதால், அவ்வாறானவர்கள் எதிர்வரும் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

எனவே, நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் புதிய முகங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். இந்தப் புதிய முகங்கள் புதிய அரசியல் கலாசாரத்துக்கான அடித்தளத்தை இட்டு அப்பழுக்கற்ற அரசியலைச் செய்ய வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இந்த மாற்றம் ஏற்படுமா அல்லது புதியவர்களும் பழைய அரசியல் பாதையைத் தெரிவுசெய்வார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

இந்தியா ஒரு நோக்கு

வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்



# உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டதேன்?

இந்தியாவில் வாரிசு அரசியல் என்பது நீண்டகால சர்ச்சையாக இருந்து வருகிறது. எனினும் இது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஒரு மருத்துவரின் மகன் மருத்துவராவதும், ஆசிரியரின் மகன் ஆசிரியராவதும் எப்படி இயல்பானதோ அதேபோல் அரசியலில் வாரிசுகள் வருவதும் இயல்பானதே அரசியல்வாதிகளின் வாரிசுகள் அரசியலுக்கு வரக்கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை.

தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் இன்று பொன்விழாவைக் கொண்டாடி வருகிறது. அண்ணாவுக்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் இந்தக் கட்சியைத் தன்கையில் எடுத்து வழிநடத்தியதாலும், அவரைத் தொடர்ந்து தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிநடத்தியதாலும் தி.மு.க இன்று வரையில் கட்டுக்கோப்பாக இருந்து வருகிறது. ஸ்டாலினுக்குப் பிறகு அவரது மகன் உதயநிதி கட்சியை வழிநடத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது குடும்ப அரசியல் என்ற விமர்சனம் இருந்தாலும், கட்சியை முன்னெடுத்துச் செல்ல நம்பிக்கையானவர் தேவையாக இருக்கிறது.



தி.மு.க குடும்ப அரசியலை ஊக்குவிக்கிறது என்று கட்சியை விட்டுவெளியேறி புதிய கட்சி தொடங்கியவர்கள் கூட இன்று வாரிசு அரசியலுக்கு உட்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான கட்சிகளில் வாரிசு அரசியல் என்பது தவிர்க்க முடியாமல் இருக்கிறது. இதை விமர்சிப்பதை விட அதன் அவசியத்தை உற்று நோக்க வேண்டும். கடைநிலைத் தொண்டனும் கட்சியின் உயர் பொறுப்புக்கு வரலாம் என்ற கொள்கையை கடைப்பிடிக்கும் அ.தி.மு.க.வை வழிநடத்த சரியான தலைமையில்லாமல் சிதைந்து கிடைப்பதையும் நாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம்.

அ.தி.மு.கவை எம்.ஜி. ஆரும். ஜெயலிதாவும் வழிடைத்தியபோது இருந்த வரவேற்பு தற்போது இல்லை. அதன் வாக்கு சதவிகிதத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது. ஆளுமையான தலைவர் அ.தி.மு.கவில் இல்லை என்பதால் அங்கே தொண்டர்கள் கட்சி மீது ஈர்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அ.தி.மு.க.வில் 50 ஆண்டுகளாக தொண்டர்களின் ஈடுபாடு ஈர்ப்பும் குறையாமல் இருப்பதற்கு காரணம் அதை சரியாக வழிநடத்தும் தலைமைதான்.

தி.மு.க.வில் உதயநிதிக்கு தற்போது துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதை எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன. துணை முதலமைச்சர் பொறுப்பு என்பது பெரியளவில் அதிகாரமிக்கது என்றில்லாவிட்டாலும் கட்சியின் எதிர்காலம் கருதி அடுத்த தலைமையை வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. தி.மு.க.வில் ஸ்டாலினுக்குப் பிறகு கட்சியை வழிநடத்த தலைமைத்துவம் உள்ள தலைவரை உருவாக்க வேண்டிய அவசியமும் அதற்கான முன்முயற்சி தான் உதயநிதிக்கான துணை முதலமைச்சர் பொறுப்பு.

இந்திய அரசியல் வரலாற்றில் மாநிலங்களுக்கான துணை முதலமைச்சர் பதவி என்பது பொதுவான ஒன்றாகவே இருந்துள்ளது. நீலம் சஞ்சீவி ரெட்டி. ஜோதிபாசு, புத்ததேவ் பட்டாச்சியார், எஸ்.எம் கிருஷ்ணா, சித்தராமையா, எடியூரப்பா, மு.க. ஸ்டாலின், ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலரும் துணை முதலமைச்சர்களாக இருந்துள்ளனர்.

தற்போது இந்தியாவில் 14 மாநிலங்களில் துணை முதலமைச்சர்கள் உள்ளனர். உத்திர பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், பிஹார், மேகாலயா, ஒடிஷா உள்ளிட்ட சில மாநிலங்களில் இரண்டு துணை முதலமைச்சர்கள் பதவியில் உள்ளனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசாங்கத்திடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பது என்ன?

## கடந்தகால தவறான அரசியல் கலாசாரம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமெனக் காத்திருக்கும் மக்கள்!

**இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ளன.**



சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியலில் பாரியதொரு அமைப்பு மாற்றத்தை எதிர்பார்த்து அநுர குமாரவை மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்திருப்பதால் அவர் மீது அனைவரும் எதிர்பார்ப்பு வைத்துள்ளனர். 'ஊழல் நிறைந்த அரசியலை இல்லாதொழிப்போம்' என்ற தேர்தல்கால உறுதிமொழியே பெரும்பான்மையான மக்கள் அநுர சார்ந்த தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கப் பிரதான காரணம் என்பதால், கடந்த காலத்தில் பாரிய ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட பலருக்கு எதிராக அநுர அரசாங்கத்தின் கீழ் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்பது பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இருந்த போதும் இரண்டு வாரங்களுக்குள் ஊழல்வாதிகளைப் பிடித்து சிறையில் அடைப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றாலும் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும் வரை மக்கள் விழிப்புடனேயே இருக்கின்றனர்.

### முதலாவது அமைச்சரவைக் கூட்டம்:

ஊழல் ஒழிப்புத் தொடர்பில் மக்களது கவனம் தொடர்ந்து இருந்து வரும் நிலையில், கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றிருந்தது. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஓர் அமைச்சர் என மூவரைக் கொண்ட இந்த அமைச்சரவையில் பாரிய முடிவுகள் எடுக்கப்படாதபோதும், நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் விசேட பொருளாதார ஆலோசகர்களாக இலங்கை வர்த்த சம்மேளனத்தின் தலைவர் மற்றும் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆகிய இருவரை தன்னார்வ அடிப்படையில் நியமிப்பதற்கும், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்குப் புதிய பதில் கட்டுப்பாட்டாளர் ஒருவரை நியமிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களில் முக்கியமான விடயமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை மதிப்பீடு செய்து புதிய நடைமுறையொன்றைக் கொண்டுவருவது பற்றிய பரிந்துரைகளை வழங்க மூவர் அடங்கிய குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையாகும்.

தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மக்கள் பணத்தின் ஊடாக வழங்கப்படும் அதிக சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி தொடர்ச்சியாகக் கூறிவந்தது. இந்தப் பின்னணியில் இது பற்றி மதிப்பாய்வு செய்து புதிய பரிந்துரைகளை வழங்க உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் கே.ரி.சித்ரசிறி தலைமையில் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்கு இரண்டு மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதால், வெறும் கண்துடைப்புக்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பி கேள்விக்குப் பதிலளித்திருந்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிடுகையில், "பாராளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகளைக் குறைப்பதாயின் அதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். எனவே, குறித்த குழுவின் அறிக்கை இரண்டு மாதங்களுக்குத் தயாரானதும் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரிய அங்கீகாரத்தைப் பெறுவோம்" என்றார்.

உண்மையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் மக்கள் வரிப்பணத்தில் அதிக சலுகைகளை அனுபவித்து வருவதாகவும், இது வீண்விரயம் என்றும் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இருந்தபோதும், இதற்கு முன்னர் இருந்த எந்தவொரு அரசாங்கமும் அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

எனினும், ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசாங்கம் இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்துள்ளது. அரசியல் கலாசாரத்தை மாற்றக் கூடிய திட்டங்களை இவர்கள் ஆரம்பிப்பார்களா அல்லது இதுவும் வெற்றுக் கோஷமாக அமைந்துவிடுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.





**முதன்முறையாகக் கூடிய அமைச்சரவை!**

### மீண்டும் விசாரணைகள்:

ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் சரி அதற்கு முன்னரும் சரி தேசிய மக்கள் சக்தி கூறிவந்த விடயம் கடந்த காலத்தில் இடம்பெற்ற இரு பாரிய சம்பவங்கள் குறித்து நியாயமான விசாரணை நடத்தப்படும் என்பதாகும். அதாவது உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் மற்றும் பாரிய ஊழல் மோசடியான மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த இரு சம்பவங்கள் பற்றியும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் என அவர்கள் தொடர்ச்சியாகவே கூறி வருகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அனைத்து பிரசார மேடைகளிலும் இது பெரிதாகப் பேசப்பட்டது. இந்த நிலையில் குறித்தவிரு விடயங்கள் பற்றிய விசாரணைகளையும் மீள ஆரம்பிக்கப் போவதாக அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் விஜித ஹேரத் குறிப்பிட்டிருந்தார்.

அப்பாவிக் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பலர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டும், படுகாயமடைந்த போதும் இதுவரை இதற்குக் காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அநுரவுக்கு முன்னர் பதவி வகித்த மூன்று ஜனாதிபதிகள் இது விடயம் பற்றிக் கதைத்தபோதும், எவரும் உண்மையைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் புதிய அரசாங்கம் மீது அனைவரது கவனமும் திரும்பியுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடமும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் விஜித ஹேரத் கூறியிருந்தார்.

இவை மாத்திரமன்றி, வரி செலுத்துனர்களான நாட்டு மக்களின் பணத்தைச் சூறையாடிய அனைவர் மீதும் விசாரணை நடத்தப்பட்டு இழக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

இதற்கான நடவடிக்கைகள் புதிய அரசாங்கத்தினால் எடுக்கப்பட வேண்டும். இதனைச் சரியாகச் செய்ய இந்த அரசாங்கமும் தவறும் பட்சத்தில் ஒட்டுமொத்த அரசியல் மீதும் மக்களுக்கு நம்பிக்கை இழப்பு ஏற்பட்டுவிடும். அதற்காக, கடந்த அரசாங்கங்களில் மேற்கொண்டதுபோல பழிவாங்கும் நோக்கில் ஓர் இருவரைப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டு ஏனையவர்களை சுதந்திரமாக நடமாட இடமளித்தது போல் செயற்படாமல், உரிய விசாரணைகளை நடத்தி சட்டரீதியாக அனைவருக்கும் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

### வாகனக் கண்காட்சி:

அத்துடன், அரசியலில் தமது நிலைப்புக்காக பல்வேறு தரப்பினருக்கு சலுகை வழங்கும் நடைமுறையொன்று பல ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக ஜனாதிபதியாக இருப்பவர் தனக்கு ஆதரவு வழங்கும் அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் அரசியல் தலைவர்களுக்குத் தனது தனிப்பட்ட பணியாள் குழாம் என்ற அடிப்படையில் வசதிகளை வழங்குவது காணப்படுகின்றது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஆதரவாக உள்ள ஐ.தே.கவின் முன்னாள் முக்கியஸ்தர்களை ஜனாதிபதி ஆலோசகர்களாக நியமித்தும், தனக்குப் பாராளுமன்றத்தில் ஆதரவு வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் கீழ் அதிசொகுசு வாகனங்களை வழங்கியும் இருந்தார் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான வாகனங்கள் இவ்வாறு வழங்கப்பட்டதாக அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்டுப் பின்னர் மீண்டும் கையளிக்கப்பட்ட வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மித்த பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தன. இது அரசாங்கம் மக்கள் செல்வாக்கைப் பெற்றுக் கொள்வதற்கான கண்காட்சி என எதிர்த்தரப்பினர் விமர்சித்திருந்தனர். இருந்தபோதும், இது கண்காட்சி அல்ல, வாகனங்களை நிறுத்தப் போதுமான இடம் ஜனாதிபதி செயலகத்தில் இல்லையென்பதால் பொதுவான இடத்தில் நிறுத்தியதாக அரசாங்கத்தின் தரப்பில் கூறப்பட்டது. அது மாத்திரமன்றி, இந்த வாகனங்கள் தற்பொழுது அங்கிருந்து அகற்றப்பட்டு உள்ளதுடன், தேவையான வாகனங்கள் சில அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் பார்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், வாகனங்களைக் காட்சிப்படுத்தினார்களா இல்லையா என்பதற்கு அப்பால் மக்களுக்காக சேவை செய்யவரும் நபர்களுக்கு செலவுமிக்க அதிசொகுசு வாகனங்களுக்கான தேவை உள்ளதா, இல்லையா என்பதாகும்.

இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடி மிக்க நாடுகளில் எரிபொருள் சிக்கனம் இல்லாத அதிசொகுசு வாகனங்களுக்கான தேவை என்ன என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

இதுபோன்று வாகனம் வழங்கும் அரசியல் ரணிலின் ஆட்சியில் மாத்திரம் நடைபெறவில்லை. அதற்கு முன்னர் இருந்த மஹிந்த மற்றும் மைத்திரியும் இதனையே செய்திருந்தனர் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். குறிப்பாக மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலேயே இதுபோன்ற அரசியல் கலாசாரங்கள் அதிகம் கொண்டுவரப்பட்டன.

எனவே, இவ்வாறான வீண்செலவைக் கொடுக்கும் அரசியல் கலாசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய அரசியல் அமைப்பு மாற்றமொன்றை அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கொண்டு வர வேண்டும் என்பதையே பலரும் எதிர்பார்க்கின்றனர்.

**பி.ஹர்ஷன்...**

---

# மூளப் போகின்றதா மூன்றாம் உலகப்போர்?

## காஸாவுக்கு அப்பால் லெபனான், யெமன், சிரியா, ஈரான் வரை விரிவடைந்த யுத்தம்!



காஸா மீதான யுத்தத்தை கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி ஆரம்பித்த இஸ்ரேல், லெபனான் மீதான வான்வழித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், தெற்கு லெபனான் மீது தரைவழித் தாக்குதல்களையும் தொடங்கியுள்ளது.

அத்தோடு கடந்த செப்டம்பர் 29 ஆம் திகதி யெமனின் ஹுதைதா துறைமுகத்தின் மீது மீண்டும் வான்வழித் தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேல், சிரியா தலைநகர் டமஸ்கஸ் உள்ளிட்ட நகர்கள் மீதும் அவ்வப்போது தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் ஈரான் திடீரென பிளாஸ்ரிக் மற்றும் ஹைப்பர்சொனிக் ஏவுகணைகளைக் கொண்டு கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டது. இஸ்ரேல் மீது குண்டுமழை பொழியப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 'உண்மையான வாக்குறுதி நடவடிக்கை 2' எனப் பெயரிட்டு இஸ்ரேல் மீது இரண்டாவது தடவையாக முன்னெடுக்கப்பட்ட இத்தாக்குதலுக்கு ஈரான், 200 பிளாஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்பு அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயீல் ஹனியே தெஹ்ரானில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து உச்சகட்ட யுத்தப் பரபரப்பு ஏற்பட்ட காலத்தில் கூட பொறுமை காத்த ஈரான், திடீரென இஸ்ரேல் மீது தற்போது தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ ரல்லா, ஈரானின் இஸ்லாமிய குடியரசு படையின் பிரதித் தளபதி அப்பாஸ் நில்ஃபோரௌஷன் உட்பட 10 இற்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்கள் இஸ்ரேலின் துல்லிய தாக்குதல் மூலம் கடந்த 27 ஆம் திகதி மாலையில் கொல்லப்பட்டனர். அக்காலப்பகுதியில் பெய்ரூட் மீது இஸ்ரேல் கடும் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது.

இவ்வருடம் முற்பகுதி முதல் ஈரானின் இஸ்லாமிய புரட்சி காவலர் படையின் முக்கியஸ்தர்களை இஸ்ரேல் துல்லிய தாக்குதல்கள் மூலம் சிரியாவில் கொன்றொழிக்க ஆரம்பித்தது. அச்சமயங்களில் ஈரான் மௌனம் காத்தது. கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிரியாவிலுள்ள ஈரானின் தூதரகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈரான் இஸ்லாமிய குடியரசுப் படையின் குத்ஸ் படைப் பிரிவுத் தளபதி முஹம்மத் ரிசா சாஹிடி உட்பட முக்கிய தளபதிகள் அடங்கலாக 16 பேர் கொல்லப்பட்டனர்.

அதற்கு எதிராக வெகுண்டெழுந்த ஈரான், 170 ட்ரோன்கள், 30 குரூஸ் ஏவுகணைகள், 120 பிளாஸ்டிக் ஏவுகணைகளைக் கொண்டு கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. அதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்க முற்பட்ட போதிலும், அமெரிக்கா தலையிட்டு இஸ்ரேலை அமைதிப்படுத்தியது.

அதன் பின்னர், ஜனாதிபதி மசூத் பெசஸ்கியானின் பதவியேற்பு வைபவத்தில் விஷேட விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த இஸ்மாயீல் ஹனியே கடந்த ஜுலை 31 ஆம் திகதி துல்லிய தாக்குதல் மூலம் தெஹ்ரானில் கொல்லப்பட்டார். அதற்கு இஸ்ரேல் உரிமை கோராத போதிலும், இஸ்ரேலை குற்றம் சாட்டிய ஈரான், பதிலடி கொடுப்பதற்கான முஸ்தீபுகளை முன்னெடுத்தது. மத்திய கிழக்கில் உச்சகட்ட பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் அமெரிக்கா யுத்த விமானங்களையும் போர்க் கப்பல்களையும், விமானந்தாங்கிக் கப்பல்களையும் மத்திய கிழக்குக்கும் மத்திய தரைக்கடலுக்கும் அவசர அவசரமாக நகர்த்தியது.

இதே சூழலில் ஈரானின் ஜனாதிபதி மசூட் பெசஸ்கியானுடன் தொடர்பு கொண்ட மேற்கு நாடுகளும் அமெரிக்காவும், 'ஈரானின் இறையாண்மையை மீறி ஈரானின் விருந்தாளி ஹனியே கொல்லப்பட்டதற்கு எதிராக இஸ்ரேல் மீது உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டாம். நாம் காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி அமைதியைக் கொண்டு வருகின்றோம்' என்று உறுதியளித்துள்ளன. அதனால் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுப்பதை ஈரான் தாமதப்படுத்தியுள்ளது. இருப்பினும் இரு மாதங்கள் கடந்தும் காஸாவில் யுத்தநிறுத்தம் கொண்டு வரப்படவில்லை.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் அசோசியேட்டட் பிரஸுக்கு கருத்து தெரிவித்துள்ள ஈரான் ஜனாதிபதி, 'இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்கு ஈரான் பதிலளிக்காதிருப்பதற்கு ஈடாக போர்நிறுத்தத்தை ஏற்படுத்த அமெரிக்காவும் ஐரோப்பிய தலைவர்களும் அளித்த உறுதிமொழிகள் அப்பட்டமான பொய்' என்று வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஈரானில் கடும் பதற்றம் ஏற்பட்டிருந்த சூழலில் ஈரானின் பிரதித் தளபதி அப்பாஸ் நில்ஃபோரௌஷன், ஹஸன் நஸ்ரல்லாவுடன் சேர்த்துக் கொல்லப்பட்டார்.

**கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி காஸா மீது இஸ்ரேல் ஆரம்பித்த யுத்தம் நாளையுடன் (07.10.2024) ஒரு வருடத்தை நிறைவு செய்கிறது**



அதன் பின்னர் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு, ஈரான் மக்களுக்கு கடந்த 30 ஆம் திகதி ஆற்றிய உரையில், 'நாட்டின் அடக்குமுறை இஸ்லாமிய ஆட்சியில் இருந்து ஈரானிய மக்கள் விரைவில் விடுதலை பெறுவார்கள். ஒவ்வொரு நாளும், உங்களை அடிபணிய வைக்கும் ஒரு ஆட்சியை நீங்கள் காண்கிறீர்கள், லெபனானைப் பாதுகாப்பது, காஸாவைப் பாதுகாப்பது பற்றி உமிழும் பேச்சுக்கள், ஒவ்வொரு நாளும், அந்த ஆட்சி நமது பிராந்தியத்தை இன்னும் இன்னும் இருளிலும் ஆழமான போரிலும் ஆழ்த்துகிறது. பிராந்தியம் முழுவதிலும் உள்ள ஈரானின் பயங்கரவாதப் பினாமி குழுக்களின் உயர்மட்ட தலைவர்களை இஸ்ரேல் ஒழித்துவிட்டது. இஸ்லாமிய ஆட்சிக்கு உண்மையிலேயே மக்கள் மீது அக்கறை இருந்தால், அது உலகம் முழுவதும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்து பில்லியன்கணக்கான டொலர்களை வீணடிப்பதை நிறுத்திவிடும், அதற்கு பதிலாக குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரை ஆற்றப்பட்ட பின்னரான 24 மணித்தியாலயங்களுக்குள் இஸ்ரேல் மீது ஈரான் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளதென சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

மொசாட் தலைமையகம், நவட்டிம் விமானத் தளம் உள்ளிட்ட முக்கிய படைத்தளங்களை இலக்கு வைத்து இத்தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டதால், எந்தவொரு சிவிலியனும் பாதிக்கப்படவில்லை என்று ஈரான் குறிப்பிட்டுள்ளது. அதனை இஸ்ரேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தாக்குதல்களால் பல விமானதளங்களுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக அலுவலக கட்டடங்கள் மற்றும் பிற பராமரிப்பு பகுதிகள் சேதமடைந்துள்ளன. ஆனால் இத்தாக்குதலில் எந்த விமானமும் சேதமடையவில்லை என்று இஸ்ரேலிய இராணுவத்தை மேற்கோள்காட்டி இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானின் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர், "ஈரான் கடும் தவறிழைத்து விட்டது. அதற்கு உரிய விலை கொடுக்கும்' என்றார். அதற்கேற்ப தாக்குதல்களை முன்னெடுப்பதற்கான முஸ்தீபுகளிலும் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் ஈரானிய படைத் தளபதி, ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த முயற்சிக்குமாயின் இதைவிட மோசமான தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்றுள்ளார்.

இவ்வாறான சூழலில் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி காமெனெய் தெஹ்ரானில் உரையாற்றும் போது, இப்பிராந்தியத்தில் நிலவும் பதற்றம் மற்றும் போருக்கு அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும்தான் காரணம். அவர்கள் இங்கு அமைதியை நிலைநாட்டுவதாக பொய் கூறுகின்றனர். அந்த நாடுகள் இங்கிருந்து வெளியேற வேண்டும். அப்போதுதான் இங்குள்ள நாடுகள் அமைதியாக இருக்கும்'' என்றுள்ளார்.

இதேவேளை ஈரானின் தாக்குதலை ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ் வெளிப்படையாகக் கண்டிக்கத் தவறினாரெனக் குறிப்பிட்டு இஸ்ரேல் அவருக்குத் தடை விதித்துள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் முன்னெடுத்த ஏவுகணைத் தாக்குதலை ஈரானிய மக்கள் மாத்திரமல்லாமல் ஈராக், லெபனான், பலஸ்தீன், ஜோர்தான் மக்களும் கொண்டாடியுள்ளனர்.

லெபனானில் கடந்த ஒக்டோபர் 08 முதல் இவ்வருடம் ஒக்டோபர் வரையும் 1640 பேர் கொல்லப்பட்டுளளனர். அவர்களில் 104 பேர் சிறுவர்களாவர். 194 பேர் பெண்களாவர். 8408 பேர் காயமடைந்துள்ளனர். பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தெற்கு லெபனான் மீதான தரைவழி தாக்குதல்களை தொடர்ந்து சிவிலியன்கள் இழப்பும் பாதிப்புக்களும் பெரிதும் அதிகரித்துள்ளன. அங்குள்ள 25 கிராமங்களில் இருந்து மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காஸா மீது இஸ்ரேல் ஆரம்பித்த யுத்தம் நாளையுடன் (07.10.2024) ஒரு வருடத்தை நிறைவு செய்யும் நிலையில் காஸாவுக்கு அப்பால் லெபனான், யெமன், சிரியா, ஈரான் வரை யுத்தம் விரிவடைந்துள்ளது. இது மூன்றாம் உலக யுத்தத்திற்கு வித்திடுமோ? அல்லது பிராந்திய யுத்தத்திற்கு வழிவகுக்குமோ? என்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது.



**மர்லின் மரிக்கார்...**

# மாற்றத்தை வேண்டி நிற்கும் பொதுத் தேர்தல் களம்




எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் காலத்தில் இருக்கிறோம். மேல்மாகாணத்தில் அதிகூடிய ஆசனங்களும் (38), வட மாகாணத்தில் மிகக் குறைந்த ஆசனங்களும் (12) தெரிவு செய்யப்படவுள்ளன.

இலங்கையின் சனச்செறிவு மிக்க மாகாணம் மேற்கு என்பதும், ஐதான சன அடர்த்தி நிலவும் மாகாணம் வடக்கு என்பதும் வெளிப்படை உண்மை.

பாராளுமன்ற ஆசனங்களில், கிட்டத்தட்ட அரைவாசி ஆசனங்களை மேற்கு, வடமேற்கு, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்கள் கொண்டுள்ளன. மத்திய மாகாணத்தையும் இவற்றோடு சேர்த்தால், கிட்டத்தட்ட 2/3 ஆசனங்கள் இந்த 5 மாகாணங்களுக்குள் அடங்கும்.

> **தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் இருப்பைப் பாதுகாக்க வேண்டும் பிரதான அரசியல் கட்சிகளோடு கரைந்து போகக் கூடாது எனவும் வாதிக்கின்றனர்.**

இவை தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகும் 29 ஐத் தவிர, நேரடியாகத் தெரிவாகும் 196 ஆசனங்களை அடிப்படையாகக் கொண்ட கணிப்பாகும்.

ஊவா, கிழக்கு, வடமத்தி, வடக்கு ஆகிய 4 மாகாணங்களிலும் ஒப்பீட்டளவில் சனச்செறிவு குறைவு. அதிலும், வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மொத்தமாக (12+16)=28 ஆசனங்களே தெரிவாகப் போகின்றன.

இந்த எண்ணிக்கை, மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படும் மொத்த ஆசனங்களில் (196), அண்ணளவாக 14 வீதமாகும். இந்தப் பின்புலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண ஆசனங்கள், இந்தப் பொதுத் தேர்தலின் பின்னரான ஆட்சியமைப்பில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தாது என்று உய்த்துணரலாம். தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் வீச்சு மிகவும் அதிகமாகும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், பாராளுமன்றத் தேர்தலில் நிச்சயம் செல்வாக்குச் செலுத்தும். அந்த வகையில் மேற்குறிப்பிட்ட 5 மாகாணங்களே தீர்மானிக்கும் மாகாணங்களாக இருக்கப் போகின்றன.

ஆனால், வடக்கும் கிழக்கும் வேறு வகையில் அரசாங்கத்துக்கு முக்கியமானவை. இது வெறும் ஆசன எண்ணிக்கைப் பலத்தின் அடிப்படையிலான தேவை அல்ல. மாறாக, இங்கு வாழும் சிறுபான்மை சமூகங்களின் நம்பிக்கையைப் பெறுதல் என்பதே, இதன் அரசியல் முக்கியத்துவத்திற்கு முழுமுதல் காரணமாகும்.

வடக்கு கிழக்கு தவிர, மேல் மாகாணமும் மத்திய மாகாணமும் வடமேல் மாகாணமும் சிறுபான்மை மக்களைக் கணிசமாகக் கொண்டவை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

எது எவ்வாறாயினும், கிழக்கிலும் வடக்கிலும் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பது பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் கவனத்தை அதிகம் ஈர்க்கும். அதற்கு பூகோள அரசியல் முக்கியத்துவமும் உள்ளது.

ஒப்பீட்டளவில் தமிழர்களும் முஸ்லிம்களும் மிக அதிகளவில் இங்கு வாழ்வதுதான் அதற்கு மிகப் பிரதானமான காரணம். அத்தோடு, முப்பதாண்டு கால சிவில் யுத்தத்தினால் அதிகளவு பாதிப்புக்குள்ளான பிரதேசம் என்பது கவன ஈர்ப்பை அதிகரிக்க இன்னொரு காரணமாக உள்ளது.

> **இதற்கு மறுதலையாக, இந்த சந்தர்ப்பவாத, சுயநலக் கட்சிகள் போதிய நன்மை எதையும் செய்யவில்லை. தேசியளவில் இயங்கும் கட்சிகளோடு கைகோர்ப்பதே சிறந்த தெரிவு என்ற எதிர்வாதங்களும் பலமாக உள்ளன.**

போருக்குப் பிந்திய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் இவ்விரு மாகாணங்களும் அதிக கவனத்தைக் கோரி நிற்கின்றன. அத்தோடு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் செல்வாக்கும் இங்கு அதிகம்.

ஆனால், இம்முறை இந்த சிறுபான்மை சமூக அரசியல் கட்சிகளின் பிடி தளர்ந்து வருவதையே களநிலவரம் சுட்டிக்காட்டுகிறது. 'பேரம் பேசும் அரசியல்' என்ற கோஷம் மூலம், இவர்கள் 'பிழைப்புவாத சந்தர்ப்பவாத அரசியலைத்தான் முன்னெடுத்து வந்தார்கள். ஆகவே, இந்தத் தடவை இவர்களைத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற குரல்கள் பொதுமக்கள் தளத்தில் பரவலாக எழுப்பப்படுகிறது. அதை சமூக ஊடகங்கள், மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

அதேவேளை, தேசியவாத நலன்களையும் இனத் தனித்துவங்களையும் பாதுகாக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் இருப்பைப் பாதுகாக்க வேண்டும் என்ற குரல்களும் கேட்கவே செய்கின்றன. பிரதான அரசியல் கட்சிகளோடு கரைந்து போகக் கூடாது எனவும் வாதிக்கின்றனர்.

இதற்கு மறுதலையாக, இந்த சந்தர்ப்பவாத, சுயநலக் கட்சிகள் போதிய நன்மை எதையும் செய்யவில்லை. தேசியளவில் இயங்கும் கட்சிகளோடு கைகோர்ப்பதே சிறந்த தெரிவு என்ற எதிர்வாதங்களும் பலமாக உள்ளன.

இதன் சாதக, பாதகங்களை, வரவிருக்கும் பொதுத் தேர்தல் முடிவுகளே வெளிப்படுத்தப் போகின்றன.

இது இவ்வாறிருக்க, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை விடவும், இப்போது கிழக்கிலும் வடக்கிலும் தேசிய மக்கள் சக்திக்கான (NPP) ஆதரவுத் தளம் வலுவடைந்து கொண்டே செல்கிறது.

வடக்கின் யாழ் மற்றும் வன்னி ஆகிய இரு தேர்தல் மாவட்டங்களிலும், தேசிய மக்கள் சக்தி (NPP) ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆசனங்களையாவது பெறும் நிலை உருவாகியுள்ளது.

கிழக்கில் தேசிய மக்கள் சக்தி, சுமாராக 30–40% ஆசனங்களை (5 அல்லது 6 அல்லது 7) வெல்லும் சாத்தியம் உள்ளது.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று போனஸ் ஆசனங்களை வெல்லும் சாத்தியத்தையும் மறுப்பதற்கில்லை.

> **வெற்றி வீதம் வேட்பாளர் தெரிவில் பெரிதும் தங்கியிருக்கிறது. ஆளுமையுள்ள, மக்கள் ஆதரவு பெற்ற வேட்பாளர்களையே இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகம் விரும்புகின்றனர்.**

ஆனால், இந்த வெற்றி வீதம் வேட்பாளர் தெரிவில் பெரிதும் தங்கியிருக்கிறது. ஆளுமையுள்ள, மக்கள் ஆதரவு பெற்ற வேட்பாளர்களையே இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகம் விரும்புகின்றனர். அவ்வாறானவர்களைக் களமிறக்கினால் தேசிய மக்கள் சக்தி கிழக்கிலும் வடக்கிலும் கூடுதல் வெற்றி பெறும்.

மறுபுறம் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட, செயற்திறனற்ற ஊழல் பேர்வழிகளை ஒதுக்கி விட்டு, ஆற்றலும் ஆளுமையும் கொண்ட புதுமுகங்களைக் களமிறக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக வெளிவருகின்றன.

இந்தப் பின்புலத்தில், நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் களம் அதிரடியான மாற்றங்கள் பலவற்றைச் சாத்தியப்படுத்தும் என்று துணிந்து கூறலாம்.

இந்தப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 120 ஆசனங்களைப் பெறும் என்று பலரும் எதிர்வு கூறுகிறார்கள்.

சந்தேகத்திற்கிடமின்றி, இந்தத் தேர்தல் ஒரு முக்கிய திருப்புமுனையாக இருக்கும்.



**சிராஜ் மஷ்ஹூர்**

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

## சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வேலைவாய்ப்பு



308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

பத்தரமுல்ல பிரதான தங்க நகை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள விற்பனை ஊழியர்/ பெண் ஊழியர் தேவை. வயது 25 இற்கு குறைந்தோர். பயிற்சிபெற்ற/பெறாத ஊழியர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர். கணனி அறிவு விசேட தகைமையாகும். கூடுதல் சம்பளம். 077 6055340, 011 2863763. 067666



312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

கனேமுல்ல சிங்கர் சேவை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள/இல்லாத வீட்டு மின் உபகரண (T e chni cians) சேவை தொழில்நுட்பவியலாளர்கள், சாரதிகள், பெயின்டர்கள், ஹெல்பர்கள் தேவை. தூரப் பிரதேசத்தவர்களுக்கு தங்குமிட வசதிகள் உண்டு. 075-9293263, 075-2345789. 068025

கார் சேர்விஸ் நிறுவனத்திற்கு ஊழியர்கள் தேவை. போத்தல், பத்திரிகை கடைக்கு ஊழியர்கள் தேவை. 076 7388145, 076 0288145, 070 7388145. 067681

Electrical பாஸ் (இலெக்ரிகல் பாஸ்) உடனடியாக தேவை.இல. 14 ருத்திரா மாவத்தை கொழும்பு - 060773 629518 0777380620 067578



319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கட்டுநாயக்க வீட்டில் தங்கி சேவை செய்வதற்கு ஊழியர் தேவை. வேறாக சகல வசதிகளுடன் தங்குமிடத்துடன் ஆரம்ப சம்பளம் - ரூ. 70, 000/ - ஆகும். 070-7778544. 068045

கொழும்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40,000 - 45,000 அனுபவத்தின் பிரகாரம். வயது 55 இற்கு குறைந்தோர் - 0777 584961, 0777 456579.067923

பெண் மருத்வதுரின் வீட்டில் வேலைக்கு நடுத்தர வயது ஊழியர் தேவை. நல்ல சம்பளம் T. P. 071 6669333. 067695

பொரளையில் உள்ள அப்பாட்மென்ட் இல் முஸ்லிம் குடும்பத்திற்கு பகுதி நேர சுத்திகரிப்புக்கு மட்டும் 45 வயதிற்கு குறைந்த ஆரோக்கியமான மற்றும் சிறந்த தோற்றமுடைய வீட்டுப் பணிப்பெண் தேவை. ரூ.1300/ - நாளாந்தம் - 0772287000, 0112689460 067037

வயது 18 - 55 க்கு இடைப்பட்ட சிங்களம் கதைக்கக் கூடிய பெண் ஒருவர் இரண்டு மாடிகள் கொண்ட வீட்டில் சுத்தம் செய்யும் பணிகளுக்காக தேவைப்படுகின்றார். செல்லப்பிராணிகளை விரும்பும் சிறு பிள்ளைகளுடன் இருக்கக் கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும். சமையல் மற்றும் வெளி வேலைகளுக்கு வேறொருவர் உள்ளார். பாதுகாப்பு, உணவு, தங்கும் வசதிகள் கொடுக்கப்படும். மாதாந்த சம்பளம் ரூபா. 40, 0 00/ - வழங்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ் அவசியமாகும்.தொடர்புகளுக்கு - 0777699522 067449



320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாலபே பகிரங்க பேக்கரிக்கு அனுபவமுள்ள பேக்கரி பாஸ்மார் உடன் தேவை. உணவு, தங்குமிட வசதிகளுடன் கூடுதல் சம்பளம் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 076-9366851, 074 3785654. 067454

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

அம்பலங்கொட 1500 கோழிகள் உள்ள கோழிப் பண்ணைக்கு ஊழியர் தேவை. சம்பளம் ரூ. 45000/- புரொயிலர் கோழிகள் வெட்டுவதற்காக ஊழியர்கள் இருவர் தேவை. அனுபவம் தேவையற்றது. அனுபவம் உள்ளவருக்கு சம்பளம் ரூ. 60, 000/ - பயிற்சியற்றவர்களுக்கு சம்பளம் ரூ. 45, 000/- உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். 071 7879871, 075 8586628. 067469

தோட்ட வேலைக்கு திறமையான தொழிலாளர்கள் தேவை. உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் - ரூ.45000/ - முதல் வெள்ளவாய உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படுவர்.074 - 1353450 067408

ஹொரண பிரதேசத்தில் அமைந்துள்ள தென்னை, இறப்பர் மற்றும் மிளகு பயிர்ச் செய்கையை நன்கு கவனித்து பராமரிக்கக் கூடிய அனுபவமுள்ள சிறந்த ஆரோக்கியமுள்ள 45 வயதிற்கு இடைப்பட்ட தங்கி வேலை செய்யக் கூடிய இரு தொழிலாளர்கள் உடன் தேவை. தொடர்புகள் - தொ. பே. இல. 077 3129433, 077 3064417. 067813



325 தொழில்துறை பொது

எமது தொழிற்சாலைக்கு 18-40 வயதுக்குட்பட்ட ஆண்கள் தொழிற்சாலை ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்களாக. மாத சம்பளம் ரூ. 40,000/- OT மற்றும் பிற கொடுப்பனவுகளுடன் ரூ. 50,000/-க்கு மேற்பட்ட வருமானம் மதிய உணவுடன் தங்குமிடம் இலவசம். முகாமையாளர் Ice Cubis Private Limited, 9, Aluth Road, Hunupitiya, Wattala. 077 6819009. 067976

நிட்டம்புவையில் அமைந்துள்ள பலகை பெல்ட் வேலைத் தளத்திற்கு (wooden pallets) 20 - 55 வயதிற்கிடைப்பட்ட ஆண் பயிற்சியற்ற ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சி காலத்தில் 4000/ - செலுத்தப்படும். பயிற்சியின் பின்னர் சம்பளம் ரூ. 70, 000-/, 80, 000/ - பெறலாம். தங்குமிடம் மற்றும் உணவு கொடுப்பனவு வழங்கப்படும். 0777 937844. 067436



வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலையில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. Juki Machine Operators/ உதவியாளர்கள் Machine Operators/ உதவியாளர்கள், சாரதிகள் - Trucks நாள் சம்பளம் 1500/ - இலவச தங்குமிடம் குறைந்த விலையில் உணவு வழங்கப்படும். நேர்முக தேர்வுக்கு கிழமை நாட்களில் கீழ்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். No. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ. பே. இல. 076 6200 300. 068083

### காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

காணி விற்பனைக்கு - எத்துல்கோட்டே மாளிகாவ வீதி 20 பேர்ச் காணி வீட்டுடன் உடனடியாக விற்பனைக்கு. 076 - 4722658 067322

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த அதிகூடிய நகர எல்லையில் 10 பேர்ச் இல் பெறுமதியான வீடு கொழும்பு கண்டி பிரதான வீதிக்கு 300 மீற்றர்கள் ரூ. 26 மில்லியன் - விற்பனைக்கு - தொடர்பு - 0718320784, 0112921086 068063

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

ஶ்ரீபாத மற்றும் நல்லதண்ணி மலையின் அருகாமையில் காணப்படும் ஹட்டன் வட்டவல குளிர்ச்சியான பகுதிகள் ... ஏக்கருக்கு ரூ. 3.6 இலட்சத்தில் இருந்து வசதியான கட்டண முறைகளுடன் இதோ உங்களுக்காக மேலும் தகவல்களுக்கு - 071-6282307. 067686



ஹட்டன் பகுதியில் அழகான மலையினால் சூழப்பட்ட கண்கொள்ளாக் காட்சிகளைக் கொண்ட நிலங்கள், குடியிருப்பு மற்றும் விடுமுறை இல்லங்களுக்கு ஏற்றதாக 40 பேர்ச்சஸ் காணிகள், வசதியான கட்டண முறைகளுடன் இதோ உங்களுக்காக... மேலும் தகவல்களுக்கு இந்து - 071 6282307. 067688

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

மாளிகாவத்த வீடமைப்பு திட்டம் இரண்டு படுக்கையறைகள் தொடர்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொலைபேசி - சயீத் - 0777983432. 068173

www.adz.lk
it's what you want

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# பலஸ்தீன மக்களுக்காக மாதாந்த நிதியுதவி

## சவூதி அரசு அதிரடி அறிவிப்பு.



பலஸ்தீன மக்களுக்கு மாதாந்த நிதியுதவி திட்டம் ஒன்றை சவூதி அரசு அறிவித்துள்ளது. மேலும் போர் நிறுத்தத்தம் ஏற்படுத்தப்பட்டு பாலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைப்பதையும் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை அப்பட்டமாக மீறும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பினால் விளைந்த மனிதப் பேரவலத்தின் தடயங்களையும், மோசமான விளைவுகளையும் இல்லாதொழிக்கும் நோக்குடன் சவூதி அரசின் இந்நகர்வு அமைந்துள்ளது.

இரண்டு புனிதஸ்தலங்களின் பாதுகாவலர், மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல ஸுஊத் மற்றும் முடிக்குரிய இளவரசரும் பிரதம மந்திரியுமான முகமது பின் ஸல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல ஸுஊத் ஹபிழஹுமுல்லாஹ் ஆகியோரின் பலஸ்தீன் விவகாரம் மீதான தொடர்ந்தேர்ச்சையான கரிசனை மற்றும் ஈடுபாட்டின் தொடர்ச்சியாக சகோதர பலஸ்தீன் மக்களுக்கான உதவிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் மூலம் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை பகிரங்கமாக மீறும் இஸ்ரேலிய மிலேச்சத்தனத்தால் விளைந்த மனிதப் பேரவலத்தை முடிவுக்கு கொண்டு வந்து; அவர்களுடைய பாதுகாப்பு மற்றும் இயல்பு வாழ்வு உறுதி செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இரு புனிதஸ்தலங்களான மக்கா மதீனா ஹரமைனின் சேவகர் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மது பின் ஸல்மான் ஆகிய இருவரும் சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களுடன் போர் நிறுத்தத்தை அடைவதற்கும், பொது மக்களைப் பாதுகாப்பதற்கும், மேலும் மனிதாபிமானத்தைக் கொண்டுவருவதற்கும் மேற்கொண்ட அயராத முயற்சிகளை சவூதி அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

போரை முடிவுக்குக் கொண்டுவந்து நிரபராதிகளான அப்பாவி மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு உத்தரவாதத்தை உறுதிப்படுத்தி; இயல்பு வாழ்வை அந்த மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும்; பாலஸ்தீன பிரச்சினைக்கு நியாயமான மற்றும் நிரந்தரமான தீர்வை எட்டி கிழக்கு ஜெருஸலமை தலைநகராகக் கொண்டு சுதந்திர பலஸ்தீன அரசை நிறுவுவதற்கும் சவூதி அரசு பேரார்வம் கொண்டுள்ளதோடு அதற்கு சாத்தியமான சகல வழிகளிலும் தனது முன்னெடுப்புக்களை துரிதப்படுத்தியுள்ளது.

பாலஸ்தீனத்தில் உள்ள சகோதரர்களை ஆதரிப்பதற்கும், காஸா பகுதியில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்கும், இடைக்கால அரபு இஸ்லாமிய உச்சிமாநாட்டின் தலைமைத்துவத்தின் மூலம் இந்த நெருக்கடியை நோக்கி அரபு மற்றும் இஸ்லாமிய நிலைப்பாட்டை தீர்க்கமான முடிவுகளுடன் ஒன்றிணைக்க முடிந்தது.

அதனால் அதன் மீது சுமத்தப்பட்ட முற்றுகையை உடைத்து, பல நட்பு நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்கு வழிவகுத்தது, மேலும் பாலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் சபையின் முழு உறுப்பினராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றது.

பாலஸ்தீனத்தில் உள்ள சகோதரர்களை ஆதரிப்பதற்காக 5.3 பில்லியனுக்கும் அதிகமான தொகையை, சகோதர பாலஸ்தீனிய மக்களுக்கு கடந்த ஆண்டுகளில் சவூதி அரசு வழங்கிய மனிதாபிமான, நிவாரணம் மற்றும் மேம்பாட்டு உதவிகளில் இந்த ஆதரவு வலுவாக இடம்பெறுகிறது.

பாலஸ்தீனப் பிரச்சினையில் சவூதி அரசின் வகிபாகமும் மன்னர் அப்துல் அஸீஸின் சகாப்தத்தில் இருந்து தொடங்கியதாகும். கி.பி. 1935 இல் லண்டன் மாநாட்டிலிருந்து இதன் வரலாறு தொடர்கிறது, பாலஸ்தீனப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கான வட்ட மேசை மாநாடு என இது பரவலாக பிரபல்யமடைந்திருந்தது.

சவூதி அரேபியா பாலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான பல மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்றது, மாட்ரிட் மாநாட்டில் தொடங்கி சாலை வரைபடம் மற்றும் அரபு அமைதி முயற்சியுடன் அது எல்லைப்படுத்தப் பட்டது.



**அஷ்ரப் ஆப்தீன் ரியாதி**
**விரிவுரையாளர்: தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்.**

# அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை வங்கி இளைப்பாறியவர்களின் சங்கமும் இணைந்து விசேடத்துவ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் செப்டெம்பர் 05ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன.





உயர் தரத்திலான மருந்துகளை நியாயமான விலைக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக நாடு முழுவதிலும் 61 அரச மருந்தகக் கிளைகள் உள்ளன. இந்த மருந்தக வலையமைப்பின் ஊடாக தமது மருந்துகளை கொள்வனவு செய்யும் இலங்கை வங்கியின் இளைப்பாறியவர்களின் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு 6.5% விசேடக் கழிவொன்றை வழங்குவதற்கு இந்த உடன்படிக்கையின் ஊடாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இணைந்துகொண்ட இலங்கை வங்கியின் இளைப்பாறியவர்களின் சங்கத்தின் தலைவர் நிஹால் கமகே அவர்கள் தமது கருத்தை தெரிவிக்கும்போது குணவியல்புகளுடன் மிகவும் சிறந்த மருந்துகளை வழங்கும் இலங்கையில் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிறுவனமான இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தமது உறுப்பினர்களுக்காக விசேட கழிவை வழங்கியமை தொடர்பாக தமது சங்கத்தின் அனைத்து உறுப்பினர்கள் சார்பாக தமது நன்றிகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கு தெரிவிப்பதாகக் கூறினார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுஷ தசநாயக்க அவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கும்போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தானம் ஏற்கனவே கர்ப்பிணித் தாய்மாருக்கு, 5 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு, 55 வயதிற்கு மேற்பட்ட வயதானவர்களுக்கு மருந்து பட்டோலைக்காக 5% கழிவு வழங்கப்படுகின்றது என்று கூறினார்.

அதேபோல், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேலும் அரச பணியாளர்களுக்கு இவ்வாறான கழிவை வழங்க இயன்றமை தொடர்பாக முகாமைத்துவம் சார்பாக தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில் தற்போது நாடு முழுவதிலும் 61 அரச மருந்தக கிளைகள் உள்ளதாகவும் எதிர்காலத்தில் தமது கிளை வலையமைப்பை விஸ்தரித்து உயர் தர மருந்துகளை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளும் மக்களின் உரிமையை மேலும் உறுதிப்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

அதேபோல், சகல அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மருந்துகள் நவீன தரத்துடனான ஆய்வுகூடங்களில் மூன்று முறை தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு குணவியல்புகளுடனான உயர்தர மருந்துகளை மட்டும் சந்தைக்கு வழங்குவதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இந்த செப்டெம்பர் 22ஆம் திகதி தமது 53வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

TL CARE HOME
TL CARE HOME SITUATED AT BATTARAMULLA IN A SERENE PLACE WITH LUXURY FACILITIES
Here we look after the inmates with special individual attention with our A grade fully qualified care giving team
DIAL FAST AND RESERVE YOUR SLOT
0777 948 261/ 077 272 3865
0777 950 208/ 075 496 5555

3 STORIED LUXURY HOUSE FOR SALE
WATTALA
4 car garage, driver room, Bathroom & Kitchen, A/C, Living space, Dining Area, Kitchen and large party hall, 03 A/C bedrooms, bathroom with hot water, TV lobby, large outdoor area, wood attic rooftop.
SOLAR PANELS 0 BILLS
06 PERCHES. FOUR YEAR USED
CONTACT 0714 298 892

VICTORIAN GUEST
Bandarawela victorianbungalow.lk
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
2km Away from Railway Station & Bandarawela Town
077 3 711 196 | 070 2 536 896

House with Land (19.45 Perch) for Sale
In Nagahamulla - Kolonnawa
5 minutes to -
Kolonnawa Town / Wellampitiya Town / Jumma Mosque – Kolonnawa / Cargills Food City and other s/m / Bus Stops, Market, Shops / Banks, Utility Facilities / Schools, Playground
Residential/ Friendly/ Quiet/ Flood Free Area
Pls call 070 33 788 87 / 077 23 455 46
Price per perch Rs. 25 Lakhs (negotiable)

WHITES INTERNATIONAL
AIR-CONDITIONERS FOR WHOLE SALE!
12,000 BTU Inverter 197,000/=
18,000 BTU Non Inverter 220,000/=
18,000 BTU Inverter 245,000/=
CALL US
0723559081

JA ELA - PAMUNUGAMA
LAND FOR SALE
Ideal for any long term investment, 113 perch square shaped land within 4km to Ja-Ela highway, facing Negombo to colombo beach road, directly from the landlord.
SERIOUS BUYERS ONLY
PRICE 870,000 PER PERCH
COULD BE NEGOTIATED AFTER INSPECTION.
CALL FOR MORE INFORMATION MALAKA 0779193483

හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මඟින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

LAND & BUILDING FOR SALE
GAMPAHA, WELIWERIYA
IDEAL FOR / FACTORY OR WAREHOUSE
Including 228 Perches Land,Factory Floor with firm Parapet wall. 32,000 SQ/F in building, 250 KVA Transformer and 40 Footer Container access with sturdy building and roof (Ideal for Solar Panel) With all authorised approved documents.
Location :- Weliveriya-Near Nedungahena IOC Petrol Shed.
Road Access :- 26Km from Colombo Fort
Katunayae International Airport 31 Km
Expected 300 Million (Negotiable)
NO BROKERS
Contact - Deen - Mobile / WhatsApp
0777 - 300 060 FOR MORE DETAILS

தார் பதித்தல்
காபட் பதித்தல் அனைத்து மூலப்பொருட்களுடன்
ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම
පෞද්ගලික පාරවල්
කර්මාන්තශාලා පාරවල්
ලෑන්ඩ්සේල් පාරවල් කාපට් ඇතිරීම හා තාර යෙදීම
බොරළු යොදු පාරවල් සකස්කිරීම හා කොන්ක්‍රීට් කිරීම
කාර් පාර්ක් කොන්ක්‍රීට් කිරීම හා කාපට් කිරීම
உங்களது வீட்டில் அல்லது நிறுவனத்தில் அனைத்து நிர்மாணப் பணிகளும் ஒரே இடத்திலிருந்து
அப்சரா குளோபல் ஹோல்டிங்ஸ்
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට සේවා සපයනු ලැබේ.
0778 383 834
Email - asankasameera417@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

FOR SALE NAWINNA, MAHARAGAMA
11.5 perches, 20 - feet carpeted road access. 2 storey, 6 bedrooms, 3 bathrooms, office & maid's room, 2 garages.
3000 sqft. Teak doors & windows, solar water, jacuzzi. 5 minutes to Maharagama Town.
APPOINTMENT 0761 928 455

Land for Sale in
Ranala – Kaduwela
420 Perches
* 2.5 acres 20 perches With a 20 feet road (40 ft container carriers can access)
* Land is near the Elephant house factory and CBL foods in Ranala Commercial area
* 800m - 1km from the low level road
* 10 - 15 minutes to the Kaduwela and Athurugiriya Highway Entrance
* Expecting 225 Million (Negotiable)
Contact Owner on
071 127 28 16 - Tharindu

AQ2O ULTRA-FILTRATION
NO Electricity, Chemicals, Bacteria, Virus, Mud, Odor, VOC, Disinfectant, Plastics, Water Wastages
Island wide distributors wanted
AQUIRE GLOBAL
Hot line 011 701 3011 / 077 33 65591

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

Sun Lanka SANY
Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## பணபலமும் அரசியல் பின்புலமும் இல்லாவிட்டால்

# நாட்டுக்காக உழைக்க விரும்புவோரின் பாராளுமன்ற கனவு வெறும் கானல்நீரா?

இலங்கையில் புதிய ஜனாதிபதி பதவியேற்று இரண்டுவாரங்கள் கடந்து விட்டன. இந்தக்காலப்பகுதியில் புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் நம்பிக்கை தருவதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய நிர்வாகத்துடன் நெருங்கிச் செயற்பட உத்தேசித்துள்ளதாக மேற்குலக நாடுகள் கோடிகாட்டியுள்ளன. அநுர நிர்வாகம் மாறியுள்ள உலக நிலவரங்களை சரிவர புரிந்து கொண்டு மிக அவதானத்துடன் சர்வதேச தொடர்புகளையும் உள்நாட்டு விவகாரங்களையும்

> நிதியமைச்சின் செயலாளரும் மத்தியவங்கி ஆளுநரும் மாற்றப்படவில்லை. இது மிகவும் காத்திரமான ஒரு முடிவு

கையாள முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. சர்வதேசங்களின் தூதுவர்கள் புதிய ஜனாதிபதியைச் சந்தித்து தமது வாழ்த்துக்களையும் ஒத்துழைப்புக்களையும் தெரிவித்து வருகின்றனர். அதேவேளை இலங்கையின் உள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற நபர்கள் புதிய அரசாங்கத்தை நாகரிகமற்ற விதத்தில் கடுமையாக விமர்சிப்பதையும் காண்கிறோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் உபாய முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. நிதியமைச்சின் செயலாளரும் மத்தியவங்கி ஆளுநரும் மாற்றப்படவில்லை. இது மிகவும் காத்திரமான ஒரு முடிவு. அரசாங்கம் மாறினாலும் அரச நிருவாகக் கட்டமைப்பு அவ்வாறே இயங்கும். இயங்க வேண்டியது அவசியம். மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றம் அரச நிர்வாக அதிகாரிகள் மத்தியிலும் ஏற்படவேண்டியது காலத்தின் கட்டாயம். அரசியல்வாதிகளின் முகங்களே கமராவுக்குத் தெரிந்தாலும் அவர்கள் முன்வைப்பதாகவோ அல்லது செயற்படுத்துவதாகவோ பகிரங்கப்படுத்தும் கொள்கைகள் அவர்களுடையவை அல்ல. மாறாக கல்விகற்ற பயிற்றப்பட்ட நிபுணத்துவ அனுபவமுள்ள நிர்வாக அதிகாரிகளினாலேயே அவை எழுதப்படுகின்றன. ஒரு சில அரசியல்வாதிகள் தவிர அவற்றில் உள்நுழைந்து ஆராய்ந்து பங்களிக்கும் அளவுக்கு ஆளுமை அரசியல்வாதிகள் பலருக்கு இருப்பதில்லை. ஆகவே புதிதாக பதவியேற்ற அரசாங்கம் இந்த அதிகாரிகள் வர்க்கத்தைக் காயப்படுத்தமல் அவர்களையும் அரவணைத்து லாவகமாகக் காய்களை நகர்த்தினால் நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவது பிரச்சினையாக இருக்காது. ஆனால் எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற பாணியில் அணுகினால் முடிவுகள் மோசமானவையாக இருக்கும். இப்போதே பலர் புதிய அரசாங்கத்திற்கு நீண்ட ஆயுள் இல்லை என்கின்றனர். பழைய ஆட்களே பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வருவார்கள் என்ற பேராசையும் அவாவும் பலருக்கு இருக்கிறது. இலங்கையில் இயங்கும் அரசுசாரா பொருளாதார சிந்தனைக்குழாங்களும் இதே நிலைப்பாட்டில் இருப்பது போலத் தெரிகிறது. வெளிநாடொன்றில் வசிக்கும் கொழும்பைச் சேர்ந்த தமிழ்மொழிபேசும் பேராசிரியர் ஒருவர் சமூக ஊடகங்களில் தற்போதைய ஜனாதிபதி வெற்றி பெறமுன்பிருந்தே அவரையும் அவரது கட்சியையும் ஊடக தர்மத்திற்கு அப்பாற் சென்று மிக மோசமாக விமர்சித்து வருவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக 58 சதவீதமான வாக்காளர்கள் ஜனாதிபதிக்கு எதிராக வாக்களித்திருப்பதாகவும் அதனால் அநுர சிறுபான்மை ஜனாதிபதி என்றும் கூறுகிறார். மக்களால் நிராகரிக்கப்பட்டு தேசியப்பட்டியலில் பாராளுமன்றம் சென்று பூர்வ ஜென்ம புண்ணியத்தால் ஜனாதிபதியான ரணில் பற்றி இவர் ஒன்றுமே இதுவரை கூறவில்லை. ஆகவே தெரிவு செய்யப்பட்ட மறதிநோயால் பீடிக்கபட்ட கல்வியாளர்கள் என்று சொல்லப்படுபவர்களின் விமர்சனங்களையும் உரியவாறு கையாள வேண்டியிருக்கும். பொதுத்தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆட்சியாளர்களால் மக்களுக்கான நிவாரணங்களை உடனடியாக அறிவிக்க முடியாது. அவ்வாறு செய்வதும் பிழை. அது மட்டுமன்றி மக்களின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்க்கைகள் பிரகாரமாக இருக்குமாயின் அதுபற்றிய ஆட்சியாளர்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவார்களாயின் பொதுமக்கள் தமது சுமைகளை இன்னும் சிறிது காலத்திற்கு பொறுத்துக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். இலங்கைக்கு வெளியே வாழும் இலங்கையர்கள் புதிய அரசாங்கத்திற்கு நிதிப்பங்களிப்பை வழங்கவும் முன்வருவார்கள். ஆகவே பொதுத் தேர்தலுக்கு முன்பதாக அரசாங்கம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பில்லை. உடனடியாக எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிக்காட்ட ஜனாதிபதி அற்புத விளக்கு எதையும் வைத்திருக்கவில்லை. ஆகவே அவருக்கும் அரசாங்கத்திற்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

> புதிய முகங்களை எல்லாக்கட்சிகளும் களமிறக்க வாய்ப்புண்டு

ஊழல் எதிர்ப்பு, திருட்டு என்ற கோசங்கள் குற்றச்சாட்டுகளின் பிரதிபலிப்பாகவே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தாலும் பாராளுமன்றத்தில் உள்ள எல்லோரும் திருடர்கள் அல்ல என்று ஒரு மூத்த தமிழ் அரசியல்வாதி குறிப்பிட்டார். அது உண்மைதான். எல்லோரும் அப்படியல்ல. ஆனால் பெரும்பாலானோர் தெரிவு செய்யப்பட்ட உடனேயே முழுக்குடும்பத்தையும் வெவ்வேறு பதவிகளுக்கு நியமித்து அவர்கள் மூலம் அரச சொத்துக்களை தமது குடும்ப சொத்துக்களாக பயன்படுத்தி கழிவறைக் கடதாசியைக் கூட அரசாங்கத்தின் பணத்தில் பெற்றவர்களை நாம் கண்டுள்ளோம். ஆகவே தாம் எதையும் திருடவில்லை என்பதை அவர்கள் சுலபமாக நிரூபிக்கலாம். தமது பேரிலும் தமது பினாமிகள் பேரிலும் உள்ள சொத்துக்களை கணக்குக்காட்டி தமது கடந்தகால வருமானத்தைக் கொண்டு அவை எவ்வாறு உழைக்கப்பட்டன என்ற விபரத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவார்களாயின் இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம். அதைவிடுத்து முடிந்தால் பிடி என்று சவால் விடுப்பதால் அதிலிருந்த விடுபட முடியாது.

இந்த ஆட்சிமாற்றத்தின் மூலம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஊழல்வாதிகளுக்கு தமது கட்சியில் இடமில்லை என்று அறிவித்துள்ளது முன்னர் பதவியிலிருந்த கட்சி. ஆண்டவா அப்படியானால் கட்சியில் எவருமே இருக்கமாட்டார்களே ஐயா என்று அங்கலாய்க்கிறது பொது சனம். புரதான கட்சிகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்து தேசிய மக்கள் சக்தியை எதிர்வரும் தேர்தலில் எவ்வாறு வெற்றி பெறலாம் என்பது பற்றிய வியூகங்களைப் பெரும்பாலும் வகுத்துவிட்டன. எல்லோரும் சேர்ந்து கூட்டாக அடிக்கப் போகிறார்கள். அதனால் மக்களால் வெளிப்படையாக ஊழல்வாதிகள் என்று பச்சை குத்தப்பட்டவர்களை இம்முறை ஒதுக்கிவிட வாய்ப்பிருப்பதால் புதிய முகங்களை எல்லாக்கட்சிகளும் களமிறக்க வாய்ப்புண்டு. பாராளுமன்றத்தில் தூங்கிவழியும் முதியவர்களும் தமது வீடுகளில் தமது உறக்கத்தை தொடர மக்கள் வாய்ப்பளிப்பார்கள். ஆக இம்முறை புதிய முகங்களுக்கு எல்லாக்கட்சிகளும் வாய்ப்பளிக்க இடமுண்டு. குறிப்பாக படித்தவர்கள், வாண்மையாளர்கள் தொழிலதிபர்கள் களம் காணலாம்.



> அரசியல்வாதிகளின் முகங்களே கமராவுக்குத் தெரிந்தாலும் அவர்கள் முன்வைப்பதாகவோ அல்லது செயற்படுத்துவதாகவோ பகிரங்கப்படுத்தும் கொள்கைகள் அவர்களுடையவை அல்ல

தமிழ்த்தேசிய அரசியல் பரப்பிலும் இந்த மாற்றங்கள் பிரதிபலிக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழுவில் உள்ள ஒரு பல்கலைக்கழக கல்வியாளரை தொடர்பு கொண்டு கேட்டேன் தேர்தலில் நிற்கிறீர்களா என்று. நின்றால் மாத்தறை மாவட்டத்தில் இரண்டாவதாக வருவேன். ஆனால் ஏற்கெனவே பல்கலைக் கழகத்தில் பெற்ற கடனை பெருந்தொகையில் மீளச் செலுத்த வேண்டியுள்ளது. பதவியை இராஜிநாமா செய்தால் அதை உடன் மீளச் செலுத்த வேண்டும். அது போக வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்று ஐந்து வருடங்கள் முடிவடைந்து வீட்டுக்கு வந்தால் ‘சோற்றுக்கு’ என்ன செய்வது? எங்கள் கட்சி ஊழலை எதிர்க்கும் கட்சி. ஆகவே அரசியலில் யாரும் சம்பாதிக்க முடியாது. ஆதலால் போட்டியிட மாட்டேன் என்கிறார். வேறொரு கட்சியைச் சேர்ந்த இன்னொரு பேராசிரியர் நான் போட்டியிட மாட்டேன் தேசியப்பட்டியலில் வருவேன் எனக்காக பணம் செலவிட ஒரு வர்த்தக நண்பர் இருக்கிறார் ஆகவே எனக்கு அது பிரச்சினை இல்லை என்கிறார்.

ஆக இலங்கை அரசியலில் பணபலமும் அரசியல் பின்புலமும் இல்லாத, நாட்டுக்காக உழைக்க விரும்பும் நபர்களால் பாராளுமன்றம் செல்வது கடினம் தான்.

# பிராந்திய யுத்தமாக மாறும் ஹமாஸ்- இஸ்ரேல் போர்?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல் – ஹமாஸ் போரானது பிராந்திய போராக பரிமாணம் பெற ஆரம்பித்துள்ளது. போரின் தொடக்கம் ஹமாஸ் மீதான தாக்குதலாக மட்டுப்படுத்தப்பட்டு இருந்த சூழல் படிப்படியாக விரிவடைந்து லெபனான், சிரியா எமன் மற்றும் ஈரான் போன்ற நாடுகள் என்ற தளத்தில் தரைவழி தாக்குதலுக்குரிய நகர்வுகளை செயல்படுத்தத் தொடக்கியிருக்கின்றது. இஸ்ரேலின் நகர்வை மேற்கு நாடுகள் அங்கீகரித்துள்ளன. அமெரிக்கா இரும்புத்திரை போன்று இஸ்ரேலை பாதுகாக்கும் என ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். இத்தகைய அறிவிப்புகளின் பின்புலத்தில் ஆயுதங்களும் இராணுவ தொலைநோக்கு வழிகாட்டல்களும் தரைவழி தாக்குதலின் இன்னொரு பரிமாணமாக காணப்படுகிறது. இது பிராந்திய அரசியலை இஸ்ரேலிய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்வதற்கான ஒரு சூழலை தந்திருக்கின்றது. இக்கட்டுரையும் அத்தகைய சூழலில் பிந்திய போக்குகளை தேடுவதாக அமையவுள்ளது.

குறிப்பாக கடந்த வாரம் (30.09,2024 – 05.10.2024) முழுவதும் இஸ்ரேல் லெபனான் மீது நடத்திய தாக்குதல் பாரிய நெருக்கடியை ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலிய புலனாய்வு தகவலின் படி ஹிஸ்புல்லாவின் 60 சதவீத இராணுவ மற்றும் ஆயுத தளபாடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிருக்கும் 40 சதவீதம் விரைவில் அழிக்கப்படவுள்ளதாகவும், தெரிவித்துள்ளது. தற்போது லெபனானின் எல்லையோரங்களில் அமைந்திருக்கின்ற குடியிருப்புகளை கடந்து தலைநகரத்தை நோக்கி இஸ்ரேலிய தாக்குதல் விரிவடைந்துள்ளது. விமானத் தாக்குதல் மூலமும் ஏவுகணை தாக்குதல் மூலமும் ஹிஸ்புல்லாவின் உட்கட்டமைப்பை முற்றாக தகர்ப்பதற்கான நகர்வுகளை முதன்மைப்படுத்தி வருகிறது. ஹிஸ்புல்லா லெபனானின் எல்லையோரத்தில் அமைந்திருக்கின்ற கிராமங்கள், இராணுவ கிராமங்களாகவே காணப்படுகின்றன. அக்கிராமங்களில் உள்ள மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதேபோன்று ஹிஸ்புல்லாவின் இராணுவ தலைமைகளை நோக்கி தொடர்ச்சியாக தாக்குதலை நிகழ்த்தி வரும் இஸ்ரேல் ஹசன் நஸ்ருலா ரவுதி முஸ்தாகா மற்றும் ஹாசன் ஜபார் அல் குவாசிர் ஆகியோர் குறுகிய காலப்பகுதியில் கொல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. ஏறக்குறைய ஹிஸ்புல்லாவின் இராணுவ தளபதிகள் தொடர்ச்சியாக கொல்லப்படுகின்ற நிலை இஸ்ரேலின் தாக்குதலுக்கு கிடைத்திருக்கும் எழுச்சியாக உள்ளது. இதுவரை 150 க்கும் மேற்பட்ட உட்கட்டமைப்பு இராணுவ நிலைகளை இஸ்ரேல் அழித்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதனை ஆழமாக விளங்கிக் கொள்வது அவசியமானது.

முதலாவது லெபனானின் தலைநகரை நோக்கி தரைவழி தாக்குதலுக்கான திட்டமிடலை நகர்த்தி வரும் இஸ்ரேலிய இராணுவம், லெபனானிய இராணுவத்தோடு மோத ஆரம்பித்துள்ளது. லெபனானிய இராணுவத்தின் அதிகாரி ஒருவருடைய கொலைக்கு பின்னர் லெபனான் இராணுவம் இஸ்ரேலிய இராணுவத்தின் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளது. இதனுடைய விளைவு, பிராந்திய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் காணப்படுகின்றன. இஸ்ரேல் தனது மக்களின் இருப்பையும் இறைமையை பேணுவதற்கு தாக்குதலை நடத்தப் போவதாகவும் பரஸ்பரம் செய்தி வெளியிட்டுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பு, இஸ்ரேல் லெபனான் போரை முன்னெடுக்க வழி வகுத்துள்ளது. இதன் அடிப்படைக் கொள்கையும் தாக்குதலின் போக்கும் இதனால் ஏற்படக்கூடிய பாரிய மனித அழிவுகளும் பிராந்திய அரசியல் சூழலை மாற்றுவதற்கான வாய்ப்பினை அதிகரித்துள்ளது என்று தெரிகிறது.

இரண்டாவது சமதளத்தில் இஸ்ரேலிய இராணுவமும் அதன் விமானப்படைகளின் ஏவுகணை தாக்குதல்களும் எமன் பகுதியில் அமைந்திருக்கும் ஹவுத்தி அமைப்பின் இராணுவ நிலைகளை தாக்க தொடங்கியிருக்கின்றன. எமன் பகுதியில் இயங்கி வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் இராணுவ நிலைகளை அழிப்பது இஸ்ரேலின் தரைப்பகுதியை பாதுகாப்பதற்கான நகர்வு என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இது எமன் நாட்டை போரில் ஈடுபடுத்துவதற்கான நகர்வாகவே தென்படுகிறது. செங்கடலை மையப்படுத்தி மேற்கு நாடுகளின் கப்பல்கள் மீது தாக்குதலை நிகழ்த்திய ஹவுத்தி அமைப்பினர், மேற்கு நாடுகளின் வர்த்தகப் போக்குவரத்தை அழிப்பதாக அமைந்துள்ளது. இதற்கு பதிலடி வழங்கும் விதத்தில் மேற்கு நாடுகளும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து எமன் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு வருகின்றன.



மூன்றாவது இதே சந்தர்ப்பத்தில் சிரியாவில் இயங்கி வரும் ஷியா பிரிவை நோக்கியும் இஸ்ரேல் தனது தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றது. கடந்த வாரத்தில் சிரியா இராணுவ நிலைகள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக விமான தாக்குதல்களையும் ஏவுகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றது. இது படிப்படியாக தன்னுடைய எல்லையோரத்தில் அமைந்திருக்கின்ற நாடுகளை இப்போரில் இஸ்ரேல் ஈடுப்பத்தும் என்பதைக் காட்டுகின்றது. அது பிராந்தியத்தின் புவிசார் அரசியலை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முயல்வதாகத் தெரிகின்றது. மேலும் யூதர்களை மீளவும் இஸ்ரேலின் எல்லையோரங்களில் குடியிருக்க வைக்கவும் அவர்களை பாதுகாக்கவும் அதற்கான பாதுகாப்பு அரண்களை விஸ்தரிக்கவும் இஸ்ரேலிய இராணுவமும் அரசாங்கமும் திட்டமிட்டு வருகின்றது.

நான்காவது, ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் பல்வேறுபட்ட தாக்குதலை நிகழ்த்திய போதும் அதற்கான அடிப்படைத் திறன்களை ஈரான் பாதுகாத்து வருகின்றது. ஆனால் லெபனான் மீதான தாக்குதலோடு தனது மக்களை பாதுகாக்கும் விதத்தில் ஈரான் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் திட்டமிட்டு வருவதாக தெரிய வருகின்றது. கடந்த வாரம் ஈரானிய அதியுயர் மதத் தலைவருடைய உரையும் ஈரானிய ஜனாதிபதியின் உரையும் ஈரான் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஹிஸ்புல்லாவின் இராணுவ தலைமையை அழித்தொழித்ததற்கு பதிலீடாக ஈரான், இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை நிகழ்த்தியதென்றும் அத் தாக்குதலில் விமானத்தளங்கள் மற்றும் இராணுவ தளங்கள் இலக்கு வைக்கப்பட்டன என்றும் அவற்றில் கணிசமானவை நடுவானில் அழித்தொழிக்கப்பட்டாலும் குறிப்பிடப்பட்ட விளைவுகளை; இஸ்ரேலின் விமானத்தளங்களுக்கும் இராணுவ தளங்களங்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே ஈரான் மீது இஸ்ரேல் நீண்ட தாக்குதலை செய்வதற்கு திட்டமிடுவதாக இராணுவ தளபதிகளும் பாதுகாப்பு மற்றும் அமைச்சரவையின் கூட்டத்தின் முடிவும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அதன் விளைவாக ஈரான் பாரிய துயரமொன்றை எதிர்கொள்ளும் நிலைக்குள் தள்ளப்படும் என இஸ்ரேலிய அமைச்சரவையின் உரையாடலில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இப் போர் பிராந்திய அரசியலை புதிய வடிவத்துக்குள் நகர்த்துகின்ற நோக்கோடு காணப்படுகிறது. பிராந்திய ரீதியில் கட்டி எழுப்பப்பட்டிருந்த அல்லது நாடுகளால் இஸ்ரேலுக்கு எதிராக உருவாக்கப்பட்டிருந்த ஆயுத அமைப்புகளும் கிளர்ச்சி குழுக்களும் முற்றாக அழித்தொழிக்கப்படுகிற சூழல் என்பது இஸ்ரேலுக்கு அவசியமானதாக தெரிகின்றது.

அதனை அழிப்பது மட்டுமின்றி ஈரான் போன்ற நாடுகளில் இராணுவ வல்லமையும் ஏனைய நாடுகளின் இராணுவ பலத்தையும் முற்றாக முடக்குவது என்ற திட்டமிடலோடு இப்பிராந்திய போர் கட்டமைக்கப்படுகிறது.

மேற்கு நாடுகளின் நலன்களுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களும் மேற்காசிய இஸ்லாமிய நாடுகளும் கட்டுப்படுத்தப்படுவதும் ஆதிக்கம் செய்யப்படுவதும் தவிர்க்க முடியாதது என மேற்கு இஸ்ரேல் கூட்டு கருதுகிறது.

அதனை நோக்கிய இப்போரும் பிராந்திய அரசியலும் காணப்படுகிறது.



# 2550 ஆண்டுகளுக்கும் மேலாக சுயவரலாற்றை தொடர்ச்சியாக எழுதிவரும் ஒரே நாடு இலங்கை

## மகாவம்சத்தை மொழிபெயர்த்த சரவணன் கூறுகின்றார்




**மூன்று தசாப்த காலமாக பத்திரிகைத்துறையிலும் ஆய்வுத்துறையிலும் இயங்கிவரும் சரவணன், தற்போது நோர்வேயில் வசிக்கிறார். அங்கிருந்து அரசியல், வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அவர் பத்து வரலாற்று நூல்களை இதுவரை எழுதியுள்ளர். அவை மிகவும் முக்கியமான நூல்கள். அந்நூல்களில் சில சாகித்திய விருதுகளையும், இந்திய அரசின் சிறந்த நூலுக்கான பரிசையும் பெற்றுள்ளன. தேசியம், மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம், மலையகம், பேரினவாதம் குறித்த விடயங்களில் அவர் தொடர்ந்தும் எழுதி வருகிறார். அந்த வகையில் தற்போது இலங்கையின் மகாவம்சத்தின் 06ஆவது தொகுதியை முழுமையாக மொழிபெயர்த்திருக்கிறார். தற்போது குமரன் பதிப்பகத்தால் அச்சேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த "மகாவம்சம்" தொகுதியானது 800 பக்கங்களுக்கும் மேற்பட்டதாகும். மகாவம்சத்தின் ஆறாவது தொகுதி தமிழில் வெளிவருவதன் முக்கியத்துவம், அதன் வரலாற்று வகிபாகம் என்பன குறித்து தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள என். சரவணன் தினகரன் வார மஞ்சரிக்கென அளித்த பேட்டி.......**

**கேள்வி: பத்திரிகை மற்றும் ஆய்வுத்துறையில் நீண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள நீங்கள் மகாவம்சத்தை தமிழுக்கு மொழிபெயர்த்திருப்பதாக அறிய முடிகிறது. அது தொடர்பில் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

பதில்: ஆம். நிச்சயமாக. உலகில் வேறெங்கும் ஒரு நாடு தனது சுயவரலாற்றை இந்தளவு நீண்ட காலத்துக்கு எழுதி வைத்ததில்லை. 2550 ஆண்டுகளுக்கும் மேலாக அத்தகைய சுயவரலாற்றை தொடர்ச்சியாக எழுதிவரும் ஒரே நாடு என்கிற பெருமை இலங்கைக்கு உள்ளது. அந்தந்த ஆட்சியாளர்களின் ஆட்சிகாலப் பகுதிகளில் நிகழ்ந்த சம்பவங்கள், சமூக, சமய, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிகள், எதிர்கொண்ட இடர்கள்எனபலவிபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் தொல்லியல் ரீதியில் அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான மூலாதாரங்கள் அதில் இருந்தன. அதுபோலவே அவ் வரலாற்றுக் கதைகளில் பல புனைவுகளும், ஐதீகக் கட்டுக்கதைகளும் கூட உள்ளன. அவ்வாறான தொல்லியல் சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படாத பல கட்டுக்கதைகளுக்கும் அதில் குறைவில்லை என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

**கேள்வி: அப்படியென்றால்**

> பல வசனங்கள் இவ்வாறு காற்புள்ளி இட்டு தொடர்கிற போக்கு முழு மகாவம்ச நடையிலும் காணப்படுகிறது. வாசகர்களுக்கு அயர்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. மொழிபெயர்ப்பிலும் இந்த சிக்கலை எதிர்கொண்டேன்.

> அது 1978 – 2010 காலப்பகுதியைப் பற்றிப் பேசுகிறது. இக்காலப்பகுதியானது சிவில் யுத்தம் தொடங்கி அது முடிவடைந்த காலப்பகுதியாகும்.

**மகாவம்சத்தில் பல வரலாற்று குளறுபடிகளும் இருக்கிறது என்கிறீர்களா?**

பதில்: ஆம். நிச்சயமாக உள்ளன. அதனை பல சிங்கள தொல்லியல் அறிஞர்கள் தமது ஆய்வுகளின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இலங்கையின் வரலாற்றை சிங்கள பௌத்த புனித வரலாறாக கட்டியெழுப்பியதில் மகாவம்சத்துக்கு பெரும் பங்கு உண்டு.

**கேள்வி: மகாவம்சத்தை மொழிபெயர்த்ததன் நோக்கம் குறித்து குறிப்பிடுவதாயின்?**

பதில்: மகாவம்சம் இதுவரை 6 தொகுதிகள் வெளிவந்துள்ளன. "மகாவம்சம்" மூல நூல் கி.மு. 483 தொடக்கம் கி.பி 301 வரையான மாகாசேனன் மன்னரின் காலப்பகுதிவரை மகாநாம தேரரால் எழுதப்பட்டது.

அதன்பின்னர் 2ஆவது தொகுதி கி.பி 301 முதல் கி.பி 1815 வரையான இலங்கை ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டில் வரும் வரையான காலப்பகுதியைப் பதிவு செய்கிறது. இரண்டாம் தொகுதியை "சூளவம்சம்" என்றும் அழைக்கின்றனர். 1815 இல் இலங்கை முழுவதுமாக அந்நியர் வசமானது தொடக்கம் 1936 வரையான காலப்பகுதியை 3 ஆவது தொகுதி பதிவு செய்கிறது.

1936 – 1956 காலப்பகுதியை 4 வது தொகுதி என்றும், 1956 – 1977 வரை 5 வது தொகுதி என்றும், இறுதியாக 1978 – 2010 வரையான காலப்பகுதி 6 வது தொகுதி என்றும் அழைக்கிறோம்.இவற்றில் முதலாவது மகாவம்ச தொகுதி மாத்திரம்



மொழிபெயர்க்கப்பட்டு தமிழில் வெளிவந்திருக்கிற போதும் அவை எதுவும் நிறைவு செய்யப்படவில்லை. பூரணப்படுத்தப்படாத தொகுதிகள் என்பதை மூலத்துடன் ஒப்பிடுகையில் காணலாம். இரண்டாவது தொகுதியை செங்கை ஆழியான் சாராம்சப்படுத்தி சிறு நூலொன்றையும் எழுதியிருக்கிறார். அதுவும் பரிபூரண தமிழாக்கம் இல்லை.

அப்படிப் பார்க்கையில் தற்போது என்னால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற 6ஆவது தொகுதியானது, உள்ளது உள்ளபடி அப்படியே வரலாற்றை தமிழுக்கு மொழிபெயர்த்த முதலாவது சந்தர்ப்பம் எனலாம்.

கலாசார திணைக்களம் இப்போதைக்கு இதனை நிறைவு செய்யாது என்பதை அவர்களின் மூலம் அறிந்துகொண்டதன் பின்னர் தான் அதன் முக்கியத்துவம் கருதி எனது ஆய்வுப் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி விட்டு இதனை நிறைவு செய்தேன்.

**கேள்வி: அதுசரி மகாவம்சம் இன்றும் தொடர்ச்சியாக எழுதப்படுகின்ற ஆவணம் என்கிறீர்களா?**

பதில்: ஆம்! நம்மில் பலர் மகாவசம் என்று அறிந்து வைத்திருப்பது மகாநாம தேரரால் எழுதப்பட்ட முதலாவது மகாவம்சத்தை மாத்திரம் தான். ஆனால் 1956க்குப் பின்னர் அப்பணியை அரசே பொறுப்பேற்று

> தமிழில் இருந்தும் மூலாதாரங்களை கையாளாத சிங்கள ஆய்வுகள் எவ்வாறு முழுமையடையும்.

> இதைவிட இலங்கையின் சிவில் யுத்தம் "பயங்கரவாதம்" என்கிற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிற அத்தியாயங்களில் இடங்களின் பெயர்களும், நபர்களின் பெயர்களும் சிங்களமயப்படுத்தப்பட்டு இருப்பதால் அவற்றை மீண்டும் தமிழில் அடையாளம் காண்பதில் சிரமமாக இருந்தது.

மேற்கொண்டு வருகிறது. மகாவம்ச ஆக்கக் குழு அத்திணைக்களத்தின் கீழ் தனியாக அமைக்கப்பட்டு அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் அதன் ஆக்கப் பணியில் பங்கெடுத்து

வருகிறார்கள்.

ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் மொழியிலும் அரசு அக்கடமையை மேற்கொள்ளத் தவறி இருக்கிறது. இதுவரை எந்தத் தொகுதியின் மூலமும் இந்தத் தீவின் தமிழ் மக்கள் மகாவம்சத்தை முழுமையாக அறியும் வாய்ப்பு கிட்டியதில்லை. அதனை அரசு ஒரு போதும் செய்ததுமில்லை. ஆரம்பத்தில் பாளி மொழியில் இருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்த்து வந்த மரபு இருந்தது. இறுதி மூன்று தொகுதிகளும் சிங்கள மொழியில் எழுதி பாளிக்கு மொழிபெயர்க்கப்பட்டு ஏக காலத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

ஆங்கிலத்திலும் கூட மகாவம்சத்தின் சில தொகுதிகள் கிடைக்கின்றன.

ஆனால் தமிழில் அரசு மொழிபெயர்த்ததில்லை. தற்போது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகிறேன்.

ஆனால் அதுவும் முதலாவது தொகுதியை இப்போது தான் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதையும் அதற்கே இன்னும் சில வருடங்கள் ஆகக் கூடும் என்பதையும் அறிந்த போதுதான் இத்தனையும் மொழிபெயர்க்க இன்னும் பல ஆண்டுகள் எடுக்கக் கூடும் என்கிற முடிவுக்கு வர முடிந்தது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி கண்டவர்
**மர்லின் மரிக்கார்**



---

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன ஊழல் மோசடி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவின் பரிந்துரைகள் முன்னாள் ஆட்சியாளர்களால் குப்பையில் போடப்பட்டுள்ளதாகவும், ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மக்கள் ஆணையைப் பெற்றுள்ள ஜனாதிபதி அநுராவின் தலைமையில் கீழ் இது தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படும் என நம்புவதாகவும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜே. ஸ்ரீரங்கா தெரிவித்தார்.

ஜே.ஸ்ரீ ரங்கா மற்றும் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (04) மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்று வரும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்தனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஸ்ரீரங்கா கூறியதாவது,

உதைப்பந்தாட்டத்தின் மூலம் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விளையாட்டு வீரர்கள் ஆதரவற்ற நிலைக்குள்ளாகி இருக்கும் போது கால்பந்தாட்டத்திற்காக நாட்டிற்குள் வரும் கோடிக்கணக்கான ரூபாயை வைத்துக் கொண்டு உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அதிகாரிகள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழுவின் பரிந்துரைகள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. 08 மில்லியன் ரூபா செலவு செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கை முன்னாள் ஆட்சியாளர்களால் குப்பையில் போடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். நாட்டில் மோசடி மற்றும் ஊழலை ஒழிக்கவே மக்கள் அவருக்கு வாக்களித்துள்ளனர். உதைபந்தாட்டத்தை முன்னேற்றுவதற்காக ஏனைய நாடுகளுக்கு கிடைக்கும் நிதியைக் கருத்தில் கொண்டு எமது நாட்டுக்கும் சுமார் 08 மில்லியன் டொலர்கள் கிடைக்க வேண்டும். அரசியல்வாதிகளுடன் இணைந்தே இவர்கள் தம்மை வளர்த்துக் கொள்கிறார்கள். இதனை சரிசெய்வேன் எனக் கூறியே விளையாட்டுத்துறை அமைச்சர் வந்தார். அவர் வந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, அவரும் திருடர்களின் பக்கம் சாய்ந்து விட்டார். இவ்வாறு கிடைக்கும் பணத்திற்கு என்ன நடந்தது என்பது தொடர்பான கணக்காய்வு அறிக்கையை அதிகாரிகள் தருவதில்லை. கடந்த காலங்களில் சம்மேளனத்திற்கு 25 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. அந்த நிதிக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

**முன்னாள் ஆட்சியாளர்களால் குப்பையில் போடப்பட்ட ஐவரடங்கிய குழுவின் பரிந்துரைகள் மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்களிடம் ஜே. ஸ்ரீரங்கா தெரிவிப்பு**

இவை தொடர்பில் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என நம்புகின்றோம். உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பதவியில் இருந்து என்னை நீக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் மற்றும் சாகல ரத்நாயக்க அழுத்தம் கொடுப்பதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறினார். நீங்கள் போகவில்லை என்றால் நானும் செல்ல நேரிடும் என்றுதான் அமைச்சர் ரொஷான் கூறினார். ஊழல் மோசடிகள் பற்றித் தேடுவதை நிறுத்துங்கள் என்றே இவர்கள் கூறுகிறார்கள். முன்னாள் நீதிமன்ற நீதிபதி திருமதி குசலா சரோஜனி உள்ளிட்ட குழுவே கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டத்தில் நடந்த ஊழல்கள் குறித்து விசாரித்து அறிக்கையை வெளியிட்டது. கிரிக்கெட்டைப் பற்றித் தேடிப் பார்த்தாலும் கால்பந்தாட்டம் தொடர்பில் யாரும் தேடிப் பார்ப்பதில்லை. ஒரு ஊடகவியலாளனாக நான் மோசடி மற்றும் ஊழல் பற்றி பேசினாலும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், கால்பந்தாட்ட சம்மேளனத்தில் நடந்த மோசடி, ஊழல் குறித்து பேசியதால் 8 மாதங்கள் சிறைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. அந்த அளவுக்கு திருடர்கள் பலசாலிகள். கால்பந்தாட்ட சம்மேளத் தலைவர் முச்சக்கர வண்டியில் வந்தவர். இப்போது பீ. எம். டப்ளிவ் காரில் பயணிக்கின்றார். இலங்கையில் வீடுகள், தோட்டங்கள் இல்லாதிருந்தவர்களுக்கு இப்போது அவுஸ்திரேலியாவில் வீடுகள் உள்ளன. கால்பந்தாட்டத்தில் விளையாடுபவர்கள் முச்சக்கர வண்டி ஓடுகின்றார்கள். வயரிங் வேலைகளைச் செய்கின்றார்கள். மீன் பிடிக்கின்றார்கள். அவர்களிடம் பணமில்லை. இந்த ஆட்சியாளர்கள் ஒரு லீக்கிற்கு இரண்டரை லட்சம் ரூபாயை கொடுப்பதில்லை.

உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் 30 வருடங்களாக அதே முகங்கள்தான் இருக்கின்றன. அரசியல்வாதிகளை விட அதிக திருடர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கின்றார்கள். திருடர்களைப் பிடிக்க வந்த அமைச்சர்களை பிடிக்கும் அளவுக்கு இவர்கள் பலமிக்கவர்கள். அநுர குமார திசாநாயக்கவின் நிர்வாகத்தின் கீழ் இவை முறையாக நடைபெறும் என நம்புகிறோம்.





**எம். எஸ். முஸப்பிர்**

# தலைமைகள் கைகாட்டுவோருக்கே மலையக மக்கள் என்றும் வாக்களிப்பர்

**நாடறிந்த எழுத்தாளர், கவிஞர், செயற்பாட்டு இலக்கிய முன்னோடி, அரசியல் சமூக விமர்சகர், மலையக முன்முயற்சி குழுவின் ஒருங்கிணைப்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட அருட்பணி பெனி யே.ச, தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி:**

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தல் முடிவுற்று சில நாட்களாகின்றன. சுதந்திரத்திற்குப் பின் கடந்த 76 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக் கட்டிலில் இருந்த இருபெரும் கட்சிகளையும், அதன் வழி வந்த அரசியல் தலைமைகளையும், வாரிசுத் தலைமைகளையும் நிராகரித்துவிட்டு கம்யூனிச சித்தாந்தங்களைக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் ஒரு புதிய தலைவரை அதிகார பீடத்தில் அமரவைத்திருக்கிறார்கள் நாட்டு மக்கள். இந்த வரலாற்று திருப்பத்தை அரசியல் சமூக விமர்சகர் என்ற மட்டில் எப்படி பார்க்கிறீர்கள்?**

இது ஒரு வரலாற்று திருப்பம் என்பதில் ஐயமில்லை. வரலாற்றுத் திருப்பங்களை நிகழ்த்துவது இலங்கைக்கு ஒன்றும் புதிதல்ல. நேர்மறையான திருப்பங்களை விட எதிர்மறையான திருப்பங்களையே அது அதிகம் நிகழ்த்தியிருக்கிறது. சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. சிறிமா_ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் மலையகத் தமிழர்கள் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டது, விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தின் மூலம் அடக்கியது என்று பலவற்றைச் சொல்லலாம். இவையெல்லாம் சிறுபான்மைத் தமிழர்களின் பார்வையில் பார்க்கும் போது தான் எதிர்மறையான திருப்பம். இதுவே பெரும்பான்மை இனத்தின் பார்வையில் நேர்மறையான திருப்பமாக இருக்கலாம்.

எப்படியிருப்பினும் ஒட்டு மொத்த நாட்டிற்கும் ஒரு பாரிய திருப்பத்தைக் கொண்டு வந்ததாக 2022ஆம் ஆண்டில் நடைபெற்ற "அரகலய" போராட்டத்தைச் சொல்லலாம். அப்போராட்டத்தின் வெற்றி என்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும், யுத்த வெற்றியின் கதாநாயகனாகவும், நவீன துட்டகைமுனுவாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டவர் நாட்டை விட்டு ஓடியதும் உள்ளூரிலேயே ஓடி ஒளிந்ததுமாகும்.

அதன் பின்னடைவு என்பது "மஹிந்த கோஸ்டி" ஐ மட்டும் குறிவைத்து காலிமுகத்திடலில் மட்டும் அப்போராட்டத்தை நடத்தியதுதான். அப்போராட்டமானது உள்ளூர் மட்டத்தில், அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வெடித்திருக்க வேண்டிய போராட்டம்.

எனினும் அரகலயவின் நீட்சியாகவே இந்த அதிகார மாற்றத்தைப் பார்க்கலாம். அரகலயவிற்கு பின் வந்த நாட்களில் அதிரடித் திருப்பம் ஒன்று நாட்டில் ஏற்பட்டது.

2019 பொதுத்தேர்தலில் தோல்வியடைந்து தனது கட்சிக்கு போனஸ் சீட்டாக வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க, ஒரு வருடம் தாமதித்து தானே அவ்வாசனத்திற்கு பாராளுமன்றத்திற்குள் நுழைந்தார். எதிர்பாராத வேளையில் பிரதமராகி, கோட்டாபய நாட்டைவிட்டு ஓடியவுடன் தானே ஜனாதிபதியானார். அதாவது ஜீரோவிலிருந்து ஹீரோவாகினார். ஒன்றும் இல்லாமையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வருவதெப்படி என்பதற்கு உதாரணமானார்.

இரண்டு வருடத்திற்கும் சற்று அதிகமான அவரது ஆட்சிக்காலத்தில் வரிசையுகத்தை மாற்றினார் என்பது வரலாறு. அரசியலில் தனக்குள்ள அனுபவம், சர்வதேச நாடுகளுடனும், அமைப்புக்களுடனும் தனக்குள்ள இராஜதந்திர தொடர்பு, மேற்குலக நாடுகளின் செல்லப்பிள்ளை என்ற சலுகை, நிர்வாகத் திறன் போன்ற தன் ஆளுமையைப் பயன்படுத்தி கடன்சுமையை இருபது வீதம் குறைத்தது, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் என்று நாட்டை படிப்படியாக பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப முற்படுகையில்தான் ஜனாதிபதி தேர்தல் வருகிறது.

இந்தத் தேர்தலில் அவர் நாமல் ராஜபக்ஷவை ஒரு பொருட்டாக மதித்திருக்கவே முடியாது. அநுர, சஜித், ரணில் என மும்முனைப் போட்டியாக இருந்தாலும் தான் வெற்றியீட்டிவிடுவோம் என்ற ஓர் அசாத்திய நம்பிக்கையில் தான் ரணில் இருந்திருப்பார். அநுரவோ, சஜித்தோ முன்வராத போது தான் பிரதமராகி, ஜனாதிபதியான 'ஆபத்பாந்தவன்' அல்லவா. அவர் சஜித் பிரேமதாசா பெற்ற வாக்குகளைவிட அரைவாசியே பெற்றிருப்பது அதிர்ச்சியாகத்தான் இருக்கும்.

ஆனால் மக்கள் தீர்ப்பு வேறாக அமைந்துவிட்டது. மக்கள் ரணில் மேல் நம்பிக்கை இழந்ததற்குக் காரணம் குறுகிய காலத்தில் அவர் அடைந்த வெற்றியல்ல. மாறாக ஊழல்வாதிகளை அவர் காப்பாற்றியதுதான். தன்னுடைய கட்சியில் மத்திய வங்கி பிணை முறி மோசடி வழக்கில் சிக்கியவர்களைக் காப்பாற்றியது. பொருளாதார வீழ்ச்சிக்கு மஹிந்த தரப்பே காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தாலும், ஈஸ்டர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காதது மற்றும் அரகலயவை ஆயுதப் பலம் கொண்டு அடக்கியது, என்பவையே மக்களின் கண்களுக்குப் பிரதானமாக தெரிந்திருக்கிறது.

இரண்டு வருடங்களாக நாட்டைத் தோளில் சுமந்தது அல்ல, 76 வருடங்களாக நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களது பல வீனமான பொருளாதாரக் கொள்கையும் ஊழலும் தானே நாட்டை வங்குரோத்து நிலைக்குச் இட்டுச் சென்றிருக்கிறது என்ற எண்ணமே அவரை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக ஆசனத்தில் அமர்த்த முடியவில்லை.

ரணிலிடம் காணப்படும் மேட்டுக்குடி உணர்வால், சஜித் பிரேமதாசாவை புறந்தள்ளி ஐக்கிய தேசிய கட்சியை உடைத்ததும் ஒரு காரணம் எனலாம். பச்சைக் கட்சி உடையாமல் சஜித்தோ, ரணிலோ யானை சின்னத்தில் போட்டியிட்டிருந்தால் தேர்தல் பெறுபேறு வேறு விதமாக அமைந்திருக்கும்.

**தேர்தலுக்குப் பின்னாலான இந்த சில நாட்களை எவ்வாறு அவதானிக்கிறீர்கள்?**

தேர்தலுக்கு முந்திய வாரத்தில் நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். இந்தத் தேர்தலில் அநுர ஜெயித்தாலும் ஆட்சி அமைக்க முடியாது. அமைச்சரவையை உருவாக்க முடியாது என்றார். ஆனால் சாதகமற்ற சூழலிலும் சந்தர்ப்பங்களை உருவாக்குவது சாத்தியம்



என்பதற்கு அநுர சாட்சியாகத் திகழ்கிறார். இருந்த அமைச்சரவையை மூன்றாக சுருக்கி, பெரும்பான்மையான அமைச்சுப் பொறுப்புக்களை தன்னகத்தே வைத்துக் கொண்டு, அமைச்சின் செயலாளர்களை நியமித்திருக்கின்றார். ஏறத்தாழ 22 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் பதினைந்து அமைச்சுக்கள் போதும். கூட்டணியில் உதிரிக்கட்சிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே இராஜாங்க அமைச்சர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே!

**புதிய பெண் பிரதமர் குறித்து?**

அநுரவின் அடுத்த அதிரடி மாற்றம் என்பது புதிய பெண் பிரதமரை நியமித்ததுதான். 225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 12 பெண் உறுப்பினர்களை மாத்திரம் உள்ளீர்த்திருந்தது பழைய பாராளுமன்றம். இது 6 வீதத்திற்கும் குறைவானதாகும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் நிலையில் இருபத்து நான்கு வருடங்களுக்குப் பின் பெண் ஒருவரை பிரதமராக நியமித்திருப்பது பெண் வர்க்கத்திற்கு செய்யப்படும் ஒரு சிறிய நீதி எனலாம். பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி குறைந்தபட்சம் 30 பெண் உறுப்பினர்களை உள்வாங்கும் போதுதான் பால்நிலை சமத்துவத்தை உயர்மட்டத்தில் ஓரளவு பேணக்கூடியதாகவிருக்கும்.

அத்தகைய மாற்றமானது அடிப்படையான சமூக அலகுகளிலும், நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவே செய்யும். முன்பள்ளி பெற்றோர் அமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சபை, கிராம அபிவிருத்திச் சபை, ஆலயங்கள் கோயில்களின் நிர்வாகச் சபை, பிரதேச சபை, அரச பணிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற அனைத்து அமைப்புகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் கூடி முடிவெடுக்கும் தளத்திற்கு அவர்கள் நகர வேண்டுமெனில் பெண் ஒருவரை பிரதமராக நியமித்த புதிய ஜனாதிபதி இதனிலும் கவனம் செலுத்த வேண்டும் .

**சமூக வலைத்தளங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திளை வெளியிடுகின்றனவே?**

அநுரவின் வெற்றியைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களின் அசுர படையெடுப்புக்களும் அவை சொல்லும் சேதிகளும் சில வேளைகளில் உண்மையாகவும், பல வேளைகளில் உண்மைக்குப் புறம்பானவையாகவும் காணப்படுகின்றனதான். காலி முகத்திடலில் ஒரே இரவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அரச வாகனங்கள் உண்மையாக இருந்தாலும் அவை குறித்து சோடிக்கப்படும் செய்திகள் புனைவுகளாக இருக்கின்றன.

அநுரவின் ஆட்டம் ஆரம்பம், ரணில் கைது, மஹிந்த கைது, சுமந்திரனுக்கு அமைச்சர் பதவி என்று சாதாரண அரசியல் நோக்கர்களை தடுமாறச் செய்கிறது.

மக்கள் விடுதலை முன்னனி என்பது கம்யூனிச சாயம் பூசப்பட்ட இனவாதக் கட்சி எனவே சிறுபான்மையினருக்கு ஆபத்து எனக் கூறுவதும் அவரவர் எந்த நிலையில் நின்று நோக்குகிறார்கள் என்பதைப் பொறுத்ததே!

**திசைவழிப் பயணம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

அதிகாரத்தைக் கைப்பற்றிய ஓரிரு நாட்களில் பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை அறிவித்திருப்பது அவசியமும், அவசரமுமானதாகும். இந்தப் பொதுத் தேர்தலிலும் அநுர அலை பலமாகவே வீசும் என நம்பலாம். படித்த இளைஞர் யுவதிகள் வேட்பாளர்களாக உள்ளீர்க்கப்படலாம். மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள்தேசிய மக்கள்சக்தி காரியாலயங்களுக்குச் சென்று தங்கள் தோட்டங்களில் கட்சியை ஸ்தாபிக்க வேண்டுகோள் விடுப்பதாக செய்திகள் பரவுகின்றன.

**மலையக அரசியலில் தடுமாறும் நிலை காணப்படுகிறதே?**

இன்றைய சூழலில் மலையக அரசியல், மலையக அரசியற்களம் பல ஆண்டுகள் பின்நோக்கி நகர்ந்திருந்தாலும் புதிய மாற்றத்திற்குரிய வெளிச்சம் தென்படாமலில்லை. அங்கு உடனடியாக ஓர் அரசியல் சுத்திகரிப்புத் தேவைப் படுகின்றது. மலையக இளைஞர்கள் அரகலயவின் போது உள்ளூர் மட்டத்தில் அதைச் செய்யத் தவறிவிட்டார்கள். தவறவிட்டதை நிறைவேற்ற மீண்டும் வாய்ப்பு அமைந்திருக்கிறது.

அங்கு வாக்காளர்கள் தேசியத் தலைமைகளின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அல்ல, மாறாக இ.தொ.கா தலைமை, மலையக மக்கள் முன்னணி தலைமை, தொழிலாளர் தேசிய முன்னணி தலைமை என்ன சொல்கிறதோ, எதற்கு கை காட்டுகிறதோ அதற்கு வாக்களிக்கும் நிலைதான் இன்றும் காணப்படுகின்றது.

அந்த மனோ நிலையை சாதகமாக பயன்படுத்தி, இன்னும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தாமல், தொடர்ந்து அவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன இக் கட்சிகள்.

**சுரேஷ்**

# மலையக மக்களும் பாராளுமன்ற தேர்தலும்



மலையக மக்களின் வரலாறானது 200 வருடங்களை கடந்து சென்று கொண்டிருக்கின்றது. கடந்த பல வருடங்களாக இம்மக்கள் பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்றத் தேர்தல்கள், ஜனாதிபதி தேர்தல்கள் போன்ற அனைத்து தேர்தல்களையும் சந்தித்துள்ளனர். மேற்கூறிய அனைத்து தேர்தல்களிலும் தங்களுடைய வாக்குரிமையை பல்வேறு கட்சிகளுக்கும், சின்னங்களுக்கும், தனி நபர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், அளித்துள்ளனர். இதனால் இம் மக்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள் பல இருக்கின்றன என்பதை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

குறிப்பாக, பிரஜா உரிமையை பெற்றுக் கொண்டமை, ஒரு சில தோட்ட மக்கள் காணி உரிமையையும், வீட்டு உரிமையையும் பெற்றுக் கொண்டனர். தோட்டங்களுக்கான கொங்கிறீட் பாதைகள், மின்சார வசதிகள், நீர் வசதி, போக்குவரத்து வசதி, உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் நியமனங்கள், பாடசாலைகள் அபிவிருத்தி, பாடசாலைகளுக்கான கட்டடங்கள், ஆளணியினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றை பெற்றுக் கொண்டமை, மேலும் விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு, விளையாட்டு உபகரணங்கள், ஆலயங்களுக்கான உதவிகள், விளையாட்டு கழகங்களுக்கான உதவிகள், வைத்தியசாலைகளுக்கான வசதிகள் போன்றவற்றை பெற்றுக் கொண்டமை, தோட்ட மக்களுக்கான சமூர்த்தி கொடுப்பனவு, அஸ்வெசும கொடுப்பனவு, பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் போன்றவற்றை பெற்றுக் கொடுத்தமை, சுய தொழில் வாய்ப்புக்கான உதவிகளையும், தொழிற் பயிற்சிகளையும் பெற்றுக் கொடுத்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம், இருப்பினும் மலையக மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் அநேகமாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் சொந்த முகவரி இல்லாத மக்களாக வாழ்ந்து வருகின்ற ஒரு சமூகம் என்றால் அது மலையக மக்கள் சமூகம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலானது, மலையக அரசியல்வாதிகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், தொழிற் சங்க அரசியலுக்கும் ஓர் பாரிய சவாலாக இருக்கப் போகின்றது என்பதில் ஐயமில்லை. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலானது, அரசியல், சமூக, பொருளாதார, கலாசார ரீதியாக பல்வேறு விடயங்களை சுட்டிக் காட்டியிருப்பதை அவதானிக்கலாம். நாட்டு மக்களின் மனநிலையை கூர்ந்து கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் மலையக அரசியல் இருக்கின்றது.

எனவே மலையக மக்களினதும், பெருந்தோட்ட மக்களினதும், இருப்பு, சமூக பாதுகாப்பு, இனத்துவ அடையாளங்கள், கலை கலாசார பாதுகாப்பு, போன்றவற்றை கருத்தில் கொண்டு இத் தேர்தலை சந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலைப் போல் இம்முறை தேர்தலானது அமையாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இம்முறை பாராளுமன்றத் தேர்தலானது பல சவால்களை கொண்டிருக்கப் போகின்றது என்பது மட்டும் உண்மையாகும். அதாவது பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் கடும் போட்டி சகல மட்டங்களிலும் காணப்படும்.

பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களை தெரிவு செய்யும் போது, மிகவும் சாதுரியமாகவும், புத்திசாலித்தனமாகவும், தீர்க்கத்தரிசனமாகவும், அரசியல் தந்திரோபாயங்களுடனும், தூர நோக்கோடும் சிந்தித்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மலையக மக்களின் எதிர்கால வாழ்க்கைத் தர முன்னேற்றம் மேம்பாடு, வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மலையக மக்களின் சமூக பொருளாதார அரசியல் கலாசார செயற்திட்டங்களை செயற்படுத்தக் கூடியவாறு இத் தேர்தலில் போட்டியிட வேண்டும்.

மலையக அரசில் கட்சிகளால் வழங்கப்பட்ட கடந்த கால வாக்குறுதிகள் அனைத்தையும் மக்கள் நன்கு அறிவார்கள். எனவே தொடர்ந்து அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளுக்கு மட்டும் மக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்புவது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே. கடந்த கால தேர்தல்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல் 2024 என்பது அரசியல் கட்சிகளுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், சுயேச்சை வேட்பாளர்களுக்கும் முக்கிய சவால் நிறைந்தது. அதாவது மாவட்டங்களில் வேட்பாளர்களை தெரிவு செய்யும் போது, கட்சிகளுக்கு உள்ளேயும், வெளியேயும் பல்வேறு சவால்களும், பிரச்சினைகளும் இருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாக மக்களின் செல்வாக்கைப் பெற்றவர்களையே வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும்.

இலஞ்சம், ஊழல், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்தினால் மக்கள் அவர்களை இலகுவில் நிராகரித்து விடுவதற்கான வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் மிக அதிகமாக இருக்கும். கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடமாக அது உள்ளதை கருத்தில் கொள்ள வேண்டும். நாட்டுப் பற்றுடையவர்கள், நேர்மையானவர்கள், மக்களுக்கு சேவை செய்யக் கூடியவர்கள், சிறந்த ஒரு நாட்டை கட்டியெழுப்பக் கூடிய சிந்தனையுடையவர்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தும் போது ஒரு முறைக்கு, பல முறை சிந்தித்து செயலாற்ற வேண்டும். இது காலத்தின் தேவையாகும். அரசியல் வாதிகள் கொடுத்த வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த காலம் மலையேறி விட்டது.

இன்றைய இளைய சமூகத்தின் மனநிலையை அறிந்து செயற்பட வேண்டியதுடன், மக்களுடைய அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முன்மொழிவுகளை தயாரிக்க வேண்டும். எதிர்கால வேலைத்திட்டங்களை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் போட்டி போடும் வேட்பாளர்கள் கற்றவர்களாக இருக்க வேண்டும். மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான முன்மொழிவுகளை முன் வைக்க வேண்டும். இனிவரும் காலங்களிலும் பணத்துக்கும், மதுவுக்கும், சோற்றுப் பார்சலுக்கும் மக்கள் வாக்களிக்க தயாராக இருப்பார்களா என்பது சந்தேகத்துக்குரியதே.

நாட்டின் நிகழ்கால அரசியல் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு அடிமட்ட மக்களிடையே தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களைக் கொண்டு செல்ல வேண்டும். இதற்காக மலையத்தில் கற்றவர்களின் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

**இரா. சிவலிங்கம்**

# ஓய்வு பெற்றார் பழனிமுத்து ஸ்ரீதரன்

மலையகத்தின் மாற்றத்திற்கான வித்து கல்வி என்பதனை நன்குணர்ந்து அந்த துறையில் பல்வேறு பரிணாமங்களில் தனது பெயரையும் புகழையும் நிலைநாட்டி 23.09.2024 அன்று வாண்மை மிக்க ஒரு மனிதர் முன்னாள் ஹட்டன் கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.ஸ்ரீதரன் ஓய்வு பெற்றார்.

இவர் முதன் முதலில் 1988ஆம் ஆண்டு நோர்வூட் பாடசாலையில் ஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்டார்.

நிவ்வெளி பாடசாலையில் ஆரம்ப பிரிவு ஆசிரியராக கடமையேற்று மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தனது ஆசிரியர் பயிற்சியினை 1990ஆம் ஆண்டு நிறைவு செய்து கொண்ட இவர் 1992ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தினை ஒரே காலப்பகுதியில் பெற்றுக்கொண்டார்.

பயிற்சியினை தொடர்ந்து புளியாவத்தை தற்போது ஹொன்சி கல்லூரி என அழைக்கப்படும் பாடசாலையின் கணித ஆசிரியராக கடமையேற்றுக்கொண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் 1994ஆம் ஆண்டு பட்டத்துக்குப் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் (PGD) பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு பல்வேறு ஆளுமையினை பெற்றுக்கொண்ட இவர் 1996ஆம் ஆண்டு கொட்டகலை யதன்சைட் என்று அழைக்கப்பட்ட அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் விரிவுரையாளராக கடமையேற்றுக் கொண்டார்.

ஓய்வின்றி கற்ற கல்வி இன்று விருட்சமாய் நிற்கிறது என்றால் அது மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இவர் இலங்கையின் கல்வி நிர்வாக சேவைக்குள் 2000ஆம் ஆண்டு புகுந்தார்.

2009ஆம் ஆண்டு கொத்மலை கல்வி வலயத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளராக கடமையேற்றார். அந்தக் கல்வி வலயத்தில் 28 சதவீதமாக காணப்பட்ட கல்வி பெறுபேறுகள் 41.5 சதவீதமாக மாற்றம் பெற்றன.

இந்நிலையில் 2014 ஆண்டு கண்டி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று சென்ற பின் கண்டி வலயம்



தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெறுகின்றது.

ஆசிரியர்களின் மனோ நிலைகளை அறிந்து அதற்கேற்ப செயற்திட்டங்களை வகுத்து கல்வியில் புரட்சிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு காரணமாகினார். இதனால் ஹட்டன் கல்வி வலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் ஆகியவற்றின் பெறுபேறுகள் என்றுமில்லாத அளவுக்கு உயர்வடைந்தன .

இவ்வாறு தன்னையும் சார்ந்தவர்களையும் மாற்றத்திற்கு உட்படுத்தி அழியாத வரலாற்றினை பதிவு செய்து ஓய்வுபெறுகிறார். அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகளை பகிர்கிறது ஹட்டன் கல்வி சமூகம்.

**மலைவாஞ்ஞன்**

# வாரபலன்



06.10.2024 –12.10.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சினைகள் நீங்கி அமைதி ஏற்படும். பெண்களுக்கு புத்திசாதுரியம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு திடீர் கோபங்கள் உண்டாகலாம். சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவர். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் நட்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். திறமை வெளிப்படும். ஆசிரியர்களுடன் நல்ல உறவு ஏற்படும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

செயல்திறமையால் வெற்றி கொள்வீர்கள். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச்சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் ஆதரவுடன் எதிலும் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். செயல் திறமை அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக நண்பர்களிடம் இருந்த வீண் மனஸ்தாபம் நீங்கும். மாணவர்கள் தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கலாம். ராசியை தைரியாதிபதி சூரியன் பார்ப்பதால் வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். பெண்களுக்கு எளிதில் முடிய வேண்டிய காரியம் கூட தாமதமாகலாம். சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கலைத்துறையினருக்கு வருமானம் நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை. ஒரு முறைக்கு இருமுறை பாடங்களை படிப்பது நல்லது.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எதிலும் முன்னேற்றம் காணப்படும். எடுக்கும் முயற்சிகள் சாதகமாக இருக்கும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். திட்டமிட்டு செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. பெண்கள் எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு மனத்துணிவு அதிகரிக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற திட்டமிட்டு பாடங்களை படிப்பதும், தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். சிலநேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் மிகவும் கவனமுடன் செயல்படுவது நல்லது. குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். பெண்கள் நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். சக மாணவர்களிடம் பழகும்போது கவனம் தேவை.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

மனதில் உறுதியுடன் எதிலும் செயற்படுவீர்கள். புத்தி சாதுரியமும் அறிவுத் திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயற்திட்டங்களைப் பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் கூறுவதைக் கேட்டு தடுமாற்றம் அடையலாம். குடும்பத்தில் நடைபெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். பெண்கள் அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். மாணவர்கள் எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பர்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்துவீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். இக்கட்டான சூழ்நிலையில் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்க பெறுவார்கள். உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாக பேசுவது நல்லது. பெண்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். கலைத்துறையினருக்கு நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம். வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். மாணவர்களுக்கு செயல் திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

வாக்கு வன்மையால் ஆதாயம் பெறுவீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். உறவினர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. பெண்கள் திறமையான பேச்சின்மூலம் எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவார்கள். கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் அகலும். சிக்கல்கள் தீர்வதில் இருந்த தாமதம் நீங்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

நீண்ட நாட்களாக இழுப்பறியாக இருந்த காரியம் நடந்து முடியும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். மனக்கவலைகள் அகலும். எதிர்பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பணவரத்து திருப்தியாக இருக்கும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலைத்துறையினர் யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. மாணவர்கள் பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விஷயங்களை மீண்டும் தொடர்வார்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சிறந்த திட்டமிடலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது. குடும்பத்தில் அமைதி ஏற்படும். விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதமாகலாம். பெண்கள் எந்தவொரு விஷயத்திலும் முடிவு எடுப்பதில் தாமதம் உண்டாகும். கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது வெற்றிக்கு உதவும். சகமாணவர், நண்பர்கள் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

தேவையற்ற மனச் சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்துச் செல்வது நன்மைதரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம். உறவினர்கள் மூலம் நன்மைகள் ஏற்படும். பெண்களுக்கு யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். வெளிநாட்டு பயணங்களும் இனிதே அமையும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. பாடங்களை படிப்பதில் கூடுதல் கவனமும், ஆசிரியர்களிடத்தில் பேசும்போது நிதானமும் தேவை.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

முயற்சிகளினால் வெற்றி பெறுவீர்கள். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கலைத்துறையினருக்கு பாதுகாப்பு அவசியம். பொருள் வரவில் குறைவு ஏற்பட வாய்ப்பு இல்லை. உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

# ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்திய ஆறுமுகம் பரசுராமன்...

## மொரீசியஸ் முதல் ரீயுனியன் வரை...

மாத்தளை சோமு

08



ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு இடையே விரிந்து பரந்து கிடக்கிற இந்தியப் பெருங்கடல் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பியக் கண்டங்களிடையே கப்பல் வணிகத்தில் முக்கியமானது. இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளோடு வர்த்தக உறவு கொண்ட அவுஸ்திரேலியாவிற்கான 40 சதவீதமான பெட்ரோல் இந்தியப் பெருங்கடல் வழியே தான் வருகிறது. உலகின் மூன்றாவது பெருங்கடலான இந்தியப் பெருங்கடல் 27, 240000 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. அது வடக்கு ஆசியா, மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு அவுஸ்திரேலியா, தெற்கு, தெற்கத்திய கடல் அல்லது அன்ராடிக்கா வரை பரந்து கிடக்கிறது. இந்தப் பெருங்கடலில் தான் இலங்கையின் இயற்கை துறைமுகமான திருகோணமலை இருக்கிறது. இது இந்தியப் பெருங்கடலில் முக்கிய இடத்தைக் கொண்டிருப்பதால் சீனா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் பார்வை எப்போதும் அதன் மீது உண்டு.



அந்த திருகோணமலைக்கு அடுத்து இந்தியப் பெருங்கடலில் முக்கிய இடம் வகிப்பது மொரீசியஸ், ரியூனியன் ஆகிய தீவுகளாகும். இந்தியாவில் இருந்து மத்திய கிழக்கு, ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கான கடல் வர்த்தகத்தில் மொரீசியஸின் பங்கு கணிசமானது. எனவே இந்தியா மொரீசியஸ் அரசோடு நெருக்கமான பொருளாதார, அரசியல் உறவு கொண்டு மொரீசியஸிலிருந்து 1050 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அகலெகா (AGALEGA) தீவுகளில் 87 மில்லியன் டொலர் செலவில் கடற்படைத்தளம் அமைத்திருக்கிறது. கிரியோல் மொழி பேசும் 322 மக்களே இத்தீவில் வாழ்ந்து வருகிறார்கள். இரு சிறிய தீவுகளாக இருக்கும் அகலெகா தீவுகளில் தென்னைப் பயிர்ச் செய்கையே பிரதானமானது; ஊடு பயிராக காய்கறிகளும் விளைகின்றன.

இந்த அகலெகா தீவில் இருந்து இந்தியப் பெருங்கடலின் ஊடுருவல்களை இந்தியக் கடற்படை தளம் கவனித்து வருகிறது. சீனாவின் ஆதிக்கத்தையும், சீனக் கப்பல்களின் போக்குவரத்தையும் கவனிக்கிற ஒன்றாகவே இந்த கடற்படைத் தளம் இருப்பதாக அல்ஜசீரா தொலைக்காட்சி கூறுகிறது.

சுற்றுலாப் பயணி மார்க் டிவயின் (MARK TWAIN) 'மொரீசியஸ் சொர்க்கத்திற்கு முன்பாக உருவாக்கப்பட்ட தீவு. அது உருவான பிறகு அதனைப் பிரதியெடுத்தது போல் சொர்க்கத்தை உருவாக்கினார்களாம்..' என்று எழுதியிருப்பது சரியானது தான். அழகான தீவு, பிரெஞ்ச் நாட்டினரைக் கவர்ந்த தீவு. வட இந்தியர்களின் தேன் நிலவுத் தீவாகவும் இருக்கிறது. ஆண்டுதோறும் ஐரோப்பாவிலிருந்து குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வந்து போகிறார்கள். 2021இல் அவர்களோடு ஏனைய நாட்டவர்களையும் சேர்த்தால் மொத்தமாக 997290 பயணிகள் வந்து போயிருக்கிறார்கள். இவர்கள் மூலம் மொரீசியசிற்குக் கிடைத்த பணம் 2019இல் 1.8 பில்லியன் டொலர்களாகும்.

உல்லாசப் பயணத்தில் பாலியையும் மொரீசியஸையும் ஒப்பீடு செய்தவர்கள் பாலித்தீவு ஆன்மீக மற்றும் சாகச பயணத்திற்கு உகந்தது என்றும் மொரீசியஸ் வெப்பமண்டல சூழல், வளைந்த நெளிந்த அழகான கடற்கரை, சிறிய மலைகள், பலவிதமான மக்களின் பண்பாட்டைப் பார்க்கவும், ரசிக்கவும் உகந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அது உண்மைதான் மொரீசியசில் இந்திய, ஆப்பிரிக்க, சீன, இஸ்லாமிய, பிரெஞ்ச், ஆங்கிலேய பண்பாட்டின் விழுமியங்களைக் காண முடிகிறது.

ஆதிகாலப் பூர்வீக குடிகள் இத்தீவில் இல்லாதபோதும் பழங்கதைகள் சில இங்கு சொல்லப்பட்டுள்ளன. அனேகமாக ஆப்பிரிக்க, இந்திய மக்கள் இங்கு குடியேறிய பிறகுதான் இக்கதைகள் உருவாகியிருக்கலாம். அவ்வகையில் மொரீசியஸ் தீவு எவ்வாறு உருவானது என்பதற்கான ஒரு கதை இருக்கிறது. சீதையைக் கடத்த உதவிய சூனியக்கார மந்திரவாதியான மாரீஜ் (மாரீசனைதான் MAREECH என்று அழைக்கிறார்கள் ) என்பவனை இராமர் போரில் கொல்கிறார். அவன் சாவதற்கு முன்னர் இராமரிடம் என் பெயர் என்றும் நிலைத்திருக்க செய்யுங்கள் என்று வேண்டினானாம். இராமர் அவன் இறந்ததும் அவனை கடலில் முத்தாக மாற்றினாராம். அம்முத்தே பின்னர் தீவாக மாறியதாம். அதுவே மொரீசியஸ் (MAREECH MAURITUS).

குருவும் இரு சீடர்களும் என்ற கதை இங்கு சொல்லப்படுகிறது. அரசன் ஒருவன் எல்லா வழக்குகளிலும் தவறான தீர்ப்பையே கொடுப்பாராம். அதனை மாற்ற குருவின் சீடர்கள் முயற்சி செய்தார்கள். ஒரு தடவை திருடர்கள் சிலர் ஒரு வயதான பெண்மணியின் வீட்டில் கொள்ளையடிக்க முயன்றார்கள். ஆனால் அவள் வீட்டின் சுவர் திடீரென்று விழுந்ததில் திருடர்களில் ஒருவன் செத்துப் போனான். திருடர்கள் அரசனிடம் முறையீடு செய்து அந்த வயதான பெண்மணியைத் தண்டிக்க வேண்டினார்கள். அரசன் வயதான பெண்மணியின் வீட்டில் கொள்ளையடிக்கத் திருடர்கள் போனதை விசாரிக்காமல் பெண்மணியை விசாரித்தார். பெண்மணியோ வீட்டைக் கட்டிய கொத்தனாரைத் தான் கேட்க வேண்டும் என்றாள். அரசன் உடனே வீட்டைக் கட்டிய கொத்தனாரைத் தூக்கில் போட உத்தரவிட்டான். ஆனால் கொத்தனர் தூக்குக் கயிறுக்குப் பொருத்தமில்லாத மெலிந்த உருவமாய் இருந்ததால் தடித்த உருவமான மனிதரை குருவும் சீடர்களும் தேடினார்கள். அங்கு அரசனைத் தவிர வேறு எவரும் தடித்த உருவமாய் இல்லாததால் தந்திரமாய் அரசனை அழைத்துப் பேசி தானே தூக்கிட்டுக் கொள்ள வைத்து நீதியற்ற அரசனை முடித்து வைத்தார்கள் அவர்கள்.

இது போன்று பல நாடோடிக் கதைகள் மொரீசியசில் புத்தகமாக வந்தபோதும் அவையெல்லாமே இந்தியா, ஆபிரிக்கா, பிரெஞ்ச் நாட்டிலிருந்து மருவி வந்தவையாக இருக்கின்றன. ஆனாலும் அவற்றை மொரீசியஸ் நாடோடிக் கதைகளாக ஏற்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் வரலாற்றை அறிய அந்நாட்டில் வழங்கி வரும் நாடோடிக் கதைகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

மொரீசியசின் தேசியப் பறவையாக டோடோ (DODO) என்ற பறவை இருந்தது. (அது அழிந்து போனதால் Mauritius kestrel என்ற பறவை 2022 இல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.) இது இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுகளில் மட்டுமே காணப்பட்டவை. இது புறா மற்றும் வாத்து குடும்பப் பறவை. ஆனால் மிகப்பெரியது. மூன்று அடி உயரமானது. இது 20 கிலோ வரை எடை கொண்டதாக வளரக் கூடியதாகும். மொரீசியஸ், மடகஸ்கார் ஆகிய தீவுகளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவையாகும். டோடோவுக்கு இயற்கையாக எதிரிகள் இல்லை. டோடோ (DODO) என்ற ஆங்கிலப் பெயரில் மறைந்துள்ள அர்த்தம் வேடிக்கையானது. DODO என்றால் STUPID OR SLOW.



17ஆம் நூற்றாண்டில் போர்த்துகேய சொல்லான DOUDO OR SIMPLETON என்பதிலிருந்து வந்ததே DODO. இப்பறவை மனிதர்களைக் கண்டு பயப்படாதாம். அதனாலேயே டோடோ அழிவைச் சந்தித்தது. கடல் பயணிகள் மொரீசியஸ், மடகஸ்கார் தீவுகளுக்குப் போய் இறைச்சி உணவுக்காக வேட்டையாடியதில் இன்று டோடோவின் எலும்புக் கூடுகள் அருங்காட்சியகத்தில் மட்டுமே இருக்கின்றன. மொரீசியசின் தேசிய முத்திரையின் ஒரு பக்கம் டோடோவின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

நியூ இங்கிலண்ட் பொயட்ரி கிளப்பின் பப்லோ நெருடா பரிசைப் பெற்ற லெஸ்லி மக்கிநாத் என்ற கவிஞர் பெண்களையும் டோடோவையும் இணைத்து கவிதை படைத்தார்.

கடலோடிகளால் பெருங்கோழி என்று சொல்லக்கூடிய டோடோ உணவுக்காக வேட்டையாடப்பட்டு அழிந்தது. அதே போன்று வெவ்வேறு காரணங்களினால் மனிதர்களால் காண்டாமிருகம், சிறுத்தைப்புலி, யானைகள் அழிந்து வருகின்றன..



மொரீசியஸ் பயணத்தை முடித்துக் கொண்டு ரியூனியன் புறப்பட முனைந்தோம். காலையில் விமானம். இரவு புலவன் சின்னராமன் ஒரு உணவகத்தில் விருந்துக்கு அழைத்தார். நாங்கள் மூவரும் போனோம். வட இந்திய உணவகம். புலவன் சின்னராமனோடு பேசினோம். எங்களோடு தமிழில் சரளமாக இல்லையென்றாலும் தமிழிலேயே பேசினார். மொரீசியசில் தமிழ் பேச தமிழக அரசும், தமிழக தமிழ் அறிஞர்களும், புலம் பெயர்ந்த தமிழர்களும் உதவ வேண்டும் என வலியுறுத்தினார். வேற்று மொழிகளில் கல்வி பயிலும் புலம்பெயர் தமிழர்கள் தமிழ் பேச அங்கு எடுக்கும் செயல்முறைகளை மொரீசியத் தமிழர்களுக்குப் பகிர வேண்டும் என கேட்டுக் கொண்டார். அவரோடு பேசிய போது தான் உலகம் கைக்குள்ளே வந்துவிட்டது என்று சொன்னபோதும் தென்கோடியில் இருக்கிற நியூசிலாந்து, பிஜித் தீவு, அவுஸ்திரேலியா, மத்தியில் இருக்கிற மொரீசியஸ், ரீயூனியன், வடதிசையில் இருக்கிற நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, சுவிஸ், ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் தமிழ் நிகழ்வுகள் என்ன நடக்கிறது என்று பரவலாகத் தெரியவில்லை. எனவே இவற்றை இணைக்கும் ஊடகம் ஒன்று அவசியமாகிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

மொரீசியசின் கல்வி அமைச்சர் ஆறுமுகம் பரசுராமனைச் சந்திக்கப் போனோம். அவருடைய அலுவலகத்தில் தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் நிறைந்து இருந்தன, அவர் கல்வி அமைச்சராக இருந்த போது இந்தி, தமிழ், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் பள்ளிகளில் படிக்கிற நடைமுறையைக் கொண்டு வந்தவர். ஏழாவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டை முன்னின்று நடத்தியவர். அவரோடு பேசியபோது தன் வரலாற்றை எடுத்துச் சொன்னார்.

"1884இல் தந்தையாரின் தந்தை சேலம் மாவட்டத்திலிருந்து மொரீசியசுக்கு வந்தார். நான் மொரீசியசில் பிறந்தவன் என்னுடைய இளமைக் காலத்தில் தமிழ் படிக்க வாய்ப்புகள் இருக்கவில்லை. பிரெஞ்சும், ஆங்கிலமுமே கல்வி மொழியாக இருந்தது. பிற்பாடு தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு தொன்மை கருதி தமிழைப் படித்தேன். இன்று தமிழை எழுதவும் வாசிக்கவும் மட்டுமே எனக்குத் தெரியும். தமிழ் பேச வராது, ஆனாலும் நான் தொன்மையான ஒரு மொழிக்குச் சொந்தக்காரன் என்ற முறையில் நான் என்னை நினைத்துப் பெருமைப்படுகிறேன். இன்றும் தமிழை மொரீசியசில் மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்."

அவர் ஆங்கிலத்தில் பேசியபோதும் அவரின் தமிழ் உள்ளத்தை புரிந்து கொள்ள முடிந்தது.

மொரீசியசின் பயணத்தை முடிப்பதற்கு முதல் நாள் வீரனின் காரில் கண்டி அரசனின் சபை உறுப்பினராய் இருந்த எகலப் பொல நிலமே (EHELEPOLA NILAME)யின் சமாதியைத் தேடினேன். கடுமையான மழை, காரைவிட்டு இறங்க முடியாத நிலை. கல்லறைத் தோட்டத்திற்கு அருகில் காரை நிறுத்திவிட்டு மழை விடுமெனக் காத்திருந்தேன். நூற்றுக் கணக்கான பழைய சமாதிகள். அவற்றில் எகலப் பொல சமாதியை எப்படி தேடுவது? கல்லறையைப் பராமரிக்கும் அலுவலகம் மூடிக் கிடந்தது. பக்கத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தது. உள்ளே ஆராதனை நடப்பதால் எவரிடம் கேட்பது என்று தெரியவில்லை. நேரம் போய்க் கொண்டே இருந்தது. மழை விடுவதைப் போல் தெரியவில்லை. ஒற்றைக் குடை இருந்ததால் நான் மட்டுமே காரை விட்டு இறங்கினேன். தேவாலய வாசலுக்குப் போனேன். உள்ளே ஆராதனை நடந்தது. எவராவது வருகிறார்களா என்று பார்த்தேன். வெகு நேரத்திற்குப் பின்னர் ஒருவர் வந்தார். அவரிடம் சமாதியைப் பற்றிக் கேட்டேன்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# பொய்க் கேஸ்

இலங்கையில் 'ஐஸ்' போதைப் பொருளை விற்றால் இனி மரண தண்டனை. புதிய சட்டமொன்று வெளிவந்திருக்கிறது. இலங்கையில் 'ஐஸ்' எனப்படும் மெத்தம் பெட்டமைன் (Methamphetamines) போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டம் 2022.நவம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது, என்ற பத்திரிகைச் செய்தியை படித்த வஸீம் தன் நண்பர்கள் இருக்குமிடத்தை தேடி மூச்சு வாங்க ஓடி வருகிறான்.

"டேய் மச்சான்... வஸீம் என்னடா இப்படி தலைதெறிக்க ஓடி வருகிறான். அவன் காலையிலயே அடிச்சிருப்பான் போல மச்சான்" என்று சொல்லி நண்பர்களான றம்சான், ரிபாஸ், ஹரி, மபாஸ் அவர்களுக்குள்ளேயே சிரித்தார்கள்.

"டேய் மச்சான்" என்று ஓடி வந்தவன் வார்த்தைகள் வராமல் தட்டுத் தடுமாறினான். "டேய் இப்போ என்னாடா நடந்தது இப்படி அதறப்பதற ஓடி வாராய்"

"டேய் முதல்ல சிரிக்கிறத நிறுத்துங்கடா"

"சரி சரி.. சிரிக்கல சொல்லுடா"

அப்போது வஸீம், தான் காலையில் படித்த பத்திரிகைச் செய்தியை நண்பர்களிடம் சொல்லத் தொடங்கினான். அதுவரை சிரித்துக் கலாய்த்து நின்றவர்கள் மெது மெதுவாக தங்களது இதழ்களிலிருந்து புன்னகையை தூர வீசத் தொடங்கினார்கள். வியர்வை சொட்டச் சொட்ட மரமரத்துப் போய் நின்றார்கள்.

"டேய் என்னடா சொல்றாய்..." அந்த பத்திரிகை தாளை யாருக்கும் தெரியாமல் கிழிச்சு எடுத்துட்டு வந்திருக்கேன். படிக்கிறேன் கேளுங்கடா"

"படி"

'ஐஸ் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களை தண்டிப்பதற்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானவையாக இருக்கவில்லை. இதன் பிரகாரம் அந்தச் சட்டம் திருத்தப்பட்டு அதன் மூலம் மரண தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"டேய் வஸீம், இது உண்மையாடா?"

ஹரி சொன்னான், "இது சும்மாடா இந்த பத்திரிகைக்காரன்கள் பப்ளிசிட்டிக்காக எழுதிருக்கான்கள்.

பைத்தியமா உனக்கு" என்றதும் வஸீம் கோபமானான். நீதி அமைச்சர் விஜேய தாஷ ராஜபக்ஷ அனுமதி எடுத்துட்டாராம். "எனக்குண்டா ஒண்ணும் புரியல" என்று மபாஸ் சொன்னான்.

"நாம கூட ஒரு வருசத்துக்கு மேலாக குடிக்கிறோம். நமக்குண்டா இந்த ஐஸ் சந்தோசத்தைதானே தந்திருக்கு. இதற்குப் போய் மரண தண்டனையா? என்ன வேடிக்கையான அரசாங்கமாக இருக்கு இது."

"டேய் என்னடா இப்போ போய் பகிடியா நினைச்சிட்டிங்க போல சீரியசாக யோசிச்சிப் பாருங்கடா. இதற்கு அப்புறம் இந்த பொலிஸ்காரர்களின் நிலைமையை இப்பவே நம்மள குடிச்சதுக்கு ஒரு தடவை ரோட்ல வெச்சி சிக்கலாகி 'கேஷ்' போடுவேன் என்று மிரட்டி நம்மட நிறைய பணத்தை பறித்து பிரச்சினைக்குள் சிக்க வச்சாங்கள்"

மரண தண்டனையென்றால் இதையே காரணம் காட்டி நம்மள என்னவெல்லாம் பண்ணப் போறானுங்களோ"

"ஆமால்ல..."

"சரிதாண்டா நீ சொல்றது.."

"இப்ப என்னடா பண்ணுறது..."

"ஒவ்வொருவரும் தலையை பிய்த்துக் கொண்டிருக்கும் போதுதான் மபாஸின் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது.

"டேய் மபாஸ் எங்கடா இருக்காய்..?"

"நான் எங்கே இருந்தாலும் உனக்கு என்னடா" என்று போனை கட் பண்ணிட்டான்.

"டேய் என்னாச்சு..?"

"ஏன் கோபமா இருக்காய்?"

"போர்ன் எடுத்தது யாரு? அவன்தான் துரோகி...யாரு ரனீஸா?"

"ஆமா..."

"என்னவாம் அவனுக்கு..?" என்று கேட்கவும், மீளவும் தொலைபேசி அழைப்பு வருவதற்கும் சரியாகவிருந்தது.

"இவனுக்கு... ஆ...ஆ..." என்று சலித்தவாறே தொலைபேசி அழைப்பு பட்டனை மீண்டும் 'ஆன்' செய்தான்."

"டேய் எதுக்குடா சும்மா சும்மா கோல் அடிச்சி தொந்தரவு பண்ணுறாய்?"

"டேய் ஒரு நிமிசம் நான் என்ன சொல்ல வாறேன்று கேளு நான் ஒண்ணும் உங்கிட்ட நட்பு பாராட்ட வரல"

"நீ என்கிட்ட சொல்ல என்ன இருக்கு நீயெல்லாம் ஒரு மனுஷனா? துரோகி.."

"டேய் நான் துரோகியாகவே இருந்துட்டு போறேன்"

"இப்போ இதை நான் உன்கிட்ட சொல்லாமல் போனால்தான் துரோகியாகிடுவேன்."

"டேய் சும்மா கடுப்பேத்தாமல் சொல்லுஎன்ன சொல்லணும் இப்போ..."

"மபாஸ் அந்த சனத் பொலிஸ் உங்க மாமா, உவைஸ்கிட்ட காசு கொடுத்து ஜெமீலாட பர்சாத்தை பிடிக்க ஐடியா பண்ணீட்டாங்க. நீ அங்கே போய்டாத இது சத்தியமான உண்மை நம்பு. இதை உன்கிட்ட சொல்லத்தான் கோல் பண்ணினேன். நான் வைக்கிறேன்."

"டேய்..டேய்" அழைப்பை துண்டித்து விட்டான்.

"என்னாடா?"

"டேய் மச்சான் ஹரி நீ பர்சாத்கிட்ட பொருள் வாங்கப் போகாதே"

"ஏன்டா சொல்ரத மட்டும் கேளு"

"ரிபாஸ், ரம்சான் நீங்க செத்தாகிட்ட போய் நம்மட காசை வாங்கிக் கொண்டு வந்திடுமற்றதெல்லாம் அப்புறம் சொல்றேன்"

"இவன் என்னாடா சொல்றான் ரம்சான்"

"டேய் ஏதோ இருக்கு அவன் சொன்னா அதுல அர்த்தமிருக்கும்."

"சரி..வா போய் அவன் சொன்னதை செய்வோம்"

"ஹரி நீ வீட்ட போ... நாங்க வந்து கோல் தாறோம்"

"ஓகேடா மச்சான்"

மபாஸ் வீட்டுக்குச் சென்றான். அங்கு பலரும் அழுது கொண்டிருப்பதை கண்டு தனது தங்கையிடம் விபரத்தை கேட்டான். சகோதரி சொன்ன பதிலை கேட்டு அப்படியே உறைந்து போகிறான். மாமா உவைஸ் ஒரு தினக் குடிகாரன். "கசிப்பு வடி சாராயம் இல்லாம இருக்கவே மாட்டான். ஆனால், அவன் வடி சாராயமும், பீடியும் தான் பிடிப்பான். குடிக்க காசு இல்லாட்டி திருடுவான். இப்படியானவனைத்தான் சனத் பொலிஸ் தன் வலையில் சிக்க வைத்து "ஐஸ் போதை இன்னாருடைய வீட்டில் விற்பனை செய்யப்படுகிறது என்று எங்களுக்கு தெரியும். நீ போய் வாங்கிக் கொண்டு வந்தா உனக்கு எந்த பிரச்சினையும் பண்ணாமல் இப்போ உன்னை விட்டுடுவோம். இன்னும் மூன்று நாளைக்கு குடிக்க நாங்களே காசும் தாறோம்.

இந்தா பிடி ஐயாயிரம் ரூபா. இது உனக்கு. இந்தா பத்தாயிரம். இதுக்கு 'ஐஸ்' தூள் வாங்கிக் கொண்டு தா.

"ஓகே மாத்தயா.., நான் வாங்கிட்டு வாறேன்" என்று நேற்று பொலிஸ் ஆட்களிடம் பணத்தை வாங்கியவன், அவர்கள் சொன்ன வேலையையும் செய்யவில்லை. காசையும் திருப்பிக் கொடுக்கவில்லை. தலைமறைவாகி விட்டான். கொடுத்த காசுக்கெல்லாம் சாராயத்தை வாங்கி குடித்து விட்டானாம். அதனால் இவனை பொய்யாக வழக்குப் போட்டு சபீலாட வீட்ல மகமாரு கிராமத்துல வச்சி அடிச்சி பிடித்துக் கொண்டு போய் விட்டாங்களாம். இப்போ அவனை 'ஐஸ்' ஏஜன்ட் என்று சொல்லுறாங்களாம். இதற்கு அவன் சாராயத்தை தவிர வேற எதையும் குடிக்க மாட்டான். என்று ஊருக்கே தெரியும். அவனைப் போய் இப்படி பண்ணீட்டானுங்க.

இந்த கதையை கேட்டதும் மபாஸ் அதிகமாகவே பயந்து போயிருந்தான். நண்பர்களுக்கு நடந்த விடயத்தை சொல்லி "கொஞ்ச நாளைக்கு நம்ம ஒருவருக்கொருவர் சந்திக்க வேணாம்டா" என்ற சேதியையும் சொல்லி விட்டு இவனும் அமைதியாக இருந்து விட்டான்.

இப்படியே ஒரு வாரம் கழிந்தது. பொலிஸ் கெடுபிடிகள் அதிகரித்தன. அகப்படுறவனையெல்லாம் பிடித்து நீதிமன்றக் கூண்டில் ஏற்றி விடுகிறார்கள்.

கேஸ் போடுறது பணம் பறிப்பது என்று பொலிஸின் அட்டகாசம் அதிகரிக்கவே இவர்கள் ஆசுவாசமாக உள்மனதுக்குள் முணகிக் கொண்டிருந்தனர். இப்படியான நேரத்தில்தான் பொலிஸ் யுனிபோர்ம் அணிந்த இரண்டு பேர் மகரூப் நகர்ல "மௌசுக் என்றால் யாரு? இவர் திருகோணமலை சிறைச்சாலையில் சண்டை போட்டு மண்டை உடைக்கப்பட்டு வைத்தியசாலையில் அட்மிட் ஆகியிருக்கார்' என்ற தகவலையும் சேர்த்து சொல்லி விட்டுச் சென்றார்கள். ஒரு வாரமாக பொலிஸ் நிலையத்திலிருந்து "ஒவ்வொரு நாளும் மௌசுக் என்பவர் யாரு?" என்று தேடி விசாரித்து அலைந்து களைத்து விட்டார்கள்.

ஊரில் இப்படியொரு நபர் சிறைச்சாலைக்கு சென்றதாக தெரிந்தவர் யாருமில்லை. ஊர் மக்களுக்கும் இப்படியான தகவல் எதுவும் தெரிந்திருக்கவில்லை. "பொலிஸ் அதிகாரிகள் தேடி.களைத்து விட்டனர்.

அப்படி பெயருடையவர்கள் தெரியாது. ஊர் பள்ளிவாசல் நிருவாகத்திடமும் அல்லது கிராம சேவகரிடமும் விசாரித்தும் கண்டு கொள்ள முடியவில்லை. இப்படி இரண்டு வாரம் கடந்த விட்டது.

இந்த நிலையில் உவைஸின் சகோதரி சபீலா இவனை சிறைச்சாலைக்கு பார்ப்பதற்காக செல்கிறார். அங்கே போன பிறகுதான் உண்மை தெரிய வந்தது. 'மௌசுக்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பது தனது சகோதரன் 'உவைஸ்'தான். அவர்தான் தற்போது வைத்தியசாலையில் உள்ளார் என்பதும் தெரிய வந்தது. ஆனால், அங்கே அவரை சிறைச்சாலை அதிகாரிகள் அவரை பார்க்க அனுமதிக்கவில்லை.

"இவரை பிணையில் எடுக்க வேண்டும். அவரை நான் பார்க்க வேண்டும்" என்று சபீலா அழுது புலம்பி கெஞ்சியும் அவரை பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை.

"நீங்க போய் சமாதான நீதவானிடம் இந்த 'மௌசுக்' என்பவரும் 'உவைஸ்' என்பவரும் ஒருவர்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வாங்க பார்க்க அனுமதிக்கின்றோம்" என்று அவரை சிறைச்சாலை அதிகாரிகள் திருப்பி அனுப்பி விட்டனர்.

சபீலா வீடு வந்து உண்மையை சொல்லி சமாதான நீதவான் ஒருவரிடம் போய் சத்தியக் கடதாசி ஒன்றையும் அவசர அவசரமாக முடித்துக் கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றார்.

அவரை திருகோணமலை நீதிமன்றத்திற்கு போகுமாறு அனுப்புகின்றார்கள். இவரும் நீதிமன்றத்துக்குச் சென்றார். அங்கே உவைஸ் அழைத்து வரப்படவில்லை. மீண்டும் சிறைச்சாலைக்கு செல்கிறார்.

சபீலாவை அழைத்து அப்போதுதான் விடயத்தை சொல்கின்றார்கள்.

"உங்களுடைய தம்பி பொலிஸிடம் ஒரு தவறான பெயரை கொடுத்திருக்கிறார். அந்த பெயரில்தான் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கு. அவருடயை அடையாள அட்டையில் உள்ள பெயர் உவைஸ் என்று உள்ளது.

அவரிடம் ஏன் இவ்வாறு பொய் சொன்னாய்? என்று கேட்டால் என் மீது 'பொய் கேஸ்' போட்டிருக்கிறார்கள்.

அப்படி இருக்கையில் நான் எப்படி உண்மை பெயரை கொடுப்பது? என்று உயர் அதிகாரிடமே தெனாவட்டாய் பேசி விட்டான். அப்புறம் நேற்று அவனுடன் சிறையில் 'ஐஸ்' கேஷில் பிடிபட்டு ஆறு மாத சிறைத்தண்டனை பெற்ற ஒரு வருடன் ஒரு குறை பீடித் துண்டுக்காக சண்டை போட்டு ஆளுக்கு ஆள் கிடைச்ச பொருளால் ஒருவருக்கொருவர் தாக்கிய போது சிறையிலிருந்து இன்னும் இரண்டு வாரத்தில் தண்டனை முடிந்து போகின்ற அந்த பையன் உங்க சகோதரனை தூக்கி சுவரில் அடித்து விட்டான், உங்கட தம்பி இப்போ மிகவும் சீரியசாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" என்றதும் சபீலா அங்கேயே அழுது, புலம்பி களைத்து தலைசுற்றி கீழே மயங்கி விழுந்தார்.

அவரையும் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்குப் பின்னர் தனது சகோதரன் உவைஸை பார்க்க சபீலா அழைத்துச் செல்லப்பட்டார். அவனை பார்க்க முடியாதபடி அவனது முகமும் தலைப் பகுதியும் இனம் கண்டு கொள்ள முடியாதபடி கடுமையாக சிதைக்கப்பட்டிருந்தது. உயிர் இப்போது அப்போது என்று சில நொடியில் போய்விடுமென்ற நிலையில் தனது சகோதரனை பார்த்து அழுது புலம்பி அங்கேயே மரத்து நின்றாள் சபீலா.

சில நொடியிலேயே உவைஸின் உயிரும் போனதாக வைத்தியர் உறுதிப்படுத்தியதையடுத்து பொலிஸாரும் அவர்களுக்கு தகவல் சொன்னார்கள்.

ஊரெல்லாம் பல கதைகள், பல வதந்திகள் உவைஸின் மரணத்தையொட்டி மிக வேகமாகப் பரவியது. இது உவைஸின் குடும்பத்தாரை இன்னும் காயப்படுத்தியது. போதாமைக்கு "கஞ்சா, ஐஸ் என்று மார்க்கம் தெரியாமல் கெட்டுத் திரிந்தவனுக்கெல்லாம் பள்ளியில் ஜனாஸா தொழுகை நடாத்தக் கூடாது, முஸ்லிம்களை அடக்கம் செய்யும் "கப்ரில் "அடக்கம் செய்யக்கூடாது, தனியாக அடக்கம் செய்யப்பட வேண்டும். உயிரோடு இருந்த காலம் பள்ளியோடு தொடர்பு இல்லாத அவரை அடக்கம் செய்ய அனுமதிக்கக்கூடாது" என்று கூட பல பிரச்சினைகளும், வாதப் பிரதிவாதங்களும் அடுக்கடுக்காக எழுந்தன.

இது இன்னுமின்னும் அவரது குடும்பத்தாரையும் பிள்ளைகளையும் அதிகமாக பாதிக்கச் செய்தது. எதுவும் செய்யவியலாது கவலையிலும் வருத்தத்திலும் மூழ்கி நின்றார்கள்.

இறுதியாக பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் உவைஸின் உடல் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது. சுற்றியிருந்த உறவினர்களின் மனதில் தேங்கியிருந்த கவலைகள் பீறிட்டு அழுகை நதியாக பெருக்கெடுத்தது உடல் கொண்டு வந்தன. சுற்றத்தார் ஓவென்று அழுதனர்.

நேரங்கள் கடந்தன. அனைத்து தடைகளையும் தாண்டி உவைஸின் உடல் மார்க்க முறைப்படி மையவாடியில் அடக்கமும் செய்யப்பட்டது.

நாட்கள் நகர்ந்தது. இப்போது நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகின. உவைஸின் மனைவி 'இத்தா' இருந்து கொண்டிருந்தார், காலம் கடந்தது 'இத்தா' முடிவதற்கு இன்னும் ஓரிரு வாரங்கள் மீதமிருந்தன. பட்டினி பசி குழந்தைகளின் கல்வியினை தொடர முடியாத நிலை.குடிகாரனாக இருந்தாலும் தனது குடும்பத்தை ஒரு நாளும் பசியில் விட்டிடாத உவைஸ் இன்றில்லை. அந்த குடும்பம் இன்று வறுமையில் புதையுண்டு, சிதைந்து போயிருக்கிறது.இந்த போதைப்பொருள் பாவனை பாருங்கள் எங்கே கொண்டு போய் நிறுத்திருக்கிறது.

கொலையில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது.

இந்த கொடூர கொலையின் பரிசாக உவைஸின் ஆறு பிள்ளைகளும், அவனுடைய மனைவியும் அநாதையாய் போனதைத்தவிர வேறு என்ன கிடைத்தது.

அந்த தாயின் பக்கத்தில் இப்போ ஆறு குழந்தைகளும் வாடிய முகத்துடன் ஒரு ஓராமாய் உட்கார்ந்து கொண்டிருக்கின்றார்கள்.



**கிண்ணியா ஜே.பிரோஸ்கான் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 141



திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................

.................... திகதி .................... கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 141
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 141

### இடமிருந்து வலம்

1. இவர்களுக்குரிய ஒரு பண்டிகை
4. காலை முதல் மாலை வரையிலான காலப்பகுதி
7. இராமாயண கதாபாத்திரங்களில் ஒன்று
8. ஒருவர் இப்படிப்பட்டவர் என்பதை வெளிப்படுத்தும் பண்பு
9. மகன்
11. தமிழகத்திலுள்ள பெரும் ஆறு
12. கணிதத்தில் வரும் கழித்தல் அடையாளக் குறி
13. கொலை அல்லது விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பு
14. மேற்பூச்சாகப் பயன்படுத்தப்படும் திரவவகை மருந்து (குழம்பியுள்ளது)
15. இறுதி
18. இதுவும் ஒரு நிறம்
20. களை இழந்த முகத்தோற்றம்(குழம்பியுள்ளது)
21. ஆகாயம்
22. இதுவும் ஒரு பறவைதான் (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கேடு, தீங்கு
2. அரைப் பங்கு
3. பலம்
4. ஒரு செயலின் விளைவு அல்லது நன்மை
5. அறிவைப் பெறுவதற்காக படித்தல்
6. இது கால் நடைகளின் உணவு (தலைகீழ்)
8. ஓர் உள்ளுறுப்பு. உடலின் இயக்கமே இதுதான்
10. பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் இடம். (குழம்பியுள்ளது)
11. உலகம்
16. உயரத்தில் குறைந்தவர்களை இப்படியும் சொல்வர். (தலைகீழ்)
17. அதிர்ஷ்டம் (தலைகீழ்)
18. அங்கக் குறைபாடு
19. எதுவித பயனையும் எதிர்பாராமல் பிறருக்கு வழங்குவது (குழம்பியுள்ளது)
21. ஆவல், விருப்பம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 140

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விருது
4. வருமதி
8. சித்தி
9. சுருட்டு
11. தாடை
12. குவி
14. உபகாரம்
18. திரவியம்
19. தலை
20. தர
21. மைல்
22. இன்பம்
23. தவில்

**மேலிருந்து கீழ்**

1. வித்து
2. ருசி
3. துதி
4. வடு
5. ருசு
6. மருதாணி
7. திட்டை
10. விரயம்
13. கும்பம்
14. உதிரம்
15. பரதன்
16. காவி
17. புதல்வி
19. தலைமை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 140

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **கே. அபிஷேக்,** எஹலியாகொட எஸ்டேட், எஹலியாகொட | **எம்.எஸ். அமீர்,** 32/8 சுதர்மா மாவத்தை, கவுடானா வீதி, தெஹிவளை, | **எஸ் ஜனஹாசினி,** 36/ 1/1 கொட்டாஞ்சேனை வீதி, கொட்டாஞ்சேனை |

### பாராட்டு பெறுவோர்

1. **ஏ. புஹாரி** உக்குவளை
2. **ஏ.சீ,யூ. நஜீம்,** ஹாலி எல
3. **கே. புண்ணியநேசன்,** காரைதீவு 5
4. **ஏ. புஹாரி** வரக்காமுறை
5. **பி. பேரின்பராஜா,** மட்டக்களப்பு
6. **எஸ். சஞ்சனா** வந்தறுமூலை
7. **எம்.ஏ.எப்.சிம்ரா** காத்தான்குடி
8. **எப்.ஆர்.ஏ. ஷக்கூர்,** மடவள பஸார்,
9. **ஆர் முஆத்,** கிண்ணியா 05
10. **பி. குணசேகரன் குழந்தைவேலு** திருகோணமலை

## 2550 ஆண்டுகளுக்கும் மேலாக...(13ஆம் பக்க தொடர்ச்சி)

இந்நிலையிலேயே 6 ஆவது தொகுதியின் முக்கியத்துவம் கருதி அத்தொகுதியின் இரு பாகங்களையும் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொண்டேன்.

**கேள்வி: நீங்கள் ஆறாவது தொகுதியை குறிப்பாக ஏன் தெரிவு செய்தீர்கள்?**

பதில்: அதுதான் இறுதியாக வெளிவந்த தொகுதி. அது 1978 – 2010 காலப்பகுதியைப் பற்றிப் பேசுகிறது. இன்னும் சொல்லப்போனால் இக்காலப்பகுதியானது சிவில் யுத்தம் தொடங்கி அது முடிந்த காலப்பகுதியாகும். முந்தைய தொகுதிகள் தான் தமிழுக்கு முழுமையாக வரவில்லை. ஆனால் தமிழ் மக்களின் போராட்டம் உள்ளடங்கிய இந்தத் தொகுதியில் தமிழ் மக்களின் அரசியல், பண்பாட்டு அபிலாசைகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட மக்கள் அறிவது அவசியம். அதையும் அரசு செய்யாத நிலையில் அக்கடமையை நிறைவேற்றும் பொறுப்பு மீண்டும் எங்களைப் போன்றவர்களிடம் வந்து சேர்ந்து விடுகிறது.

**கேள்வி: இந்த ஆறாவது தொகுதியை உருவாக்கிய நூறுக்கும் மேற்பட்டவர்களில் சிறுபான்மை சமூகங்களின் பங்கைப் பற்றி அறிவீர்களா?**

பதில்: ஆம். ஒரேயொரு தமிழர் மாத்திரம் அதில் பங்கேற்றிருக்கிறார். அவர் தான் பேராசிரியர் சி.பத்மநாதன். ஆனால் அவரிடம் இது குறித்து நேர்காணலொன்றை நான் மேற்கொண்டிருந்தபோது இந்த மகாவம்ச உருவாக்கத்தோடோ, இக்குகுழுவோடோ தனக்கு எந்தவித தொடர்பும் இல்லையென்றார். வெறுமனே இக்காலப்பகுதியில் சைவ சமய நிலை பற்றிய கட்டுரையொன்றை எழுதிக் கேட்டதாகவும். அதனை மட்டுமே தான் எழுதிக் கொடுத்ததாகவும் தெரிவித்தார். எனவே இது வரையான மகாவம்ச தொகுதிகள் இத்தீவின் சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களை இதன் ஆக்கப்பணியில் இருந்து மாத்திரம் அல்ல, அவர்களை வரலாற்றுப் பதிவுகளில் இருந்தும் அப்புறப்படுத்தி எழுதப்பட்டிருப்பதாகவே நான் உணருகிறேன்.

இன்னொரு வகையில் சொல்லப்போனால் இலங்கையின் பன்முகத் தன்மை பேணப்படாத நூலே மகாவம்சம் என்கிற ஒரு விமர்சனத்தை என்னால் நிச்சயம் வைக்க முடியும்.

**கேள்வி: மகாவம்சத்தைப் பற்றிய விமர்சனங்களை செய்திருக்கிறீர்களா?**

பதில்: ஆம் கடந்த சில வருடங்களாக மகாவம்சத் தொகுதிகளின் மீதான எனது விமர்சன ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு ஆய்வு இதழ்களில் நான் எழுதி வந்திருக்கிறேன். அக்கட்டுரைகளின் தொகுப்பும் அடுத்த மாதமளவில் நூலாக வெளிவருகிறது. ஆனால் மகாவம்ச மொழிபெயர்ப்புப் பணியில் எனது சொந்தக் கருத்துக்கள் பாதிப்பை செலுத்த விட்டதில்லை. மொழிபெயர்ப்பு அறத்தின் பால் நின்று அக்கடமையை நிறைவேற்றி இருக்கிறேன்.

**கேள்வி: இம்மொழிபெயர்ப்பின் போது நீங்கள் எதிர்கொண்ட சவால்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

பதில்: ஒவ்வொரு ஆட்சியாளர்களின் கீழும், அரசியல், பயங்கரவாதம், சமூகம், கல்வி, கலாசாரம், பொருளாதாரம், சூழலியல், மருத்துவம் என்கிற தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொறுப்பான குழுக்களே தனித்தனியாக அதனை எழுதியுள்ளன. கலாசாரப் பகுதி எளிமையாக இருந்த அளவுக்கு ஏனைய பகுதிகள் மொழிபெயர்க்க எளிமையாக இருக்கவில்லை. சில இடங்களில் ஒரு வசனம் அரை பக்கத்துக்கு நீள்கிறது. அதனை பல வசனங்களாக பிரித்திருக்க முடியும்.

வாசகர்கள் அவ்வசனத்தை வாசித்து முடித்து இருக்கும் போது தொடங்கிய இடத்தை மறந்து விடக்கூடுமோ என்று அச்சப்பட்டிருக்கிறேன். பல வசனங்கள் இவ்வாறு கால் புள்ளி இட்டு தொடர்கிற போக்கு முழு மகாவம்ச நடையிலும் காணப்படுகிறது. வாசகர்களுக்கு அயர்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. மொழிபெயர்ப்பிலும் இந்த சிக்கலை எதிர்கொண்டேன்.

இதைவிட இலங்கையின் சிவில் யுத்தம் “பயங்கரவாதம்” என்கிற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிற அத்தியாயங்களில் இடங்களின் பெயர்களும், நபர்களின் பெயர்களும் சிங்களமயப்படுத்தப்பட்டு இருப்பதால் அவற்றை மீண்டும் தமிழில் அடையாளம் காண்பதில் சிரமமாக இருந்தது. இராணுவ நடவடிக்கைகளை மொழிபெயர்த்துக் கொண்டிருந்த போது பல தடவை கூகிள் வரைபடத்தை திறந்து வைத்துக் கொண்டு அவ்விடங்களின் பெயர்களை சரி செய்தேன்.

சில இடங்களின் பெயர்களை யுத்த காலத்தில் அப்பிரதேசங்களில் வாழ்ந்தவர்களை தொடர்புகொண்டு உறுதிசெய்தேன்.

இதைவிட பொருளாதாரம், மருத்துவம், தொல்லியல் போன்ற கலைச்சொற்களை உறுதி செய்துகொள்ள பல துறைசார் அறிஞர்களின் பங்களிப்பை நாட வேண்டியிருந்தது.

மொழிபெயர்ப்பின் போது எதிர்கொண்ட சிக்கல்களை நான் தனியாக சிறு சிறு குறிப்புகளாக சமூக வலைத்தளங்களில் பதிவு செய்து வந்திருக்கிறேன்.

**கேள்வி: தமிழ் – சிங்கள பரஸ்பர மொழிபெயர்ப்புகளின் தொடர் தேவையை வலியுறுத்துகிறீர்கள்!**

பதில்: ஆம்! இதுவரை இலங்கையில் வெளிவந்த அரசியல், வரலாறு, இனத்துவம், கலாசாரம், தொல்லியல், மரபுரிமை பற்றிய ஆய்வுகளின் மீது எனக்கு சந்தேகம் எழுகிறது. சிங்களத்தில் இருந்தும் மூலாதாரங்களைத் திரட்டாமல் தமிழில் வெளிவந்த எந்த ஆய்வும் பூரணமாக இருக்க முடியாது.

அது போல தமிழில் இருந்தும் மூலாதாரங்களை கையாளாத சிங்கள ஆய்வுகள் எவ்வாறு முழுமையடையும். சிங்களத்தில் எழுதுபவர்கள் சிங்களத்தில் இருந்தும் ஆங்கிலத்திலும் இருந்தும் திரட்டுவதைப் போல தமிழில் எழுதுபவர்களும் தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டுமே ஆதாரங்களைத் திரட்டும் போக்கே இலங்கையின் ஆய்வுத் துறையில் காணப்படுகிறது. சிங்களத்தில் என்ன நடக்கிறது என்பதை தமிழர் அறியார். தமிழில் என்ன நடக்கிறது என்பதை சிங்களவர் அறியார். இரு இனங்களின் துருவமயப்பட்ட போக்குக்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

எனது எழுத்துக்கள் தமிழ்ச் சூழலில் கவனம் பெறுவதற்கு சிங்கள மூலத் தகவல்களையும் எனது ஆய்வுகளில் கையாண்டு வருவது முக்கிய காரணம்.

**கேள்வி: நிறைவாக, மகாவம்ச மொழிபெயர்ப்பை பூர்த்தி செய்தமையை எவ்வாறு உணருகிறீர்கள்?**

ஒரு வரலாற்றுப் பணியை நிறைவு செய்த திருப்தி. மேலும், இப்பிரதியின் மீதான தமது கருத்துக்களை வெளிப்படுத்த தமிழ் பேசும் மக்களுக்கு வாய்ப்பு திறக்கப்பட்டதையிட்டு பெருமையடைகிறேன்.

## ஏழாவது உலகத் தமிழராய்ச்சி... (15 ஆம் பக்க தொடர்ச்சி)

“சரியான இடம் எனக்குத் தெரியாது, அவ்வப்போது பலர் வருகிறார்கள். ஆனால் கல்லறையின் எல்லையில் மரங்களுக்கு அருகே இருப்பதாக அறிந்தேன். போய்ப் பாருங்கள்” என்றார் அவர்.

மறுபடியும் காரருகே வந்தேன்..

நான் "திரும்பி வர நேரமாகும்..". என்றேன்..

"இந்த மழையில் சமாதியைப் பார்க்க வேண்டுமா?"

"ஆமாம்" என்று சொல்லிவிட்டு நடந்தேன். என் மனம் அந்த சமாதியில் அடங்கிய வரை நினைத்தது.

எகெலப்பொல நிலமேயின் முழுப்பெயர் ‘எகலப் பொல விஜய சுந்தர விக்கிரசிங்க சந்திரசேகர செனவிரத்ன ஜயதிலக எக்கநாயக்க அமாதிகோன் வகல பண்டித முதியான்ஸே’ என்பதாகும். ஆனால் எகலப் பொல நிலமே’ (1773 – 1829) என்பதே பிரசித்தம். அவர் பள்ளேகம பகுதி அதிகாரியாக இருந்தவர். பின்னாள் மகாநிலமே (18.11.1814) எனும் அதி உயர்ந்த அரசபதவியை மன்னரிடம் பெற்றார். சப்ரகமுவ பகுதியில் மன்னருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்க கண்டி மன்னனின் உத்தரவில் போன எகல பொல நிலமே கிளர்ச்சியாளர்களோடு சேர்ந்து கொண்டார். இதனை அறிந்த கண்டி மன்னன் கோபமுற்று எகலபொலவைக் கைது செய்ய முடியாததால் அவருடைய மகனின் தலையை வெட்டியதோடு இன்னொரு குழந்தையை உரலில் போட்டு இடிக்க வைத்து அவரின் மனைவியை கண்டியிலுள்ள குளத்தில் மூழ்கடித்தான். இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட எகலபொல மன்னருக்கு எதிராக ஆங்கிலேயரோடு சேர்ந்து கொண்டார். 1815இல் கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றி கண்டி மன்னரை இந்தியாவிற்கு நாடு கடத்தி வேலூரில் சிறை வைத்தார்கள்.

கண்டியைக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேய அரசு எகலபொல நிலமே அவரின் பல்வேறு நடவடிக்கைகளையும் வெள்ளைக் குதிரையில் போவதையும் தடை செய்தது. இதனிடையே (1817–1818) எகலபொல கண்டி ராச்சியத்தைக் கைப்பற்ற திட்டம் தீட்டியபோது ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்து அவரோடு பலரையும் கைது செய்து மொரீசியசுக்கு நாடு கடத்தினார்கள்.

மொரீசியஸ் அவர்கள் ஆட்சியில் இருந்தது. அங்கு 1829இல் காலரா நோயினால் எகலபொல நிலமே இறந்தார். அவர் சிங்கள மக்களைப் பொறுத்தவரை தங்கள் இனத்துக்கான போராட்டவாதி, கண்டியை ஆண்ட தமிழ் மன்னருக்கோ எதிரி. கடைசியில் கண்டி மன்னருக்கு எதிராக ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்த போதும் அவர் ஆங்கிலேயருக்கும் எதிரி..

ரீயூனியன் தீவுக்குப் போவதற்காக விமானத்தில் இருந்த போது புருசோத்மன் "ஒரு பயணக் கட்டுரை எழுத இந்தப் பயணம் போதுமா?" என்று கேட்டார். நான் உடனே, “எந்த நாட்டிற்குப் பயணம் போனாலும் அந்த நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பயணிக்க முடியாது. பயணக்கதை எழுதுபவர்கள் கூட ஒரு நாட்டின் வரலாறு, அங்கு வாழும் மக்கள், அங்குள்ள மொழி, அங்கு பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள் என்பனவற்றைப் பார்த்தே எழுதுவார்கள். நான் எழுதப் போகும் பயணக் கதையும் அவ்வாறானது தான். இப்பயணக் கதையின் காட்சிகள் ஒரு கமராவில் பார்த்தது போன்றே தெளிவாக இருக்கும்” என்றேன்.

(தொடரும்)

## ஜனாதிபதியின்... (02 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அரச ஊடகங்கள் தொடர்பில் குழு அறிக்கைகள் ஏராளம் உள்ளன. 1994ஆம் ஆண்டில் 4 குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஊடகத்துறை அமைச்சராக தர்மசிறி சேனாநாயக்க பதவி வகித்த போதே அக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதில் ஆர். கே. டபிள்யூ. குணசேகரவின் அறிக்கையில் ஊடகவியலாளர்களின் சம்பளம் தொடர்பிலும் கூட குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்திரிகை ஆசிரியர்கள் கூட அரசியலமைப்புச் சபையின் மூலமே நியமிக்கப்பட வேண்டும்.

**ஜனாதிபதிக்கு ஆபத்துள்ளதாக நீங்கள் சமூக ஊடகம் ஒன்றில் கூறியிருந்தீர்களே...?**

ஆம், நிச்சயமாக ஆபத்து இருக்கக் கூடும், ஒரு முன்னுதாரண மாற்றத்தை ஏற்படுத்தப் போகும் போது இதுபோன்ற ஆபத்துகள் உள்ளன. பிரபு வர்க்கத்தினரிடமிருந்து அதிகாரம் பறிக்கப்படும்போது இத்தகைய ஆபத்துகள் ஏற்படும். பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டதை நாம் அறிவோம். அத்தகைய ஸ்னைப்பரைப் பயன்படுத்துவது கடினமான விடயமல்ல. இன்று பாதாள உலகம் என்பது ஒரு ஆயுதப் படை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஒன்று இரண்டு கோடி கொடுத்து நாட்டைக் கடக்க டிக்கெட்டையும் எடுத்துக் கொடுத்தால் எதையும் செய்து கொள்ள முடியும். இன்று அரசியல் என்பது செல்வத்தை உருவாக்கும் ஒரு வழியாக மாறிவிட்டது. எம்மோடிருந்து ப்ளேண்டி குடித்துக் கொண்டிருந்தவர்கள் அரசியல்வாதிகளாக ஆனதன் பின்னர் போய் பார்த்தால் வித்தியாசம் தெளிவாகத் தெரியும். அவர்களின் வீடுகள் அரண்மனைகள் போன்றுள்ளன. எனவே நாம் முன்னர் குறிப்பிட்ட தாஜுதீன், பிரகித் எக்னலிகொட போன்ற சம்பவங்களால் சிக்கிக் கொண்டிருப்பவர்கள் எதையும் செய்யத் துணியலாம். அந்த ஆபத்து நிச்சயம் உண்டு. சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.


# பத்திரிகை விளம்பரம்

## சுகாதார அமைச்சு

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம் (2024 – 2028)

2024-2028ஆம் காலப்பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கி இலங்கைக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு (PCMU) நிறுவப்படவுள்ளது. 2028 டிசம்பர் 31ஆம் திகதி வரைக்கும் ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பத்தொன்பது பதவிகளின் முழு நேர சேவைக்காக ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தும் திட்டத்திற்கு தேவையான தகைமைகள், அனுபவம், திறமை மற்றும் திறன்களைக் கொண்ட பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | வகுதி (01/2019ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம்) | தகைமைகள் |
|---|---|---|---|
| 1. Project Director | 01 | PS 1 | தகைமைகளுக்கு 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 01ஆம் இணைப்பைப் பார்க்கவும் (பக்கம் 1-26) 100 மில்லியன் US$ அல்லது அதற்கு சமனான மற்றும் 250 மில்லியன் US$ இற்கும் குறைவான நெடுவரிசையைப் பார்க்கவும். தெரிவு செய்யப்பட்ட தொடர்புடைய பதவிக்கு தயவு செய்து பிரவேசிக்கவும் **www.rb.gy/8ks8mh** |
| 2. Deputy Project Director | 01 | PS 2 | |
| 3. Finance Manager | 01 | PS 3 | |
| 4. Senior Project Engineer | 02 | PS 3 | |
| 5. Project Accountant | 01 | PS 4 | |
| 6. Monitoring and Evaluation Specialist | 01 | PS 4 | |
| 7. Senior Environment and Social Safeguards Officer | 01 | PS 5 | |
| 08. ICT Officer | 01 | PS 5 | |
| 09. Senior Technical Officer | 02 | PS 5 | |
| 10. Project Officer | 01 | PS 6 | |
| 11. Project Officer (M&E) | 01 | PS 6 | |
| 12. Procurement Officer | 04 | PS 6 | |
| 13. Project Secretary | 01 | PS 6 | |
| 14. Financial Officer | 01 | PS 6 | |

மேற்கூறிய பதவிகளுக்கான பொதுவான நிபந்தனைகள், பிரதான கடமைகள், தேவையான தகைமைகள், அனுபவம், திறன் மற்றும் திறமைகள், அனுபவம் மற்றும் பொறுப்புகூறல், தகைமைத் தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு,

**தயவு செய்து பிரவேசிக்கவும்: www.rb.gy/mew323**

**முடிவுத் திகதி: 2024-10-27**

விபரமான அல்லது சுய தரவுகளுடன் (குறிப்பிட்ட வடிவம் இல்லை) கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம் / மின்னஞ்சல் முகவரி சகிதமான விண்ணப்பங்களை “ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம் (PHSEP) ……………………………… (நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி) பதவிக்கான விண்ணப்பம்” எனத் தலைப்பிட்டு 2024-10-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

**முகவரி:**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்),**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம் (PHSEP),**
**முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் அலகு,**
**இல. 385, சுவசிரிபாய, பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு-10.**
**மின்னஞ்சல்: hplanningmdpu@gmail.com**

தேவையான தகைமைகள், அனுபவம், திறன் மற்றும் திறமைகளைக் கொண்டிராத, தாமதமான, முழுமையற்ற, ஆதரவு ஆவணங்கள் இணைக்கப்படாத, பதிவுத் தபால் அல்லாத வேலை முறைகளில் (மின்னஞ்சல், நேரடியாக ஒப்படைத்தல் அல்லது வேறேதாவது முகவரி) அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்),**
**சுகாதார அமைச்சு.**



## ரிதீமாலியத்த பிரதேச சபை

### ரிதீமாலியத்த பிரதேச சபைக்கு சொந்தமான ஆதாஉல்பத்த பதுளை வீதியில் அமைந்துள்ள கடை அறைகளை குறைந்த பட்ச கேள்வித் தொகை அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு விடுவதற்கான பெறுகை அறிவித்தல்

01. ரிதீமாலியத்த பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதாஉல்பத்த பதுளை வீதி, இல. 13 மற்றும் 14 கடை அறைகளை திறந்த கேள்வி மூலம் 25 வருடங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு விடுவதற்காக பெறுகை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
    i. கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் 2024.10.07 முதல் 2024.10.23 பி.ப. 3.00 வரை
    ii. கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றல் 2024.10.25 பி.ப.1.30 வரை
    iii. கேள்விகள் திறத்தல் 2024.10.25 பி.ப.2.00 இற்கு இடம்பெறும்.
02. பெறுகை விண்ணப்பப்படிவக் கட்டணங்களை ரூ.5000.00 (மீளளிக்கப்படாத) மற்றும் பெறுகை பிணை வைப்புத்தொகை ரூ.20000.00 ஐ (மீளளிக்கப்படும்) அலுவலகத்திற்கு செலுத்தி பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
03. கேள்வி விண்ணப்பங்களை சரியாக நிரப்பி மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரு கடித உறைகளில் இட்டு மீண்டும் தனி உறையில் இட்டு பொறியிட்டு, சபை செயலாளர், ரிதீமாலியத்த பிரதேசசபை, ஆதாஉல்பத்த, ஊரணிய என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2024.10.25 பிற்பகல் 1.30 இற்கு முன்பு கிடைக்கச் செய்தல் வேண்டும். உறையில் இடதுபக்க மேல் மூலையில் “ஆதாஉல்பத்த பதுளை வீதியில் அமைந்துள்ள கடை அறை இல……… இதற்கான கேள்வி வைத்தல்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.
04. கேள்விகோரும் கடை அறைகள் பற்றிய தகவல்கள் கீழ்க்காணும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டது.

| கட்டிடம் (கடை அறை இலக்கம்) | குறைந்த பட்ச கேள்வித் தொகை (ஒரு கடை அறையின்) | மாதாந்த கடை வடகை |
|---|---|---|
| 13 (200 சதுர அடி) | ரூ. 1000000.00 | ரூ. 8000.00 |
| 14 (200 சதுர அடி) | ரூ. 1000000.00 | ரூ. 8000.00 |

05. அந்தந்த கடை அறைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைதாரர்கள் குறித்த கடை அறைகளுக்கு பாதுகாப்பு பிணைத்தொகையின் 1/3 தொகையை பிணை வைப்பாக கேள்விகளை அங்கீகரிக்கப்பட்ட வேளையிலேயே செலுத்துதல் வேண்டும்.
06. கேள்விகள் வழங்கப்பட்ட பின்பு 14 நாட்களுக்குள் மிகுதி 2/3 தொகையை பிணையாக (பாதுகாப்பு பிணைத் தொகையாக மிகுதி தொகையாக) வைப்பு செய்து ஒப்பந்தத்திற்கு வரல் வேண்டும்.
07. மேலதிக விபரங்களுக்கு - 0552256614 என்ற தொ.பே. இலக்கத்திற்கு அலுவலக நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.4.00 வரை அலுவலகத்திற்கு அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஆர். எம். என். என். அபேகோன்,**
**சபை செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி**
**கேள்விச்சபை, ரிதீமாலியத்த பிரதேச சபை**
**ஆதாஉல்பத்த - ஊரணிய.**



## மக்கள் வங்கி

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மக்கள் வங்கியின் திருகோணமலை மற்றும் வன்னி பிராந்திய தலைமை அலுவலகங்களில் நீர்க்கசிவு தடுப்பு வேலைகள்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கேள்விகளுக்காக கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| கேள்வியின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் | விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயம் (வெட் இன்றி) | விலைக் கோரல் பிணை முறி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| கேள்வி இலக்கம்: 033/2024 திருகோணமலையில் உள்ள மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தின் நீர்க்கசிவு தடுப்பு வேலைகள் | இந்த முன்மொழியப்பட்ட வேலைகளில் பிராந்திய பிரதான அலுவலகத்தில் தற்போதுள்ள வெளிப்புற சுவர்கள் மற்றும் கொங்கிறீட் மேற்தளங்களின் (Terrace) நீர்க்கசிவைத் தடுப்பதாகும். இந்த வேலைகளில் தற்போதுள்ள கொங்கிறீட்/ சீமெந்து தரையைத் தகர்த்து அப்புறப்படுத்துதல், தரையை சீரமைத்தல், வெளிப்புற சுவர்கள் மற்றும் கொங்கிறீட் மேற்தளங்களின் நீர்க்கசிவைத் தடுத்தல் மற்றும் சுவர்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் என்பன அடங்குகின்றன. | ரூபா 17.5 மில்லியன் | ரூபா 175,000.00 | 10,000.00 |
| கேள்வி இலக்கம்: 034/2024 வன்னியில் உள்ள மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகக் கட்டிடத்தின் நீர்க்கசிவு தடுப்பு வேலைகள் | இந்த முன்மொழியப்பட்ட வேலைகளில் பிராந்திய பிரதான அலுவலகத்தில் தற்போதுள்ள வெளிப்புற சுவர்கள் மற்றும் கொங்கிறீட் மேற்தளங்களின் (Terrace) நீர்க்கசிவைத் தடுப்பதாகும். இந்த வேலைகளில் தற்போதுள்ள கொங்கிறீட் / சீமெந்து தரையைத் தகர்த்து அப்புறப்படுத்துதல், தரையை சீரமைத்தல், வெளிப்புற சுவர்கள் மற்றும் கொங்கிறீட் மேற்தளங்களின் நீர்க்கசிவைத் தடுத்தல் மற்றும் சுவர்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் என்பன அடங்குகின்றன. | ரூபா 14.0 மில்லியன் | ரூபா 140,000.00 | 10,000.00 |

02. நிர்மாணக் காலம் 60 நாட்காட்டி நாட்களாகும்.
03. தேசிய போட்டி ரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, தகைமை வாய்ந்த விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
05. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவைகள்:
    அ. கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக்குறைந்தது நூற்றி இருபத்தியெட்டு மில்லியன் (128 மில்லியன் ரூபா) ரூபா பெறுமதியான சராசரி வருடாந்த புரள்வைக் கொண்ட நிர்மாண (நீர்க்கசிவு தடுப்பு) வேலையைச் செய்திருத்தல்
    ஆ. கடந்த 5 வருட காலத்தினுள் ஆகக்குறைந்தது 15 மில்லியன் ரூபா பெறுமதியுடையதும் மற்றும் 60 நாட்களுக்குள் இதனையொத்த சிக்கல் தன்மையுடைய கட்டிட நிர்மாணத் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்த அனுபவம் அல்லது அதிக பெறுமதியுடைய திட்டமொன்றை நிர்ணயிக்கப்பட்ட காலம் மற்றும் நேரத்தில் நிறைவு செய்துள்ளமை.
    இ. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட முற்பணங்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக தேறிய திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது அனுமதிக்கப்பட்டுள்ள கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 6.0 மில்லியன் ரூபாவாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
05. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011 2473206, தொலைநகல் 011 2341591) மற்றும் 2024-10-08ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத பத்தாயிரம் ரூபா (10,000.00 ரூபா) கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்திய பின் 2024-10-08ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம்.
07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘கேள்வியின் பெயர் மற்றும் அடையாள இலக்கம்’’ என்பவற்றைக் குறிப்பிட்டு 2024-10-29ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதன் முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகந்தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
08. விலைமனுக்கள் 2025-01-28ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
09. அனைத்து விலைமனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றிலிருந்து மட்டும் பெறப்பட்ட மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2025-02-25ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. முன்னோடி விலைமனுக் கூட்டமொன்று 2024-10-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### நிறுவன/ஆய்வு கூடங்களில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது சம்பந்தமாக பதிவுசெய்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2025/2026 ஆம் வருடத்திற்கான தொழிற்சாலைகள்/ஆய்வு கூடங்களில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது தொடர்பாக பதிவுசெய்தல் மற்றும் வருடாந்த இற்றைப்படுத்தலுக்கான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் எல்லைக்குட்பட்ட கைத்தொழில் சமூகத்திற்கு சுற்றாடல் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கான தகவல்களை வழங்குவதன் மூலம் தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டல்களை இலகுபடுத்துவதே இப்பதிவின் அடிப்படை நோக்கமாகும்.

பின்வருகின்ற பிரிவுகளுக்குட்பட்ட தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தொழிற்சாலை செயற்பாடுகளின் போதான வளி, நீர், இரைச்சல், அதிர்வு மற்றும் துர்நாற்ற மாசுபடுதலை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குதல்
- நீரின் அல்லது கழிவு நீரின் தரம், வளியின் தரம், இரைச்சல், அதிர்வு மற்றும் மண் போன்றவற்றின் ஆய்வுகள் மற்றும் அளவீடுகள்

**விண்ணப்பங்கள் மற்றும் பதிவுசெய்வது தொடர்பான முழு விபரங்களையும் இணையத்தளம் www.cea.lk மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். ஆத்துடன் நேர்த்தியாக நிரப்பப்பட்ட தேவையான இணைப்பு ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்கள் கீழ்வரும் விலாசத்திற்கு எதிர்வரும் 31.10.2024 ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**

பணிப்பாளர்
சுற்றாடல் மாசடைதல் கட்டுப்படுத்தல் பிரிவு,
மத்திய சுற்றாடல் அதிகாரசபை,
104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.

மேலதிக தொடர்புகளுக்கு:
தொலைபேசி:
**0112872278/0112873447/0112873448**
**071 2360756** – எம். ஜி. லச்சுமி
(உதவிப்பணிப்பாளர்)
தொலைநகல்: **0112872605**
மின்னஞ்சல்: **lukshmi@cea.lk**

பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை.

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## அறிவித்தல்

### வருடாந்த/ மூன்று வருட தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) வழங்குதல் (2025ம் ஆண்டு)

கொழும்பு/ காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு பிரவேசிப்பதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அனுமதிப்பத்திர அலுவலகத்தின் மூலம் 2025ம் ஆண்டிற்காக வழங்கப்படும் வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரத்தை (RPU), 2025 ஜனவரி 01 முதல் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் 2025.01.01ம் திகதி முதல் 2025.12.31 வரை 03 வருடங்கள் செல்லுபடியாகுமாறு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2025ம் ஆண்டிற்க்கு வருடாந்த அல்லது மூன்று வருட தனிநபர் அனுமதிப்பத்திரங்களை (RPU) பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற சகல அனுமதிப்பத்திரதாரர்களும் தமது அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை 2024.11.30ம் திகதிக்கு முன்பு கொழும்பு - 01, லோட்டஸ் வீதிக்கு அருகில் உள்ள கெனல் ரோவில் அமைந்துள்ள வருடாந்த அனுமதிப்பத்திர அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

அவ்வாறே, விண்ணப்பிக்கும் வருடாந்த மற்றும் மூன்று வருட அனுமதிப் பத்திரத்திற்காக ஒன்லைன் முறை (Online) ஊடாக https://www.slpa.lk/port-colombo/online-entry-permits என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள 2024ம் ஆண்டிற்கு செல்லுபடியாகும் வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) 2024.12.31ம் திகதியின் பின்னர் செல்லுபடியாகுமாறு அவ் அனுமதிப் பத்திரதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) 2025ம் ஆண்டிற்காக புதுப்பிக்காதுவிடின் மேற்படி திகதியின் பின்னர் அவர்களுக்கு துறைமுகங்களுக்கு பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

குறித்த நேரத்திலேயே தமது அனுமதிப்பத்திரத்தின் தேவைப்பாடு குறித்து சகல வருடாந்த தனிநபர் அனுமதிப் பத்திரதாரர்களினதும் கவனத்திற்கு இத்தால் கொண்டுவரப்படுகின்றது.

இது பற்றிய மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்காக கீழ்க்காணும் தொ.பே. இலக்கங்களை அழையுங்கள்.

0112389942, 0112483167, 0112483485

**பணிப்பாளர் (பாதுகாப்பு)**
**பாதுகாப்புப் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**2024.09.30ம் திகதி**

www.adz.lk
it's what you want

## பெறுகை அறிவித்தல்

### களனி பல்கலைக்கழகத்தின் தலுகமயில் அமைந்துள்ள பிரதான இடப்பரப்பு, ராகம மருத்துவ பீடம் மற்றும் வெளி இடப்பரப்புகளுக்கு (தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த) பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் இடப்பரப்புகளுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | விபரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் படிவத்தின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA7/SS/DAL/03 (களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பு - தலுகம) | தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குதல் | 790,000.00 | 15,000.00 | 2025-01-29ஆம் திகதி வரை |
| 02 | UK/GA/GA7/SS/RAG/03 (மருத்துவ பீடம் - ராகம) | | 470,000.00 | 10,000.00 | 2025-01-29ஆம் திகதி வரை |
| 03 | UK/GA/GA7/SS/EXT/03 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த பல்கலைக்கழகத்திற்கு உரித்தான சகல வெளி இடரப்பரப்புகள்) | | 600,000.00 | 12,500.00 | 2025-01-29ஆம் திகதி வரை |

**தகுதிகள்**

1. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகள் வழங்கியமை தொடர்பில் வியாபாரப் பதிவு நாள் தொடக்கம் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அபகீர்த்தியாளர் (Blacklist) பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல்.
2. பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்துள்ள செல்லுபடியாகும் வருடாந்த அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
3. 2024-03-31ஆம் திகதிக்கு முன் அண்மைய மூன்று வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பெற்றுள்ள சராசரி வருடாந்த புரள்வு (Average Annual Turnover) பின்வரும் பெறுமதியை விட அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | சராசரி வருடாந்த புரள்வு (ரூபா) |
|---|---|---|
| 01 | UK/GA/GA7/SS/DAL/03 (களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பு - தலுகம) | 79 மில்லியன் |
| 02 | UK/GA/GA7/SS/RAG/03 - (மருத்துவ பீடம் - ராகம) | 47 மில்லியன் |
| 03 | UK/GA/GA7/SS/EXT/03 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு மற்றும் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த பல்கலைக்கழகத்திற்கு உரித்தான சகல வெளி இடரப்பரப்புகள்) | 60 மில்லியன் |

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் சகிதம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றில் துணை வேந்தர், களனி பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும் நிறுவனங்களுக்கு மேற்கூறப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் அல்லது ஒரு கேள்விக்கு அல்லது இரண்டு கேள்விகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

இது தொடர்பான மேலதிக விபரங்களை உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அவர்களைத் (0112914477, 0112903116 மற்றும் 0112903117) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களை வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான இடங்களை 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம். இது தொடர்பிலான கேள்வி முன்னோடிக் கூட்டம் (Pre-bid meeting) 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல நிறுவனங்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளல் கட்டாயமாகும்.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றையும் இந்த பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''களனி பல்கலைக்கழகத்தின் பிரதான இடப்பரப்பிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2025, ராகம மருத்துவ பீட இடப்பரப்பிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2025, வெளி இடப்பரப்புகளுக்கு (பாதுகாப்புச் சேவை வழங்குதல் - 2025'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்த கேள்விப் படிவங்களை 2024-10-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் களனிப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது நிறுவனத்தின் பெயர் மற்றும் அதற்கு இயைபான தகவல்களை வழங்கி உறுதி செய்ததன் பின் அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அல்லது அவரின் பிரதிநிதியின் முன்னிலையில் கேள்விப்படிவங்களை உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கேள்விக்கு இயைபான சகல தகவல்களும் கேள்வி விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ளன.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்குப் புறம்பாக நாட்டினுள் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள் காரணமாக மேற்கூறிய திகதிகளில் ஏதாவது மாற்றங்களைச் செய்ய நேரிட்டால் அது தொடர்பான விபரங்களை பல்கலைக்கழகத்தின் www.kln.ac.lk எனும் இணையதளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
**2024-10-06.**

## பெறுகை அறிவித்தல்

### களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு, ராகம மருத்துவ பீடம் மற்றும் கணனி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் இடப்பரப்புகளுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் (NCB) கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | விபரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் படிவத்தின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA1/ DAL/2025 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு) | தனியார் சுத்திகரிப்புச் சேவை வழங்குதல் | 1,000,000.00 | 20,000.00 | 2025-01-29ஆம் திகதி வரை |
| 02 | UK/GA/GA1/ RAGA/2025 (மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு) | | 290,000.00 | 8,000.00 | 2025-01-29ஆம் திகதி வரை |
| 03 | UK/GA/GA1/ FCT/2025 (கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - புலுகஹா சந்தி) | | 340,000.00 | 8,000.00 | 2025-01-29ஆம் திகதி வரை |

**தகுதிகள்**

1. அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு சுத்திகரிப்புச் சேவைகள் வழங்கியமை தொடர்பில் வியாபாரப் பதிவு நாள் தொடக்கம் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அபகீர்த்தியாளர் (Blacklist) பட்டியல்படுத்தப்படாத நிறுவனமாகவிருத்தல்.
2. செல்லுபடியாகும் வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
3. 2024-03-31ஆம் திகதிக்கு முன் அண்மைய மூன்று வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பெற்றுள்ள சராசரி வருடாந்த புரள்வு (Average Annual Turnover) பின்வரும் பெறுமதியை விட அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பெறுகை இலக்கம் | சராசரி வருடாந்த புரள்வு (ரூபா) |
|---|---|---|
| 01 | UK/GA/GA1/ DAL/2025 (களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு) | 100 மில்லியன் |
| 02 | UK/GA/GA1/ RAGA/2025 (மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு) | 29 மில்லியன் |
| 03 | UK/GA/GA1/ FCT/2025 (கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - புலுகஹா சந்தி) | 34 மில்லியன் |

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் சகிதம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றில் துணை வேந்தர், களனி பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்கும் நிறுவனங்களுக்கு மேற்கூறப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் அல்லது ஒரு கேள்விக்கு அல்லது இரண்டு கேள்விகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

இது தொடர்பான மேலதிக விபரங்களை உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அவர்களைத் (0112914477, 0112903116 மற்றும் 0112903117) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்விப் படிவங்களை வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட சேவைகளுக்கான இடங்களை 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம். இது தொடர்பிலான கேள்வி முன்னோடிக் கூட்டம் (Pre-bid meeting) 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல நிறுவனங்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளல் கட்டாயமாகும்.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2024-10-07ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றையும் இந்த பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை ஒவ்வொரு இடப்பரப்பிற்கும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு கடித உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''களனி பல்கலைக்கழகத்தின் தலுகம இடப்பரப்பு - 2025, ராகம மருத்துவ பீடம் - ராகம இடப்பரப்பு - 2025, கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - புலுகஹ சந்தி இடப்பரப்பு - 2025'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்த கேள்விப் படிவங்களை 2024-10-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் களனிப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது நிறுவனத்தின் பெயர் மற்றும் அதற்கு இயைபான தகவல்களை வழங்கி உறுதி செய்ததன் பின் அப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகம் அல்லது அவரின் பிரதிநிதியின் முன்னிலையில் கேள்விப்படிவங்களை உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட கேள்விக்கு இயைபான சகல தகவல்களும் கேள்வி விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ளன.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்குப் புறம்பாக நாட்டினுள் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள் காரணமாக மேற்கூறிய திகதிகளில் ஏதாவது மாற்றங்களைச் செய்ய நேரிட்டால் அது தொடர்பான விபரங்களை பல்கலைக்கழகத்தின் www.kln.ac.lk எனும் இணையதளத்தின் மூலம் அறியத்தரப்படும்.

**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
**2024-10-06.**

## உதயநிதிக்கு துணை முதலமைச்சர்... (08ஆம் பக்கத் தொடர்)

கூட்டணி ஆட்சி அமையும் போது முக்கிய கூட்டணி கட்சித் தலைவர்கள் இருக்கும் போது, மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க, அதிகாரப் பகிர்விற்கு உள்ளிட்ட பல காரணங்களுக்காக, பல்வேறு சூழ்நிலைகளில் துணை முதலமைச்சர் பதவிகள் தரப்பட்டுள்ளன.

ஆனால், தி.மு.க.வில் மேற்கண்ட காரணங்களை விட கட்சிக்கு அடுத்த தலைவரை உருவாக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாலும் அடுத்த முதலைமைச்சர் யார்? என்ற கேள்விக்கு விடையாகவும் உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது, என்ற கோணத்திலும் இதைப் பார்க்கலாம். உதயநிதியும் நேரடியாக இந்தப் பொறுப்புக்கு வரவில்லை சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், என்று படிப்படியாகத்தான் உயர்ந்து வந்திருக்கிறார். தி.மு.க கடந்த சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று தற்போது ஆட்சியில் இருப்பதற்கு முக்கிய காரணம் உதயநிதியின் தேர்தல் பரப்புரையும், மக்களிடம் அவரின் அணுகுமுறையும் என்று சொல்லலாம்.

துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டாலும் அந்தப் பொறுப்புக்கான அதிகாரங்கள் என்னென்ன? இந்திய அரசியல் சட்டம் கூறுவது என்ன? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இது பற்றி உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்த போது நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வில், ஒருவருக்கு துணை முதலமைச்சர் என்ற பதவி அளிக்கப்பட்டாலும் கூட நடைமுறையில் அவர் ஒரு அமைச்சர் மட்டுமே. அதாவது முதலமைச்சரால் வழிநடத்தப்படும் அமைச்சரவையில் ஒரு உறுப்பினர். மற்ற அமைச்சர்களுடன் ஒப்பிடுகையில் அவருக்கு கூடுதல் சம்பளமோ பயன்களோ கிடையாது என்று கூறியுள்ளது.

துணை முதலமைச்சர் பதவிக்கு என்று அதிகாரங்கள் அரசியலமைப்பில் வழங்கப்படவில்லை என்றாலும், முதலமைக்களுக்கு அடுத்த இடத்தில் அவர் இருப்பார். முதலமைச்சரின் உத்தரவின்பேரில் அவரது பணிகளையுங்கூட துணை முதலமைச்சர் மேற்கொள்ளலாம். அதேபோல எந்தெந்ததுறைகள் துணை முதலமைச்சருக்கு ஒதுக்கப்படுகின்றன என்பதும் முக்கியம். தமிழ்நாட்டின் நிர்வாகத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டே உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாக தி.மு.க தரப்பில் கூறப்பட்டுள்ளது

தற்போது உதயநிதியின் கட்டுப்பாட்டில் இளைஞர் நலன், விளையாட்டுத் துறை மட்டுமல்லாமல் சிறப்பான திட்ட செயலாக்கத் துறை என்ற பிரிவும். மகளிர் உரிமை போன்ற எந்த ஒரு சிறப்பு திட்டங்கள் தமிழக அரசால் கொண்டு வரப் பட்டாலும் அதில் உதயநிதியின் பங்கும் இருக்கிறது. அப்படி பார்க்கும் போது அவர் ஒரு துறைக்கான அமைச்சராக மட்டுமல்லாமல் பல துறைகளிலும் அதிகாரம் கொண்டவராக இருக்கிறார் எனவே துணை முதலமைச்சர் என்பது அவருக்கு ஏற்கனவே இருக்கும் அதிகாரத்திற்கான அடையாளம் அல்லது அங்கீகாரம் என்று கூடச் சொல்லலாம்.

மற்ற மாநிலங்களில் துணை முதலமைச்சர் பொறுப்பு என்பது பெயரளவுக்கு மட்டுமே இருக்கிறது. ஆந்திராவில் ஒரு கூட்டணிக் கட்சித் தலைவரை சமாதானப்படுத்தவும் கர்நாடகாவில் கட்சி தலைவர்களுக்குள் மோதல் ஏற்படாமல் இருக்கவும், துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டின் நிலை அப்படியில்லை. அரசின் மீதான விமர்சனங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடமையும் உதயநிதிக்கு இருக்கிறது. இவருடைய செயல்பாடுகள் 2026 சட்டமன்ற தேர்தலிலும் எதிரொலிக்கும்

தி.மு.க.வில் வாரிசு அரசியலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்று எதிர்க் கட்சிகள் விமர்சனத்தை முன்வைத்தாலும் பொறுப்பு வழங்கப்பட்ட பிறகு எவ்வாறு செயல்படுகிறார்? மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர். என்பதையும் பார்க்க வேண்டும் திறமையற்றவராக இருந்து, பொறுப்பை சும்மா வைத்துக் கொண்டிருந்தால் விமர்சனம் செய்வதில் அர்த்தம் இருக்கிறது. உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கியது அந்தக்கட்சியின் உள்விவகாரம். அந்தக் கட்சியில் உள்ள மூத்த அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவித்தால் மட்டுமே அது விமர்சனத்திற்குரியதாக இருக்கும். அப்படி இல்லாமல் அனைவரும் ஏற்றுக்கொண்டு வரவேற்கும் போது. மற்றக் கட்சிகள் விமர்சிக்கத் தேவையில்லை. அதே நேரத்தில் உதயநிதியின் அடுத்த செயல்பாடுகளை அவதானிக்கும் பொறுப்பு எதிர்க்கட்சியினருக்கும், மக்களுக்கும் இருக்கிறது.

---

### தாருல் உலூம் அல்~மீஸானிய்யாஹ் அரபுக் கல்லூரி
### குருகொடை, அக்குரணை

## அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கும் புதிய மாணவர்கள் அனுமதி 2025

- அல்குர்ஆன் மனனப் பிரிவிற்கு 2025ஆம் ஆண்டில் தரம் 6, 7இல் கற்கக் கூடிய அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.
- இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கு 2025ஆம் ஆண்டில் தரம் 9இல் கற்கக் கூடிய அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சை அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கு 03.11.2024 ஞாயிறு காலை 9.30 மணிக்கும், இஸ்லாமிய கற்கை பிரிவிற்கு 10.11.2024 ஞாயிறு காலை 9.30 மணிக்கும் கல்லூரியில் நடைபெறும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்களுடன் 2024.11.01ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும் அல்லது நேர்முகப்பரீட்சை திகதியன்று நேரடியாக கல்லூரிக்கு எடுத்து வரவும்.

**தொடர்புகளுக்கு:**
**ஹிப்ழ் பிரிவு : 077 4684535**
**இஸ்லாமிய கற்கை பிரிவு : 077 2791755**

The Secretary
Dhaarul Uloom Al-Meezaniyyah Arabic College,
Kurugoda, Akurana.

---

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### மாவட்டப் பொது வைத்தியசாலை - திருகோணமலை

2025ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த வைத்தியசாலையில் பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ முகவர்கள் / அனுமதிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் / வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ **வழங்கல்**

1. சகல வகையான அலுவலக காகிதாதிகள்
2. சகல வகையான அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் (மரம், உருக்கு, பிளாஸ்டிக், MDF (கட்டில்கள்/ மேசைகள்/ கதிரைகள்/ அலுமாரி போன்றன)
3. சகல வகையான மருத்துவ / சத்திரசிகிச்சை உபகரணங்கள்
4. சகல வகையான ஆய்வுகூட உபகரணங்கள்
5. சகல வகையான வைத்தியசாலை உபகரணங்கள் (வைத்தியசாலைக் கட்டில்கள், ட்ரொலி, உணவு ட்ரொலி, சேலைன் ஸ்டேன்ட்கள், ஒட்சிசன் ஸ்டேன்ட்கள்)
6. மருத்துவ / சத்திர சிகிச்சை / ஆய்வுகூட பாவனைப் பொருட்கள்
7. மின்சார துணைப்பாகங்கள் (மின் குமிழ்கள், மின்சார வயர்கள், பொய்லர், ரிமோட் போன்றன)
8. மின்சார உபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிர்சாதனம், சலவை இயந்திரங்கள் போன்றன)
9. சகல வகையான அலுமினியம் மற்றும் கனரகப் பொருட்கள் (கட்டிடப் பொருட்கள், நிறப்பூச்சுகள், நீர்க் குழாய் துணைப்பாகங்கள், ஆணிகள், கம்பிகள், பிணைச்சல்கள் போன்றன)
10. வைத்தியசாலை துணிகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் (படுக்கை விரிப்புகள், சத்திர சிகிச்சை உடைகள், ஜீ. எஸ். துவாய்கள், திரைச்சீலைகள் போன்றன)
11. சகல வகையான சமையலறை உபகரணங்கள் (அலுமினிய பிடிச்சட்டிகள், பிளாஸ்டிக் உருப்படிகள், கண்ணாடிப் பொருட்கள், கத்தி, நீர் வடிகட்டிகள், கட்டிங் போர்ட் போன்றன)
12. சகல வகையான பாவனைப் பொருட்கள் (சவர்க்காரம், சலவைத் தூள், மொப், நூல் வகைகள், பொலித்தீன், ரெக்ஷின், குப்பை உறைகள், சுத்திகரிப்புப் பொருட்கள் போன்றன)
13. வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் பெற்றரிகள் போன்றன
14. காலணிகள், பைகள் மற்றும் தோல் சார்ந்த உற்பத்திகள்
15. வைத்தியசாலை கட்டில்களுக்கான மெத்தைகள், தும்பு தூரிகைகள், மற்றும் ஏனைய உற்பத்திகள் (இறப்பர் கலந்த உற்பத்திகள்)
16. பால்மா வகைகள்
17. எரிவாயு (சமையலறை தேவைகளுக்கு)
18. மணல், செங்கல் மற்றும் மர வகைகள்
19. மருத்துவ புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்
20. மருந்துகள் மற்றும் கட்டுத் துணிகள் வழங்குதல்
21. கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகள் (கணனி, UPS, CD, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டோனர், ரிபன், கார்ட்ரிச் போன்றன)
22. மூடிகளுடனான குப்பை தொட்டிகள்
23. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
24. சுத்திகரிப்புப் பொருட்கள் (ஆய்வுகூடத்திற்கு)
25. சலவை இயந்திரங்கள், துணி உலர்த்தும் மற்றும் அழுத்தும் இயந்திரங்கள்
26. மருந்து இடும் உறைகள்

❖ **சேவைகள்**

1. அலுவலக உபகரண திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், டுப்ளோ இயந்திரம்)
2. வாகன திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் (மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், குஷன் செய்தல் போன்றன)
3. அலுவலகத் தளபாடங்களின் திருத்தவேலைகள் (மரம் மற்றும் இரும்பு - கதிரை இழைத்தல், நிறப்பூச்சு பூசுதல், மினுக்குதல் போன்றன)
4. வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிர்சாதனம், சலவை இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, மின்னுயர்த்தி, மின் பிறப்பாக்கி இயந்திரம், சடல அறை மற்றும் மருந்துக் களஞ்சிய குளிர்சாதன திருத்தவேலைகள்
5. இரும்புக் கட்டில்கள், நோயாளர் காவிகள், சேலைன் இருத்திகள், சக்கர நாற்காலி திருத்தவேலைகள்
6. மின் உபகரண திருத்தவேலைகள் (மின் விசிறிகள், கொதிகலன், மின் கேத்தல் போன்றன)
7. கட்டிட திருத்தவேலைகள் (50 மில்லியன் ரூபா வரை)
8. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் (50 மில்லியன் ரூபா வரை)
9. சகல வகையான மருத்துவ / சத்திரசிகிச்சை உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
10. சகல வகையான வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
11. அச்சு வேலைகள் (இறப்பர் முத்திரை தயாரித்தல், பெனர் போன்றன)
12. வைத்தியசாலை துணிகளைத் தைத்தல்
13. துப்புரவேற்பாட்டுச் சேவைகள் (உக்கிப்போகாத குப்பைக் கூழங்களை அப்புறப்படுத்துதல்/ இழையான், நுளம்பு கட்டுப்பாட்டு வேலைகள்)
14. கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி இயந்திரங்கள் சார்ந்த உபகரணங்களின் திருத்தவேலைகள்
15. சலவை இயந்திரம், துணி உலர்த்தும் இயந்திரம் மற்றும் அழுத்தும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
16. உற்சவ பொருட்களை வழங்குதல் (கூடாரங்கள் / மேடைகள்/ கதிரை மேசைகள் / ஒலிபெருக்கிகள்/ அலங்காரங்கள்/ வர்ண கொடிகள் போன்றன)
17. ஆய்வுகூட சேவைகள் (திருகோணமலை நகரத்திற்கு அண்மையில்)

❖ **விற்பனை செய்தல்**

அப்புறப்படுத்தப்படும் பொருட்களை விற்பனை செய்தல் / கண்ணாடி / பிளாஸ்டிக் போத்தல் / சேலைன் போத்தல் / அலுமினியம் தொட்டி / எக்ஸ்ரே கார்ட்கள் / சிரட்டைகள்/ டயர் / டியூப் / பெட்டறி/ கார்ட்போர்ட் / காகிதங்கள் / அப்புறப்படுத்தப்பட்ட கட்டிடப் பொருட்கள்

1. சகல வழங்கல் மற்றும் சேவைகளுக்கு வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பதிவுக் கட்டணமாக ஒரு உருப்படிக்கு 500.00 ரூபா வீதம் (உதா - 10 உருப்படிகளானால் 10 x 500 + 5,000.00) (மீளளிக்கப்படாதது) ரொக்கப் பணமாக திருகோணமலை மாவட்டப் பொது வைத்தியசாலை சிறாப்பருக்கு 2024-10-07ஆம் திகதி முதல் 2024-11-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் செலுத்தலாம் என்பதுடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விலைகளைக் கோரும்போது பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பதிவு செய்யப்படாத வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை இந்த நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. உரிய தரத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத மற்றும் விலைகளைக் கோரும்போது பதிலளிக்காத வழங்குநர்களின் பெயர் முன்னறிவித்தலின்றி அகற்றிவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
4. சகல விண்ணப்பங்களையும் ''பணிப்பாளர், மாவட்டப் பொது வைத்தியசாலை, திருகோணமலை'' எனும் முகவரிக்கு 2024-12-07ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. விண்ணப்பப் படிவத்தில் உள்ள சகல விபரங்களையும் சரியாக மற்றும் முழுமையாக ஆங்கிலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.
6. சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - பணம் செலுத்திய பற்றுச்சீட்டு (மூலப் பிரதி)
   - அதிகாரம் வழங்கும் கடிதம் / பிரதிநிதித்துவத்தைக் காட்டும் கடிதம் (பிரதி)
   - வெட் வரி விடுவிப்புச் சான்றிதழ் (பிரதி)
   - வெட் வரி பதிவுச் சான்றிதழ் (பிரதி)
   - வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழ் (பிரதி)

**பணிப்பாளர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**திருகோணமலை.**
2024-10-03.

---

## பாதுகாப்பு அமைச்சு
### இலங்கை விமானப்படை

## விலைமனுக்கோரல்

### இலங்கை விமானப்படையில் MI-171 ஹெலிகொப்டரினை புதுப்பித்தல் (OVERHAUL) மற்றும் விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை (LIFE EXTENSION) நீடித்தல்

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு "இலங்கை விமானப்படைக்கு சொந்தமான இலங்கை விமானப்படையில் MI-171 ஹெலிகொப்டரை புதுப்பித்தல் (OVERHAUL) மற்றும் விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை (LIFE EXTENSION) நீடித்தல்" செய்வதற்கு தகுதி மற்றும் தகைமைகளைக்கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. கொள்முதல் விபரங்கள் பின்வருமாறு.

| தொ இல | கொள்முதல் அடையாள இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | AHQ/21/-FR/M17/1012 | Capital Overhaul and Service Life Extension of SMH 595 (S/No : 59489611073) MI-171 Helicopter of the Sri Lanka Air Force | 2025.04.14 ரூ.9,570,000.00 | 2024.11.17 | 100,000.00 | 2024.11.18 1000 மணி |
| 02 | AHQ/20/-FR/M17/1005 | Capital Overhaul of SMH 4415 (S/No: 171S00144115907U) MI-171 Helicopter of the Sri Lanka Air Force | 2025.04.14 ரூ.8,815,000.00 | 2024.11.17 | 100,000.00 | 2024.11.18 1430 மணி |
| 03 | AHQ/21/-FR/M17/1013 | Capital Overhaul and Service Life Extension of SMH 598 (S/No: 59489611103) MI-171 Helicopter of the Sri Lanka Air Force | 2025.04.14 ரூ10,317,000.00 | 2024.11.17 | 100,000.00 | 2024.11.18 1000 மணி |
| 04 | AHQ/21/-FR/M17/1015 | Capital Overhaul of SMH 4422 (S/No: 171E00144116004U) MI-171 Helicopter of the Sri Lanka Air Force | 2025.04.14 ரூ.8,760,000.00 | 2024.11.17 | 100,000.00 | 2024.11.18 1430 மணி |
| 05 | AHQ/21/-FR/M17/1016 | Capital Overhaul of SMH 4425 (S/No: 171E00144116006U) MI-171 Helicopter of the Sri Lanka Air Force | 2025.04.14 ரூ.8,715,000.00 | 2024.11.17 | 100,000.00 | 2024.11.18 1000 மணி |

2. மனுக்கோரலானது சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB) இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள், செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்முதலுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை 2025.10.07 ஆம் திகதி முதல் தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே எனும் முகவரியில் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் அலுவலக நாட்களில் 0900 மணி முதல் 1500 மணிவரை கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டையில் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள (தொலைபேசி: +94112390719, தொலைநகல்: +94112390720, மின்னஞ்சல் : (procurement@defence.lk) மூலமாக இலவசமாகப் பரிசீத்துக்கொள்ள முடியும். மனுக்கள் 2025.03.17 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
4. மனு ஆவணங்களை பெற்றுக்கொண்ட அனைத்து ஆர்வமுள்ள மனுதாரர்களும் 2024.10.07 ஆம் திகதி 2024.11.17 ஆம் திகதி வரை ஒவ்வொரு வேலை நாளிலும் 0900 மணி முதல் 1500 மணி வரை MI-171 ஹெலிகொப்டர்களை SLAF கட்டுநாயக்கா முகாமில் ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.
5. பூர்த்தி செய்யப்பட்ட மனு முன்மொழிவுகள் டெண்டர் அடையாள எண்ணைக் குறிப்பிட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விரைவுதபால் சேவை மூலமாக கையளிக்கப்படுதல் வேண்டும் தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளத் தேர்வுசெய்யும் மனுதாரர்கள் / மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் நேரத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். நேரிலோ அல்லது நிகழ்நிலை மூலமாக ஏலங்கள் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். கால எல்லை முடிவடைந்த பின்னர மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   **கொள்முதல் கிளை,**
   **2ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே,**
   **இலங்கை.**

6. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் கால எல்லைக்கான முதல் எழுத்துமூல கோரிக்கையின் படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் "பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்" க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.
7. மனுதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு இலங்கை விமானப்படையின் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

   **பிரதான கொள்முதல் அதிகாரி,**
   **கொள்முதல் பிரிவு,**
   **LL2 மாடி, இலங்கை விமானப்படைத் தலைமையகம்,**
   **இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.**

   தொலைபேசி: **+94112347694, +94112441044 (நீடிப்பு 11902)**
   தொலைநகல்: **+94112441553,**
   மின்னஞ்சல்: **cpd@slaf.gov.lk, acpot@slaf.gov.lk**

விமானப்படை தலைமையகம்,
நிலையான அமைச்சரவை நியமனக் கொள்முதல் குழு,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.

# Cook/Care Taker

வெலிமட, ஊவா பரணகம பிரதேசத்தில் அமைந்துள்ள பங்களாவில் தங்கி சமையல் செய்வதற்கு மற்றும் வீட்டைக் கவனித்துக் கொள்வதற்கு நம்பிக்கையான ஆண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

**தொடர்புகள்: 0777-699852**





# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
| MOH/STHRD/SB/E70R: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் வகுப்பறை மற்றும் நூலகத்திற்கான உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E59R/A: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2024 நவம்பர் 04ஆம் திகதி 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.

2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்காக (“பொருட்கள்'') தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். ஒப்பந்தம் கையளிக்கப்படும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 90 நாட்களாகும்.

3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். இல. ரூபா | கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. இல. ரூபா |
|---|---|---|
| **MOE/STHRD/SB/E70R:** | | |
| Lot 01- Furniture for Library Building | 10,400,000.00 | 26,000,000.00 |
| Lot 02- Smart Boards for Library Building | 24,000,000.00 | 60,000,000.00 |
| **MOE/STHRD/SB/E59R/A:** | | |
| Lot 01- CNC Milling Machine | 38,400,000.00 | 96,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட - ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அதிகாரி,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் மேற்கூறப்பட்ட பெறுகை இலக்கங்களில் குறிப்பிடப்படும் விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2024.10.06ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.

7. 2024-11-04ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையின் மூலப் பிரதியுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRD செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
|---|---|
| MOH/STHRD/SB/E70R: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் வகுப்பறை மற்றும் நூலகத்திற்கான உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E59R/A: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

திகதி: 2024-10-06.

# CANOWIN HOTELS & SPAS (PVT) LTD

## உடன் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு

**(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனம்)**

**REF No. CNW/SUP/2025**

2025 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்வதற்கு பொருட்கள்/ உபகரணங்கள்/ சேவைகளின் கீழுள்ள பட்டியலில் உள்ள வழங்கல்களை மேற்கொள்ள திறன் கொண்ட (வர்த்தகர்கள்/ விநியோகஸ்தர்கள்/ உற்பத்தியாளர்கள்) சாத்தியமுடைய வழங்குநர்களை CANOWIN நிறுவனம் தேடுகிறது. எமது தலைமை அலுவலகம் 46/46, 3ஆவது மாடி, கிரீன் லங்கா டவர்ஸ், நவம் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்திருப்பதோடு சேவை, தெற்கு அதிவேகப்பாதை, வெளிப்பன்னையில் அமைந்துள்ளது.

**குறிப்பு:** ஒரு மில்லியன் ரூபாவுக்கு உட்பட்டதாக பின்வரும் பதிவுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

**பொருட்கள்**

1. அலுவலக எழுதுபொருட்கள்
2. கணினி துணைப்பொருட்கள் மற்றும் வலைப்பின்னல் உருப்படிகள்
3. அலுவலக உபகரணங்கள்
4. அச்சுப்பொறிகள், டோனர்கள் மற்றும் காட்ரிட்ஜ்கள்
5. Air Fresheners மற்றும் மொத்தக் கேன்களில் திரவ சவர்க்காரம் மற்றும் Urinal fragrance tablets
6. கழிப்பறை காகித சுருள் மற்றும் பல மடிப்பு காகிதத் துவாய்கள்
7. குப்பை பைகள்/ Dustbins/Garbage bins
8. சலவைக் காரம்/ குளியல் பாத்திரங்களை சுத்தம் செய்யும் இரசாயனங்கள்
9. நீர் பம்பிகள்/ அழுத்தப் பம்பிகள்/ நீரில் மூழ்கக்கூடிய பம்பிகள்/ கட்டுப்பாட்டு பனல்கள் மற்றும் கட்டுப்பாட்டு அலகுகள்
10. உரங்கள்
11. குளிரூட்டல் கோபுர இரசாயனங்கள்
12. தளபாடங்கள் (மரப்பலகை/ உருக்கு)
13. வன்பொருள் பொருட்கள்
14. பாதுகாப்பு உபகரணங்கள்
15. மின் மற்றும் கருவிகள் (வழங்கல் மற்றும் நிறுவுதல்)
16. டயர்கள் மற்றும் டியூப்கள்
17. இலத்திரன் உருப்படிகள் மற்றும் பனல்கள்
18. எல்.ஈ.டி. மின்குமிழ்கள்/ Tube lights/ Flash lights/ Holders மற்றும் மற்ற ஒளிர்விக்கும் பொருட்கள்
19. குடிநீர் போத்தல்கள் மற்றும் நீர் விநியோகிப்பான்களை வழங்கல்
20. மின்பிறப்பாக்கித் தொகுதிகள் மற்றும் உதிரிப் பாகங்களை வழங்கல்
21. குளியல் பொருட்களின் பொருத்தல்கள் - Commode systems, Flushing units, Wash basins, Scotting pans, Bidet spray, Seat covers, Paper roll holders, Taps முதலியன.
22. சுவரில் ஏற்றப்படும் வெளியகற்று விசிறிகள் மற்றும் காற்றோட்ட விசிறிகளின் வழங்கல்
23. celling A grade 1/2 X 1/2 welded mesh net இன் வழங்கல்
24. புல் வெட்டும் இயந்திரத்தின் வழங்கல்
25. சூரிய சக்தி உபகரணங்கள்
26. சமிக்ஞை பலகைகள்
27. தரை விரிப்புகள் (Floor rugs/ Floor mats)
28. ஊக்குவிப்பு உருப்படிகள், அன்பளிப்புகள் (குடைகள், மிதி வண்டிகள், ரீ-சேர்ட்கள், தொப்பிகள் முதலியன.)
29. சி.சி.ரீ.வி. கெமராக்கள் மற்றும் மற்ற தொடர்புடைய உபகரணங்கள்
30. கண்ணாடி, கண்ணாடிக் கதவுகள், பனல்கள் மற்றும் Floor Hinges
31. தீக் காப்பு உபகரணங்கள்
32. Polly Carbonate Sheets (Hollow, Solid)
33. மின்னல் தாங்கி
34. மருத்துவ வழங்கல்கள் (முகக் கவசங்கள், கையுறைகள், தலைக் கவசங்கள், கை கழுவும் சனிடைசர்கள்)
35. பால் மா, சீனி, தேயிலை
36. வெட்டிக் கருவிகள் மற்றும் பாத்திரம்
37. பீங்கான் பொருட்கள் (தட்டுகள், கோப்பைகள், ஏந்துதட்டுகள், தேயிலைத் தொட்டிகள்)

**சேவைகள்**

1. குளியலறைகளுக்காக வாயில் நுழைவுச் சீட்டு கருமபீட அமைப்புகள்
2. பாதுகாப்புச் சேவைகள்
3. முகாமைத்துவச் சேவைகளின் வசதிகள்
4. ஆளணி வழங்கல் சேவைகள்
5. துப்புரவு சேவைகள்
6. எல்.பீ. எரிவாயு அமைப்பை பராமரித்தல், வழங்கல், நிறுவுதல், எல்.பீ. எரிவாயு குழாய்களின் புனைவு, சீராக்கிகள், ஆர்கேட் பகுதிகளில் வடிப்பான் அலகுகள்
7. தரை மற்றும் சுவர்களின் சிறிய திருத்தங்களுக்கான சேவை வழங்குநர்கள்
8. குடிநீர் பௌசர்களின் வழங்கல்
9. கலி பௌசர்களின் வழங்கல்
10. அழுத்தப் பம்பிகளின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு
11. சி.சி.ரீ.வி. கெமரா அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்
12. அலுமினியம் மற்றும் கண்ணாடி வேலைகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்
13. பூச்சி கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் பராமரிப்பு
14. சமிக்ஞை பலகைகள் உட்பட அனைத்து வகையான அச்சு வேலைகள்
15. நேரடி மின்னல் மற்றும் பொங்கற் காப்பு அமைப்பின் வழங்கல் மற்றும் நிறுவுதல், பராமரித்தல்
16. இடத் தேர்வு மற்றும் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல்
17. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைகளின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு
18. மின் தூக்கிகளின் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு
19. நிறப்பூச்சு உட்பட சிவில் வேலைகள் மற்றும் நிர்மாணம்
20. மின்சார அமைப்பை நிறுவுதல்
21. கட்டிடங்களின் கண்ணாடி சுத்தம் செய்தல் மற்றும் சிலந்தி வலை சுத்தம் செய்தல்
22. வளிச்சீராக்கி பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல்
23. தீயணைப்பு இயந்திரம் மற்றும் உபகரண பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல்/ தீ உபகரண கண்காணிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல்
24. மின்பிறப்பாக்கி பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல்
25. கடைகளுக்கு உறைப்பூச்சு நிறுவுதல்
26. பல்வேறுபட்ட அளவுகளுக்கு மறைப்புகள் மற்றும் விளம்பரப் பலகைகள்
27. புகைப்பட சட்டகம்
28. மரப்பலகை வேலை மற்றும் அலுமினிய பொருத்தல்
29. கட்டுவேலை
30. குழாய் பொருத்தல் வேலை
31. நிலத்தோற்றம்
32. குப்பைகளை அகற்றுதல் (உணவுக் கழிவு/ பிளாஸ்டிக்/ காகிதம்)
33. நீர்த் தடாக பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல்

2024 ஒக்டோபர் 07 ஆம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 07 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மக்கள் வங்கி அளுத்கம கிளையின் 084100150019552 என்ற கணக்கு இலக்கத்திற்கு 5,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி அதன் வைப்பு ரசீதை சமர்ப்பித்து கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்த பதிவுக் படிவங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பெற முடியும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை 2024 டிசம்பர் 03 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்கு திரும்ப அளிக்கப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு, 011-7711171 என்ற தொலைபேசி/ 074-0452511 என்ற கைபேசியில் பெறுகைப் பிரிவை தொடர்புகொள்ளவும். தேவைகளின்படி வழங்குநர்/களை தேர்வு செய்யும் உரிமை நிறுவனத்தின் வசமாகும். மேலும், தேர்வு அளவுகோளில் ஏதேனும் வழங்குநர்/கள் தொடர்பில் திருப்தி இல்லாவிட்டால் பதிவில் இருந்து அவ்வாறான வழங்குநர்/களை தனிப்பட்ட விருப்பில் நீக்குவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியும். மேலும், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அப்பால் வேறு வெளித் தரப்பு/ தரப்புகளிடம் இருந்து கொள்வனவு செய்வது அல்லது சேவைகளைப் பெறுவதற்கு நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

CANOWIN HOTELS & SPAS (PVT) LTD
**இல. 46/46, 3ஆவது மாடி,**
**கிரீன் லங்கா டவர்ஸ்,**
**நவம் மாவத்தை,**
**கொழும்பு 02.**



பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானி (CDS), ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். இதன் போது அவர் தற்போதைய சவால்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதில் ஆயுதப்படைகளின் முக்கிய பங்கை வலியுறுத்தினார். சந்திப்பின் இறுதியில் ஜனாதிபதிக்கு மரியாதையின் அடையாளமாக நினைவுச்சின்னம் ஒன்றை பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா வழங்கினார்.



ஹாஷிம் உமர் பௌண்டேசனால் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வின் ஐந்தாவது தொடர் நேற்று 05ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்றது. இதன்போது பீ.எச்.ஆயிஷா (பேருவளை), கேசவதாஸ் கீர்த்தனா (கடவளை), எம்.ஆர்.எஸ்.மனார் அஹ்மட் (திஹாரிய), மின்ஹா (நிந்தவூர்) மற்றும் செல்வி எம்.ஏ.எப்.ரஹுமா (நாங்கல்ல) ஆகியோர் புரவலர் ஹாஷிம் உமரிடமிருந்து மடிக் கணினிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், சுயாதீன தொலைக்காட்சி நிறுவன தமிழ்ப் பிரிவு முகாமையாளர் சித்தீக் ஹனீபா,சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, சமூகஜோதி ரபீக், கட்டார் ஸ்கை அமைப்பின் ஸ்தாபகர் வாஸீத், ஒருங்கிணைப்பாளர் ஆகிப் மொஹம்மத் மற்றும் பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் ஜெய்சங்கர் எழுதிய நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் கையளிப்பு

இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரின் "The India Way: Strategies for an Uncertain world" என்ற ஆங்கில நூல் பாத்ஃபைண்டர் அறக்கட்டளையினால் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலின் முதல் பிரதியை அறக்கட்டளையின் நிறுவுனர் மிலிந்த மொரகொடவினால், நேற்று (04) இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் Pathfinder Foundation இன் நிறுவுனர் மிலிந்த மொரகொட, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாத்ஃபைண்டர் தலைவர் பெர்னாட் குணதிலக்க மற்றும் பாத்ஃபைண்டர் ஆலோசகர் (தொடர்புகள்) காமினி சரத் கொடகந்த ஆகியோர் கலந்துகொண்டனர். 'The India Way: Strategies for an Uncertain World" என்ற நூலின் சிங்கள மொழி பெயர்ப்பை அஜித் பெரகும் ஜயசிங்க செய்துள்ளார்.



# அஸ்ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரியின் 7 ஆவது பட்டமளிப்பு விழா

அஸ்ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரியின் 7 ஆவது பட்டமளிப்பு விழாவும் வெள்ளிவிழாவும் இன்று (06) ஞாயிறு காலை 9 மணிக்கு கல்லூரி வளாகத்தில் அஸ்ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரி தலைவர் டொக்டர் வை.பீ. எம். அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கல்லூரி அதிபர் மௌலவி எம். ரி. அஸ்வர் (தப்லீகி) முன்னிலை வகிக்கிறார். ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் எம்.எச்.எம்.ழபீர் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார்.

விசேட அதிதிகளாக முஸ்லிம் சமய பண்பாண்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ். எம். நவாஸ், முன்னாள் மேலதிக செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர், சம்மாந்துறை உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் எம்.எல்.எச். பஷீர், முன்னாள் அரச அதிபர் ஐ.எம். ஹனீபா, அஸ்ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரி ஸ்தாபக உறுப்பினர் கே.எல்.எம் இஸ்மாயீல், தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ். இஸ்மாலெவ்வை, ஸஹ்த் அறபுக் கல்லூரி அதிபரி யு.எல்.எம் முபாறக், அபூபக்கர் சித்தீக் அறபக் கல்லூரி அதிபர் எம்.எம். கலா முல்லாஹ் ஷர்கிய்யா அறபுக் கல்லூரி அதிபரி அஷ்ஷெய்க் ஏ.எல். எம். அஷ்ரப், அஸ்ஸாலிஹாத் அறபுக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் அஷ்ஷெய்க் கே.எல். ஆதம் பாவா ஆகியோர் பங்கேற்பதோடு கௌரவ அதிதிகளாக பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

# பைத்துல் ஹைரா திறப்புவிழா



ஓட்டமாவடி மஜ்மா நகரில் அமையப் பெற்றுள்ள கொரோனா மையவாடியில் புதிதாக நிர்மாணம் பெற்ற "பைத்துல் ஹைரா" பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்துறை கட்டட தொகுதியும் கடந்த செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியானி மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் ஞாபகார்த்தமாக அவரது கணவர் ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகள், குடும்பத்தினரால் பல இலட்சம் ரூபாய் செலவில் இப்பள்ளியும் கட்டடமும் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் அஸர் தொழுகையோடு பள்ளிவாசல் திறக்கப்பட்டதோடு சீனன்கோட்டை பள்ளிவாசல் முஅத்தின் ஸஹ்ரான் முர்ஸி அதான் நிகழ்த்தினார். பள்ளிவாசல் வக்ஃபு செய்யப்பட்டு அதற்குரிய சாவி பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொருளாளர் கலாநிதி. அஸ்வர் அஸாஹிம் (அல்அஸ்ஹரி), முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான அஷேய்க் எம் எம் முஃத்தி நளீமீ அஷேய்க் எம் ஐ எம் முனீர் உட்பட மேற்படி திணைக்கள உயர் அதிகாரிகள், வக்புப் பிரிவு உதவிப்பணிப்பாளர் எம் எஸ் அலா அஹமட் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம் ரீ எம் ரிஸ்வி, ஓட்டமாவடி பிரதேசசபை முன்னாள் தவிசாளர் ஏ எம் நவ்பர் , உப தவிசாளர் யு எல் அஹமட் லெவ்வை சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் ஷிஹாப் ஹாஜியார் உட்பட பள்ளிச் சங்க உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட உலமா சபை, வாழைச்சேனை ஓட்டமாவடி உலமா சபை முக்கியஸ்தர்கள், கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், சீனன்கோட்டை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை உட்பட கிழக்கு மாகாணம் மற்றும் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பெருமளவிலான முஸ்லிம்கள் பங்குபற்றினர்.

கொரோனாவினால் மரணித்து அங்கு அடக்கம் செய்யப்பட்டோருக்காக குர்ஆன் துவா பிரார்த்தனையும் இடம்பெற்றதோடு கலரா திக்ரு மஜ்லிஸும் நடத்தப்பட்டமை விசேட அம்சமாகும். கொரோனா ஜனாஸாக்களை இரவு பகல் பாராது அடக்கம் செய்வதில் தியாகத்தோடு அர்ப்பணிப்புச் செய்த அனைவருக்கும் பணியாளர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் கையளிக்கப்பட்டன. ஸவாஹிர் ஹாஜியாரின் குடும்பத்தினரால் கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை செயலாளர் எம். ஷிஹாப்தீனுக்கு விஷேட நினைவுச் சின்னம் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதனை சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் ஷிஹாப் ஹாஜியார், ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார், அஹ்ஸர் ஸவாஹிர், ரிகாஸ் ஸவாஹிர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் ஆகியோர் இணைந்து கையளித்தனர். காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான உலமா சபையின் சார்பில் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி முஹம்மத் ஸாஜகான் (பலாஹி) மற்றும் மௌலவி முஹம்மத் மன்சூர் (பலாஹி) ஆகியோரினால் ஏ.இஸட். எம் ஸவாஹிர், அல்ஹாஜ் அஹ்ஸர் ஸவாஹிர் ஆகியோரின் சேவைகளை கௌரவித்து பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். (பேருவளை பீ.ம்.முக்தார்)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளார் ரஜீவ் அமரசூரிய



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2025/2026 ஆம் ஆண்டுக்கான தலைவர் பதவிக்கு, சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய போட்டியிடவுள்ளார்.

அமரசூரிய 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 83% வாக்குகள் பெற்று பெரும்பான்மையுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2020 பங்குனி 28ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்க வருடாந்த மாநாட்டில் 24ஆவது செயலாளராக பொறுப்பேற்கவிருந்த நிலையில், Covid19 பெருந்தொற்றால் ஏற்பட்ட முதலாவது ஊரடங்கின் போது தனது பதவியை ஆரம்பிக்க நேர்ந்தது.

2020–2022 காலப்பகுதியில் செயலாளராக கடமையாற்றிய அமரசூரிய, பெருந்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்ட இக்கட்டான காலத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு தனது பன்முகத் திறன்களை கொண்ட தலைமைத்துவத்தை வழங்கியமைக்காக பாராட்டுக்கள் கிடைத்திருந்தது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான முறைகளைப் பயன்படுத்தி பல புதிய முயற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வழமையான செயல்பாடுகளை முற்றிலும் மாற்றியமைத்ததோடு, சிறப்பாக வழிநடத்தினார்.

# கலாநிதி சுபாஷினி பத்மநாதனின் உரை



இந்தியா மற்றும் இலங்கையை மையமாக கொண்டு "உலகளவில் கலை, கலாசாரம் மற்றும் மதத்திற்கு கலாநிதி ஆனந்த கே. குமாரசுவாமியின் பங்களிப்பு" என்ற தலைப்பில் நாளை அக்டோபர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு கலாநிதி சுபாஷினி பத்மநாதன், சுவாமி விவேகானந்தா கலாசார மையத்தில் (இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவில் ) விரிவுரை ஆற்றவுள்ளார். விரிவுரையைத் தொடர்ந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மொழி, கலாசாரம் மற்றும் நிகழ்த்துகை கலைப்பீடத்தின் சிறப்புப் பட்டப்படிப்பு நாட்டிய மாணவர்களின் நடனமும் நடனப் பாசறையும் இடம்பெறும். "அபிநய தர்ப்பணம்" என்னும் நந்திகேஸ்வரரின்; சமஸ்கிருதப் ஆக்கத்தினை கலாநிதி; ஆனந்த கே. குமாரசுவாமி ஆங்கிலத்தில் "த மிரர் ஒப் கேற்சா"; என மொழிபெயர்த்துள்ளார்.

# வத்தளை புனித அன்னம்மாள் வித்தியாலய ஓவியக் கண்காட்சி

## சிறந்த ஏற்பாட்டுடன் 10, 11, 12 ஆம் திகதிகளில் அனைவரும் கண்டுகளிக்கும் வாய்ப்பு

ஓவியக் கலையானது மொழி, பல்லின மக்கள், நாடு என அனைத்துக்கும் அப்பால் அனைவராலும் இரசிக்கக் கூடியதும் அனைவரையும் மகிழ்விக்கக் கூடியதுமாகும்.

சில ஓவியங்கள் மனதிற்கு இதமானதாகவும், மகிழ்ச்சி தருவதாகவும், கவலைக்கு மருந்தாகவும் கண்ணுக்கு இனிதாகவும், பல அர்த்தங்களை கொண்டு அமைவதுடன் அவற்றைப் பார்த்த மட்டில் மனதில் ஒருவிதமான அமைதிக்கு அது வித்திடுவதையும் காணலாம்.

வரலாற்று ஓவியங்கள் பல பாடங்களை கற்றுத் தருவதுடன், அந்தந்த கால வரலாறுகளை இலாவகமாக எமக்கு புரிய வைக்கின்றன. அந்த வகையில் பண்டையகாலம் தொட்டு ஓவியத்திற்கும் ஓவியக் கண்காட்சிகளுக்கும் மக்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளதை காண முடிகிறது.

அந்த வகையில் நீண்ட இடைவெளிக்குப் பின் சிறந்த ஓவியக் கண்காட்சி ஒன்றை பார்த்து, இரசித்து மகிழும் சந்தர்ப்பம் ஒன்றை வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலய மாணவிகள் வழங்கியுள்ளனர்.

இந்த கண்காட்சி வத்தளை புனித அன்னம்மாள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலவசமாக அதனை அனைவரும் கண்டு களிக்கும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

அந்த கண்காட்சியின் முன்னேற்பாட்டுக்கான ஒரு அம்சமாக அந்த மாணவர்களை பயிற்றுவித்த சித்திரப் பாட ஆசிரியர் அந்த ஓவியத்தை திறம்பட வரைந்துள்ள மாணவிகளுடன் எமது தினகரன் ஆசிரிய பீடத்திற்கு வருகை தந்தார். உண்மையில் அவர்கள் கொண்டு வந்திருந்த ஓவியங்கள் எம்மை பிரமிக்க வைத்தன. அந்த வித்தியாலயத்தின் தமிழ், சிங்கள பிரிவு ஆறாம் தரத்திலிருந்து 13ஆம் தரம் வரையிலான மாணவர்களால் இந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. சிறந்த அனுபவமுள்ள கை தேர்ந்த ஓவியர்களால் தீட்டப்படும் ஓவியங்களைப் போன்று அதற்கு இணையானதாக அவை அமைந்திருந்தன.

உண்மையில் காலத்திற்குப் பொருத்தமான ஒரு முயற்சி.

அந்த ஆசிரியையையும் மாணவிகளையும் எந்தளவு பாராட்டினாலும் தகும். இந்த முயற்சி ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

வத்தளை, புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் இந்த ஓவியக் கண்காட்சி இம்மாதம் 10,11,12 ஆம் திகதிகளில் பாடசாலை மண்டபத்தில் விமரிசையாக நடைபெறவுள்ளது.

கண்காட்சிக்கான பொறுப்பாசிரியையும் ஓவியப் பாட ஆசிரியையுமான ஸ்ரீமதி பெர்னாண்டோ அது தொடர்பில் எம்முடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது;

"நான் இந்த பாடசாலையில் இந்த வருடத்துடன் 35 வருடங்களை நிறைவு செய்து ஓய்வு பெற்றுச் செல்கின்றேன். இதற்கு முன்னரும் இந்த பாடசாலையில் நான் நான்கு தடவைகள் ஓவியக் கண்காட்சிகளை நிகழ்த்தியிருக்கின்றேன்.



அந்த வகையில் இந்த தடவை சிறந்த ஓவியங்களுடன் அதனை மிகச் சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும் என்பதே எனது அவா.

அத்துடன் இந்த மாணவிகளின் திறமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். பிரசித்தமடைய வேண்டும். ஏனைய மாணவர்களுக்கும் அது ஒரு முன்னுதாரணமாகவும் ஊக்குவிப்பாகவும் அமைய வேண்டும் என நினைத்தேன்.

இந்த கண்காட்சியை நடத்துவதற்கு எனக்கு பல நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புக்களும் கிடைத்தன. இந்த மாணவிகள் பொருளாதார நிலைமையில் பின்தங்கி உள்ளவர்கள் என்பதால் சிறப்பாக இதனை செய்து முடிப்பதற்காக ஓவியம் வரைவதற்கான அட்டைகள், தூரிகைகள் உட்பட அதற்கான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு அது மிகவும் வசதியாக அமைந்தது.

இந்த ஓவியக் கண்காட்சியில் 300க்கும் மேற்பட்ட ஓவியங்கள் இடம்பெறுகின்றன. வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இந்த ஓவியக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

மூன்று தினங்கள் நடைபெறும் இந்த ஓவியக் கண்காட்சியில் முதலாவது நாளில் சர்வ மத தலைவர்களை அழைத்து அதனை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து, சிறப்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லோரன்ஸ் செல்வநாயகம்

# டி.பி. ஜாயா ஸாஹிரா கல்லூரி ரொபோட்டிக்ஸ் போட்டியில் பங்கேற்பு



கலாபூஷணம் பரீட் இக்பால்

Defence Service School இல் கடந்த செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை ரொபோட்டிக் மற்றும் வலய மட்டத்தில் புத்தாக்கப் போட்டியில் டி.பி.ஜாயா ஸாஹிரா கல்லூரியைச் சேர்ந்த எம்.ஆர்.எம்.யூசுப், எம்.எஸ். எம். சமீர் ஆகிய இரு மாணவர்கள் பங்கேற்று தமது பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

மாணவன் எம்.ஆர்.எம்.யூசுப் விபத்தை தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட புதுமையான AntiSleep அலாரத்தை காட்சிப்படுத்தினார். டி.பி. ஜாயா ஸாஹிரா பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக இதில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கதாகும் .




# படித்ததும் பகர்வதும் 211



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சிறுவர் நலன் காப்போம்!



ஒரு நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு அந்நாட்டின் சிறுவர்களது நலன்கள் சிறப்பாக பேணப்படுவது மிக அவசியமானதாகும். நாட்டின் முதுகெலும்பாக கருதப்படும் இளைஞர்கள் வளம் மிக்கவர்களாக உருவாகுவதற்கு சிறுவர் நலன் பேணுவதே அடிப்படை என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இன்றைய காலகட்டத்தில் நம் நாட்டில் சிறுவர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளதைக் காண முடிகிறது. வறுமை, வறுமையின் காரணமாக மந்தபோஷனம், கல்வியை தொடர முடியாமை, ஆரோக்கியத்தோடு வாழ முடியாமை, அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலாமை போன்ற பிரச்சினைகள், சுக நல வசதியீனங்கள், பொருத்தமான பொழுதுபோக்குகளுக்கான வாய்ப்புகள் இல்லாமை என இத்தகைய பலவகையான பிரச்சினைகளுக்கு பெருந்தொகையான சிறுவர் ஆளாகியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

விரும்பிய விதத்தில், விரும்பிய பாடசாலைகளில், விரும்பிய துறைகளில் கல்வியை தொடர்கின்ற வாய்ப்புகளும் பெரும்பாலான சிறுவர்களுக்கு இல்லாமல் இருப்பதும் கவனிக்க வேண்டிய விடயமாகும். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் அதேவேளை ஆற்றலும், ஆர்வமும், திறமையுமுள்ள பல மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைக்காமல் இருப்பதும் பெரும் குறைபாடாக கருதப்படுகிறது.

இவற்றோடு சிறுவர்கள், பாலியல் உட்பட பல்வேறு வகையிலான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் கவலைக்குரியதாகும். மிகக் குறைந்த வயது பாலகர் முதல் சிறுவர்கள் வரை வெவ்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களே இத்தகைய பாதக செயல்களில் ஈடுபடுகின்ற கொடூரங்களையும் செய்திகளில் காணமுடிகின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக ஒரு சில பெற்றோர்கள், சிறுவர்களான தம் பிள்ளைகளுக்கு அடித்தல், சூடு வைத்தல், பட்டினி போடுதல் போன்ற கொடுமைகள் செய்வதும், கடுமையாக தண்டிப்பதும் கவனிக்கத்தக்க வகையில் அதிகரித்து வருவதும் துரதிர்ஷ்ட நிகழ்வுகளாகும்.

இத்தகைய முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தி சிறுவர்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்கவும், அவற்றை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது பெற்றோர், ஆசிரியர், சமூக ஆர்வலர்கள், சமூக சேவை நிறுவனங்கள் மீது மட்டுமன்றி அரசாங்கத்தின் மீதுமுள்ள பாரிய பொறுப்புகளாகும்.

## நெஞ்சோடு நெஞ்சம்

### ஜனாதிபதி பிறந்த ஊர்



கடந்த வாரம் “பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம்” பகுதியில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பிறந்த ஊர் தம்புத்தேகம என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் ‘படித்ததும் பகர்வதும்’ பத்தியின் தீவிர இரசிகை கலேவெல ’இன்மொழி’ முஷ்ஹினா ரஷாத், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மாத்தளை மாவட்டத்தில் கலேவெல, மகுல்கஸ்வெவ கிராமத்தில் பிறந்து, நான்கு வருடங்களின் பின்னரேயே தம்புத்தேகம கிராமத்துக்கு குடிபெயர்ந்து அங்கேயே தனது பள்ளிப் படிப்பை மேற்கொண்டார்.” என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

சில தொலைக்காட்சி செய்திகளிலும், பல சமூக ஊடகங்களிலும் கூட, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பற்றிய குறிப்புகளில் அவரின் பிறந்த ஊர் தம்புத்தேகம என்றுதான் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்ததையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

ஆர்வத்தோடு, நேரமொதுக்கி, ஜனாதிபதி ‘என் ஊரவர்’ என மார்தட்டி, இந்த சரியான தகவலைத் தந்த ’இன்மொழி’ எமது நன்றிகுரியவர்.

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### மேல் மாகாண ஆளுநர் ஹனிஃப் யூசுப்

இலங்கையின் பிரபல தொழிலதிபர் ஹனிஃப் யூசுப், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டு, பதவியேற்றுள்ளார்.



இவர் இலங்கையின் புகழ்மிக்க வர்த்தக நிறுவனமான ‘எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி’யின் இணை நிறுவனரும் ஆவார். இவரது தலைமையின் கீழ் இந்நிறுவனம், இலங்கையின் சந்தை மூலதனத்தின் மூலம் மிகப் பெரிய, பலமான நிறுவனமாக வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது பெற்றோர்கள் இந்தியாவின் குஜராத்தைச் சேர்ந்தவர்கள். இந்திய, பாகிஸ்தான் பிரிவினைக்கு சற்று முன்னர் குடிபெயர்ந்தவர்கள். 1953 ஆம் ஆண்டு, இலங்கையின் அப்போதைய பிரதமர் ஜோன் கொத்தலாவலவின் கீழ், இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். குஜராத்தி பெற்றோருக்கு பிள்ளையாக 1958இல் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பிறந்த ஹனிஃப் யூசுப், கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவராவார்.

சர்வதேச மட்டத்தில் 'லெஜண்ட் ஆஃப் லாஜிஸ்டிக்ஸ்' விருது, 'ஆசிய பசுபிக் தொழில் முனைவோர் சிறப்பு சாதனை விருது' போன்ற பல விருதுகளை வென்று சாதனை படைத்ததோடு, 40 நாடுகளில் உலகளாவிய வணிக சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பிய இவருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நியமனம், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதில் அவருடைய பங்களிப்பை அங்கீகரித்துள்ளதுடன், அவர் அங்கம் வகிக்கும் மேமன் சமூகத்தின் பங்களிப்புகளையும் கௌரவித்துள்ளது.

“உண்மையான முன்னேற்றம் என்பது செல்வந்தர்கள் செல்வத்தை குவிப்பது மட்டும் அல்ல, பின்தங்கியவர்களின் நலன் மூலமே அளவிடப்படுகிறது. ஊழலை ஒழிப்பது கடினம், ஆனால் நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் அது சாத்தியமற்றது அல்ல," என்று தனது பதவியேற்பின் போது வலியுறுத்தியுள்ள ஹனிஃப் யூசுப், தனது புதிய பதவி மூலம் மக்களின் நலனுக்கு அளப்பரிய சேவைகள் செய்வார் என உறுதியாக எதிர்பார்க்கலாம்.

மேல் மாகாண ஆளுநராக பதவியேற்றுள்ள ஹாஜி ஹனிஃப் யூசுபை பாராட்டுகிறோம். மக்கள் நலனுக்கான அவரது செயற்பாடுகள் முழுமையான வெற்றி பெற வாழ்த்துகிறோம்

## பிரிந்தார் பெருமை

### அறிவிப்பாளர் ஆயிஷா ஜுனைதீன்



இலங்கையின் புகழ்பூத்த முஸ்லிம் பெண் அறிவிப்பாளர் ஆயிஷா ஜுனைதீன் கடந்த செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி (2024.09.23) காலமானார். மாதம்பையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், புத்தளம் மாவட்டத்தின் முதல் முஸ்லிம் பெண் வணிகவியல் பட்டதாரியாவார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளராக 1973 இல் இணைந்து கொண்ட இவர், முஸ்லிம் சேவையின் பெரும்பாலான நிகழ்ச்சிகளை திறம்பட தயாரித்து வழங்கியுள்ளார். முஸ்லிம் மஜ்லிஸ் – நெஞ்சோடு நெஞ்சம் என்ற மாதர் நிகழ்ச்சி இவரது தயாரிப்பில் இலங்கையில் மட்டுமன்றி தென்னிந்தியாவிலும் மிகப் பிரபலம் பெற்ற நிகழ்ச்சியாக புகழ் பெற்றது. இதனோடு பிஞ்சுமனம், நெடுங்கதை தொடர், சிறுகதைகள், இலக்கிய மஞ்சரி, முத்தாரம், முதுசம், சுற்றுச்சுடர், கலைஞர் விருந்து, கலந்துரையாடல்கள், நாடகங்கள், கவிதை நிகழ்ச்சிகள் என்று பலதரப்பட்ட நிகழ்ச்சிகளையும் சிறப்பாக தயாரித்து வழங்கி புகழ் பெற்றுள்ளார்.

இலங்கை வானொலியின் முதல் முஸ்லிம் அறிவிப்பாளர், சுயாதீன தொலைக்காட்சி, ரூபவாஹினி தொலைக்காட்சிகளின் முதல் முஸ்லிம் பெண் செய்தி வாசிப்பாளர் என பல விடயங்களில் முன்னிலை வகித்து, முன்னுதாரணமாக திகழ்ந்த ஆயிஷா ஜுனைதீன் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். 1983ஆம் ஆண்டு இனக் கலவர காலத்தில் இலங்கை வானொலியில் தமிழ் சகோதரிகள் இல்லாதிருந்த வேளையில் முற்றுமுழுதாக பல நாட்கள் தமிழ் செய்திகளை தொகுத்து, வாசிப்பாளராகவும் செயலாற்றி இவர் வழங்கிய பங்களிப்புகள் ஊடகத்துறையில் இவரது அர்ப்பணிப்பைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பிற்காலத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு, அறிவிப்புப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்ற இவர், மொழிபெயர்ப்புத் துறையில் பங்களிப்பு செய்து வந்தார். இலங்கையின் பிரபல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பான நாடகங்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் இவரது மொழிபெயர்ப்பில் ஒளிபரப்பாகியுள்ளன.

இவரது ஊடகத்துறை பங்களிப்பை பாராட்டி ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட நிறுவனங்கள் இவரைக் கௌரவித்துள்ளன. அரசாங்கத்தின் கலாபூஷணம் விருதின் மூலமும் இவர் சிறப்புப் பெற்றுள்ளார்.

## தகவல் களஞ்சியம்

### க. பொ. த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் பற்றிய பேச்சுக்களே கல்வித்துறையில் இப்போது பரவலாக உள்ளன.

இவ்வருட பரீட்சைப் பெறுபேறுகளின்படி 244,228 பேர் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இது பரீட்சைக்கு தோற்றியவர்களில் 75.72 சதவீதமாகும்.




நாடளாவிய ரீதியில் 3,527 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற இந்தப் பரீட்சைக்கு மொத்தமாக 452,979 பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் அனைத்து பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 13,309 ஆகப் பதிவாகியுள்ளது. இது மொத்த பரீட்சார்த்திகளில் 4.13 சதவீதமாக உள்ளது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அதேநேரம் இந்த முறை பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் தோல்வியைச் சந்தித்த மாணவர்களின் எண்ணிக்கை 2.12 சதவீதமாகப் பதிவாகியிருப்பதும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

இம்முறை வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, நாடளாவிய ரீதியில் காலி சங்கமித்தா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கொழும்பு 7 மியூசியஸ் கல்லூரி, குருணாகல் மலியதேவ வித்தியாலயம் ஆகியன 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளன. 3ஆவது இடத்தை கொழும்பு விசாகா கல்லூரி, நுகேகொடை அனுலா வித்தியாலயம் ஆகியன பெற்றிருக்கின்றன.

## நொறுக்குத் தீனி

### ஆண் என்பவன்..!



ஆண்களைப் பற்றி ஒரு பெண் எழுதியது:

ஆண் என்பவன் கடவுளின் உன்னதமான படைப்பு.

அவன் பெற்றோர்களின் ஆனந்தத்திற்காக, தன் கனவுகளை தியாகம் செய்பவன்.

காதலிக்காக தன் பர்ஸை காலி செய்பவன்.

மனைவி, குழந்தைகளுக்காக அயராது உழைப்பவன்.

மனைவி, தாய், முதலாளிகளின் திட்டுகளை வாங்கி, தாங்கிக் கொண்டே ஓடுபவன்.

அடுத்தவர்களின் ஆனந்தத்திற்காகவே ஆயுள் முழுக்க அர்ப்பணிப்பவன்.

ஆனால் அவனைப் பற்றி எப்படி எப்படியெல்லாம் பேசுகிறார்கள் பாருங்கள்.

ஆண் வெளியில் சுற்றினால் உதவாக்கரை என்போம். வீட்டிலேயே இருந்தால் சோம்பேறி என்போம்.

குழந்தைகளை கண்டித்தால் கோபக்காரன் என்போம். கண்டிக்கவில்லை என்றால் பொறுப்பற்றவன் என்போம்.

மனைவியை வேலைக்கு செல்ல அனுமதிக்காவிடில் நம்பிக்கையற்றவன் என்போம். வேலைக்கு அனுப்பினால் மனைவி உழைப்பில் வாழ்கிறான் என்போம்.

தாய் சொல்வதை கேட்டால் அம்மா பையன் என்போம். மனைவி சொல்வதை கேட்டால் பொண்டாட்டி தாசன் என்போம்.

இப்படி எத்தனை எத்தனையோ!

ஆண்களின் உலகம் தியாகங்களாலும், வியர்வையாலும் சூழப்பட்டது. அது எப்போதும் மற்றவர்களுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டது. புரிந்து கொள்ளுங்கள்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ஸப் (WhatsApp): 0777314207

---



மொழிவாணனின் 02

# என்னவோ என்னவோ என்வாசம் நானில்லை

# காதலுக்கு ஜாதி இல்லை மதமுமில்லையே வேதம் செய்த குருவை கூட அது விடுவதில்லையே

சிறிது நேரம் வரையில்,

அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு,

“ஏன்டி பார்க்கிற உனக்கு என்ன நடந்திச்சி?”

அவள் அருகில் வந்த படியே கேட்டாள் மரகதம்

“அம்மா! அவன் சிங்களவன்! அவனுக்கு உதவி செய்வது பாவம்”

“இந்த நேரத்துல அதெல்லாம் பார்க்கலாது அந்த தம்பியோட கால் எலும்பு முறிஞ்சிருக்கு!”

“முறியட்டும் நல்லா முறியட்டும் அந்த 83 கலவரத்துல எங்கட அப்பாவ துடிக்கத் துடிக்க கொன்றது யாரு? அம்மா உங்களுக்கு அப்பாமேல பாசமில்லையா? படபடப்புடன் கேட்டாள் பார்கவி!

“உங்க அப்பா இந்த உலகத்துல எல்லார் மீதும் அன்பு செலுத்தினாருடி!”

அவள் இப்படிச் சொன்னதும்,

ஆத்திரத்தை, அடக்க முடியாமல் அம்மாவை முறைத்துப் பார்த்தாள் பார்கவி!

“என்ன பார்க்குற அப்படீன்னா, ஆபத்துல இருக்குற இந்த தம்பிய பழிவாங்கச் சொல்றியா?”

“ஆமா அந்த அளவுக்கு என் மனசு கல்லா இருக்கு எங்கேயோ இருந்து வந்த இந்த இவனுக்கு நாங்க உதவி செஞ்சா தோட்டத்துல இருக்கிறவங்க எங்களயபத்தி என்ன நெனைப்பாங்க?”

“அத பத்தியெல்லாம் ஒன்னோட பேச இப்ப எனக்கு நேரமில்லை நான் போய் வாடகைக் கார் ஒன்றை பார்த்துவிட்டு வாறேன்!”

“ஆமா கார் ஒன்ட கொண்டுவந்து அதுல அவன ஏத்தி எங்கயாவது போற டெத்துக்கு அனுப்பி வையுங்க!”

ஆத்திரத்துடன் கத்திவிட்டு,

வாசலில் நின்று,

தாயும் மகளும் பேசிக் கொண்ட வார்த்தைகள் எல்லாம்,

உள்ளே படுத்திருந்த சுரங்கவின் செவிகளிலும் விழுந்தன!

அவனுக்கு நன்றாகவே தமிழ் தெரிந்ததனால்,

பார்கவி சொன்ன வார்த்தைகள் எல்லாம்,

அவன் நெஞ்சில் முள்ளாய் தைத்தன!

இதனால்,

இதற்கு மேலும் அங்கே தங்கியிருப்பதற்கும்,

அவர்களின் உதவியை எதிர்பார்த்திருப்பதற்கும் அவன் விரும்பவில்லை!

எப்படியாவது மெயின் ரோட்டுக்குப் போய்விட்டால்,

ஆஸ்பத்திரிக்கு போய்விடலாம்!

அந்த தமிழ்ப் பெண்மணி விரும்பினாலும் உதவி செய்ய,

அதற்கு அவளுடைய மகள் இடம் கொடுக்க விரும்பவில்லை என்பதை சுரங்க புரிந்து கொண்டான்!

அவர்கள் சரியான துவேசக்காரர்கள் என்று தான் சுரங்க நினைத்தான்.

இதனால்,

இதற்கு மேலும் அங்கே இருக்க அவன் விரும்பவில்லை!

உடனே அந்த இடத்தை விட்டுப் போக வேண்டுமென்று முடிவு செய்தான்!

காயம்பட்டிருந்த காலை,

கட்டிலில் இருந்து கீழே வைத்தான்.

“ஆ ஐயோ!” பயங்கரமாக வலித்தது!

ஆனாலும்!

எப்படியாவது அங்கேயிருந்து வெளியேறி விடவேண்டும் என்ற வெறியுடன்,

அடுத்த காலையும் கீழே வைத்தான்.

அடுத்து,

ஐயையோ!

படாரென்று கீழே விழுந்தான்

அறைக்குள் ஏதோ சத்தம் கேட்டதும்,

ஓடிவந்த பார்கவி,

மெல்ல எட்டிப் பார்த்தாள்.

தட்டுத் தடுமாறிய படியே எழுந்து நின்ற சுரங்க,

கைகளால் தடவிக் கொண்டு,

அறையை விட்டு வெளியே வருவது தெரிந்தது!

அந்தக் காட்சியைப் பார்த்தும் கூட,

அவள் மனதில் இரக்கம் பிறக்கவில்லை!

மாறாக,

ஆத்திரந்தான் வந்தது!

அதேநேரம்,

அவன் வேதனையால் முனகும் ஒலி அவள் காதில் தெளிவாகக் கேட்டது!

காடையர்கள் எல்லாரும் சேர்ந்து அப்பாவைக் கொளுத்திய போது,

இதைவிட பல மடங்கு அவர் வேதனை அடைந்திருப்பாரே என்ற எண்ணம்தான் அவள் மனதில் மேலோங்கி நின்றது!

கருணை என்பது கடுகளவாவது இப்போது அவள் மனதில் இல்லை!

எவர்மீதும் அன்பு செலுத்தக் கூடிய ஓர் இதயமும்,

இப்போது அவளிடம் இல்லை?

நடக்க முடியாமல்,

தரையில் அவன் ஊர்ந்து ஊர்ந்து வருவதைப் பார்த்தும் கூட அவள் மனதில் இரக்கம் பிறக்கவில்லை என்பதைப் பற்றி நினைத்ததும்,

சுரங்கவுக்கு உண்மையிலேயே வியப்பாகத்தான் இருந்தது.

துவேசம் எந்த அளவுக்கு அவள் மனதைப் பாதித்திருக்கிறது என்பதும் அவனுக்குப் புரிந்தது!

இதனால்,

தனது உயிரே போனாலும் கூட பரவாயில்லை,

ஆனாலும் அவளிடமிருந்து எந்த விதமான உதவியையும் பெற்றுக் கொள்ள அவனும் விரும்பவில்லை!

எப்படியாவது ஆஸ்பத்திரிக்குப் போய்விட வேண்டும் என்ற முடிவுடன்,

காலை இழுத்து,

ஊர்ந்து சென்றான் சுரங்க,

வீட்டு வாசலிலேயே காரை நிறுத்தும் வசதி இல்லாததால்,

சற்றுத் தொலைவிலேயே காரை நிறுத்திவிட்டு,

வீட்டை நோக்கி விரைந்து ஓடிவந்த மரகதம்

வியப்பினுள் விழுந்தாள்.

காரணம்,

கைகளைத் தரையில் ஊன்றியபடியே, வீட்டுக்குள் இருந்து பாதி தூரம் வந்திருந்தான் சுரங்க!

சற்றுத் தொலைவில் நின்ற பார்கவி,

வேறு எங்கேயோ பார்த்தபடியே நின்றிருந்தாள்!



“ஏய் பார்கவி என்னடி இது கட்டில்ல இருந்த இந்த தம்பி எப்படி இங்க வந்திச்சி?” படபடப்புடன் கேட்டாள் மரகதம்!

“ம் அதபத்தி எங்கிட்ட ஏன் கேக்குறீங்க வந்தவர்கிட்டயே கேளுங்க சரியான பிடிவாதம் பிடிச்ச ஒரு ஆளு!” வெடுக்கென்று சொன்னாள் பார்கவி.

“இங்கபார் பார்கவி ஒருத்தருக்கு உதவி தேவைப்படும் போது நாம அவுங்களுக்கு உதவி செய்யனும் அதுதான் மனுசத்தனம்!”

“அம்மா உதவி கேக்குறவங்களுக்குத் தான் நாம உதவி செய்யனும். அதுதான் புத்திசாலித்தனமும் கூட!”

“இந்த தம்பி எப்படி இவ்வளவு தூரம் எப்படி வந்திச்சி?”

“தனியா கட்டில்ல இருந்து தரையில் உருண்டு இழுத்து இழுத்து வந்தார் சும்மா சரி எங்கிட்ட உதவி கேக்கல்ல அதுதான் பிடிவாதக்காரர்ன்னு சொன்னேன்!”

வெறுப்பு,

பார்கவியின் வார்த்தைகளில் வெறுப்பு வேர்விட்டிருந்தது!

“இந்த தம்பி வந்த நேரத்துல இருந்தே நீ வெறுப்புடன்தான் பேசிக்கிட்டிருக்கிற இது அந்த தம்பிக்கும் புரிஞ்சிருக்கும் என்னதான் இருந்தாலும் நீ இப்படி பேசுறது கொஞ்சங்கூட சரியில்ல பார்கவி!”

“ஆனாலும் இந்த ஆளு விழுந்தது மொதல்ல பார்த்துவிட்டு வந்து சொன்னது நான்தான்.

அதேபோல மயக்கமா இருந்தப்ப தண்ணி கொண்டு வந்து குடுத்ததும் நான்தான் அதையும் மறந்துடாதீங்க” கரகரத்த குரலில் சொன்னாள் பார்கவி.

மரகதம் எதுவும் பேசாமல் சுரங்கவின் அருகில் நடந்து சென்றாள்.

அவளைப் பார்த்ததும்,

இதழ்விரித்துச் சிரித்தான் சுரங்க.

அவனைப் பார்த்த நேரத்தில் இருந்து மரகதத்தின் இயத்திலும் ஒருவித மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

எனக்கும் இப்படி ஒரு ஆண் பிள்ளை இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்

சுரங்கவும் பார்ப்பதற்கு ஒரு சினிமா நடிகனைப் போல் மிகவும் அழகாகவே இருந்தான்!

இப்படி ஒரு ஆண் பிள்ளையை யார்தான் வெறுக்கப் போகிறார்கள்!

ஆனால் பார்கவி,

“அம்மா! எனக்காக நீங்க ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டீங்க அதுக்காக என்ன மன்னிச்சுடுங்க அம்மா! மரகதத்தின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடியே சொன்னான் சுரங்க.

“ஐயோ இதுல எனக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்ல தம்பி நான் வரும் வரை கட்டில்லயே இருக்காம ஏன் இப்படி இறங்கி வெளிய வந்தீங்க?”

“இல்லம்மா இப்படி கீழே இருக்கிறதுதான் நல்லது கீழ இருக்கிறவங்க மறுபடியும் கீழ விழ மாட்டங்கதானே”

அவன் இறுதியாகச் சொன்ன வார்த்தை,

பார்கவியின் செவிகளில் நன்றாகவே விழுந்தது

அவன் தனக்காகத்தான் அப்படி சொன்னான் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

இன ரீதியாகவும்,

தராதர ரீதியாகவும் நாங்கள் கீழே விழுந்தவர்கள் தான் என்று நினைத்துக் கொண்ட பார்கவி,

சுரங்கவுக்கு அவ்வளவாக முகங்கொடுக்கவில்லை!

சுரங்க எழுந்து நிற்பதற்கு மரகதம் உதவி செய்தாலும்,

அந்த முயற்சி பலனளிக்கவில்லை!

அதேநேரம்,

அவன் எழுந்து நிற்பதற்கு கரம் கொடுத்து உதவ,

பார்கவி அக்கறை காட்டவில்லை!

“ஏய் பார்கவி இப்படி வா இந்த தம்பி எழுந்திருக்கிறதுக்கு கொஞ்சம் உதவி செய்!” கொஞ்சம் கடுமையாகவே சொன்னாள் மரகதம்.

அம்மாவின் அந்தக் கட்டளையை மீறக் கூடிய சக்தி,

பார்கவிக்கு இருக்கவில்லை.

அவள் மெல்ல மெல்ல முன்னால் வந்தாள்!

“வேண்டாங்க உங்க உதவி ஒண்ணும் எனக்குத் தேவை இல்லை!” சொல்லியபடியே அவன் எழுந்திருக்க முயற்சி செய்தபோது,

விரைந்து ஓடிவந்த கார் டிரைவர்,

அவனுக்கு உதவி செய்தான்!

அடுத்து,

கார் டிரைவரும், மரகதமும் சேர்ந்து,

காருக்கு அழைத்துச் சென்றார்கள்.

பார்கவி பார்த்துக் கொண்டே நின்றாள்.

கார் மறைந்த பிறகு,

படபடக்கும் இதயத்துடன் அறைக்குள் வந்தாள்?

கட்டிலில் அமர்ந்து கொண்டார்

அவளது அந்தக் கட்டிலில்,

இதுவரையில் எந்த ஒரு ஆண்மகனும் படுத்துக் கொண்டதில்லை!

ஆனால்,

நேற்று இரவு

கட்டிலின் மேல் கிடந்த தலையணையை எடுத்தாள்.

முகர்ந்து பார்த்தாள்

ஒருவித வாடை வீசியது!

நறுமணமா?

நாற்றமா?

(தொடரும்)

**இக்கதை அடுத்த வாரம் முதல் உங்கள் அபிமான செந்தூரத்தில் தொடர்ச்சியாக வெளிவரும்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 134

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | 13 | |
| 14 | 15 | 16 | | 17 | 18 |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மாணவர்களாகிய உங்களது கல்விக்கண் திறக்கப்படும் இடம்.
(8) பிரித்தானிய நீட்டலளவை இது. பன்னிரண்டு அங்குலங்கள் சேர்ந்தால் வருவது.
(10) ஒலி, பாம்பு ஆகிய இரு அர்த்தங்கள் தருகின்ற சொல்.
(14) சாதாரணமாக எங்குமே காணக்கூடிய பறவை இது.
(17) இடர், அல்லல், துன்பம் என்றெல்லாம் இச்சொல்லை ஒத்தபொருள் சொற்களால் குறிப்பிடலாம்.
(22) இச்சொல்லுக்கு வீதி, தெரு, சாலை ஆகிய ஒத்தபொருள் சொற்கள் உள்ளன.
(24) மிகவும் வேகமாக ஓடக் கூடிய மிருகம். எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் இம்மிருகத்தில்தான் அரசர்கள், போர்வீரர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்தார்கள். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) மணலும் மணல் சார்ந்ததுமான நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்.
(3) இச்சொல்லை கடல், சமுத்திரம் என்றெல்லாம் கூறலாம்.
(5) ஒன்றின்மேல் ஒன்றாகக் கட்டப்படும் கட்டடம்.
(8) அக்காலத்தில் எமது முன்னோர்கள் பயன்படுத்திய கருங்கல் உபகரணம் இது. தானியங்கள், தேங்காய் போன்ற உணவுப்பொருட்கள் பலவற்றை அரைத்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த கருங்கல் உபகரணத்தை கிராமங்களில் இன்றும் சிலர் பயன்படுத்துகின்றனர்.
(10) அகங்காரத்தைக் குறிப்பிடும் சொல். மமதை, செருக்கு, ஆணவம் என்றெல்லாம் குறிப்பிடலாம்.
(18) ஆடு, முயல், குதிரை, வாழை போன்றவற்றின் இளமை மரபுச்சொல். (தலைகீழான சொல்)
(20) உணவுக்காக கறி சமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற இலைகளை இப்பெயரில் குறிப்பிடுவர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 133

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பருந்து 06. குகை 08. காகம்
13. அலை 15. பாகன் 19. கன்று 22. விம்பம்

**மேலிருந்து கீழ்**

01. பகைவன் 02. குரு 04. காது 05. அம்பு
09. கலைஞன் 12. பால் 19. கவி 21. ஆறு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 132

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம். மாஹில்**
தரம் 04, ஒக்ஸ்போட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

**2. எம்.ஆர். முஹம்மது இஸ்ஹாக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி வீதி, இரத்மலானை.

**3. த. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 100, உடையார் வீதி, காரைதீவு.

**4. ஹம்தா மரியம் முஜாஹிட்**
தரம் 03, தாருல் உலூம், மு.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கன.

**5. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**6. அமாஷ் ஜின்னா**
தரம் 06, நாங்கல்ல மு.வித்தியாலயம்,
இல. நாளிரா மன்ஸில், நாங்கல்ல, துல்ஹிரிய.

**5. எம்.எம்.எப். மிஹ்ரா**
தரம் 01C, கமு/சது/அல் அர்ஷத் ம. வித்தியாலயம்,
மலையடி கிராமம் 03, சம்மாந்துறை.

**5. பாத்திமா ஆலா**
தரம் 05, வீதியவல, நாகொல்லாகொட.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 134
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அருளுடைமை: அல்லல் அருளாள்வார்க் கில்லை வளி வழங்கு மல்லன்மா ஞாலங் கரி**

***தெளிவுரை :***
*அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.*

# பேரரசர்களின் அரண்மனை



சீனாவில் "தடைசெய்யப்பட்ட நகரம்" என்ற அரண்மனை நகரம் அமைந்துள்ளது. தியானென்மென் சதுக்கத்தின் வடக்கே, ஒரு இலட்சம் கைவினைஞர்கள் உள்ளிட்ட 10 இலட்சம் பேர் உருவாக்கியது தான் இந்த 178 ஏக்கர் பரப்பளவில் (720,000 ச. மீற்றர்) உள்ள தடை செய்யப்பட்ட நகரம் (Forbidden City).

சீனாவில் மிக அதிகம் பேரால் (ஆண்டுக்கு 14மில். பார்வையாளர்கள்) பார்வையிடப்படும் இடம் இதுதான்.

1406இல் மிங் வம்சத்தின் மூன்றாவது பேரரசர் யாங்ல ஆட்சியின் போது, 1406 இல் தொடங்கி, 1420இல் இதைக் கட்டி முடித்தார்கள். இந்த அரண்மனை நகரத்தில் 24 பேரரசர்கள் தங்கியிருந்து 492 ஆண்டுகள் சீனாவை ஆண்டார்கள் என்பது சரித்திரம். சீன வழமைப்படி, நாட்டின் பேரரசரை விண்ணகத்தின் மகன் (Son of Heaven) என்று அழைத்து வந்ததோடு, விண்ணகத்தின் உச்சபட்ச அதிகாரம் பேரரசர் மீது பொழியப்பட்டுள்ளதாகவும் மக்கள் நம்பினார்கள். இது புனிதமான இடம் என்பதால், பொதுமக்களுக்கு இங்கு செல்ல அனுமதியில்லை. "தடை செய்யப்பட்ட நகரம்" என்று இந்தக் காரணத்திற்காகவே, சொல்லப்படுகின்றது. எல்லா இடங்களுக்கும் செல்ல முழு அதிகாரமும் உரிமையும் கொண்டவர் பேரசர் மட்டுமே! ஆணிகளைப் பயன்படுத்தாமல், மரத் துாண்களையும் உத்திரங்களையும் இணைத்து, எழுப்பப்பட்டுள்ள இந் நகரத்து சுவர்கள் மற்றும் துாண்கள், ஜன்னல்களுக்கு பெரும்பாலும் சிவப்பு, மஞ்சள் வர்ணங்களே பூசப்பட்டுள்ளன.சீனர்களுக்கு சிவப்பு என்பது அதிர்ஷ்டம், மகிழ்ச்சி, ஆசீர்வாதம் என்பவற்றைக் கொண்டுவரும் நிறமாகும். Ming, Qing வம்ச காலத்தில் மஞ்சள் என்பது அரச குடும்பத்திற்குரிய நிறமாக இருந்து வந்துள்ளது.

இந்த இராட்சத அரண்மனையின் கடைசிப் பேரரசர் பூயி (Puyi) 6 வயதில் பதவி துறந்து (1912) சீனக் குடியரசு மலர்ந்ததும், அரண்மனை அருங்காட்சியகமானது. இது யுனெஸ்கோவினால் 1987முதல் சீன புராதனச் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டது. பிரமாண்டமான இந்த நகரத்திற்குள் 90 அரண்மனைகளும் 980 கட்டடங்களும் இருக்கின்றன.

மொத்தம் 8707 அறைகள் இங்கே இருப்பதாக, 1972 கணக்கெடுப்பு ஒன்று கூறுகின்றது. அதே சமயம் இந்தப் பேரரசர் 10,000 அறைகள் கட்ட விரும்பியதாகவும், இது விண்ணகத்தில் இருக்கும் மொத்த அரண்மனைகளின் எண்ணிக்கைக்கு இணையாக இருப்பதாகச் சொல்லி கடவுள் மிகுந்த கோபம் கொண்டதாகவும், அதனாலேயே 9999.5 அறைகள் மட்டுமே கட்டப்பட்டதாகவும் செவிவழி வந்த ஒரு கதை சொல்வதும் இங்கே கவனிக்கத்தக்கது.



**இவ்வார மழலை**

**கி. கிருஷ்ணஜா**

கிஷாந்தன் – ஜெயகௌரி

**சிறுவர் சித்திரங்கள்**



எஸ்.எஸ். ஷலாஹ்
தரம் 07C, அல் முபாரக் தேசிய பாடசாலை, மல்வானை

# மூங்கில்களின் உலகம் – சீனா



மூங்கில் என்பதும் ஒரு புல் இனந்தான் என்பது ஆச்சரியமான விடயம். உலகத்தில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு மூங்கில் மரங்கள் சீனாவில் வளர்கின்றன. அதனால்தான் "மூங்கில்களின் உலகம்" என்ற அடைமொழியுடன் சீனா அழைக்கப்படுவதுண்டு.

மூங்கில்களில் பல இனங்கள் உண்டு. குறிப்பாக 'சைனீஸ் பெம்பூ' (Chinese bamboo) ரக மூங்கில் சீனாவின் விசேட அடையாளங்களில் ஒன்று. "Dendrocalamus giganteus" என்பது இதன் தாவரவியல் பெயர்.

சீன மூங்கில் வளர்வதற்கு செழிப்பான மண்ணும், தண்ணீரும், சூரிய வெளிச்சமும் தேவை. இவை அனைத்துமே சரியாய் அமையப் பெற்றது சீனா. மூங்கிலின் விதைகள் மண்ணில் விதைக்கப்படுகின்றன. தண்ணீர் ஊற்றி உரமிட்டாலும் மூங்கில் முளைப்பதற்கான அறிகுறியே வெளியே தெரியாது.

ஐந்து ஆண்டுகள் சென்றாலும் இந்த விதை முளைக்காதாம். மூங்கில் மரம், மண்ணில் வலிமையான அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டுதான் மேலே முளைவிடும். தண்ணீர், சிறப்பு பராமரிப்பு எல்லாமே வலிமையான வேர்ப் பகுதியை உருவாக்கும். ஐந்தாவது ஆண்டில் மூங்கில் கொடுக்கும் பலனுக்கு வேர்தான் பலம். நாம் சற்றும் எதிர்பாராத வேகத்தில் தினசரி இரண்டு அடி என்கிற கணக்கில் மூங்கில் கிடுகிடு வளர்ச்சியை காட்டும். தொடர்ச்சியாக 45 நாட்கள் முதல் 55 நாட்கள் வரை வளரும். அதிவேகத்தில் வளரும் சீன மூங்கில்கள் 90 - 135 அடி உயரம் வரை வளர்ந்து நிற்கும். மற்றவகை மூங்கில்களைவிட சீன மூங்கில் வணிக ரீதியாக ஏராளமான பலன்களைக் கொடுக்கின்றன.

பொறுமையின் உதாரணமாக சீனாவின் மூங்கில் செடியைச் சொல்வார்கள். சீன மூங்கிலைப் பயிரிட்டு தண்ணீர் ஊற்றுவார்கள். பருவங்கள் போகும் ஆனால் செடி ஒரு அங்குல அளவு கூட வளராமல் அப்படியே இருக்கும். நான்கு வருடங்கள் செடி அப்படியே இருக்கும். செடிக்குத் தண்ணீர் ஊற்றுபவர் பொறுமையுடன் அதை பராமரிக்க வேண்டும். பிறகு சட சடவென்று அசுர வேகத்தில் ஒரே ஆண்டில் 80 அடிகள் உயரம் வளரும்.

## பலதையும் கற்றிடுவோம்

சிறுவர்களே சிறுவர்களே கேட்டிடுங்க
சீராக கல்வியைக் கற்றிடுங்க
காலம் கடந்தால் கடந்தது தான்
நீங்கள் அதனை புரிந்திடுங்க

கணனி ஆங்கிலம் கற்றிடுங்க
புத்தகங்கள் பலதையும் படித்திடுங்க
இனிமையாக எல்லோருடனும்
இணக்கமாகவே பழகிடுங்க

அம்மா, அப்பா உறவினர்களிடம்
அன்பாய் நீங்கள் நடந்திடுங்க
சும்மா நேரத்தை வீணாக்காமல்
சுறுசுறுப்பாய் இயங்கிடுங்க

நல்ல நண்பர்களுடன் சேர்ந்திடுங்க
நன்மைகள் பிறருக்கு செய்திடுங்க
இல்லம் புகழவே வாழ்ந்திடுங்க
இழிவு செயல்களை விட்டிடுங்க

சமயப் பணிகளைத் தவறாமலே
செய்ய மனதை பழக்கிடுங்க
தமக்குள் உள்ள திறமைகளை
தரணிக்கே எடுத்துக் காட்டிடுங்க

என். மொஹமட் லாபீர் - பதுளை...



குளிர் காலத்தில் பாது காப்பு பெற ஒரு கிராமம் மறையாத சூரியனை உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

# மறையாத சூரியனை உருவாக்கிய கிராமம்



பூமியில் வாழும் ஒவ்வொரு உயிரினத்திற்கும் சூரியன் மிகவும் முக்கியமானது. கடும் குளிராக இருந்தால் அனைவரும் வெயில் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பார்கள். குளிர் ஏற்பட்டால் அதிலிருந்து தப்பிக்க வெப்பமூட்டியை பயன்படுத்தலாம். எந்த ஒரு சாமானியனும் யோசிக்கக்கூட முடியாத ஒரு தீர்வை ஒரு கிராமம் கண்டுபிடித்துள்ளது. மறையாத செயற்கை சூரியன்தான் அந்த தீர்வு.

இத்தாலியில் உள்ள விக்னெல்லா கிராமம் தான் இந்த சாதனைக்கு சொந்தமான கிராமம். இது இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்து இடையே உள்ளது. 13ஆம் நூற்றாண்டில் மக்கள் விக்னெல்லாவில் குடியேற ஆரம்பித்தனர். இங்கு நவம்பர் 11 முதல் பெப்ரவரி 2ஆம் திகதி வரையில் சூரிய ஒளி மிக மிக குறைவாகவே இருக்கும். இந்த நாட்களில் விக்னெல்லா கிராமத்தில் இருந்தால் ஏதோ அந்தாட்டிக்காவில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். இந்த கிராமத்தில் 200 பேர் வசிக்கின்றனர். பல நூற்றாண்டுகளாக, சூரியன் மறைந்து, இரண்டரை மாதங்களுக்குப் பிறகு மீண்டும் தோன்றும் செயல்முறை இருந்து வருகிறது. 2005ஆம் ஆண்டு சுமார் ரூ.1 கோடி நிதி திரட்டப்பட்டு, ஊர் எதிரே உள்ள மலையில் பிரமாண்ட கண்ணாடி அமைக்கும் பணி தொடங்கியது. நவம்பர் 2006இல், கிராம மக்கள் மலையின் மேல் 40 சதுர மீற்றர் கண்ணாடியை நிறுவினர். அதன் எடை 1.1 டன். இது 1100 மீற்றர் உயரத்தில் நிறுவப்பட்டது. குறைந்த அளவு சூரிய ஒளி உயரமான இடத்தில் உள்ள கண்ணாடி மீது படும்போது அது ஒளியை எதிரொளிக்கும். இதன் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு விக்னெல்லா கிராமம் முழுமையாக சூரிய ஒளியை பெறத் தொடங்கியது. இப்பிரச்சினைக்கு அங்குள்ள மக்கள் தீர்வு கண்ட விதம், முழு உலகத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

# 'பிள்ளைகளைப் பாதுகாப்போம் – சமமாக மதிப்போம்'

சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி 'பிள்ளைகளைப் பாதுகாப்போம் – சமமாக மதிப்போம்' என்ற 2024 ஆம் ஆண்டுக்கான தொனிப் பொருளில் உலகளவில் கொண்டாடப்பட்டது. அத்தோடு சிறுவர் வாரம் மற்றும் சிறுவர் மாதங்களும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்களே எதிர்காலத்தில் ஒரு குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் கட்டியாளவேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களாக உள்ளனர்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். ஆகையால் அவர்களது சுதந்திரம், உரிமை, கடமை, குடும்பம், பாடசாலை, சமூகம் சார்ந்து பாதுகாப்பானதாகவும் நீதியானதாகவும் அமைவதுடன் நாடளாவிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் சிறுவர்களின் உலகத்தினை பாதுகாப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

சிறுவர்களுக்கு இடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு 14.12.1954 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ் ஆண்டுக்கான சிறுவர் தின தொனிப் பொருளில் அடங்கியுள்ள "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" என்ற பதம் இன்றைய நிலையில் பெரும் சவால்களுக்குள்ளாகியுள்ளது. மத்திய கிழக்கு போர் மூட்டமும், இஸ்ரேல் பலஸ்தீன யுத்ததால் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறுவர் தினம் சிறுவர்கள் வாழ்வியலில் முக்கியமானதாகும். சிறுவர்கள் தங்கி வாழும் கூட்டத்தினரை சார்ந்துள்ளதால் பொற்றோர் அல்லது பாதுகாவலர்களால் முறையான வழிகாட்டல்களின் கீழ் வளர்க்கப்பட வேண்டியவர்கள். ஆகையால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஏனையோர் சிறுவர் நலனில் பெரிதும் அக்கறை கொள்ள வேண்டும். உலகின் நவீன மாற்றங்களின் பால் சிறுவர்களும் ஈர்க்கப்படுவதால் சிறுவர்களின் அடிப்படை உரிமை தொடர்பில் பெரியோர்களான நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

அடிப்படை சிறுவர் உரிமைகள்

1. வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை
2. பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை
3. பெற்றோரிடமிருந்து தனிமைப்படுத்தப்படா திருப்பதற்கான உரிமை
4. கருத்தை வெளிப்படுத்தும் உரிமை
5. சிந்திப்பதற்கும் மனசாட்சிப்படி நடப்பதற்குமான உரிமை
6. சமயமொன்றை பின்பற்றுவதற்கான உரிமை
7. போதிய கல்வி பெறும் உரிமை
8. பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
9. கொடூரமான தண்டனைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
10. சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்குமான உரிமை

போன்ற உரிமைகள் சர்வதேச ரீதியிலும் நமது நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்பது நம் முன் இருக்கும் கேள்வியாகும்.

உலகின் பல நாடுகளில் சிறுவர்கள் பல பாதிப்புகளுக்கு உள்ளாகி கஷ்டப்படுவதை நாம் நாளாந்தம் பார்க்கிறோம். குறிப்பாக பாடசாலை கல்வியை பெற வேண்டிய ஏராளமான சிறுவர்கள் இன்று வீட்டு வே லைகள், கூலி தொழில்களில் ஈடுபட்டு பல அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, தொழில்களில் ஈடுபடும் சிறுவர்களுக்கான உரியகூலி வழங்கப்படுகிறதா? அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகிறதா? இதுவும் எம்முன் உள்ள சந்தேகங்களாகும். அதிகளவான சிறுவர்கள் தங்களது சக்திக்கு மேற்பட்ட வேலைச் சுமைகளுக்குள் சிக்கி வேதனைப்படுகிறார்கள். இவ்வாறான சூழல்களில் இருந்து சிறுவர்கள் விடுபட வேண்டும்.

இலங்கையில் 15,000 - 30,000க்கும் மேற்பட்ட வீதி சிறுவர்கள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இச் சிறுவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் வலைக்குள் சிக்கி சின்னாபின்னமாக்கப்படலாம். இவர்கள் சமூக விரோத செயற்பாடுகளுக்கு உள்ளாக்கப்படக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

இன்று சில தாய்மார்கள் வறுமையின் காரணமாக வேலை வாய்ப்பு நிமித்தம் வெளிநாடு செல்கின்றனர். இதனால் அவர்களது பிள்ளைகள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். உறவினர்கள், குடும்பத்தவர்களின் பராமரிப்பின் கீழ் இவர்கள் வளர்க்கப்பட்டாலும் அவர்களுக்கான உரிய கல்வி, உணவு மற்றும் பாதுகாப்பு என்பன போதியளவு கிடைக்கிறதா?

பொற்றோர்களின் அக்கறையின்மையால் பல சிறுவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர்கள் எப்போதும் அன்பு காட்டப்பட வேண்டியவர்கள். அத்தோடு அவர்கள் கௌரவிக்க, பாராட்டப்பட வேண்டும். அவர்கள் செய்யும் சிறிய தவறுகளுக்காக பாரிய தண்டனைகளை வழங்காமல் நல்ல அறிவுரை மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

ஆகவே ஒவ்வொருவரும் ஓர் ஆசானாக, வழிகாட்டியாக, நண்பராக, சிறுவர்களை அணுகி இருவழித் தொடர்பாடலினூடாக அவர்களை வழிநடத்தவும் பாதுகாக்கவும் மதிக்கவும் முனைந்தால் மாத்திரமே எதிர்காலத்தில் வளமான சமூகத்தையும் சிறப்பான நன்மதிப்புள்ள ஒரு நாட்டையும் கட்டியெழுப்புவது சாத்தியமாகும் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

எம்.ஏ. அத்தாஸ் – மாத்தறை...

# மஞ்சரி விளையாட்டு




# இலங்கைக்கான கிரிக்கெட்டை தேடும் சனத்

சனத் ஜயசூரிய இலங்கை அணியின் பயிற்சியாளரானது ஒரு தற்செயல் நிகழ்வு. ஆரம்பத்தில் இடைக்கால பயிற்சியாளராக இருந்து அதுவே சற்று நீடிக்கப்பட்டு, பின்னர் நிரந்தர பயிற்சியாளராக ஓர் ஆண்டுக்கு அவர் நியமிக்கப்பட்டது வரையான பயணம் என்பது சனத் ஜயசூரிய கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்.

'அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தும் சர்வதேச அணி ஒன்றுக்கு பயிற்சியாளர் ஒருவராக செயற்பட வேண்டாம்' என்று ஜனசூரியவுக்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கிய நிலையிலேயே அவர் இலங்கை அணியின் பயிற்சியாளர் பொறுப்பை நிரந்தரமாக வகிப்பதற்கு பொறுப்பேற்றிருக்கிறார்.

அந்தப் பொறுப்பை அவருக்கு வழங்க கிரிக்கெட் நிர்வாகம் நாடியபோது மருத்துவ ஆலோசனைகளை புறந்தள்ளிவிட்டு 'ஆம்' சொல்லிவிட்டார். அப்போது அவருக்கு தலைமை பயிற்சியாளருக்கான ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது, எவ்வளவு சம்பளம், கொடுப்பனவுகள் என்ன... என்ன... என்று எது பற்றியும் யோசிக்கவில்லை.

'அதனை தயாரித்து எனக்குப் பின்னர் அனுப்புங்கள்' என்று இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வாவிடம் குறிப்பிட்ட ஜயசூரிய பேச்சுவார்த்தை அறையில் இருந்து வெளியேறி நேராக வீரர்கள் அறைக்குச் சென்றுவிட்டார்.



பயிற்சியாளர் ஒருவரை தேர்வு செய்து பணியமர்த்துவதென்பது சாதாரணப்பட்டதல்ல. பாடசாலை அணி ஒன்றுக்கு பயிற்சியாளர் ஒருவரை தேர்வு செய்வதென்றால் கூட ஏகப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டி இருக்கும். அப்படி இருக்க ஜயசூரிய போன்ற ஒருவர் பயிற்சியாளர் ஆனது தற்செயல் என்றபோதும் அவ்வாறான ஒருவரை நிரந்தர பயிற்சியாளராக சம்மதிக்க வைத்தது என்பது தற்சயல் என்பதற்கு அப்பால் இலங்கை கிரிக்கெட் சபையை பொறுத்தவரை அது அவர்களின் அதிர்ஷ்டம் என்று கூட குறிப்பிடலாம்.

கடந்த காலங்களில் இலங்கை சந்தித்த அடுத்தடுத்த தோல்விகளால் அணி, அதில் இருக்கும் வீரர்கள் பட்ட துன்பத்தை விடவும் இலங்கை கிரிக்கெட் சபை சந்தித்த ஏச்சுப் பேச்சுகள் அதிகம். அந்த சூழலில் ஜயசூரியவின் வருகை என்பது அவர்களைப் பொறுத்தவரை மிகப்பெரிய விடுதலை.

ஜயசூரியவைப் பொறுத்தவரை அவருக்கு பயிற்சியாளராக இருந்த முன்னனுபவம் இல்லை. உங்களுக்கு கிரிக்கெட் பயிற்சியாளராக செயற்பட முடியுமா? என்று ஊடகங்கள் அவரிடம் கேட்டபோது கூட, 'பொதுவாக கொஞ்சம் தெரியும்' என்று பொதுப் படையாகத் பதிலளித்திருந்தார். அவர் கூறிய பதில் வெளிப்படையானது. தனக்குப் பயிற்சியாளராக செயற்பட முடியுமா என்பது ஆரம்பத்தில் அவருக்குக் கூடத் தெரியாது.

ஆனால் ஒன்று மாத்திரம் எல்லோருக்கும் நிச்சயமாகத் தெரியும். கிரிக்கெட்டைப் பொறுத்தவரை ஜயசூரியவுக்கு எந்தப் பொறுப்பை வழங்கினாலும் அதனை கச்சிதமாகச் செய்வார் என்பது அனைவரும் நம்பிய ஒன்று. ஒரு வீரராக, அணித் தலைவராக, கிரிக்கெட் உலகில் புதுமைகளைச் செய்த ஒருவராக அவரது இருபது ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கை இதற்கு நல்ல உதாரணம்.

பின்னர் இலங்கை தேர்வுக் குழு தலைவராகவும் அணியில் செய்ய வேண்டிய முக்கிய பல மாற்றங்கள் மற்றும் புதிய வீரர்களை அணிக்கு உள்வாங்கியது என்று பல வேலைகளைச் செய்திருந்தார். அவர் தேர்வுக் குழுத் தலைவராக இருந்தபோது தான் இலங்கை அணி 2014 டி20 உலகக் கிண்ணத்தை வென்றது.

அந்த உலகக் கிண்ணத்தை வெல்வதில் ஜயசூரிய செய்த சின்ன காய் நகர்த்தல் முக்கியமாக இருந்தது. அப்போது தினேஷ் சந்திமால் தலைமையிலேயே இலங்கை அணி டி20 உலகக் கிண்ணத்தில் களமிறங்கியது. ஆனால் ஆரம்பப் போட்டி ஒன்றில் இலங்கை அணி மந்தமாக ஓவர்களை வீசியதால் சந்திமால் ஒரு ஆட்டத்தில் தடை விதிக்கப்பட்டார். அவர் இல்லாமல் அணி சிறப்பாக செயற்பட்டதோடு அணியின் கட்டமைப்பு முழுமை பெற்றிருந்தது. இதனைப் பார்த்த ஜயசூரிய அணித் தலைவரிடம் புரியவைத்து அவரை விட்டுவிட்டு போட்டிகளில் இலங்கையை ஆடச் செய்து உலகக் கிண்ணத்தையும் வெல்ல வழி நடத்தினார்.



ஜயசூரிய 2023 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அணியின் பயிற்சி ஆலோசகராகவே நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு அடுத்து டி20 உலகக் கிண்ணத்திலும் இலங்கை அணி படுதோல்வி அடைந்தபோது பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் வெளியேற முடிவெடுத்தது எதிர்பார்த்ததே.

ஆனால் ஜயசூரியவிடம் இடைக்கால பயிற்சியாளர் பொறுப்பு வழங்கப்பட்டது உண்மையில் இடைவெளி நிரப்புவதற்கு மாத்திரம் தான். அந்த இடைவெளியில் அவர் செய்தது எல்லோருக்கும் தெரியும். இந்தியாவுக்கு எதிராக 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை அணி ஒருநாள் தொடரை வென்றது, பின்னர் இங்கிலாந்து சென்று தொடரை இழந்தபோதும் கூட ஓவலில் நடந்த கடைசி டெஸ்ட் போட்டியில் வென்றது, கடைசியில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–0 என முழுமையாக வென்றது. எல்லாவற்றிலுமே சனத் ஜயசூரியவின் வழிகாட்டல் தீர்க்கமானது.

'அவர்களுக்குத் தேவையான மன உறுதியை வழங்குவதே எனக்கு முக்கியமாக இருந்தது. அடிப்படையில் அவர்களுக்கு என் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். அவர்கள் என்னை நம்பும் இடத்திற்கு வந்தார்கள்.

அவர்களிடம் திறமை இருக்கிறது.

ஆனால் அவர்கள் அடிக்கடி அந்தத் திறமையை வெளிப்படுத்தினார்களே ஒழிய தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்தி விளையாடவில்லை. அதற்கு தமது பயிற்சியாளர் மீது இருக்கும் நம்பிக்கை, அவர்களின் தன்னம்பிக்கை மிக முக்கியம்' என்று ஜயசூரிய அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

தேசிய அணி ஒன்றுக்கு பயிற்சியாளராக இருப்பவர் வெறுமனே தொழில்நுட்ப விடயங்களை கற்றுக்கொடுப்பவர் அல்ல. அவர் ஒரு சிறந்த நிர்வாகியாகவும், வழி நடத்துனராகவும் இருக்க வேண்டும். அதனை ஜயசூரிய நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்.

குறிப்பாக அணியின் நடத்தை பற்றி அவர் விசேட கரிசனை காண்பிப்பது தெரிகிறது. அதேபோன்று அணியில் எவருக்கும் நிரந்தர இடம் இல்லை என்பது ஜயசூரிய பயிற்சியாளராக வந்த பின்னர் தான் அணியில் இருக்கும் சிரேஷ்ட வீரர்களுக்கு புரிந்திருக்கும். அதற்கு நல்ல உதாரணம் குசல் மெண்டிஸ். கடந்த காலங்களில் தொடர்ந்து சோபிக்காதபோதும் அணியில் நிரந்தமாக இடம் இருக்கிறது என்ற நம்பிக்கை தான் அவருக்கான பெரிய முட்டுக்கட்டை.

ஆனால் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஒரு சிறப்புத் துடுப்பாட்ட வீரர் என்ற இடத்தில் இருந்து விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் என்ற இடத்திற்கு தரம் இறக்கப்பட்டபோது தான் அவர் உண்மையில் தனது துடுப்பாட்டத்தில் அக்கறை காண்பிக்க ஆரம்பித்திருக்கிறார்.

ஒரு வெளிநாட்டு பயிற்சியாளரை விடவும் அணியில் அதிக உரிமை எடுத்துக் கொள்வதற்கு ஜயசூரியவினால் முடிந்திருப்பது மற்றொரு முக்கிய விடயம். அது அணி வீரர்களிடையே நம்பிக்கையை மாத்திரமல்ல, மாரியாதை கலந்த பயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. கடைசியில் அது மைதானத்திலும் பிரதிபலிப்பது தெரிகிறது.

'தற்போது அவர்களுக்குத் தேவையான நம்பிக்கை அதே போன்று மதிப்பு வீரர்கள் அறையில் இருக்கிறது. அத்தோடு அவர்களுக்குத் தேவையான தன்னம்பிக்கையை நான் அவர்களுக்குக் கொடுக்கிறேன். எவருக்கு என்னிடம் வந்து எந்த விடயத்தை கூற முடியும். சுதந்திரமாகப் பேச முடியும். அது கிரிக்கெட்டாக இருக்கலாம், வேறு விடயமாகக் கூட இருக்கலாம்.

இல்லாவிட்டால் அணிக்குள் வேறு விடயங்கள் நடக்கலாம். எதனையும் நேராக வந்து என்னிடம் கூறுவதற்கு அவர்களுக்குச் சுதந்திரம் உள்ளது. நான் அந்த சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

நீங்கள் உங்களுடைய கிரிக்கெட்டை ஆடுங்கள் என்றே நான் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவேன். அதற்கு வரம்பு இல்லை. அது தான் எமது கிரிக்கெட். எமக்கே தனித்துவமான இலங்கைக் கிரிக்கெட்.

இந்த நிலைமையுடன் அவர்கள் மெல்ல மெல்ல அவர்களின் இயல்பான நிலைக்கு வந்தனர். அவர்கள் சௌகரியமாக உணர்ந்தார்கள். வீரர்கள் அறை நல்ல சூழலில் உள்ள. சுதந்திரமாக எதனையும் பேசுவது, சுதந்திரமாக உரையாடுவது போன்ற விடயங்கள்...

அதேபோன்று அவர்கள் அவர்களின் ஆட்டத்தின் மூலம் களிப்பை உணர்கிறார்கள். வீரர்களின் அறை என்பது ஒரு பணியிடம் போன்றோ அல்லது முதலாளிக்கு பயந்து வாழும் இடமாகவே இல்லை. இது தான் மாற்றம்.

இது ஒன்றும் மந்திரமோ, சாகசமோ அல்ல. பொதுவாகப் பார்த்தால் அது தான் அடிப்படையான விடயங்கள்.

வீரர்கள் அறை அப்படி இருந்தபோதும் பயிற்சி இடம் இல்லாவிட்டால் பயிற்சி வலைக்குள் அவ்வாறு இல்லை. அங்கே கண்டிப்பான ஒழுக்கம் இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் விரும்புகின்றவாறு பயிற்சி வலைக்குள் செயற்பட முடியாது. அங்கே திட்டமிட்ட முறை இருக்கும்.

பயிற்சிக்குச் சென்றால் நாம் அதிக கண்டிப்பாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவோம்.

யாருக்கேனும் ஓய்வு தேவையென்றால் நான் அவர்களுக்கு ஓய்வு வழங்குவேன். அதேபோன்று பந்து வீசுபவர்கள் பற்றி பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அசித்த (பெர்னாண்டோ) நீண்ட காலமாக அனைத்து வகையான (டெஸ்ட், ஒருநாள், டி20) சர்வதேச போட்டிகளிலும் ஆடுகிறார். அது இலகுவானதல்ல. எனவே அவ்வாறான பந்துவீச்சாளர்களை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே நாம் அதனைச் செய்வோம்' என்கிறார் சனத் ஜயசூரிய.

ஜயசூரிய என்பவர் உண்மையில் இலங்கை கிரிக்கெட்டின் அடையாளம். தனது 20 வயதுகளின் ஆரம்பத்தில் இலங்கை அணியில் அவர் இணைந்தபோது ஒரு தேர்ந்த அணி உருவாவதற்கான ஆரம்ப சூழல் அங்கே இருந்தது. அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொஷான் மஹானாம, சமிந்த வாஸ், முத்தையா முரளிதன் என்று 1990களின் நடுப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் அணி உலகின் உச்சத்தைத் தொட்டபோது ஜயசூரியவின் பங்கு முக்கியமானது.

110 டெஸ்ட் போட்டி, 445 ஒருநாள் போட்டிகளுடன் தனது கிரிக்கெட் வாழ்வின் கடைசி காலத்தில் அறிமுகமான டி20 கிரிக்கெட்டில் கூட ஆடிய ஜயசூரிய படைத்த சாதனைகள் இன்றும் கூட யாராலும் நெருங்க முடியாதது. அவர் எப்போதுமே இலங்கைக்கு தனித்துவமான கிரிக்கெட் ஒன்றையே உருவாக்க முயற்சிக்கிறார்.

அதுவே, சர்வதேச அரங்கில் இலங்கை தனது கிரிக்கெட்டை உயர்த்துவதற்கு முக்கியமானது.

எஸ்.பிர்தௌஸ்...

## உலக டெஸ்ட் இறுதிக்கு இலங்கையின் வாய்ப்பு எப்படி?

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–0 என வென்றதன் மூலம் இலங்கை அணிக்கு உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற முன்னெப்போதும் இல்லாத அளவு வாய்ப்பு அதிகரித்திருக்கிறது. என்றாலும் அது நினைக்கும் அளவுக்கு இலகுவானதும் அல்லது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆடும் அணியை தீர்மானிப்பதற்கு இன்னும் 10 தொடர்கள், அதாவது 26 டெஸ்ட் போட்டிகள் எஞ்சியுள்ளன. அதனால் புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடித்து லோட்ஸில் நடக்கும் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கு பல நாடுகளும் போட்டியில் உள்ளன.

இதிலே தற்போது முதல் இரு இடங்களில் இருக்கும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு வேறு எந்த அணிகளை விடவும் வாய்ப்பு அதிகம்.

நியூசிலாந்துக்கு எதிரான தொடர் வெற்றியுடன் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் தற்போது மூன்றாவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறது. இலங்கை அணி பெற்றிருக்கும் புள்ளி விகிதம் 55.56. இதுவே முதலிடத்தில் இருக்கும் இந்தியாவின் புள்ளி விகிதம் 74.24 என்பதோடு அவுஸ்திரேலியா 62.50 புள்ளி விகிதத்தைப் பெற்றிருக்கிறது.

இலங்கை அணிக்கு உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இன்னும் இரண்டு தொடர்கள் எஞ்சியுள்ளன. இலங்கை அணி எதிர்வரும் நவம்பர் மற்றும் டிசம்பரில் தென்னாபிரிக்கா சென்று இரு டெஸ்ட் போட்டிகளில் ஆடவிருப்பதோடு பின்னர் சொந்த மண்ணில் எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடும்.



இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற இலங்கை அணி அந்தப் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களில் இருக்கும் இந்தியா அல்லது அவுஸ்திரேலியாவை பின்தள்ள வேண்டி உள்ளது. இதில் இந்தியாவை விடவும் குறைவான புள்ளிகளைப் பெற்றிருக்கும் அஸ்திரேலிய அணியை இலங்கை எதிர்கொள்ளவிருப்பதால் இலங்கை அணிக்கு அந்த அணியை பின்தள்ளுவது ஒப்பீட்டளவில் இலகுவானதாகும்.

எனினும் இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–0 என வெல்ல முடிந்தால் 69.23 புள்ளி விகிதத்;துடன் லோட்ஸ் இறுதிப் போட்டிக்கு கிட்டத்தட்ட முன்னேற முடியுமாக இருக்கும். எவ்வாறாயும் எதிர்வரும் நவம்பரில் ஆரம்பமாகும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போடர்–கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முடிவைப் பொறுத்தே இலங்கை அணியின் வாய்ப்பு தீர்மானிக்கப்படும்.

மறுபுறம் புள்ளிப் பட்டியலில் இலங்கையை பின்தள்ளக்கூடிய அணிகளில் தென்னாபிரிக்காவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணியால் 1–1 என சமன் செய்தாலும் இலங்கைக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கும். பங்களாதேஷால் அதிகபட்சமாக 59.03 புள்ளி விகிதங்களால் முன்னேற முடியும் என்பதோடு இங்கிலாந்து அணியால் 57.95 புள்ளிகளைத் தாண்ட முடியாது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு போட்டிகளுக்கு இடையில் மாத்திரமே அவதானம் செலுத்தி வருவதாகவும் தொலைதூரம் பற்றி அவதானம் செலுத்தினால் முக்கியம் வாய்ந்த உடன்வரும் போட்டிகளை இழந்து விடுவோம் என்றும் இலங்கை அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா குறிப்பிடுகிறார்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி வாய்ப்புப் பற்றி தனஞ்சயவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, 'ஒவ்வொரு போட்டிக்கும் இடையே தேவைப்பட்டவற்றை செய்தால், பின்னர் புள்ளிப் பட்டியல் தம்மைப் பார்த்துக் கொள்ளும்' என்றார்.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டி எதிர்வரும் 2025 ஜூன் 11 ஆம் திகதி லண்டன், லோட்சில் நடைபெறும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 ஒக்டோபர் 6 ஞாயிற்றுக்கிழமை



# சக்தி TVயின் சிரேஷ்ட அறிவிப்பாளர் ரியாஸ் ஹாரிஸ்

# அடுத்த உலகப் போர் எப்போது?



இன்னுமொரு உலகப் போர் வெடிப்பதற்கான சாத்தியங்கள் உலகெங்கும் எக்கச்சக்கமாக இருக்கின்றன. ஆனால் ஆர்டிக் பிரதேசத்தை வைத்து உலகில் பாரிய போர் ஒன்று வெடிப்பதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் ஏகத்திற்கு இருப்பதாக உறுதியாக நம்புவர்கள் பலர் உள்ளனர்.



பூமியின் வட முனையில் அமைந்திருக்கும் ஆர்டிக் பிராந்தியம் மூலோபாய முக்கியம் வாய்ந்தது. உலக வெப்பமாதலால் ஆர்ட்டிக் பிராந்தியத்தில் இருக்கும் பனிப்பாறைகள் உருகி வருகின்றன. இதனால் புதிய வர்த்தகப் பாதைகள் உருவாகும். இது கடல் பயணங்களைச் சுருக்கி, செலவையும் குறைக்கிறது.

இயங்கே இயற்கை வளங்களும் அதிகமாக இருக்கும், குறிப்பாக உலகில் உள்ள மொத்த எண்ணெய் வளத்தில் 15 வீதமானது ஆர்டிக் பிராந்தியத்திலேயே இருக்கிறது. தவிர எரிவாயு, தங்கம் மற்றும் இரும்பும் பெரும் அளவில் இருக்கின்றன.

ஆனால் இவைகளைப் பெறுவதில் பனிப்பாறைகள் தடங்கலாக இருக்கின்றன. உலகம் வெப்பமடைந்து வருவது எல்லோருக்கும் தெரிந்தது. அதனால் ஏற்படும் ஆபத்துகளும் தெரிந்ததே. என்றாலும் இந்த வெப்பமாதல் ஆர்டிக் பிராந்தியத்தில் புதையல் எடுப்பதற்கு உதவுகிறது.

குறிப்பாக ஆர்டிக் பிராந்திய எல்லை நாடுகளுக்கு அந்த வாய்ப்பு அதிகம். குறிப்பாக அமெரிக்கா, கனடா, டென்மார்க், ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன, பின்லாந்து மற்றும் ரஷ்யா நாடுகளுக்கு ஆர்டிக் மீது எப்போதுமே ஒரு கண் இருக்கும்.

இந்த அனைத்து நாடுகளும் ஆர்டிக் வட்டத்திற்கு உரிமை கோரி வருகின்றன. அத்தோடு நிற்காது தமது கடல் எல்லையை விரிவுபடுத்த முயன்று வருகின்றன. நேட்டோ நாடுகள் மற்றும் ரஷ்யா ஏற்கனவே தமது இராணுவங்களை நிலைநிறுத்த ஆரம்பித்திருக்கின்றன. இராணுவத் தளங்களையும் அமைத்திருக்கின்றன.

எங்கேயோ இருக்கும் சீனா கூட தமது நாட்டை ஆர்டிக்கிற்கு அருகாமையில் இருக்கும் நாடாக அறிவித்திருக்கிறது. பனிப்பிரதேசத்தில் செல்லக்கூடிய கப்பல்களையும் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறது. எனவே, ஆர்டிக்கில் உருகும் ஒவ்வொரு பனித் துளியும் இன்னோரு உலகப் போருக்கு நெருங்கும் சமிக்ஞையாகவே இருக்கும்.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



## அமெரிக்காவின் விசித்திரப் போர்

அமெரிக்கா உலகெங்கும் குண்டுகளை வீசுவதற்கு மாத்திரம் பிரபலம் அல்லது அது பூச்சிகளைக் கூட விமானத்தில் இருந்து வீசும் வேலையைச் செய்கிறது.

அதாவது அமெரிக்கா ஒவ்வொரு வாரமும் பனாமா மற்றும் கொலம்பிய நாட்டு எல்லையில் 14.7 மில்லின் பூச்சிகளை வானில் இருந்து வீசி வருகிறது. இது கூட ஒரு வகைப் போர் தான். ஆனால் நாடுகளுடன் அல்ல பூச்சிகளுடன் செய்யும் போர்.

திருகுப் புழு என்ற பூச்சி கால்நடைகள் மற்றும் விலங்குகளுக்கு ஆபத்தான. அது விலங்குகளில் சிறு பழுதுகளில் தான் முட்டையிடும். அதனால் சின்னப் பழுது பெரிய பழுதாகி அந்த விலங்கையே கொன்றுவிடும். சில நேரங்களில் மனிதர்களுக்குக் கூட உயிராபத்தை ஏற்படுத்தும். இதனால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு பெருத்த நட்டத்தைத் தரும். எனவே, திருகுப் புழுக்களை ஒழிக்கவே அமெரிக்கா வாராந்தம் இந்த வேலையைச் செய்கிறது.

இந்தப் பூச்சிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்ட ஆண் பூச்சிகளை வானில் இருந்து வாராந்தம் கொட்டுகிறது. இந்த முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆண்டுக்கு 15 மில்லியன் டொலர்களை செலவிடுகிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

## நாட்டுக்குள் நாடு




ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருக்கும் சின்ன கிராமத்தின் பெயர் நஹ்வா. ஆனால் இந்த கிராமத்தை சுற்றி ஓமான் நாட்டின் மதா பிராந்தியம் இருக்கிறது. இத்தோடு நிற்கவில்லை இந்த மதாவைச் சுற்றி மீண்டும் ஐக்கிய அரபு இராச்சியம் இருக்கிறது.

மதா பிராந்தியம் ஓமான் சுல்தானுக்கு விசுவாசத்தை வெளிப்படுத்தியதே இந்தக் குழப்பத்திற்குக் காரணம். ஆனால் அந்த மதா பிராந்தியத்திற்குள் இருக்கும் நஹ்வா கிராமம் ஐக்கிய அரபு இராச்சியத்திற்குள் விசுவாசத்தை வெளிப்படுத்தியதால் இப்படி நாட்டுக்கு நாடு, அதற்குள் இன்னொரு தோன்றியது.

## ஆணுக்கும் பெண்ணுக்குமான வித்தியாசம்



பருவமடைந்தது தொடக்கம் மரணிக்கும் வரையான காலத்தில் சராசரி ஆண் ஒருவருக்கு கோட்பாட்டு அளவில் தற்போதைய உலக மக்கள் தொகையை 405 மடங்காக அதிகரிக்க முடியும். தற்போதைய உலக மக்கள் தொலை 7.6 பில்லியனாகும். ஆனால் ஓர் ஆணிடத்தில் வினாடிக்கு 1,500 உயிரணுக்கள் உற்பத்தியாகின்றன. மறுபுறம் ஒரு பெண் வாழ்நாளில் கருத்தரிக்க பொருத்தமுடைய சுமார் 450 முதிர்ச்சி அடைந்த முட்டைகளையே உற்பத்தி செய்ய முடியும்.

## இராட்சத ரஷ்யா

உலகில் மிகப்பெரிய நாடு ரஷ்யா என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அது எத்தனை பெரியது என்பது அதிகமானவர்களுக்குத் தெரியாது. அதனை இப்படிக் கூடச் சொல்லலாம். ரஷ்யா என்பது ஓர் இராட்சத நாடு. அது பாகிஸ்தானை விட 21 மடங்கு பெரியது. இந்தியாவை விடவும் ஐந்து மடங்கு பெரியது. சீனாவின் இரண்டு மடங்கு. அதாவது உலக நிலப்பரப்பில் 10 வீதமான பகுதியை ரஷ்யா வைத்திருக்கிறது.

ஆனால் ரஷ்யாவுக்கு இந்த மிகப்பெரிய நிலத்தை நிர்வகிப்பதே பெரும்பாடான காரியம். இதனால் தான் அது அலஸ்காவை அமெரிக்காவுக்கு வெறுமனே 7.2 மில்லியன் டொலருக்கு விற்றது.

ரஷ்யாவின் அளவை இன்னும் புரியும்படி சொல்வதென்றால், நீங்கல் ரஷ்யாவின் மேற்கு முனையில் இருந்து கிழக்கு முனையை நோக்கி பயணிக்க வேண்டும் என்றால் உங்களது கடிகாரத்தை 11 தடவைகள் சரி செய்ய வேண்டும். ஏனென்றால் நீங்கள் 11 நேர வலயங்களை கடந்த இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, உலகில் மிக நீளமாக ரயில் பாதையைக் கொண்ட நாடாக ரஷ்யா இருப்பதில் ஆச்சரிக்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. டிரன்ஸ்–சைபீரிய ரயில் பாதை தான் அது. இந்தப் பாதை 9,289 கிலோமீற்றர் நீண்டது.

அதாவது இந்த ரயில் பாதை 497 பாலங்கள், 15 சுரங்கப் பாதைகள் மற்றும் 16 பிரதான நதிகளைக் கடந்து செல்கிறது. அதே போன்று இந்த ரயில் பாதை 87 பிரதான நகரங்கள், 3 நாடுகள் மற்றும் 2 கண்டங்களை கடந்த பயணிக்கிறது.



"டாக்டர் இவ்வளவு மருந்தையும் ரெண்டே நாள்ல சாப்பிட்டு முடிக்கணும்னு சொல்றீங்களே, ஏன்?"
"ரெண்டு நாளைக்கு அப்புறம் எக்ஸ்ப்ரி டேட் முடிஞ்சுடும்."







அம்மா: என்னடா இன்னிக்கு ஸ்கூல்ல இருந்து இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே?
பையன்: எங்க மிஸ் ஒரு கேள்வி கேட்டாங்க, நான் மட்டும் தான் பதில் சொன்னேன்.
அம்மா: (சந்தோசமாக) என்ன கேள்வி கேட்டாங்க?
பையன்: யார்ரா அது மிஸ் மேல சோக்பீஸ் அடிச்சதுன்னு கேட்டாங்க.

காதல் எங்கே பிறந்தது என்று தெரியுமா?
சீனாவுல தான் பிறந்தது..
ஏனென்றால் *Anything made in China is NO GURANTEE & NO WARRANTY!*

புதுசா பதவி ஏத்த அமைச்சரோட அலுவலகத்துல 'எல்'போர்டு மாட்டியிருக்காங்களே ஏன்?" அதுவா
அவர் இப்பத்தான் 'ஊழல்' செய்ய ஆரம்பிச்சிருக்காராம்"



"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"
"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"
"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர்!"





"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"
"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"
"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"
"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"
"அப்படின்னா ஒரு ரூபாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"



"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"
"அவ்வளவு பிசி ஒர்க்கா?"
"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

பயணி: வத்தளை ரெண்டு டிக்கெட் கொடுங்க.
கண்டக்டர்: இன்னொரு டிக்கெட் யாருக்கு?
பயணி: ரெண்டுமே எனக்குத்தான். ஒண்ணு தொலைஞ்சி போனா இன்னொன்னு உதவுமே.
கண்டக்டர்: அதுவும் தொலைஞ்சி போச்சுனா?
பயணி: ஒண்ணும் பிரச்சினை இல்ல. என்னோட பஸ் பாஸ் பத்திரமா இருக்கு.



காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர கொசு மாதிரி தூங்கவும் முடியாது துரத்தவும் முடியாது.





"ஏனப்பா கால் கை நல்லாத்தானே இருக்கு, இப்படி உட்கார்ந்து பிச்சை எடுக்கலாமா?"
" 'உடம்பை ரொம்ப அலட்டக்கூடாது'னு டாக்டர் சொல்லிட்டார் சார்"



இரண்டு பள்ளி சிறுவர்கள் பேசிக்கொண்டது;
நம்ம டீச்சருக்கு வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சுன்னு நினைக்கிறேன்.
எப்படிச் சொல்ற?
பின்ன என்ன, அவங்களே போர்டில சிலப்பதிகாரம்னு எழுதிட்டு,
நம்மகிட்ட சிலப்பதிகாரத்தை எழுதியது யார்னு கேட்கிறாங்க.

# பரதமே உயிர் மூச்சாய் வாழும்

## கலாநிதி நிர்மலா ஜோன்





தமிழர்களின் தொன்மையான கலைவடிவங்களில் பரதநாட்டியமும் உள்ளடங்குகிறது. பரத முனிவர் இயற்றிய நாட்டிய சாத்திரத்தை அடிப்படையாக் கொண்டதாலேயே இக்கலை 'பரத நாட்டியம்' என்று பெயர் பெற்றது. ஆண், பெண் என இரு பாலாராலும் ஆடப்படுகின்ற இந் நாட்டியத்துக்கு அதன் தெய்வீகத் தன்மையாலும், அசைவுகளாலும், பாவனைகளாலும் இரசிகர்களை தன்வசப்படுத்தக்கூடிய திறனுள்ளது.

அவ்வாறு தன் திறமையினால் இலங்கையில் நடனத் துறையில் தனக்கென்று ஒரு அத்தியாயத்தை வகுத்துக் கொண்டவரே கலாநிதி, திருமதி நிர்மலா ஜோன்.

இவர் சிறுவயதிலிருக்கும் போதே இவரது பெற்றோர் கலைத்துறையில் இவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். பாடசாலைப் பருவத்தில் நடைபெறும் அனைத்துப் போட்டிகளுக்கும் அழைத்துச்சென்று பங்கேற்கச் செய்தனர். தந்தையார் பாடல்களை எழுதி வழங்க, தாயார் உடைகளை உடுத்திவிட்டும் சிறுவயது முதலே நடனம் மீதான ஆர்வத்தை உருவாக்கினர். அக்காலம் முதலே பல்வேறு பரிசுளையும், விருதுளையும் நடனத்துக்காக இவர் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு அரங்கேற்றம் கண்ட இவர், 1985,1986 காலப் பகுதியில் இந்தியாவில் திரு. வி.பி தனன்ஜெயன், திருமதி சாந்தா தனன்ஜெயன் போன்றோரது பரத கலாஞ்சலியில் மேற்படிப்பை தொடர்ந்தார். அதையடுத்து 'பாரதியா வித்தியாபவன்' எனும் கலைக் கூடத்தில் நடன நிகழ்வினை அரங்கேற்றம் செய்தார். அந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட திரைப் பட இயக்குனர் ஜீ.வி ஐயர் இவரது நடனத்திறமையைப் பாராட்டியிருந்தமை இவரது திறமைக்கான மற்றுமொரு அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

தொடர்ந்து இந்தியாவில் பாரதிதாசன் பல்லைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் இளங்கலைமாணி, முதுகலைமாணிப் பட்டப்படிப்புகளையும் நிறைவுசெய்து கொண்டு, இலங்கையில் கட்புல அரங்கேற்ற கலை பல்கலைக்கழகத்தில் நடனத் துறையில் கலாநிதிப் பட்டப் படிப்பையும் நிறைவு செய்து கொண்டார்.

இவற்றையடுத்து தமது பெற்றோரின் ஆசியுடன் விஜய தசமி நாளன்று கொழும்பு வெள்ளவத்தையில் 'நிர்மலாஞ்சலி' எனும் நடனப் பள்ளியை உருவாக்கி தனது கலைப் பயணத்தின் அடுத்த அத்தியாயத்தை உருவாக்கிக் கொண்டார். 40 வருடகால நடனப் பயிற்றுனர் எனும் வகிபங்கில் தற்போது பம்பலப்பிட்டியில் தொடர்ந்தும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை நடனம் கற்றுக்கொள்ளும் வாய்ப்பினை உருவாக்கி இக்கலையினை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் மகத்தான பணியினை மேற்கொண்டு வருகிறார்.

'இலங்கைக் கலாச்சாரத்துக்குள் பரதநாட்டியத்தைப் புகுத்துதல்' எனும் தலைப்பில் இவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது பலராலும் வரவேற்பினைப் பெற்றது. இது இலங்கையில் பரத கலைக்கு அங்கீகாரத்தையும், தனியிடத்தையும் பெற்றுக்கொடுக்க இவர் எப்போதும் அவா கொண்டிருப்பதை தெளிவாகவே எடுத்துக்காட்டுகிறது.

'நிர்மலாஞ்சலி' நடனப் பள்ளியில் மாத்திரமல்லாது 'கொழும்பு கலாலயா இசை மற்றும் நடனப்பள்ளி' மற்றும் பாடசாலைகள் போன்றவற்றிலும் நடன ஆசானாகவும், நெறியாளராகவும் இவரது சேவை இன்றுவரை தொடர்கிறது.

தனது நடனத் திறமைக்காக 'கலைச்செல்வி', 'நாட்டிய கலாஜோதி', 'நாட்டிய கலைச் சுடர்', 'நாட்டிய கலாமணி', 'நாட்டிய இளவரசி' என பல்வேறு விருதுகளையும், கௌரவிப்புக்களையும் பெற்றுக்கொண்ட இவர், கனடா சர்வதேச பெண்கள் அமைப்பினால் 'விழித்தெழு பெண்ணே' எனும் பெயரில் நடாத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான சர்தேச தமிழ் பெண் சாதனையாளர்கள் கௌரவிப்பின்போது 'நாட்டிய சூடாமணி' எனும் சிறப்புக் கௌரவத்தையும் பெற்றுக்கொண்டார்.

எத்தனை பாராட்டுக்களும், விருதுகளும் கிடைத்தபோதிலும் தனது அத்தனை வெற்றிக்கும் மூல காரணமாயிருந்த அவரது தந்தையும், கணவரும் அவற்றையெல்லாம் காண முடியாமல் போனதையிட்டு மிகுந்த வேதனையுடன் இன்றும் தொடர்கிறது இவரது நாட்டியப் பயணம்.

**'இலங்கைக் கலாசாரத்துக்குள் பரதநாட்டியத்தை புகுத்துதல்' எனும் தலைப்பில் இவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது பலராலும் வரவேற்பினைப் பெற்றது. இது இலங்கையில் பரத கலைக்கு அங்கீகாரத்தையும், தனியிடத்தையும் பெற்றுக் கொடுக்கும் முயற்சியை காட்டுகிறது.**







நேர்கண்டவர்
கிரிஜா அருள்பிரகாசம்

# சிட்னியில் நாடக ஆற்றுகை அரங்கு: தாயக கலைஞர்களின் மகாஜன மாலை 2024!

தாயகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞர்களுடன் அவுஸ்திரேலியா வாழ் கலைஞர்களும் இணைந்து வழங்கும் நாடக ஆற்றுகை அரங்கு அவுஸ்திரேலியாவின் பல மாநகரங்களில் நடைபெற உள்ளது.

கலாநிதி ரதிதரன் நெறியாள்கையில்:

இந்த அரங்கில் குழந்தைம. சண்முகலிங்கத்தின் ‘உறவுகள்’ நாடக ஆற்றுகையை கலாநிதி க.ரதிதரன் அவர்கள் நெறியாள்கை ஆற்றுகிறார். அத்துடன்



குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் *Anton Chekhov's unwilling martyr* ‘தான் விரும்பாத் தியாகி’ நாடக ஆற்றுகையையும் கலாநிதி க.ரதிதரன் நெறியாள்கை செய்து மேடையேற்றுகிறார்.

கலாநிதி கதிரேசு ரதிதரன் சிரேஷ்ட விரிவுரையாளராக நாடகமும் அரங்கக் கலைகளும் துறையில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை, கட்புலக் கலைகள் பீடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை ஆற்றிவருகிறார்.

தனது சிறுவயதிலிருந்தே நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவராக காணப்பட்டவர், 1985 ஆம் ஆண்டு "வேலிக்குள் யானை" என்றமுதலாவது சமூக அரசியல் பின்புலம் கொண்ட நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்தார். 40 நாடகங்களுக்கு மேல் எழுதி நெறியாள்கை செய்ததோடு மொழிபெயர்ப்பு மற்றும் வேறு எழுத்தாளர்களது நாடகங்கள் 15 தினை நெறியாள்கை செய்துள்ளார். அத்துடன் 25 நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார். பல்வேறு நாடக வடிவங்களான சிறுவர் அரங்கு, சமூக நாடகம், வீதி நாடகம், நகைச்சுவை நாடகம், செவ்வியல் நாடகம், கவிதை நாடகம், ஊமை நாடகம், பரீட்சார்த்த நாடகங்கள், விவாதகள நாடகம், சமயம் சார் நாடகம் போன்றவற்றை நெறியாள்கை செய்துள்ளார்.

இந்த ஆற்றுகை அரங்கில் சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் மற்றும் இலக்கியப்பவர் இணைந்து வழங்கும் ‘ மாலை’ நாடக ஆற்றுகையும் நடைபெறும். இதனை உள்ளூர் கலைஞர்களுடன் திரு. அ. சந்திரஹாசன் நெறியாள்கை செய்கிறார்.

கலாநிதி ஜெயரஞ்சினி' ஞானதாஸ்:

அத்துடன் கிழக்கு பல்கலை கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நாடகமும் அரங்கக் கலைகளும் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயரஞ்சினி' ஞானதாஸ் அவர்கள் நாடகமும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணி சிறப்புப் பட்டத்தினையும் 1993இலும், தொடர்ந்து பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நெறிப்படுத்தலில் முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் 2000இல் பெற்றுள்ளார்.

சிறந்த ஆய்வாளருக்கான விருதினை 2000 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். முதுதத்துவமாணிப் பட்டம் பெற்ற முதல் பெண் ஆய்வாளரும் ஆவார். இவரது 'ஈழத்துத் தமிழ் அரங்கில் பெண்' எனும் 'முதுதத்துவமாணி ஆய்வு' நூலாக்கம் பெற்று 2003 இல் சிறந்த ஆய்வு நூலாக வடக்கு, கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப் பெற்று இலக்கிய விருதினையும் பெற்றது.

சிறந்த பெண்நிலைவாத சிந்தனை கொண்ட நாடகங்களைத் தொடர்ச்சியாகத் தயாரித்துவரும் கலைஞராகவும் எம்மத்தியில் அடையாளம் காணப்பட்டார். சிறந்த நாடகத் தயாரிப்பு, நெறியாள்கை என்பவற்றுக்கான பல விருதுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் பெற்றுள்ளார்.




1995 இலிருந்து 2006 வரை தற்காலிக விரிவுரையாளராகவும் விடுதிக் காப்பாளராகவும் ஏறத்தாளப் பத்து வருடங்களுக்கும் மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி 2009இல் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியற் துறையில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

இவர் இன்று மேனாள் நாடகத்துறைத் தலைவராகவும் நாடகத்துறையில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்ற முதல் பெண் நாடக ஆளுமையாகவும் எம்மத்தியில் வெளிப்பட்டு நிற்கின்றார். இவர் தனது கலாநிதிப் பட்டத்தினை இந்தியாவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் மு. இராமசுவாமியின் நெறிப்படுத்தலின் கீழ் மேற்கொண்டு அதில் உயர்தரச் சித்தியினையும் பெற்றார்.

**மகாஜன மாலை 2024:**

சிட்னியில் நாடக ஆற்றுகை அரங்கில்,தாயக கலைஞர்கள் வழங்கும் மகாஜன மாலை 2024இல் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி'யின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியரியரும், நெறியாளரும் , பிரபல நாடக்க் கலைஞருமான தவசோதிநாதன் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.நாடக அரங்கக் கல்லூரி மற்றும் சண் நாடக குழுவின் இலங்கையின் பிரபல நாடக கலைஞர் கிருபாகரன் அவர்களும் மகாஜன மாலை 2024இல் கலந்து கொள்கின்றார்.

தாயக கலைஞர்கள் பங்கேற்கும் நாடக ஆற்றுகை அரங்கு அவுஸ்திரேலியாவின் பல பாகங்களிலும் நடைபெறவுள்ளது. சிட்னியில் அக்டோபர் 26இலும், பிரிஷ்பேர்னில் அக்டோபர் 27இலும், மெல்பேர்ணில் நவம்பர் 3இலும் ஆற்றுகை அரங்கேற உள்ளது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா



நவராத்திரி விழாவை முன்னிட்டு மீனாலயா meen laya school of the arts மாணவிகள் வழங்கிய பரத நாட்டிய நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதை மலையக வாரிசான ஜெரோமீனா அனோஜ் நெறிப்படுத்தி வழங்கினார். இவர் கொழும்பில் பிறந்து அங்கேயே படித்து தனது பட்ட படிப்பையும், மற்றும் பிரபல நடன ஆசிரியர்களிடம் முறையாக நடனமும் பயின்று, அரங்கேற்றம் கண்டவர்.

# MSC விளையாட்டுக் கழகத்தின் மென்பந்து கிரிக்கெட் போட்டி

**MSC விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டியும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வும் இன்று 2024.10.06ஆம் திகதி காலை 7 மணிக்கு வத்தளை, வெலிசறை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும். சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.**

**இதற்கான ஏற்பாடுகளை MSC விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தேசபந்து அ. கிஷோகுமார் மேற்கொண்டு வருகிறார். தினகரன், தினகரன் வாரமஞ்சரியினதும் சூரியன் எப் எம்மினதும் ஊடக அனுசரணையுடன் இடம்பெறும் ஆசிரியர்கள் பலரும் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.**



# நல்லனவற்றுக்காக சமூக ஊடகங்களை பயன்படுத்துவோம் சமூக சிதைவான விடயங்களை புறக்கணிப்போம்

## சக்தி தொலைக்காட்சியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் ரியாஸ் ஹாரிஸ் வழங்கிய பேட்டி

**சக்தி தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரியாஸ் ஹாரிஸ் என்று தங்களை பலர் அறிந்திருந்தாலும் நேர்காணலின் ஆரம்ப மரபாக தங்களைப்பற்றிய மேலதிகமான தகவல்களை எமது வாசகர்களுக்கு தாருங்கள் ?**

எல்லாம் புகழும் இறைவனுக்கே. என்னைப் பற்றி அறிமுகத்திற்காக கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்கு நான் நன்றி கூறுகிறேன். கேகாலை மாவட்டத்தில் கன்னத்தோட்டை கிராமத்தில் பிறந்து வளர்ந்த நான் கன்னத்தோட்டை சுலைமானியா மத்திய கல்லூரியில் கல்வி பயின்றேன். பின்னர் கொழும்பு டி.எஸ் சேனாநாயக்க கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி பயின்றேன். பின்னர் ஊடகத் துறையில் இருந்த அதிக ஆர்வம் காரணமாக இந்த துறைக்குள் பிரவேசித்துவிட்டேன்.

**உங்களது ஆரம்ப களம் எதுவாக அமைந்திருந்தது என்பதை கூறுங்கள் ?**

பாடசாலையில் நான்காம் தரத்தில் கல்வி பயிலும் போது நான் முதல் முறையாக தமிழ்த் தினப் போட்டியில் பேச்சுப் போட்டியொன்றில் கலந்து கொண்ட நினைவு இன்னும் இருக்கிறது. அதன் பின்னர் கன்னத்தோட்டை சுலைமானியா மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் போது சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் வரை தமிழ்த் தினப் போட்டி உள்ளிட்ட பல போட்டி நிகழ்ச்சிகளில் பேச்சுப் போட்டியிலும், விவாதப் போட்டியிலும் பங்கேற்று தேசிய மட்டத்தில் பல தடவைகள் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளேன். அதன்போது எவ்வேளையிலும் என் அருகில் இருந்தவரே என் அன்புத் தாய். அவர் ஒரு ஆசிரியை. கன்னத்தோட்டை சுலைமானியாவில் கல்வி கற்பித்த ஆசிரியை ராஹிலா. பாடசாலை காலத்தில் பல வெற்றிகளுக்கு களம் அமைத்துத் தந்து என்னை அழகு பார்த்தவர்.

துரதிஷ்டவசமாக இன்று என்னுடைய வெற்றிகளை பார்க்க அவர் இவ்வுலகில் இல்லை. 10 வருடங்களுக்கு முன்னர் அவர் இறையடி சேர்ந்துவிட்டார். ஆனால் நான் தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும்போது அதனைக் கண்டு பல தடவைகள் ஆனந்தக் கண்ணீர் வடித்த அந்த நாட்கள் என் மனதில் இன்னும் நேற்று போன்றே இருக்கிறது. யா அல்லாஹ் அன்னாரின் சகல பாவங்களையும் மன்னித்து ஜன்னதுல் பிர்தௌசில் சேர்த்து விடுவாயாக. பலர் என்னை ஹாரிஸ் என்று அழைப்பார்கள். அவர் எனது அன்புத் தந்தை. பாடசாலைக் காலத்தில் தேசிய மட்டத்தில் பல போட்டிகளில் கலந்து கொள்வதற்காக என்னை கரம் பிடித்து அழைத்துச் சென்ற அந்த நாட்கள் இன்னும் மனதில் நீங்காத நினைவுகளாகவே இருக்கிறது. அவருடையும் பிராத்தனையும் விடா முயற்சியும் என் வெற்றிக்கு காரணமாக அமைந்தது. இன்றும் எனது நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு அவர் அடையும் திருப்தியே எனக்குப் போதும் என சிலவேளை நினைப்பதுண்டு.

**நீங்கள் சக்தி தொலைக்காட்சியின் சிரேஷ்ட அறிவிப்பாளராகவும், செய்தி தொகுப்பாளராகவும் எத்தனை வருடங்களாக பணியாற்றி வருகிறீர்கள். இந்த காலகட்டத்தில் உங்களுக்கேற்பட்ட மனநிறைவு அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

சக்தி நியுஸ் பெஸ்ட் அலைவரிசையில் 18 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். இந்த 18 வருடங்களும் என்மனதில் ஏதோ ஒரு வகையில் மன நிறைவை தருகிறது. நான் நேசிக்கும் துறையில் மன நிம்மதியாக பணியாற்ற கிடைத்துள்ளமை தொடர்பில் என் மனதில் உண்மையில் மகிழ்ச்சி தான். என்னை இந்த நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளும் போது நேர்முகத் தேர்வின் பின்னர் எனக்கு கூறப்பட்ட ஒரு விடயம் எனக்கு நினைவிற்கு வருகிறது.

நேர்முகத் தேர்வின் பின்னர் ஒரு அதிகாரி இன்னுமொரு உயர் அதிகாரியிடம் கேட்டார். எப்படி இவர்? இவரை இணைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டார். அவ்வேளையில் அவர், ஆம்... அவரை இணைத்துக் கொள்வோம். அவர் ஏதாவது இங்கு கற்றுக் கொள்வார் என்று கூறினார். அவ்வேளையில் இவர் என்ன கூறுகிறார் என நான் யோசித்தேன். ஆனால் அது பின்னர் தான் எனக்குத் தெரிய வந்தது. நியுஸ் பெஸ்ட் நிறுவனத்தில் ஒவ்வொரு நாளும் நான் எதனையாவது கற்றுக் கொள்கிறேன். தற்போதும் கூட. இதுவொரு பல்கலைக்கழகம்.

கிராமத்தில் இருந்து வந்த என்னை "சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளர் ரியாஸ் ஹாரிஸ்" என்று பலரும் என்னை அறிவதாக இருந்தால் அதற்கு காரணம் இந்த நிறுவனம் தான். எனது ஆற்றலுக்கு களம் அமைத்துத் தந்தது மாத்திரம் இன்றி என் ஆற்றலை மேம்படுத்தவும் துணை நின்ற, இன்னும் கூட துணை நிற்கும் நிறுவனமாகும். இதற்கெல்லாம் அச்சாணியாக இருந்த ஒரு தலைவரை நான் இங்கு கட்டாயம் நினைவு கூற வேண்டும். அவர் தான் கெப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அமரர் ஆர். ராஜமகேந்திரன் அவர்கள். அவரின் தலைமை, அவரின் வழிநடத்தல் அவரின் கருணை. அவற்றை கூற எனக்கு வார்த்தை இல்லை. அவரே மக்களின் துயர் துடைக்கும் கம்மெத்த திட்டத்தின் ஸ்தாபகர். அவர் என் திறமைகளுக்கு களம் வழங்கிக் கொண்டே இருந்தார். அவரின் திடீர் மறைவை என் வாழ்வில் என்றும் ஈடு செய்ய முடியாது. என்னைப் போன்று பல திறமையான ஊடகவியலாளர்களை அவர் உருவாக்கினார். அதே தலைமைத்துவ பண்புகளையே அவரின் மகன் தற்போது கெப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் சஷி ராஜமகேந்திரன் அவர்களிடம் நான் காண்கிறேன். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் தொடர்ந்தும் ஊடகப் பணியை தொடர கிடைத்துள்ளமையும் மனநிறைவைத் தருகிறது. அத்துடன் அன்றிலிருந்து இன்று வரை என்னை இந்த நிலமைக்கு கொண்டு வர காரணமாக இருந்தவர் தான் திரு. ஷெவான் டெனியல். அவர் கெப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளராகவும், மக்கள் துயர் துடைக்கும் கம்மெத்த திட்டத்தின் தலைவராகவும் உள்ளார். அவரிடம் நான் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம். என் வெற்றிப் பயணத்திற்கு உரமிட்ட இளம் தலைவர். அரிய வாய்ப்புகளை வழங்கி கொண்டே இருக்கிறார். ஊடகத்துறையில் பணியாற்றும் போது எமது நிறுவனத்தின் கம்மெத்த திட்டம் ஊடாக பல சமூக சேவைகளிலும் பங்கேற்க முடிந்துள்ளமையும் மனநிம்மதியை தருகிறது.





**தொலைக்காட்சி பிரவேசம் தற்செயலாக ஏற்பட்ட அனுபவமா...நீண்ட கால கனவா?**

இது எனது நீண்ட கால கனவு. முதல் முறையாக நான் இதனை ஊடகங்களுக்கு கூறுகிறேன். பாடசாலைக் காலத்தில் இருந்து பேச்சுப் போட்டி, விவாதப் போட்டிகளில் பங்கேற்ற எனக்கு அன்றே ஒரு இலக்கு இருந்தது. அது தான் ஊடகவியலாளர் என்ற கனவு. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் செய்தி வாசிக்க வேண்டும் என்ற ஆசை அன்றிலிருந்தே இருந்தது. அத்துடன் தேர்தல் காலங்களில் தொலைக்காட்சிகளில் தேர்தல் முடிவுகளை வாசிக்கும் அறிப்பாளர்களைப் பார்த்து நானும் ஒரு நாளைக்கு இவ்வாறு தேர்தல் முடிவுகளை வாசிக்க வேண்டும் என்ற பேராசையில் இருந்தேன். அந்த நாட்களில் இரவில் தூங்காமல் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் அந்த நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டே இருப்பேன்.

இவ்வாறு, நான் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது டீ.எஸ் தமிழ் நாதம் என்ற வானொலி நிகழ்ச்சியில் ஒரு சில நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. இதனூடாக எனக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கால்பதிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மாணவர் மன்றம், இளைஞர் இதயம், மற்றும் கவிதைக் களம் போன்ற நிழ்ச்சிகளில் குரல் கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது.

2003 ஆம் ஆண்டு முதன் முறையாக எனது குரல் வானொலியில் ஒலித்தது. வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நிகழ்ச்சிகளில் குரல் கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. ரியாஸ் ஹாரிஸ் என்ற பெயர் வானொலியில் ஒலிக்கும்போது ஊரிலும், வெளியிலும் பலர் என்னை தொடர்பு கொண்டு வாழ்த்தினர். அது ஊடகத்துறையின் முதல் அனுபவம்.

குறிப்பாக இளைஞர் இதயம் நிகழ்ச்சியிலே அதிகளவில் குரல் கொடுத்தேன். அதன்போது எனக்கு உறுதுணையாக இருந்த சகோதரர் பதியுஸ் ஸமானை எனக்கு மறக்க முடியாது. உயர்தரப்பரீட்சையை அடுத்து நிரந்தரமாக ஒரு நிறுவனத்தில் இணையும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன்.

அதன்போது ஒரு நாள் எனது ஊரைச் சேர்ந்த பைஸல் ரபீக் என்னை கொட்டியாக்கும்புரைக்கு அழைத்துச் சென்று சக்தி எப்.எம் இல் பணியாற்றிய சிரேஷ்ட செய்தியாசிரியர் சுஹைர் ஷரீப்பை அறிமுகம் செய்து வைத்தார். சுஹைர் ஷரீப் ஊடாக சக்தி நிறுவனத்தின் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டேன்.

அவருக்கு நான் எவ்வேளையிலும் நன்றிக் கூற கடமைப்பட்டுள்ளேன். அவ்வாறே 2006 ஆம் ஆண்டு ஒரு செய்தியாளராக சக்தி நியுஸ் பெஸ்டில் இணைந்து கொண்டேன்.

**நீங்கள் என்னென்ன நிகழ்ச்சிகளை தொகுத்தளிக்கிறீர்கள். இதன் மூலம் ஏற்பட்ட வித்தியாசமான அனுபவங்களை தாருங்கள்?**

ஆரம்பத்தில் நான் ஒரு செய்தியாளராக பணியாற்றிய பின்னர் செய்தி தயாரிப்பாளராக பணியாற்றினேன். தற்போது நான் நியுஸ் பெஸ்டின் ஆசிரியர் பீடத்தில் ஒரு அங்கத்தவராக பணியாற்றுகிறேன். சக்தி பிரதான செய்திகளை தொகுத்து வழங்குவதுடன் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் பிரதான செய்தியை வாசித்தும் வருகிறேன்.

சில காலம் வானொலியிலும் செய்தி வாசித்தேன். எனினும் தற்போது அதற்கு நேரம் கிடைப்பதில்லை. புலனாய்வு செய்திகள், புதிய செய்திகளை தேடல் போன்றவற்றில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு.

அத்துடன் ரமழான் காலத்தில் அருள் மிகு ரமழான் நிகழ்ச்சியை கடந்த இரண்டு வருடங்களாக தொகுத்து வழங்கி வருகிறேன். சர்வதேச நாடுகளுக்கும் சென்று செய்தி அறிக்கையிடுவதற்கானவாய்ப்பு எனக்கு கிடைத்தது. குறிப்பாக ஒரு முறை புனித ஹஜ் கடமையையும் அங்கு சென்று அறிக்கையிட வாய்ப்பு கிடைத்தது.

(தொடர் 7 ஆம் பக்கம்)



பாத்திமா நளீரா....

# நாகசேனை சரஸ்வதி வித்தியாலயம்
# "மீண்டும் பள்ளிக்கு செல்வோம்"




நுவரெலியா கல்வி வலயம் கோட்டம் இரண்டுக்கு உட்பட்ட நாகசேனை நு/ சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களால் கற்றோர் பேரவை உருவாக்கப்பட்டது. இந்த பேரவை "மீண்டும் பள்ளிக்கு செல்வோம்"என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கற்றோர் பேரவையின் தலைவர் பி.தியாகராஜா தலைமையில் வித்தியாலய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு 29.09.2024 அன்று வித்தியாலய அதிபர் என். சிவலிங்கம் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைத்து பழைய மாணவர்களும் சிறுவயதில் எவ்வாறு இவ் வித்தியாலயத்திற்கு சமூகமளித்திருந்தனர் அதே போன்று இந்த நிகழ்வில் புத்தகப்பையுடன் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.









இவ்வாறு வருகை தந்த பழைய மாணவர்கள் வகுப்பறையில் அமர்ந்து கல்வி கற்றதோடு இவர்களுக்கு ஆரம்பத்தில் கற்பித்த ஆசிரியர்களும் பாடசாலைக்கு சமூகம் தந்து வகுப்பறையில் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொண்டமை சிறப்பு அம்சமாகும். இதன் போது பழைய மாணவர்கள் அவர்களுடைய கற்றல் காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதேபோன்று இந்நிகழ்வில் மாணவர்கள் போல் தங்களுடைய செயல்பாட்டை முன்னெடுத்தனர்.

அத்துடன் கற்றல் பேரவையின் நிதியினூடாக அமைக்கப்பட்டிருந்த "ஸ்மார்ட்" வகுப்பறையும் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன், பழைய மாணவர்களின் விளையாட்டு நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வை அலங்கரித்தன.

அத்தோடு கற்றுத்தந்த ஆசிரியர்கள் இன்று பாடசாலைக்கு வரும் பொழுது பழைய மாணவர்களை கட்டி தழுவி முத்தமிட்டு தங்களுடைய சந்தோசத்தை பகிர்ந்து கொண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

---

(6 ஆம் பக்க தொடர்)

**அரசியல் நிகழ்ச்சிகளை நடாத்தி வருவதை நாம் அறிவோம். அரசியல் தேடலில் உங்களுக்குள்ள ஈடுபாட்டை எடுத்துரையுங்கள்?**

ஆம். நியுஸ் லைன் அரசியல் நேர்காணலை நான் நடத்தி வருகிறேன். சிலவேளைகளில், வெளியில் சிலர் என்னைக் கண்டால் "நியுஸ் லைன் ரியாஸ்" என்றும் அழைப்பர். இதுவரையில் 200க்கும் அதிகமான நியுஸ் லைன் நேர்காணலை நடத்தியுள்ளேன். அதில் அரசியல்வாதிகளும் சிலவேளை துறை சார் நிபுணர்களும் கலந்துகொள்வதுண்டு. அத்துடன் அண்மைக் காலமாக சமர் அரசியல் நிகழ்சியிலும் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உள்ள கேள்விகளை அரசியல்வாதிகளிடம் கேட்டு, அவர்களிடம் இருந்து அதற்கான பதிலைப் பெற முயன்றுள்ளேன். அதேபோன்று சிரச டீவியில் ஔிபரப்பாகும் சட்டன சிங்கள அரசியல் நிகழ்சியிலும் நான் கலந்து கொண்டுள்ளேன். அரசியலில் உள்ள தேடல் தொடர்பில் நீங்கள் என்னிடம் கேட்டீர்கள்.

உண்மையிலேயே, பொது மக்களுக்கு நன்மை கிடைக்கும் தீர்வுகளை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான தீர்வுகள் அரசியல் தரப்பில் இருந்து கிடைக்க வேண்டும். அதனை அடைந்து கொள்வதற்கான ஒரு பங்களிப்பாகவே அவர்களை அழைத்து வந்து கேள்வி கேட்கிறோம்.

**அறிவிப்புத்துறையில் இருப்பவர்கள் சிலரின் தமிழ் உச்சரிப்பு என்பது திருப்திகரமாக இல்லை. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன ?**

நானும் கூட இந்த நிறுவனத்தில் இணைந்து கொண்ட பின்னர் தமிழ் உச்சரிப்பை அதிகளவில் கற்றுக் கொண்டேன்.

ஆரம்பத்தில் தமிழ் உச்சரிப்பில் எனக்கும் பல சவால்கள் இருந்தன. அந்த சவாலில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் அதனையும் அதிகளவில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். இன்றும் கூட அதனைக் கற்றுக் கொள்கிறேன். இளம் ஊடகவியலாளர்களுக்கும் அதனையே கூற வேண்டும்.

**சிலநேரம் ஊடகங்களில் காட்டப்படும் விளம்பர மாயைகள்...பிசகலான பரப்புரைகள் ....பாலியல் புறக்கவர்ச்சி பரவலாக்கம்...மேற்கு நாகரீக மோகம் இவைகூட குடும்ப அமைப்புகளை சிதைவடையச் செய்கிறதா?**

இன்று எல்லாம் கையடக்கத் தொலைபேசிகளுக்கு சுருங்கிவிட்டது. சமூக ஊடக பாவணையின் போது இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். சிறந்த விடயங்களுக்காக சமூக ஊடங்களை பயன்படுத்துவோம். சமூக சிதைவுகளுக்கு காரணமான விடயங்களை புறக்கணிப்போம் என்றே கூற வேண்டியுள்ளது.

**உங்கள் திறமைக்கு கிடைத்த அங்கீகாரமான விருதுகள் பற்றி கூறுங்கள்?**

2015 அரச தொலைக்காட்சி விருது வழங்கும் விழாவில் சிறந்த செய்தி அறிக்கையிடலுக்கான விருது எனக்குக் கிடைத்தது. இரணைமடு நீர் விநியோகம் தொடர்பிலான செய்தித் தொகுப்பை தயாரித்து அதனை நியுஸ் பெஸ்டில் ஐந்து கட்டங்களாக ஔிபரப்பு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. கிளிநொச்சி விவசாயிகள் எதிர் நோக்கும் சவால்கள் மற்றும் யாழ் மாவட்ட மக்களுக்கு இரணைமடு குளத்தில் இருந்து நீரை விநியோகிப்பதற்குள்ள பல சவால்கள் தொடர்பில் இந்தத் தொகுப்பில் விரிவாக ஆராய்ந்திருந்தேன். அதற்காகவே அரச விருது கிடைத்தது.

2022 ஆம் ஆண்டு ரைகம் தேசிய விருதைப் பெற்றுக் கொண்டேன். இது எனது சிங்கள மொழி மூல செய்தி அறிக்கையிடலுக்கு கிடைத்த விருது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் நாம் தொடர்ந்தும் செய்தி வெளியிட்டு வந்தோம். அதனை நேரில் சென்று நடுக்கடலில் இருந்து செய்தி வெளியிட வேண்டும் என்ற நோக்கம் பல நாட்களாக இருந்தது. அதற்கு நெடுந்தீவில் இருந்து நியுஸ் பெஸ்ட் குழாத்துடன் படகில் சென்று ஓரிரவு நடுக்கடலில் தங்கியிருந்து செய்தி சேகரித்தோம். அதன் போது ஶ்ரீலங்கா எனும் இலங்கை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய தேசிய கொடியை தாங்கிய இழுவைப் படகை நேரில் காண முடிந்தது. அந்த அனுபவம் எனது ஊடக வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாது. அந்த செய்தி அறிக்கையிடல் சக்தி மற்றும் சிரச டீவிகளில் ஔிபரப்பாகியது. சிரச டீவில் ஔிபரப்பான எனது சிங்கள மொழி செய்தி அறிக்கையிடலுக்கே ரைகம் விருது கிடைத்தது.

**தேர்தலில் களமிறங்கும் ஏதாவது எண்ணம் உள்ளதா?**

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் இதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒன்று மாகாண சபைத் தேர்தல். இன்னுமொரு தடவை பொதுத் தேர்தலுக்கு சில அழைப்புக்கள் வந்தன. எனினும் இலங்கை அரசியல் தொடர்பில் எனக்குள்ள பார்வை காரணமாக நான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இதுவரையில் அவ்வாறான எண்ணம் இல்லை.

**நேர்காணலின் இறுதியாக மேலும் ஏதாவது தகவல்களை சொல்ல விரும்புகிறீர்களா?**

பாடசாலைக் காலத்தில் எனக்கு கற்பித்த ஆசிரியர்களை கட்டாயம் நான் இங்கு நினைவு கூரவேண்டும். கன்னத்தோட்டை சுலைமானியா கல்லூரி ஆசிரியர்கள், கொழும்பு டீ.எஸ் சேனாநாயக்க கல்லூரி ஆசிரியர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கை நெறியை தொடர்ந்த போது கற்பித்த விரிவுரையாளர்கள் அனைவருக்கும் நான் இவ்வேளையில் நன்றி கூற விரும்புகிறேன். குறிப்பாக எனக்கு தமிழ் மொழியை கற்பித்த ஆசிரியை மர்ஹூமா ஃபாய்னாவை நான் கட்டாயம் நினைவு கூரவேண்டும். பாடசாலை காலத்தில் போட்டி நிகழ்ச்சிகளுக்கான ஆசிரியை ஃபாய்னா அவர்களே என்னை தயார்படுத்துவார். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றார். என் வெற்றியில் ஆசிரியை ஃபாய்னாவிற்கு பாரிய பங்கு உண்டு. அன்னாரின் மண்ணறையை அல்லாஹ் சுவர்க்கத்தின் பூங்சோலையாக மாற்ற வேண்டும் என நான் பிராத்தனை செய்கிறேன். அத்துடன் தமிழ் மொழி கற்பித்த ஆசிரியை நதீமா மற்றும் ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்கும் இங்கு நன்றி கூற வேண்டும். அத்துடன் எனது அன்பு மனைவி ரிபா அஹமட் என்றும் என் வெற்றிகளில் துணையாக நிற்கிறார். அவர் எனக்கு பக்கபலம்தான். அத்துடன் எனது சகோதர்கள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக எனது அன்புக்குரிய நண்பர்களையும் நான் இங்கு நினைவுகூர விரும்புகிறேன். அத்துடன் கன்னத்தோட்டை ஊர் மக்கள் அனைவருக்கும் நன்றி. இறுதியாக ஊடகத்துறை என்பதும் ஓர் சவால் மிகு துறை தான். திறமையான இளம் ஊடகவியலாளர்கள் எம் சமூகத்திற்குதேவை. அதற்கான பங்களிப்பையும் நாம் கட்டாயம் வழங்க வேண்டும்.



# பூஜா ஹெக்டே

நடிகர் சூர்யா, கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். இதில் அவர் ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். ஜெயராம், கருணாகரன் உட்பட பலர் நடிக்கின்றனர். சூர்யாவின் 2டி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது. சூர்யாவின் 44வது படமான இதன் படப்பிடிப்பு அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் ஊட்டியில் நடைபெற்றது. இந்நிலையில், இந்தப் படத்தில் தனது காட்சிக்கான படப்பிடிப்பை நிறைவு செய்துள்ளார் பூஜா ஹெக்டே. இதற்காகப் படக்குழுவினர் கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். இதை தனது சமூக வலைதளப் பக்கமான இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் அவர் தெரிவித்துள்ளார். நடிகர் சூர்யா, இந்தப் படத்தை முடித்துவிட்டு ஆர்ஜே பாலாஜி இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார்.

# கனவு நனவாக சுவாசிகா விஜய் மகிழ்ச்சி



அறிமுக இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்கிய படம், 'லப்பர் பந்து'. இதில் 'அட்டகத்தி' தினேஷ், ஹரிஷ் கல்யாண், சுவாசிகா விஜய், சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் நடித்துள்ளனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் சார்பில் லக்ஷ்மன் குமார் தயாரித்த இந்தப் படம் வரவேற்பைப் பெற்றதை அடுத்து, ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா சென்னையில் நடைபெற்றது.

அதில் சுவாசிகா விஜய் கூறும்போது, "தமிழில் 6 வருடத்துக்கு முன் முதல் படம் பண்ணினேன். அப்போது பல கனவுகளுடன் இங்கே வந்தேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. கேரளாவுக்குத் திரும்பிவிட்டேன். இத்தனை வருடங்களுக்குப் பிறகு தமிழில் எனக்கு கம்பேக் படமாக இது அமைந்ததில் சந்தோஷம். இரண்டாவது இன்னிங்ஸ் போல இதை உணர்கிறேன். தயாரிப்பாளர், இயக்குநர் யாருக்கும் என்னைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனாலும் எப்படி என்னை நம்பி இந்த கதாபாத்திரத்தைக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. 16 வயதில் உடைந்து போன அந்த கனவு, இப்போது மீண்டும் நனவாகத் தொடங்கியுள்ளது. இன்னும் நிறைய தமிழ்ப் படங்களில் நடிக்க வேண்டும். தினேஷுடன் ஏற்கனவே 'குக்கூ' படத்தில் இணைந்து நடிக்க வேண்டியது, சில காரணங்களால்அது நடக்கவில்லை. இத்தனை வருடங்கள் கழித்து அவரது ஜோடியாக நடித்துள்ளேன். அதுவும் மகிழ்ச்சி" என்றார். படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

# "தனிப்பட்ட பேச்சு வார்த்தை மறுக்கப்படுகிறது" ஆர்த்தி ரவி வேதனை



"இந்த விஷயத்தில் தனிப்பட்ட பேச்சுவார்த்தையை நான் எதிர்பார்க்கிறேன். ஆனால், இன்று வரை அது மறுக்கப்படுகிறது. யாருடைய நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்க மாட்டேன். கடவுளையும், நீதித் துறையையும் நம்புகிறேன்" என ஆர்த்தி ரவி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "என் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து எழும் கருத்துகள் மீதான என்னுடைய மௌனத்தின் வெளிப்பாடு, பலவீனமோ, குற்ற உணர்ச்சியோ அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறேன். கண்ணியத்தை கடைபிடிக்கும் வகையிலும், உண்மையை மறைக்க என்னை மோசமாக சித்தரிக்க முயற்சிப்பவர்களுக்கு பதிலளிப்பதை தவிர்க்கவும், மௌனம் காக்கிறேன். அதே நேரம் நீதித் துறையால் எனக்கான நீதி கிடைக்கும் என நம்புகிறேன்.

பரஸ்பர ஒப்புதலின் அடிப்படையில் விவாகரத்து பெற்றதாக வெளியான அறிவிப்பை கண்டு அதிர்ச்சி அடைந்து, ஒரு தலைபட்சமாக இது நடக்கிறது என்பதை வெளிப்படுத்தினேன். இந்த விஷயத்தில் தனிப்பட்ட உரையாடலை நான் எதிர்பார்க்கிறேன். ஆனால், இன்று வரை அது மறுக்கப்படுகிறது. திருமணம் எனும் புனிதத்தை ஆழமாக மதிக்கிறேன். யாருடைய நற்பெயரையும் புண்படுத்தும் விதமாக பொது விவாதங்களில் ஈடுபட மாட்டேன். என் குடும்பத்தின் நலன் குறித்தே என் முழு கவனமும் உள்ளது. கடவுள் நல்வழிகாட்டுவார் என நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக. நடிகர் ஜெயம் ரவி, தயாரிப்பாளர் சுஜாதா விஜயகுமார் மகள் ஆர்த்தியை காதலித்து கடந்த 2009ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். சமீபத்தில், பரஸ்பர ஒப்புதலுடன் தனது மனைவியை பிரிவதாக ஜெயம் ரவி அறிவித்தார். பின்னர் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார். அதன்பின், ஆர்த்தி வெளியிட்ட அறிக்கையில், "திருமணப் பந்தத்தில் இருந்து விலக வேண்டும் என்ற இந்த முடிவு சொந்த விருப்பத்தைச் சார்ந்து அவராகவே எடுத்ததே தவிர, குடும்ப நலன் கருதி எடுக்கப்பட்டதல்ல" என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'விஜய் 69'–ல் மஞ்சு வாரியர்?



பிரபல மலையாள நடிகையான மஞ்சு வாரியர், தனுஷின் 'அசுரன்' படம் மூலம் தமிழில் அறிமுகமானார். இதைத் தொடர்ந்து அஜித்தின் 'துணிவு' படத்தில் நடித்தார். தற்போது வெற்றிமாறனின் 'விடுதலை 2'ம் பாகத்தில் நடித்து வருகிறார். 'வேட்டையன்' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்துள்ள அவர் விஜய்யின் 69வது படத்தில் நடிக்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சமீபத்தில் அளித்த நேர்காணல் ஒன்றில் ஹெச்.வினோத்துடன் பணியாற்றிய அனுபவம் பற்றி மஞ்சு வாரியர் பேசினார். அப்போது "துணிவு படத்தில், வினோத் முழு சுதந்திரம் கொடுத்தார். ஏதாவது காட்சியில் இன்னொரு டேக் கேட்டால் இந்தக் காட்சிக்கு இவ்வளவு போதும், நீங்கள் நன்றாக நடிப்பதற்கு நான் வேறு படம் தருகிறேன் என்று சொல்வார்" என மஞ்சு வாரியர் தெரிவித்துள்ளார். இதனால் வினோத் இயக்கும், விஜய் 69 படத்தில் அவர் நடிப்பார் என்று கூறப்படுகிறது.



இந்தப் படத்தில் நடிகைகள் மமிதா பைஜு, சமந்தா, ஸ்ரீலீலா ஆகியோர் நடிப்பதாகவும் சிம்ரன் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்க இருப்பதாகவும் கூறப்பட்டது. கே.வி.என். புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

# காதல் வந்தால் சொல்லி அனுப்பு உயிரோடு இருந்தால் வருகிறேன்



காதல் வந்தால் சொல்லி அனுப்பு உயிரோடு இருந்தால் வருகிறேன் என்ற பாட்டின் மூலம் ரசிகர்கள் மனதில் பதிந்தவர் தான் குட்டி ராதிகா. அந்த படத்தின் மூலம் புகழின் உச்சிக்கு சென்ற அந்த நடிகை திருமணம் செய்து கொண்டு, குழந்தையுடன் ஏகப்பட்ட சொத்துகளை நிர்வாகித்துக்கொண்டு படு பிஸியான தொழிலதிபராக இருக்கிறார். கர்நாடகாவை பூர்வீகமாக கொண்ட குட்டி ராதிகா, ஒன்பதாம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கும் போதே, நீல மேக சியாமா என்ற கன்னடப்படத்தில் நடித்தார். அதைத் தொடர்ந்து கன்னடப்படத்தில் நடித்து வந்த இவர் 2003ம் ஆண்டு வெளிவந்த இயற்கை படத்தில் ஷாம், அருண் விஜய்க்கு ஜோடியாக நடித்தார். அந்த படம் மிகப்பெரிய அளவில் குட்டி ராதிகாவிற்கு ஒரு நல்ல பெயரை பெற்றுத்தந்தது. இயற்கை படத்தைத் தொடர்ந்து, நடிகை ராதிகா. வர்ணஜாலம், உள்ளக்காதல், மீசை மாதவன் ஆகிய தமிழ் படங்களில் நடித்தார். குட்டி ராதிகா: அடுத்தடுத்த படத்தில் நடித்து வந்த இவர் திடீரென, சினிமாவை விட்டு விலகி 2000ம் ஆண்டு ரத்தன் குமார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இதையடுத்து, இவர்கள் இருவரும் சில நாட்கள் வாழ்ந்து வந்த நிலையில், கருத்து வேற்பாடு காரணமாக இருவரும் பிரிந்து விட்டதாக சொல்லப்படுகிறது. மேலும், 2002ம் ஆண்டு ரத்தன் குமார் மாரடைப்பால் உயிரிழந்துவிட்டார். குட்டி ராதிகா விவாகரத்திற்கு பின்1வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டதாக சொல்லப்பட்ட நிலையில், திடீரென குழந்தையுடன் பெங்களூர் வந்தார். ரகசிய திருமணம்: அந்த குழந்தையின் தந்தை கர்நாடக முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி என அதிர்ச்சியான தகவலை கூறினார். குமாரசாமி தன்னை 2006ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டதாக கூறினார். மேலும், திருமணத்தைப் பற்றி வெளியில் தெரிந்தால் பிரச்சனை ஏற்படும் என்பதால் இத்தனை ஆண்டுகளாக வெளிநாட்டில் வசித்து வந்ததாக அவர் கூறியிருந்தார். இந்த தகவலுக்கு குமாரசாமி எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொண்டார். இந்த தம்பதிகளுக்கு ஷாமிகா என்கிற மகள் இருக்கிறாள். பல கோடி பரிசு: சினிமா விட்டு விலகி குடும்பத்தை கவனித்துக்கொண்டு வந்த குட்டி ராதிகாவிற்கு, அவரது கணவர் குமாரசாமி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி 'சமயா' என்ற பெயரில் இயங்கும் ஒரு சேனலை வாங்கி கொடுத்துள்ளார். பெங்களூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் அந்த சேனலின் மதிப்பு மட்டும் ரூ.65 கோடியாகும். அந்த சேனலில் நிர்வாக இயக்குநராக குட்டி ராதிகா உள்ளார். இதுமட்டுமில்லாமல் ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி புரடக்சன் என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனத்தை நிர்வகித்து வருகிறார். இந்த நிறுவனம் தயாரிக்கும் 'அஜாக்ரதா' படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# 'குடும்பஸ்தன்'

மணிகண்டன் நடிக்கும் 'குடும்பஸ்தன்' படத்தின் முதல் தோற்றம் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

'ஜெய்பீம்', 'குட் நைட்' உட்பட பல படங்களில் நடித்தவர் மணிகண்டன். அவர் அடுத்து ஹீரோவாக நடிக்கும் படத்தை 'நக்கலைட்ஸ்' ராஜேஷ்வர் காளிசாமி இயக்குகிறார். சினிமாகாரன் எஸ்.வினோத்குமார் தயாரிக்கும் இந்தப் படத்தின் கதையை, பிரசன்னா பாலச்சந்திரனும் ராஜேஷ்வர் காளிசாமியும் எழுதியுள்ளனர். திரைக்கதை, வசனத்தைப் பிரசன்னா பாலச்சந்திரன் எழுதியுள்ளார். சுஜித் சுப்ரமணியம் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு வைஷாக் இசை அமைக்கிறார். சான்வி மேக்னா நாயகியாக நடிக்கிறார். குரு சோமசுந்தரம், ஆர்.சுந்தர்ராஜன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

இந்நிலையில், இப்படத்துக்கு 'குடும்பஸ்தன்' என பெயரிடப்பட்டுள்ளது. படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. ஒரு குடும்பஸ்தனாக பல்வேறு வேலைகளை செய்யும் மணிகண்டனின் வேலைப்பளுவை குறிப்பிடும் வகையில் சுவாரஸ்யமாக வடிவமைக்கப்பட்டுள்ளது போஸ்டர். 'குட்நைட்' படத்துக்குப் பிறகு மீண்டும் ஃபேமிலி ஆடியன்ஸை நோக்கி திரும்பியுள்ளார் மணிகண்டன்.

படம் குறித்து இயக்குநர், ராஜேஷ்வர் காளிசாமி கூறும்போது, "இந்தக் கதையை சில வருடங்களுக்கு முன்பே உருவாக்கிவிட்டோம். இதில் மணிகண்டன் நடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து அவரிடம் சொன்னோம். ஸ்கிரிப்டை படித்து விட்டு பத்து நாளில் சொல்கிறேன் என்றார். அவருக்கும் பிடித்திருந்தது. இப்போது படப்பிடிப்பைத் தொடங்குகிறோம். ஒரு மிடில் கிளாஸ் இளைஞன் தினமும் குடும்பத்தை நடத்துவதே அட்வெஞ்சர் போல இருக்கிறது. இதுதான் ஒன்லைன். குடும்பப் பின்னணியில் உருவாகும் காமெடி கதை.மணிகண்டனுக்கு இயல்பான காமெடி, நன்றாக வரும். அதனால் இந்தக் கதையில் அவர் மிரட்டுவார். கோயம்புத்தூர் பின்னணியில் படம் உருவாகிறது. படப்பிடிப்பு இன்று தொடங்குகிறது" என்றார்.



# பரீட்சையில் பிட் அடித்தல் சினிமாவின் பாதிப்பா!

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்.(392)

**பொருள்**

கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார் கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும். இன்றைய இளைய தலைமுறைகள் எல்லோரும் எல்லாமே இலகுவாக கிடைக்க வேண்டும் என்றே நினைக்கிறார்கள்.

அது smart work என்கிற புத்திசாலித் தனமான வேலையாக இருப்பின் வரவேற்கத்தக்கது. ஆனால் இங்கு நடப்பதோ வேறு. இன்றையத் தலைமுறையின் வாழ்வியலை சினிமா, வலைத்தளங்களில் வெளியிடப்படும் சிறு காணொளி என்பன முடிவு செய்வது வேதனையே!

அண்மையில் எம் நாட்டின் பாடசாலையில் பரீட்சை நடைபெறும் வேளையில் சினிமா பாணியில் பாடங்களை துண்டுகளில் எழுதி bit அடிக்கும் முறையை சில மாணவர்கள் கையெடுத்து கையும் களவுமாக பிடித்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

எங்கள் நாட்டுக்கென கல்வி தகுதி என்பது தரமானதாக உள்ளதை நாம் அனைவரும் உணர்வோம்.

இலங்கையின் நீண்ட கல்வி வரலாறானது இரண்டாயிரம் ஆண்டுகளையும் பின்னோக்கிச் செல்வதோடு, இலங்கை அரசியலமைப்பானது அடிப்படை உரிமையொன்றாக கல்வியை ஏற்பாடு செய்கிறது.

இலங்கையின் சனத்தொகையில் 92 வீதமானோர் எழுத்தறிவு வீதத்தை கொண்டவர்களாவர். இது மூன்றாம் உலக நாடொன்றிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமானதாகும். இலங்கை, தெற்கு ஆசியாவிலேயே மிக உயர்ந்த கல்வியறிவை கொண்டு ஆசியாவில் மிகச் சிறந்த கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது. நாட்டின் வாழ்க்கை முறை, கலாசாரம் என்பவற்றில் கல்வி முக்கிய பங்கை வகிப்பதோடு, இது கி.மு. 543ஆம் ஆண்டை பின்னோக்கிச் செல்கின்றது. நவீன கல்வி முறைமையானது, இலங்கை 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய இராஜ்ஜியத்திற்கு உட்பட்டபோது கொண்டு வரப்பட்டதாகும். இப்படியான சிறப்புகளை பொருந்திய நம் நாட்டின் பரீட்சையிலும் துண்டு சீட்டின் மூலமாக பரீட்சையில் பார்த்து எழுதலாம் என்கிற எண்ணத்தை உருவாக்கியவர்கள் யார் என்று சிந்தித்தால் நிச்சயமாக சினிமா மோகமே காரணம் என்று கூறமுடியும். சினிமாவில் தங்களுக்கு பிடித்த காதநாயகன் பரீட்சைக்கு வரும் போது விடைகளை எழுதி உடலில் அங்கங்கே ஒளித்து வைத்து பின் பரீட்சை மண்டபத்தில் பார்த்து எழுதும் கொடுமையை



நாம் வெகுவாக இரசித்திருக்கிறோம். அந்த பழக்கம் நம் சமூகத்தின் மத்தியில் கவரப்பட்டு செயல் முறைக்கு வரும் போதே நாம் அதன் விபரீதம் புரிந்து விழிக்கிறோம்.

எந்திரன் 2010ல் வெளியான ஒரு தமிழ்த் திரைப்படமாகும். சங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், உலக அழகியான ஐஸ்வர்யா ராய் நடித்திருக்கின்றார்கள். இப்படத்திற்கு ஏ. ஆர். ரகுமான் இசை அமைத்திருக்கின்றார். 2010, அக்டோபர் 1 அன்று இந்த திரைப்படம் உலகம் முழுவதும் வெளியானது.

இப்படம் இதற்கு முன்பு வெளியான அனைத்து தமிழ்த் திரைபடங்களின் பட வசூலை முறியடித்து சாதனை படைத்தது.

இப்படியான பெருமை பொருந்திய திரைப்படத்திலும் கதாநாயகி படிக்காமல் ரோபோவின் உதவியுடன் பரீட்சை எழுதுகிறார். அதுவும் பலரின் உயிரை காக்கும் மருத்துவருக்கான பரீட்சை.

திரைப்படம் வெளிவந்த வேளையில் இரசித்து கைத்தட்டி மகிழ்ந்த. நமக்கு நம் அருகில் இந்த தவறு நடக்கும் போதே அதன் பாரிய பாதிப்பு திகைக்க வைக்கிறது.

எத்தனை கூடாது விடயத்தை நாம் இத்தனை நாள் பார்த்து சிரித்துள்ளோம்என்பதைநினைக்கவெட்கமாக உள்ளது.சினிமா என்பது பொழுது போக்கு மட்டுமே. நாமாக இருந்தால் என்ன நம் பிள்ளைகளாக இருந்தால் என்ன!

சினிமா நம் வாழ்க்கைக்குள் நுழைவதை தடுக்க சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றை பார்த்து மனதிற்குள் எடுத்து வாழாமல் பார்ப்பதோடு நிறுத்தி விட்டு வாழ்க்கைகுள் வாழும் முறையில் மாற்றம் ஏற்படுத்தும் நிலைக்கு தடையிட வேண்டும்.

பிள்ளைகளுக்கும் அதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

**கல்வி :**

கல்வி என்பது வாழ்க்கையின் உயிர். கல்வி (Education) என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி, இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது

ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை, போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றும் அடைய வைக்கிறது. கற்றல் அனுபவம் அது மாணவரின் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, மன வளர்ச்சி, உணர்வுகளின் வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வளர்ச்சியைப் பெற உதவுகிறது.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# ஆரி கலை

ஆடை, அலங்காரத்தில் பெண்களுக்கு நிகர் பெண்களே. அதிலும் மணப்பெண் ஆடை அலங்காரம் என்றால் கேட்கவே வேண்டாம். அதில், அவ்வளவு கவனமும், அக்கறையும், செலவும், கூடுதலாகவே இருக்கும். அண்மையில் பிரபலமாகி வரும் மணப்பெண் ஜாக்கெட் ஆரி கலை வேலைப்பாட்டில் விருதுநகர் தனி முத்திரை பதித்து வருகிறது.

வெளிநாடுகளில் இருந்து ஆர்டர்கள் வரும் அளவிற்கு ஆரி கலை பெயர் பெற்றுள்ளது.

விருதுநகர் மேலத்தெருவில் 10க்கும் மேற்பட்ட வடமாநிலத் தொழிலாளர்கள் இரவு பகலாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து, மேலத்தெருவில் தையலகம் நடத்தி வரும் செல்வி (42) கூறியதாவது: 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.



18 வயதில் தையல் பழகினேன். கடந்த 14 ஆண்டுகளாக பெண்களுக்கான தையலகத்தை நடத்தி வருகிறேன். ஆரி கலை எங்களது தனிச் சிறப்பு. பலர் ஆரி கலை பணியை மதுரை, கோவை போன்ற வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி பெறுகிறார்கள்.

ஆனால், நாங்கள் விருது நகரிலேயே இப்பணியை மேற்கொள்கிறோம். ஆரி, குந்தன், ஸ்டோன் டிசைன், எம்ப்ராய்டிங் என அனைத்து வகையான டிசைன்களிலும் தைத்து தருகிறோம். மணப்பெண் ஆர்டர்களே அதிகம் வரும்.

அதுமட்டுமின்றி, மணப்பெண் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்குமான ஆர்டர்கள், கல்லூரி மாணவிகள், வரவேற்பு நிகழ்ச்சி என பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான ஆர்டர்களும் வருகின்றன. குறைந்தபட்சம் ரூ.1,500 முதல் அதிகபட்சம் ரூ.22 ஆயிரம் வரை ஆரி கலை டிசைன்கள் உள்ளன. ஜாக்கெட் தைப்பதற்கு 15 பெண்கள் பணியில் உள்ளனர். ஆரி கலை செய்வதற்கு மட்டும் பெங்களூரைச் சேர்ந்த 13 கலைஞர்கள் உள்ளனர். காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பணி நடைபெறும். சீசன் நேரத்தில் ஷிப்ட் முறையில் இரவு பகலாக பணி நடக்கும்.

உள்ளூர், வெளி மாவட்டங்கள் மட்டுமின்றி மலேசியா, கனடாவில் இருந்தும் தற்போது ஆர்டர்கள் வருகின்றன. சமூக வலைதளத்தில் எங்களது டிசைன்களை பார்த்து ஈர்க்கப்பட்டு பலர் ஆர்டர்கள் தருகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள தையலகங்கள் மூலமும் ஆர்டர்கள் வருகின்றன. குறிப்பாக, வெளிநாடுவாழ் தமிழ் பெண்கள் ஆரி கலை வேலைப்பாடுள்ள ஜாக்கெட்டுகளை விரும்பி அணிகிறார்கள். நான் சுயமாக தொழிலில் ஈடுபடுவதால் பலருக்கு வேலை வழங்க முடிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# குழந்தை வளர்க்கும் கலை

குழந்தை வளர்ப்பு என்பது பெரிய கலை. சரியான முறையை பின்பற்றும் பெற்றோர்கள் நேர்மறை பெற்றோர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தான் தங்கள் குழந்தைகளுக்கு ரோல் மாடல். பிள்ளைகளுக்கு நல்ல நடத்தையை வளர்த்துகொள்ளவும், நேர்மறையான பழக்கங்களை கற்றுகொள்ளவும் பெற்றோர்கள் உதவ வேண்டும். குழந்தையுடன் நேர்மறையான உறவை கொண்டிருக்கும் போது மட்டுமே இவை எல்லாம் சாத்தியமாகும். குழந்தைகளை நேர்மறையாக வளர்க்க பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை பார்க்கலாம்.

நேர்மறையான பெற்றோர்கள் என்பதே சக்தி வாய்ந்த மந்திரம் தான். குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு இரக்கத்தை காட்டுவதோடு குழந்தைகளிடமும் இதை ஊக்குவிப்பதன் மூலம் விரும்பும் வழியில் செயல்பட வழிகாட்டும் அற்புதமான வளர்ப்பு முறை ஆகும். இதனால் குழந்தைக்கும் பெற்றோருக்கும் அற்புதமான பிணைப்பு ஏற்படும். இதன் மூலம் குழந்தைகளின் உலகில் நீங்கள் முக்கியமானவர்களாக இருப்பீர்கள். நல்லவர்களாக இருப்பீர்கள். குழந்தையின் வளர்ப்பில் பெற்றோர்கள், வளர்ப்பு பெற்றோர்கள், ஒற்றை பெற்றோர்கள்,மாற்றாந் தாய் பெற்றோர்கள், மூத்த உடன்பிறப்புகள் மற்றும் பிற உறவினர்கள் உறவினர்கள் அல்லாதவர்கள் என எல்லோருமே குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை பாதிக்கும் தனிநபர்களின் வரிசையில் வரக்கூடியவர்களே.

நேர்மறையான பெற்றோருக்குரிய அணுகுமுறை என்பது சக்திவாய்ந்த அணுகுமுறையாக இருக்கலாம். குழந்தைகளின் பலவீனங்களை செலுத்துவதற்கு மாற்றாக பலத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். இதை சரியாக செய்யும் போது அந்த பெற்றோர்கள் வலிமை அடிப்படையிலான பெற்றோர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். குழந்தையின் நலனில் அக்கறையுள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் இது பொருந்தும். அக்கறை, கற்பித்தல், வழிநடத்துதல், தொடர்புகொள்வது மற்றும் குழந்தையின் தேவைகளை தொடர்ந்து நிபந்தனையின்றி வழங்குதலும் பொருந்தும்.

பெற்றோர் குறுநடை போடும் குழந்தை என்ன தவறு செய்கிறது என்பதில் கவனம் செலுத்துவது எளிதாக இருக்கும்.

ஆனால் கவனத்தை அவர்களது பலத்துக்கு மாற்றுவது சற்று சவாலானதாக இருக்கும்.ஆனாலும் பெற்றோருக்கு இது பயனுள்ள வழி என்று ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது.

# கனடா நாட்டில் உலக தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு







கனடாவில் தமிழ்ப் பெருங் குடிமக்கள் நலத்தோடும் வளத்தோடும் வாழ்ந்து வருகின்றனர். கனடா நாட்டின் அரசியல், வணிகம், கல்வி, மருத்துவம், ஊடகம் முதலிய துறைகளில் தமிழர்களின் பங்களிப்பு மிகுதி எனலாம். தமிழ்க் கல்வியும் கற்பிக்கப்பட்டு, பலரும் தமிழை ஆர்வமுடன் கற்றுவருகின்றனர். கனடாவில் ஆண்டுதோறும் சனவரி மாதம் தமிழ்ப் பண்பாட்டு மாதமாகக் கொண்டாடப்படுகின்றது. (பொங்கல் திருவிழா சனவரியில் வருவதை நினைவிற்கொள்ளவும்). கனடாவில் இயங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கனடா வளாகம் தமிழ்க் கல்விக்குப் பெரும் பங்காற்றியது. புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரும் இளங்கலை, முதுகலைத் தமிழ் இலக்கியம் பயில்வதற்குப் பெருந்துணையாக இருந்த அந்த நிறுவனத்தின் செயல்பாட்டில் அண்மைக்காலமாகத் தொய்வு ஏற்பட்டதால் தமிழ்க்கல்வி கனடாவில் பாதிப்புற்றுள்ளது. இக்குறை விரைவில் சரிசெய்யப்படவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கனடா வளாகத்து மாணவர்களுக்குத் தொல்காப்பியம் நூல் ஆசிரியர்கள் வழியாக அறிமுகமாகியிருந்தது. 2016 ஜூன் 4 ஆம் திகதி உலகத் தொல்காப்பிய மன்ற தொடங்கப்பட்டது. இம் மன்றத்தின் கனடாக் கிளை கருத்தரங்கு, மாதக் கூட்டங்கள், ஆண்டு விழாக்களின் வழியாகத் தொல்காப்பியத்தை அறிமுகம் செய்துள்ளது. இதனால் இளையவர்கள் முதல் பெரியவர்கள் வரை இதனை பரவலாக அறிந்துள்ளனர். இந்த நிலையில் தொல்காப்பியத்தை அடுத்த நிலைக்கு உயர்த்திப் பரப்பும் முயற்சியில் கனடா – தொல்காப்பிய மன்றத்தின் தலைவர் முனைவர் செல்வநாயகி சிறிதாசுவின் முயற்சியால் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டுக்கான கால்கோல் பணி தொடங்கப்பட்டது. அதன் காரணமாக கனடா உலகத் தொல்காப்பிய மன்றம், தமிழகத்தின் இலக்குவனார் இலக்கிய இணையத்தின் துணையுடன் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை அண்மையில் நடத்தியது.

உலகு தழுவிய மாநாட்டை நடத்துவது எனில் பலரின் அறிவுரையும் வழிகாட்டலும், பெரும் பொருட்செலவும் இருக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மையே ஆகும். அவ்வகையில் முனைவர் செல்வநாயகி சிறிதாசுவின் தலைமையில் இயங்கிய அறிவார்ந்த குழு மாநாட்டுக்கான பெருந்திட்டமிடலுடன் மூன்று நாள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தது.



முதல் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு செப்டம்பர் 20, 21 ஆகிய இரண்டு நாளும் கனடா, இசுகாபுரோ நகரில் இசுகாபுரோ குடிமை நடுவத்தில் (Scarborough civic Centre) நடைபெற்றது. மூன்றாம் நாள்(செப்.22) மாநாட்டின் நிறைவு விழாவாகத் தமிழ்க் கலா மன்றத்தின் அரங்கில் நடைபெற்றது.

தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டில் ஆய்வரங்கம், சிறுவர் பேச்சு, கண்காட்சி, விநாடி வினா(சிறுவர்), விநாடி வினா(பெரியவர்), தமிழ்த்திறன் போட்டிகள் பரிசளிப்பு எனவும், சதிராட்டம், நடனம், குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், அன்பின் ஐந்திணைக் கவியரங்கம், பறையிசை, காத்தவராயன் கூத்து, தொல்காப்பியம் வில்லுப்பாட்டு எனவும் பல்வேறு வடிவங்களில் நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டு அனைவரையும் ஈர்க்கும் வகையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டன.

முதல் நாள் நிகழ்ச்சி மங்களவிளக்கேற்றலுடன் தொடங்கியது. இங்கு தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா கீதம், மன்றப்பாடல் என்பன இடம்பெற்றன.. அஃகேனம் கலைக்குழுவின் பறையிசை ஒலிக்கப்பட்டது. குமரகுரு கணபதி பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் செல்வநாயகி சிறிதாசு தலைமையுரை நல்கினார். அறிஞர் இலக்குவனார் திருவள்ளுவன் இணையம் வழியாக தலைமை உரையாற்றினார். முனைவர் இல. சுந்தரம் ஆய்வரங்க அறிமுகவுரையாற்றினார். மருத்துவர் இராமநாதன் இலம்போதரன் முதன்மை விருந்தினர் உரை வழங்கினார். மருத்துவர் விசய் சானகிராமன் இணையம் வழியாக வாழ்த்துரை வழங்கினார்.

உலகத் தொல்காப்பிய மன்றத்தின் செயலாளர் முனைவர் மு. இளங்கோவன் தொல்காப்பியம் குறித்த சிறப்புரை வழங்கினார். தமிழ்த்திறன் போட்டிகளில் வென்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் நடன நிகழ்வுகளும் நடந்தன. கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலாளர் சண்முகராசா சின்னதம்பி நன்றியுரை வழங்கினார்.



சுதாகர் நிரோஜினி தம்பதிகளின் குடும்பம் (ஜெர்மன்)



சுதாகர் நிரோஜினி தம்பதிகளின் குடும்பம் (ஜெர்மன்)



Sandheepa, Priyadharshani, Harshika, Anusha, Nethmi, Hansi

## Birthday Wishes



Mehrin, Gelioya



**சகிலேஷ்**
தந்தை : தோமஸ் யோகதாஸ்,
தாய் : மல்லிகா
புளியாவத்தை மேல் பிரிவு

# ஹெட்போன் ஆபத்து! அவதானம் அவசியம்



அவசர பயன்பாட்டுக்காக கண்டுபிடிக்கப்பட்ட கையடக்க தொலைபேசிகள் இன்று அத்தியாவசியமானவையாக மாறிவிட்டது. அதாவது உலகத்தையே உள்ளங்கைக்குள் கொண்டு வருவதை இன்று அனைவரும் கண்டுள்ளோம். உள்ளங்கையிலேயே உலகத்தைக் கொண்டு வந்து தந்தாலும் இது தரும் ஆபத்துக்களும் பல உள்ளன.

அந்த வகையில் கையடக்க தொலைபேசிகளின் பயன்பாடு மற்றும் தனிப்பட்ட கேட்பொலிகளின் ஒலி அலைகள் காரணமாக ஒன்று தசம் ஒன்று பில்லியன் இளைஞர்கள் காது கேட்காமல் போகும் அபாயத்தில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த காது கேளாமை பிரச்சினை, மன ஆரோக்கியம், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பிலும் பல பாதிப்புகளை சமகாலமாக ஏற்படுத்தி வருகின்றது.

உதாரணமாக தலையை குனிந்தபடி தொலைபேசியை பார்த்துக் கொண்டே இருப்பதும் காதில் காது ஒலிப்பான்களை மாட்டிக் கொண்டே இருப்பதும் கண், காது மற்றும் மூளை மூன்றிலும் பாதிப்பை உண்டாக்குகின்றது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இன்றைய சூழ்நிலையில் இளம் வயதினர்கள் நாள் முழுவதும் காதினுள் காது ஒலிப்பான்களை மாட்டிக் கொண்டே திரிவதை வீதி போன்ற பொது இடங்களிலும் பயன்படுத்தி வருவதை கண்கூடாக பார்த்திருப்போம்.

அதிலும் காதுகளில் காது ஒலிப்பான்களை மாட்டிக் கொண்டே பேசுவதை காட்டிலும் சத்தமாக பாட்டு கேட்பதை பலரும் விரும்புகின்றார்கள். ஆனால் தொடர்ந்து அதிக நேரம் பாட்டு கேட்கும் பொழுது செவிப்புலன் இழப்பு அல்லது டின்னிடஸ் ஏற்படலாம். மேலும் இது தொடர்ந்து நீடிக்கும் போது காதுகளில் உணர்ச்சி உயிரணுக்களின் நிரந்தர சேதத்துக்கு வழிவகுக்க கூடும். இவை மீண்டும் மீட்க முடியாமலும் போகலாம். இது காதுகேளாமை வரை சென்று விடும் ஆபத்தையும் ஏற்படுத்தி உள்ளதை நாம் ஊடகங்களிலும் பத்திரிகைகளிலும் செய்தியாக பார்த்துள்ளோம். இந்தப் பாதிப்பில் அதிகம் சிக்கிக் கொள்வது இளையதலைமுறையினரே.

இயல்பாகவே கையடக்க தொலைபேசிகளை காதில் வைத்து பேசாமல் அதனை காது ஒலிப்பான்களில் தொடர்பு படுத்தி பேசும்போது கதிர்வீச்சு பாதிப்பு குறைவடையும். இருந்தாலும் ஹெட்போனை மட்டுமே தொடர்ந்து பயன்படுத்தினாலும் இது சேதத்தை உண்டாக்கும்.

எப்பொழுதும் காது ஒலிப்பான்களை பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இதன் பயன்பாடானது அளவோடு இருக்க வேண்டும். காதுக்குள் 90 டெசிபல் அளவிற்கு ஒலியை காது ஒலிப்பான்கள் அனுப்புவதனால் காது கேளாமைக்கு காரணமாகின்றது.

அது மட்டும் இல்லாமல் தற்காலத்தில் இளைஞர்கள் கையடக்க தொலைபேசியில் சார்ஜ் குறைவானதும் சார்ஜ் வயரினை அடித்தபடியும் ஹெட்போனை அதில் தொடர்பு படுத்தியவாறே தொலைபேசிகளை பாவிக்கின்றனர். இயல்பாகவே தனியாக ஹெட்போன் பாவிப்பதன் மூலமே காது கேளாமை ஏற்படும். இதைத்தவிர சார்ஜ் போட்டுக் கொண்டே பாவிக்கும்போது இது பெரிய அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

ஐந்து நிமிடங்கள் இடைவிடாது 100 டெசிபல் ஒலியை கேட்டால் மிகவும் சிரமம் ஏற்படும், இவ்வாறு தொடர்ந்து கேட்கும் பொழுது அது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்து செயற்பட வேண்டும்.

நமது காதுகள் மூன்று பகுதிகளால் ஆனவை. இது ஒலிகளை செயலாக்கும் வேலைகளை செய்பவை. வெளிப்புற காது, நடுத்தர காது மற்றும் உள்காது போன்றவை ஆகும். உட்காது கோக்கிலியா என்று அழைக்கப்படுகிறது. இதன் ஒரு பகுதி சிறியளவிலான உரோமக் கலங்களைக் கொண்டிருக்கின்றது. இந்த உரோமக் கலங்கள் மூளைக்கு ஒலி செய்திகளை அனுப்ப உதவுகின்றது. செய்திகள் சத்தம் அதிகமாக உரக்க இருக்கும் போது அது உரோமக் கலங்களை சேதப்படுத்திவிடக்கூடும்.

இதனால் செய்திகளை மூளைக்கு அனுப்பும் கோக்கிலியா செயற்பட முடியாமல் போகிறது. பொதுவாக உடலில் மற்ற பகுதிகளில் ஏற்படும் சேதம் போல அல்ல உட்காது சேதம். உட்காது ஒரு முறை சேதமாகி விட்டால் பின்னர் குணமடையாது காலப்போக்கில் செவிப்புலன் மேலும் மோசமாகக்கூடும். மேலும் செவிப்புலன் இழப்பு என்பது படிப்படியாக நடப்பதால் அவை தீவிரமாகும் வரை பாதிப்பு இருப்பதே தெரியாது.

**காது ஒலிப்பான்கள் மற்றும் இயர்பட்ஸ் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள்**

மூன்று நாட்களுக்கு முன்பு சமூக ஊடகத்தில் ஒரு காணொளியை பார்வையிட்டேன். அதில் ஒரு பெண் ஹெட்போனினை நீண்ட நேரம் காதுகளில் மாட்டிக் கொண்டு தொலைபேசியினை பாவித்ததனால் அந்த ஹெட் போன் சூடாகி காதுக்குள்ளேயே வெடித்து விட்டது.

இதனால் அப்பெண்ணுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டதாக சமூக ஊடகங்களில் அந்த காணொளி பரவலாக பேசப்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

ஹெட் போன் மற்றும் இயர்பட்ஸை அதிக அளவில் பயன்படுத்தும் போது உட்காதில் உள்ள அவுட்டர் ஹேர் ஸ்பேஸ் இன்னர், ஹேர் ஸ்பேஸ் பாதிக்கப்படும். உட் காதின் உள்ளே உரோமக் கலங்களும் பாதிப்படையும்.

இது கேட்கும் ஒலியின் அளவைப் பொறுத்தே ஒவ்வொருவருக்கும் மாறுபடும். அதாவது எவ்வளவு நேரம் ஒலியை கேட்கிறார்கள், எவ்வளவு ஒலி அளவில் கேட்கிறார்கள் என்பதைப் பொறுத்து பாதிப்புகள் கூடக் குறைய இருக்கும்.

அதேபோன்று திடீரென்று அதிக ஒலியை கேட்க நேரிடும் பொழுது கேட்கும் திறன் பாதிப்படையும். அல்லது நீண்ட நாட்களாக ஒலியை கேட்டுக் கொண்டே இருப்பதால் உட்காதில் இருக்கும் உரோமக் கலங்கள் பாதிக்கப்பட்டு பாதிப்பு ஏற்படலாம்.

பொதுவாக மெல்லிய ஒலியை குறைந்த அளவில் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு பெரியளவில் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. ஏனென்றால் ஒரு அளவு வரை அவரவர் உடல் தானாகவே சரி செய்து கொள்ளும். அதுவே அதிக அளவில் அதிக நேரம் கேட்டுக் கொண்டிருந்தால் நிரந்தர பாதிப்புகள் ஏற்படும்.

**ஹெட் போன் பயன்படுத்தும் கால அளவுகள்**

சிலருக்கு ஏழு மணி நேரம் தொடர்ந்து கேட்டாலே காது பாதிப்பு அடைந்துவிடும். சிலருக்கு 9 மணி நேரம் வரை கேட்டாலும் பெரிய பாதிப்புகள் இருக்காது. ஆனால் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரத்திற்கு மேல் சுமார் 85 டடெசிபல் ஒலி அளவை தாண்டும் போது தான் பாதிப்புகள் தொடங்குகின்றன. முதலில் கேட்கும் திறனை பாதிக்கும். எனவே குறைந்த அளவு ஹெட்போன் பயன்படுத்தும் போது பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தாது.

பாதிப்புக்களால் பொதுவாக பெண்களை விட ஆண்களே அதிக அளவில் பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஏனென்றால் பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் என்ற ஹோர்மோன் அதிகளவில் சுரப்பதால் அவர்களுக்கு பெரிய பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

ஆரம்ப நிலை பாதிப்பு என்பது சந்தை போன்ற இரைச்சல் நிறைந்த பொது இடங்களில் ஒருவர் நம்மிடம் பேசும் போது கேட்பதிலும் புரிந்து கொள்வதிலும் சிரமம் ஏற்படும்.

அடுத்த கட்டமாக காதில் இரைச்சல் கேட்கும். யாராவது சத்தமாக பேசினால் எரிச்சல் நிலை உருவாகும். காது கேட்கும் திறன் குறையும்போது இது நாளடைவில் மன அழுத்தத்தை ஏற்படுத்தி மற்றவர்களோடு பழகுவதை நிறுத்தி விடுவார்கள். பின்னர் படிப்படியாக ஞாபகத்திறன் குறைந்துவிடும். சிலருக்கு அதிகளவிலான சத்தம் கேட்கும்போது திடீரென்று காது கேட்காமல் போய்விடும் இதனை அக்வஸ்ட்டிக் ட்ராமா என்று சொல்கிறோம்.

இதுவே தொடர்ந்து ஒரு மாதமோ இரண்டு மாதமோ கேட்பதனால் ஏற்படும் பாதிப்பை நோய்ஸ் இன்ட்ரடியூஸ் ஹியரிங் லாஸ் என்று அழைப்பர்.

**தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்**

இசை நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு சென்று அங்கே எழுப்பப்படும் அதிகப்படியான ஒலி அளவை கேட்பதினால் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டு நிறைய பேர் வருவதை அவ்வப்போது பார்க்கின்றோம். இதுபோன்ற பாதிப்புகளை அந்த நிகழ்ச்சிகளை தவிர்ப்பதன் மூலமும் நாமே தற்காத்துக் கொள்ள முடியும்.

இசை பிரியர்களுக்கு மற்றொரு மாற்று வழி என்றால் காதுக்குள் வைக்கும் ஹெட்ஃபோன் இயர்போர்ட் போன்றவற்றை தவிர்த்து விட்டு ஆரம்பக் காலத்தில் வந்த ஹெட்செட் மாதிரி அதாவது தலைக்கு மேல் கம்பி போன்று வந்து காதுகளுக்கு வெளியே காதுகளை மறைப்பது போன்ற டிரம் இருக்கும் அல்லவா அந்த ஹெட்செட் போட்டு கேட்கலாம். அதேசமயம் ஒளியின் அளவை குறைத்து வைத்தே கேட்க வேண்டும்.

நோய் கேன்சுலேஷன் ஹியர்போன் இப்போது கிடைக்கிறது. இதனைப் பயன்படுத்தும் போது அது வெளிப்புற சத்தங்களை குறைத்து விடும். இதன் மூலம் ஹியர் போனில் ஒலி அளவை நாம் ஓரளவு குறைத்து வைத்தே கேட்க முடியும் இதன் மூலம் காதின் பாதிப்பு ஓரளவு குறையும்.

பொதுவாக இரைச்சல் நிறைந்த தொழிற்சாலைகள், இண்டஸ்ட்ரீஸ், மிசனரி போன்ற பணிகளில் இருப்பவர்களுக்கு காது கேளாமை பிரச்சினை இயல்பாகவே இருக்கும். இதனை தவிர்ப்பது சிரமம். இவர்கள் என்ன செய்யலாம் என்றால் ஹியர் பிளக்ஸ் ஹியர் மக்ஸ் போன்றவற்றை கட்டாயமாக பயன்படுத்த வேண்டும்.

இதன்மூலம் ஒலியின் அளவை ஓரளவு தவிர்த்துக் கொள்ள முடியும் மேலும் இவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ தொடர்ச்சியாக காதுகளை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அவர்களது கேட்கும் திறனை கண்டறிந்து கொள்ள வேண்டும் அது போன்று இவர்களுக்கு ஹியர் ப்ளக்ஸ், ஹியர் மக்ஸ் தொடர்ந்து அணிந்து கொள்ள கவுன்சிலிங் கொடுக்க வேண்டும்.

காது கேட்கும் திறன் குறையும் போது மற்றவர்கள் நம்முடன் பேசும் போது கத்தி கத்தி பேசுவார்கள். அப்படி பேசும்போது ஒரு வித எரிச்சல் உண்டாகும் இதுவே நாளடைவில் மன அழுத்தத்தை உருவாக்கி சமூகத்துடன் பழகும் பழக்கம் குறையத் தொடங்கும். எனவே, ஹெட் போன் பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு கட்டாயம் விழிப்புணர்வு வரவேண்டும்.

இல்லை என்றால், வருங்காலங்களில் இளம் வயதிலேயே காது கேளாமை பிரச்சனை அதிகரித்து விடும். இதற்காக பள்ளி, கல்லூரிகளில் அவ்வப்போது விழிப்புணர்வு முகாம்கள் நடத்த வேண்டும்.

ஹெட் போன் எந்த விதத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை இளம் தலைமுறையினர் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும் காதுகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இன்றைய இளம் தலைமுறை தற்போது ஹெட்போன்களை தேவைக்காக பயன்படுத்துவதை காட்டிலும் பந்தாவிற்காகவும் மற்றவர்களை கவர்வதற்காகவே அதிகமாக பயன்படுத்துகிறார்கள் ஆனால் இதன் பின்விளைவு என்ன என்பதை அவர்கள் அறியாமல் இவ்வாறு செயற்படுவது பல பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

எனவே ஹியர்போன்களை பாவிக்கும் போது எந்த அளவில் பாவிக்க வேண்டும்,அதனை எவ்வாறு பாவிக்க வேண்டும், எத்தேவைக்காக பாவிக்க வேண்டும் போன்ற அனைத்து விடயங்களும் நன்கு அறிந்துக் கொண்டு பாவிப்பதே அனைவருக்கும் சிறந்ததாகும்.

– சொக்கலிங்கம் லோஜினி
ஊடக கற்கைகள் துறை யாழ் பல்கலைக்கழகம்.

# 63 ஆண்டுகளைக் கடந்த மள்வான அல்- முஸ்தபா மகா வித்தியாலயம்

யடிஹேன, மள்வான அல் முஸ்தபா மகா வித்தியாலயம் அண்மையில் தனது 63 ஆம் ஆண்டு நிறைவு விழாவை பாடசாலை வளாகத்தில் அதிபர் அஷ்ஷேய்க்

எம்.ஸட்.எம் ஸம்ரிஹான் நளீமியின் தலைமையில் வெகு சிறப்பாக கொண்டாடியது.

மூன்று அமர்வுகளாக இடம் பெற்ற இந்நிகழ்வில் முதலாவது அமர்வு மாணவன் எம் .ஐ .எம் இன்பாஸின் கிராத்துடன் ஆரம்பமாகியதை தொடர்ந்து புதிய ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கட்டடத் திறப்பு விழா உலமாக்கள், கௌரவ அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவ, மாணவிகள், ஊர் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்புடன்



திறந்து வைக்கப்பட்டது. அரசாங்கத்தின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் மாணவர்களுக்கு வரப் பிரசாதமாகும்.

தொடர்ந்து பழைய மாணவர்களின் நடைபவனி இடம் பெற்றது. 1961 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை கற்று வெளியேறிய 500க்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். பாடசாலையின் கம்பீரத்தையும் , சிறப்பையும் எடுத்துக்காட்டுவதாக இந் நடைபவணி அமைந்திருந்தது.

இரண்டாம் அமர்வு மேடை நிகழ்ச்சிகளால் அலங்கரிக்கப்பட்டது. கிராத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்பு கீதம் பாடப்பட்டு வந்தோர் வரவேற்கப்பட்டதோடு பிரதி அதிபர் சி. சிவபாலனினால் வரவேற்புரையும் இடம்பெற்றது , தொடர்ந்து தலைமையுரை பாடசாலையின் கௌரவ அதிபர் அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. இதில் முன்னாள் பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள் ஞாபகப்படுத்தப்பட்டதோடு இப் பாடசாலையை உருவாக்கப் பாடுபட்ட அனைவரும்ஞாபகப்படுத்தப்பட்டதோடு எதிர்காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திக்கு அனைவரும் உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து விஷேட அதிதி உரை கலாநிதி அஷ்ஷேய்க் றவுப்ஸெய்ன்




நளீமீ அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. "சமூக மேம்பாட்டிலும் பாடசாலை அபிவிருத்தியிலும் சமூகத்தின் பங்களிப்பு "என்ற தொனிப் பொருளில் அது அமையப்பெற்றது. இதில் கல்வி விருத்தியில் பெற்றோர், ஊர்மக்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் தொடர்பாக சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டது. அடுத்து பாடசாலையில் பணிபுரிந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் என அனைவருக்கும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. குறிப்பாக எமது பாடசாலையின் முதலாவது அதிபர் மர்ஹூம் எம்.டீ.எம் அன்ஸாரி அவர்களுக்கு நினைவுச்சின்னம் அவர்களது குடும்ப அங்கத்தவரிடம் வழங்கப்பட்டது அதுபோல் காலஞ்சென்ற ஏனைய பணிபுரிந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களின் நினைவுச் சின்னங்களும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு தற்போது பணிபுரிகின்ற அதிபர், ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், சிற்றூழியர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

இரண்டாம் அமர்வின் இறுதிக்கட்டமாக நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பகல் உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மூன்றாவது அமர்வு பழைய





மாணவர்களின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. "மதுவின் விளைவு" என்ற நாடகம் அனைவரின் வரவேற்பையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பழைய மாணவரும் பாடசாலையின் ஆசிரியருமான ஏ.ஜே.ஜே ஜவான் அவர்களினால் தொகுத்து வழங்கப்பட்ட இப்பெருநிகழ்வு ஆறு மணியளவில் ஸலவாத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பினி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181

# ஆயிஷாவை ஆசிரியர்களுக்குப் பரிசளித்தல்

'ஆசிரியம் 'உன்னதமான சொல்.

இந்த உலக உருண்டையைப் புரட்டக்கூடிய நெம்புகோல் அது.

ஆசிரியம் மிகப்பெரும் ஆற்றுப்படை அனுபவம்; உலகம் முழுவதும் உலகம் தோன்றியது முதல் ஆசிரியப் பணி அல்லது பண்பு செயற்பட்டு வருகிறது.

ஆசிரியனாயிருத்தல் ஒரு வகையில் தவம்; பேறு; 'எழுத்தறிவித்தல்' இறை பணியும் தான். அதனால் தான் அது முன்னைய காலங்களில் புனித மிக்கதாகப் போற்றப்பட்டது.

காலமாற்றம் அறிவியலின் அகன்ற பெரு வளர்ச்சி ஆசிரியத்தைச் சுருக்கிவிட்டது என்பர். மறுபுறம் ஆசிரியத்தின் மீதான கௌரவம் கேள்விக்குட்படுத்தப்படுகிறது. இன்னொரு புறம் ஆசிரியத்தின் செயலொழுங்கு ஒழுங்காற்றுவிட்டதென்கிற குற்றச்சாட்டுமுண்டு. திண்ணைப்பள்ளியின் குரு சீடமுறைமைக்காலத்தில் போற்றப்பட்ட ஆசிரியம், சட்டம்பியார், உபாத்தியாயர், என் உயர்த்திப் போற்றப்பட்ட நிலை இன்றைய நவீன யுகத்தில் மறுதலிப்பாகி விட்டது.



எதுவாயினும் ஆசிரியத்தின் பண்புயர் தன்மையுடன் இன்றும் ஆசிரிய இயக்கப்பாடு அமைய வேண்டும்.

ஆசிரியர்களால் உச்சமடைந்த மாணாக்கரும், ஆசிரியர்களால் வாழ்விழந்துபோன மாணவருமென காலத்தின் சாட்சி வரலாற்றிலுண்டு.

ஆசிரியர்களும் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வியல் அசைவியக்கத்துக்குட்பட்டவர்கள்தான். அவர்கள் தமது ஆசிரியத்தை உயிர்ப்புடன் பேணியாக வேண்டும்.

இன்றைய ஆசிரிய தினத்தின் ஆயிஷாவை ஆசிரியருக்குப் பரிசளிக்கலாம். ஆயிஷா நடராசாவின் கதைப்புத்தகம்.

அந்தக்கதையில் வரும் ஆயிரம் ஆயிஷாக்கள் வகுப்பறைகளில் இன்னுமுள்ளனர்.

அவர்களொத்தவர்களை ஆற்றுப்படுத்தல் ஒவ்வொரு ஆசிரியரின் மகத்தான பணியேயாகும்.

## ஔவன் கவிதை

வெண்பூக்காதல்

உதிர்ந்தொழுகும் சருகிலையின் துளியில் பரவுகிற
வாசனைக்கு பதினையாயிரம் நாட்பொழுது
துளிர்த்தலின் மாபெருக்கத்தில் வர்ணங்களின் கூட்டுக் கலவை
வடிகிறது வியர்வையென ரத்தமென
அத்தரென சுவடெங்கும்
கால்களிலொட்டிய மீயீரம்
நினைவுகளின் அகன்று பரவிய வேரில்
பூத்திருக்கிறது
கணம் ஒரு பூ
பூவென் மனசு
பூவென் பொழுது
நிரம்ப முடியாமல் ததும்புகிறது
குருமை
நினைவு

# வேதாந்தி : முந்தி வந்திருக்க வேண்டிய கதைப் புத்தகம்



வேதாந்தி : முந்தி வந்திருக்க வேண்டிய கதைப் புத்தகம்

வேதாந்தி என்கிற இலக்கியப் பெயரில் ஈழத்தமிழில் அறியப்பட்ட சேகு இஸ்ஸதீன் என்கிற ஆளுமைக்கிருக்கின்ற பன்முகத் தன்மையின் உயர்நிலை பெறுமானமுடைய படைப்புப் பெயரே வேதாந்தி.

இவரது சிறுகதைகள் புத்தகமாகி வந்துள்ளன.உண்மையில்

இது முந்தி வந்திருக்க வேண்டிய கதைப் புத்தகம்.

வேதாந்தியின் கதையுலகு குறித்து அவதானிக்கும் போது சொப்பன வாழ்வில் மகிழ்ந்து (1968) முதல் நயீமாக்களின் பெருமூச்சுக்கள் தமிழீழத்தை சுட்டெரிக்கும் (1993) வரையான இருபத்தைந்து ஆண்டுகால கதையோட்டம் நிகழ்கிறது.



ஒருவகையில் ஈழத்துக்கதையின் பண்புகளை வேதாந்தியின் ஒற்றைப்புத்தகத்தில் காணமுடிகிறது மட்டுமன்றி கதை வரலாற்றுப் போக்குகளையும் உணர முடிகிறது.

இந்தக் கதைப்புத்தகத்தினூடாக இலட்சியக் கனவின் நிறைவேற்றத்தைக் கண்டடையும் வேதாந்தி'.... நிஜமாக உயிர்வாழும் உலகின் கண்ணுக்குத் தெரியும் பாத்திரங்களாகப் படைக்கப்பட்ட உலகின் நிஜத்தின் நிழலாக உருவகித்த மனிதன் படைத்த படைப்புக்களே இக்கலை....' என்பார்.'' இலக்கியம் இலட்சியத்தின் மறுபிறவி' என்கிற கோட்பாட்டுக்காரனானவேதாந்தி தன் கதைமாந்தரை காலத்தின் மறுபிறவிகளாக வாசகர் முன் நிறுத்துகிறார்.

முந்தி வந்திருக்க வேண்டிய கதைப்புத்தகம் வேதாந்தி பிந்தி வந்திருப்பினும் இலக்கியத் தரத்தில் முந்தியே நிற்கிறது.

கதைக்கான மொழி,அதன் இறுக்கம்,அது தோற்றுவிக்கும் காட்சி, தொற்ற வைக்கும் உணர்வு என இவரது கதைத்தனம் கனதியானது.

புத்தகத்தில் மௌனகுரு வரையும் அவதானக்குறிப்புகள் அவதானிக்கப்பட வேண்டியவை.

கல்லூரி சகாக்களான மௌனகுருவுக்கும் இஸ்ஸதீன் என்கிற சிறுவனுக்குமிடையிலான உறவு கலை,இலக்கிய ஈர்ப்பு இந்த அவதானக்குறிப்பை உயிர்ப்பாக்குகிறது.

இஸ்ஸதீன் உணர்வுச்சிக்கல்களை அவிழ்த்து தனி மனித மனங்களை ஆராயமுனையும் தத்துவப் போக்குடையவர்;ஓர் உயிரியல் விஞ்ஞானியாய் வெளிப்படுபவர்;

ஒருவகையில் இலக்கியத்தின் கருப்பொருளெத் தன் கதைகள் வழியே வேதாந்தியார் நிறுவுகிறார்.

அவர் மேலும் எழுதுவாராயின் ஈழத்து கதைக்களம் செழுமை கொள்ளும் என நம்பலாம்.

கதைகள் பாத்திரங்களின் இயங்கு தளமாக அமைபவை. வேதாந்தியாரின் பாத்திரங்கள் யதார்த்தம் மிக்கவை; உணர்வு பீச்சுபவை;

வேதாந்தியாரின் மொழியாளுமை இந்தக்கதைப்புத்தகத்தில் வீச்சம் எனலாம்.அவர் உருவாக்கும் புதிய சொற்கள், கட்டிறுக்கமான பிரயோகம், சம்பவங்களினடியாக உணர்வைக் கடத்தல், வாசகத்தூண்டலென கதைகளில் வாசம் வீசுகிறது.

வேதாந்தியின் நுண் வர்ணிப்பு கதைகளில் பல இடங்களில் தூக்கலாக அமைகிறது.

கலை என்பது மீறல் தான் என்பதை நவீன இலக்கியங்களிலும் கண்டு வருகிறோம். வேதாந்தியார் மீறல் வழி புதிய எழுத்து வழியைச் செதுக்குகிறாரெனலாம்.இது 1960,70களிலேயே சாத்தியமாகியிருக்கிறது.

வேதாந்தியின் இந்தப்புத்தகத்தின் கதை பற்றிய கதை கூறும் இரண்டு கட்டுரைகளுமுண்டு.

இவை இவரது கதை சார் கோட்பாட்டை நிறுவுகிறது எனலாம்.

ஒரு வகையில் வாசகர்கள் இந்தக் கட்டுரைகளப் படித்து விட்டு கதைகளுக்கு நுழைந்தால் வேதாந்தியாரின் கோட்பாடு செயன்முறையில் செல்கிறதா இல்லை தோற்கிறதா என்றும் அறிய முடியும்.

உண்மையில் எப்போதோ வந்திருக்க வேண்டிய வேதாந்தி சேகு இஸ்ஸதீனின் இந்தக் கதைப் புத்தகம் பிந்திய வந்திருப்பினும் காத்திரத்தன்மையில் முந்தியே நிற்கிறது.

அமுத ஆண்டைக்கடக்கும் வேதாந்தி யாருக்கு இலக்கிய உலகின் வாழ்த்துக்கள்.

# செல்லம்மாள் பாரதி உரை: அடங்காக் கவிதை பாரதி



உரை: அடங்காக் கவிதை பாரதி

செல்லம்மாள் மேலும் 'என் கணவன்'குறித்து உரைக்கிறார்.

என் கணவனோ கற்பனைக் கற்பனைக் கவிஞராக மட்டுமின்றி தேசியக் கவியாகவும் விளங்கியவர் என்று கூறுகையில் செல்லம்மாள் பெருமிதப்படவில்லை. மாறாக தான் கஷ்டப்பட்டதை நினைவு கூர்கிறாள்.

பாரதியின் கவிதை வெள்ளத்தை அடக்குமுறை அணை போட்டுத்தடுத்தது. அவர் குடும்பம் தொல்லையுற்றது. எனினிமென்ன பாரதி கவிதை அடங்கிவிடவில்லை.செல்லம்மா கூறுகிறாள்.'நுங்கும் நுரையுமாகப் பொங்கிவரும் புது வெள்ளம் போல அடக்குமுறையை உடைத்துக் கொண்டு என் கணவரின் கவிதை பாய்ந்து செல்லும்".

பாரதியின் கவித்தோற்றப்பாடு குறித்தும் காட்சிகளை நினைவுறுகிறாள்'காலையில் எழுந்ததும் கண்விழித்து மேல்நிலை மேல் மேலைச் சுடர் வானை நோக்கி வீற்றிருப்பார்.ஸ்நானம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்தில் அமையும்.சூரிய ஸ்நானம் அவருக்குப் பிடிக்கும். வெளியே நின்று சூரியனைப் பார்த்து வெயிற் குளிப்பார். சூரிய கிரகணம் கண்களில் உள்ள மாசுக்களை நீக்குமெனக் கருதுவார். பாரதியின் சாப்பாட்டு மோகம் குறித்தும் என் கணவரென்ற தன் உரையில் அவர் மனைவி குறிப்பிடுகிறாள்.'காலைக் காப்பி,தோசை அவருக்குப் பிரமாதமாக இருக்க வேண்டும். தயிர்,நெய்,புது ஊறுகாய் தோசை மேல் பெய்து உண்பார். அது மட்டுமல்ல பிடித்தமான உணவைக் கொடுத்தால் நண்பர்களான காக்கைக்கும் குருவிக்கும் முக்கால் பாகத்தை பகிர்ந்து விடுவார்.பாரதிக்கு சிஷ்யர்கள் நிறைய உண்டு; கதைகளுக்கு குறைவில்லை; கானாமுதத்துக்கும் குறைவில்லை.

எப்போதும் உண்மையே பேசவேண்டும் என்பது அவர் கட்டளை.பொய்பேசவிரும்பார்.இது எத்தனை சிரமமான காரியம் என்பது எல்லோருக்கும் தெரியும். என பாரதியாரின் குணவியல்புகளை செல்லம்மாள் தன்னுரையில் கூறுகிறாள்.

தமிழின் பொக்கிஷம் கவி பாரதி.

செல்லம்மாவுக்கு அது பெருமிதம்.

# ரூமியின் வைரங்கள்

தட்டிக்கொண்டே இரு
உள்ளிருக்கும் ஆனந்தம்
ஜன்னல் திறந்து
மெதுவாய் எட்டிப்பார்க்கும்
வெளியே யாரது?என்று
பொறுமையின் செவிகளால் கேள்
கருணையின் கண்களால் பார்
காதலின் மொழியால் பேசு
எங்கு நீ நின்றாலும் அவ்விடத்தின் ஆன்மா ஆகு
எனது முதற் காதலின் கதையை
நான் கேட்ட நிமிடத்திலிருந்து
உன்னைத் தேட தொடங்கினேன்
அதுதான் எத்தனை குறுட்டுத்தனம் என்றறியாமல்
காதலர்கள்
முடிவில் எங்கோ சந்தித்துக் கொள்வதில்லை
நெடுகிலும்
இருக்கிறார்கள்
ஒருவரில் ஒருவர்
நன்மை தீமை எனும்
நினைவுகளுக்கு அப்பால்
உள்ளது ஒரு வெளி
உன்னை
அங்கே சந்திக்கிறேன்
அந்தப் புல் வெளியில்
ஆன்மா அமர்கையில்
உலகம் பற்றிப் பேச
ஏதுமின்றிப் போகிறது
மொழி கருத்துக்கள்
ஒருவருக்கொருவர் என்பதுவும் கூட
அர்த்தப்படுவதில்லை அங்கே
கவலைப்படாதே!
நீ இழக்கும் எதுவும்
வெறொரு வடிவில்
வந்து சேர்கிறது உன்னை
உண்மையில் நீ நேசிப்பவன் ஆழ்ந்த ஈர்ப்பில் சப்தமின்றி
உன் ஆன்மா இழுக்கப்படுவதை உணர்
வழிகெடுக்காது உன்னை
ஒருபோதும் அது
வைகறையின் மென் காற்று
வைத்திருக்கிறது
உன்னிடம் சொல்ல ரகசியங்கள்
மீண்டும் உறங்கச் செல்லாதே
(வைரங்கள் சுடரும்)



# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



அமினாவும் நெல்சன் மண்டேலாவும் சயீத் நக்வி இருந்தபோது பல முறை சந்தித்திருக்கின்றனர். ஆனால் நக்வி 1995ல் தென்னாபிரிக்கா சென்றபோது அமினாவின் கணவர் யூசுஃப் இறந்துவிட்டார்.

"இன்று மாலை சந்திக்கிறேன்" என சயீத் நக்வி சொன்னபோது, மாலையில் சந்திக்க வாய்ப்பில்லை என்றும், அதுவரை மண்டேலாவுடன் தான் இருக்கப் போவதாகவும் அமினா கூறியதிலிருந்து அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த நெருக்கத்தை நக்வி நன்றாக உணர்ந்ததாகக் கூறுகிறார்.

அதன்பின் இதே போன்று பலமுறை நெல்சன் மண்டேலாவின்வீட்டில் அமினா இருந்ததை ஊடகவியலாளர் சயீத் நக்வி பார்த்திருக்கிறார்.

நக்வி அங்கே சென்ற போது, அப்போது தான் அமினா அங்கிருந்து கிளம்பி வேறு ஒரு இடத்துக்குச் சென்றதாக பல முறை கேள்விப்பட்டதாகவும் அவர் கூறுகிறார்.

"அதன் பின் மண்டேலா அமினாவை திருமணம் செய்துகொள்ள விரும்பியது மெதுவாக அனைவருக்கும் தெரியவந்தது," என சயீத் நக்வி தெரிவிக்கிறார். பின்னொரு காலத்தில் அமினா கச்சாலியா அளித்த பேட்டி ஒன்றில் மண்டேலா குறித்த தனது இனிமையான நினைவலைகளைப் பகிர்ந்துகொண்ட போது, ஒருமுறை அவர் தென்னாபிரிக்காவின் அதிபராகத் தன் வீட்டுக்கு வந்ததை நினைவுகூர்ந்தார்.

இந்த பேட்டியில், "நான் அவருக்காக சமோசாவை தயாரித்துக் கொண்டிருந்தபோது, அவர் என் பின்னால் ஒரு சாதாரண இருக்கையில் அமர்ந்திருந்தார்," என்றார்.

அமினா தமது சுயசரிதையான வென் ஹோப் அண்ட் ஹிஸ்டரி ரைம் *(When Hope and History Rhyme)* என்ற நூலில், "மண்டேலா தனது மூன்றாவது திருமணத்தில் கிரேஸ் மச்செல்லை மணந்த பின் ஒருமுறை எனது ஜோகன்னஸ்பெர்க் இல்லத்துக்கு வந்திருந்தார். அப்போது அவர் என் மீதான காதலை வெளிப்படையாகத் தெரிவித்தார். ஆனால் நான், 'நீங்கள் தற்போது தான் புதிதாக மீண்டும் ஒருமுறை திருமணம் செய்துள்ளீர்கள். நான் எதற்கும் தயாரான, சுதந்திரமான பெண்ணாக இருக்கிறேன். ஆனால் நீங்கள் அப்படி இல்லை,' என்றேன். இதனால் ஏமாற்றமடைந்த அவர், நான் சமைத்துவைத்திருந்த மீன்களைக் கூட உண்ணாமல் கோபத்தில் கதவை மூடிக்கொண்டு வெளியேறிவிட்டார்," எனத் தெரிவித்துள்ளார்.

இந்த புத்தகத்தில், "மண்டேலா தனது காதலை உணர்வுபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. ஒருவேளை அவர் அதிக காலத்தை சிறையில் கழித்ததால் அந்த உணர்வுகளை இழந்திருக்கலாம். எதைப் பற்றியும் யோசிக்காமல் அவர் நேரடியாக தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

அதனால் அவருக்கு முறையாக என்னால் பதில் அளிக்கமுடியவில்லை. உண்மையில் நான் அவரை விரும்பினேன். ஆனால் மறைந்த எனது கணவரை வயது முதிர்ந்த பின்னரும் விரும்பியதைப் போன்ற உணர்வு அல்ல அது," என அமினா குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இந்தியப் பெண்ணை திருமணம் செய்வதை விட, மறைந்த மொசாம்பிக் அதிபரின் மனைவியான கிரேஸ் மச்செல்லை மண்டேலா திருமணம் செய்வதே சிறந்த முடிவாக இருக்கும் என அப்போது புரிந்து கொள்ளப்பட்டது. இந்த வழியில் தான் அவரது மனம் மெதுவாகச் செலுத்தப்பட்டது.

ஆனால் இதையெல்லாம் யாரும் உறுதிப்படுத்த முடியாது. ஒன்றை ஆம் என்றோ, இல்லை என்றோ நிரூபிக்கும் வாய்ப்புக்கள் இங்கே இல்லை. இருப்பினும் இது போன்ற நகர்வுகள் இருந்தன என்பதை என்னால் உறுதியாக நம்பமுடியும்." என்றார் நக்வி.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# விழியழகி அபிநய சரஸ்வதி சரோஜாதேவி

கன்னட சினிமாவின் மூலம் முதன்முதலில் சினிமா உலகில் அடியெடுத்து வைத்தார் நடிகை சரோஜாதேவி. தமிழ் ,தெலுங்கு, கன்னடம், ஹிந்தி போன்ற பல மொழி படங்களில் நடித்து புகழின் உச்சிக்கே சென்றவர். கன்னடத்துப் பைங்கிளி என்றும் அபிநய சரஸ்வதி என்றும் ரசிகர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

இந்திய சினிமாவிலேயே பெரும் சாதனை படைத்த நடிகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவர் சரோஜாதேவி. தமிழில் முதன் முதலில் நாடோடி மன்னன் என்ற படத்தின் மூலம் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக சரோஜா தேவி அறிமுகமானார். அந்தப் படத்தில் நடித்ததன் மூலம் தமிழ் சினிமாவில் மிகவும் பிரபலமானார்.

எம்ஜிஆர் ,சிவாஜி, திலீப் குமார் ,என்.டி ராமராவ், அக்கினேனி நாகேஸ்வர ராவ் போன்ற பல சூப்பர் ஸ்டார்களுடன் நடித்த பெருமைக்குரியவர் . மேலும் எம்ஜிஆர் உடன் கிட்டத்தட்ட 26 படங்களில் நடித்து எம்ஜிஆருக்கு சரியான ஆன் ஸ்கிரீன் ஜோடியாக திகழ்ந்தவர் எனலாம்.அதேபோல சிவாஜியுடன் 22 படங்களில் ஜோடியாக நடித்தார்.

ஜெமினியுடன் ஒரு சில படங்களில் ஜோடியாக நடித்தார். தமிழ் சினிமாவில் மூவேந்தர்களாக திகழும் எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி ஆகியோர்களின் சினிமா வாழ்க்கையில் மிகவும் முக்கியமான படங்களாக அமைந்த அனைத்து படங்களிலும் சரோஜாதேவியின் பங்கும் குறிப்பிடத்தக்கது. இந்திய சினிமாவில் ஒரு ஃபேஷன் ஐகானாக திகழ்ந்தார் சரோஜா தேவி. தன்னுடைய உடை அலங்காரம், சிகை அலங்காரம், நகை அலங்காரம் என அனைத்தையும் அவரே பார்த்து பார்த்து தேர்ந்தெடுத்து அலங்கரித்துக் கொள்வாராம்.



மேலும் கவர்ச்சியில் நாட்டம் கொள்ளாதவர். நடிகைகளில் மிகவும் அழகானவர் சரோஜாதேவி. அதனாலேயே அவரை ஒரு சில நடிகர்கள் காதல் அப்ரோச் பண்ணார்களாம். இதைப் பற்றி குறிப்பிட்டு பிரபல தயாரிப்பாளர் சித்ரா லட்சுமணன் சரோஜாதேவியிடம் கேட்டார். அதற்கு பதில் அளித்த சரோஜா தேவி, சினிமாவில் நுழையும் போதே அவரது அம்மா மிகவும் கண்டிப்புடன் கூறிவிட்டாராம்.

அதாவது இந்த மாதிரி சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும் அதில் எதிலுமே நீ மாட்டி விடக்கூடாது என்றும் அதையும் மீறி காதலிக்கிறேன் என்று வந்தால் நாங்கள் கண்டிப்பாக திருமணம் செய்து வைக்க மாட்டோம் என்றும் அதனால் நம் வீட்டுப் பிள்ளைகளுக்கு பெரும் அவமானம் ஏற்படும் என்றும் ஆரம்பத்திலேயே மிகவும் காராக சொல்லிவிட்டாராம்.

எந்த சூழ்நிலையிலும் தன் தாயின் பேச்சை மீறாத சரோஜா தேவி இந்த விஷயத்திலும் அவரின் பேச்சை தட்டாதவராகவே இருந்திருக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# கண்ணதாசனும் கலைவாணனும்

கவியரசர் வீட்டில் ஒரு காரை அடிக்கடி அவரின் பசங்க எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.



ஒரு நாள் கலைவாணன் கண்ணதாசனும் அவருடைய சகோதரர் ஒருவருக்கும் அந்த காரை யார் எடுத்துச் செல்வது என்பதில் பிரச்சினை ஏற்பட்டது.

அந்த பிரச்சினை பெரிதாகி கைகலப்பாகும் சூழ்நிலை உருவானது. பெரிய சத்தத்துடன் வாக்குவாதம் நடைபெறும் சத்தத்தை கேட்டு வெளியில் வந்தார் கண்ணதாசன்.

வெளியில் வந்த கவியரசர் சண்டை போட்டவர்களை பிரித்து விட்டு என்ன பிரச்சினை என்று கேட்டுள்ளார் அதற்கு அவரவர்களின் கருத்தை தெரிவித்துள்ளனர். 'எனக்கு தான் கார் வேண்டும்' என்று கலைவாணன் ஒருபுறமும் 'எனக்கு தான் கார் வேண்டும்' என்று கண்ணதாசனின் சகோதரர் மறுபுறமும் கண்ணதாசனிடம் தெரிவித்துள்ளார்கள்.

இருவரின் விருப்பத்தையும் கேட்ட கவியரசர், தனது இன்னொரு மகனின் கையில் இருந்த கார் சாவியை வாங்கி கலைவாணன் கண்ணதாசனிடம் கொடுத்திருக்கிறார்.

அதாவது கவியரசரின் புதல்வன் கலைவாணன் கண்ணதாசன் ஒரு விஷயத்திற்கு சண்டை போட்டால் அது சரியானதாகத்தான் இருக்கும் என்பது கவியரசரின் கருத்து.

## அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின்

# பாடு நிலா பாலாவின் பாமாலை

























அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் நடத்தும் பிரபல பாடகர் பாடு நிலா .S B. பாலசுப்பிரமணியத்தின் 04 ஆவது நினைவு நாள் நிகழ்வு கொழும்பு செட்டியார் தெரு கல்யாணமுருகன் மண்டபத்தில் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் விஜயராஜ் முன்னிலையில் கொழும்பு கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி ஆலய தலைவர் கனக இரகுநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் ஐதேக அமைப்பாளர் ஆனந்தகுமார், கொழும்பு கலாசார உத்தியோகத்தர் திருமதி ரோசி, கொழும்பு கலாசார மன்றத்தின் தலைவர் சந்தன விஜேமான்ன, , பிரபல இசையமைப்பாளர் சுருதி பிரபா, பிரபல அறிவிப்பாளர்கள் அஜித், மலையக தேவா, புகைப்படப்பிடிப்பாளர் மொஹமட் நஸார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

(படங்கள் : முஹமட் நஸார், கே. மகாதேவன்)



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.